

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வரலாறு

நாவல்

**இரா. சடகோபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்த வரலாறு**

**நாவல்**

நூலாசிரியர் : இரா.சடகோபன்
முதற்பதிப்பு : டிசம்பர் 2017
உரிமை : © இரா.சடகோபன்
ISBN : 978-955-42706-2-6
அட்டைப்பட ஓவியம் : எஸ்.டி.சாமி
நூல் வடிவமைப்பு : வீ.அசோக்
அச்சுப்பதிப்பு : கௌரி அச்சகம், கொழும்பு
விலை : ரூபா 600

Irathatha Varalaru (Novel)
First Edition : December 2017
©R.Shadagopan
ISBN : 978-955-42706-2-6
Cover Art : S.D.Samy
Book Designing : V.Ashok
Printers : Gowriy Printers, Colombo.
Price : Rs. 600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

“தனது அறுபத்தைந்தாவது
வயதுவரை தொளஸ்பாகை
மொஸ்வில்ல தோட்டத்தின்
மலை மேடுகளில்
ஏறி
தன் தளிர்க்கரங்களால்
தேயிலை கொழுந்து பறித்து
என்னை ஆளாக்கிய என் தாய்
அடைக்கம்மாள்,
தன் சிறு வருமானத்தால்
எங்கள் குடும்பத்தை
உன்னதத்துக்கு
உயர்த்திய
என் தந்தை ராமையா
ஆகியோரின்
பொற்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிறநூல்கள்

***வசந்தங்களும் வசீகரங்களும்***
கவிதைத்தொகுப்பு (1998)
(மத்திய மாகாண சாகித்திய விருது பெற்றது)

***ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள்***
சிறுவர் நூல் - 2002 தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடு

***உழைப்பால் உயர்ந்தவர்கள்***
சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு
2008 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

***கசந்த கோப்பி***
ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு
2011 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

***எங்கள் கிராமம்***
மார்டின் விக்கிரமசிங்கவின்
சிங்கள நூலின் மொழிபெயர்ப்பு
2012 ஆம் ஆண்டின் சாகித்திய விருது பெற்றது

***கண்டிச் சீமையிலே***
கோப்பிக்கால வரலாற்று ஆவணம்
வீரகேசரி - வெளியீடு - 2014

## வரவிருக்கும் நூல்கள்

***விசப் பரீட்சை***
(விஞ்ஞான புனைக்கதை-நாவல்)

(பொற்கதவு)
விஜய் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு

***தேத்தண்ணி***
சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு

***ஒலிவர் டுவிஸ்ட்***
கார்ள்ஸ் டிகன்சின் ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு

***சிங்களத்தில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்***
(அகராதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**தொழி**ல் முறையில் சட்டத்தரணியும் நாடறிந்த கவிஞரும் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் சஞ்சிகையாசிரியரும் எனப்புகழ் பெற்ற இரா.சட–கோபன் அவர்கள் ஒரு சிறந்த இலக்கிய ஆர்வலர். சிறந்த இலக்கியவாதி. அவருடைய பல நூல்களுக்கு அரசாங்க தேசிய சாகித்திய விருதுகளும் வாசகர் மத்தியில் பெருமதிப்பும் கிடைத்துள்ளன. இலக்கியத்துறையில் நான்கு தசாப்த காலத்திற்கும் மேலாகப் பணியாற்றி வரும் அவர் மலையகத்தில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் நன்கு அறியப்பட்ட ஒரு எழுத்தாளர். அவருடைய இந்நூலுக்கு ஒரு அணிந்துரையை எழுதுவது ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமே.

இந்நூல் ஒரு துப்பறியும் மர்மக்கதையை ஒத்ததாகும். என்ற போதும் கண்டி ராச்சியத்தின் கடைசி மன்னனான ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் வரலாறு சுவைபட இந்நூலுக்குள் பின்னப்பட்டுள்ளது. அதனாலேயே இந்நூல் சிறப்பு பெறுகிறது.

திரு. இரா. சடகோபனின் மேலே சொல்லப்பட்ட எழுத்துச் செய லாற்றங்களை வைத்து நோக்கும்போது அவர் இந்நூல் போன்ற ஒரு மர்மக்கதையை எழுதும் முயற்சியில் ஈடுபடுவார் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. அவருடைய இம்முயற்சியானது இவ்வகை சார்ந்த நூல்கள் பற்றிச் சற்று உரத்து சிந்திக்க வைப்பதும் ஒரு சிறப்பு என்றே கூறவேண்டும். இந்நூல் என்னதான் விறுவிறுப்பு அம்சங்களைக் கொண்டிருந்தாலும் நூலாசிரியர் ஒரு கைதேர்ந்த இலக்கியவாதி என்பதால் அவருக்குரிய எழுத்து அணுகு முறைகள் இந்நூலிலும் பதிந்திருப்பதைக்காணலாம். சரளமான தெளிவான மொழிநடையும் சாதுரியமான சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான சொற்களஞ்சியப் பயன்பாடும் எழுத்தாளர் சடகோபனைப் பல இடங்களில் இனங்காட்டி நிற்கின்றன. சடகோபனின் இந்நூலில் காணப்படும் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு அம்சங்களான விறுவிறுப்பான கதையும் அதைச்சொல்லும் அவரது பாணியும் ஆங்காங்கே தூக்கலாகத் தென்படும் அவரது இலக்கியப்பாங் கான ஆளுமையும் குறிப்பிடத்தக்கன.

மர்மக்கதைகள், துப்பறியும் நாவல்கள் என்று எடுத்துக்கொண்டாலே அவற்றை முற்றாகவே எதிர்மறையாகப் குறைத்துப் பார்க்கும் வழக்கம் ஒன்றுண்டு. அவற்றைத் தரமான இலக்கிய வரிசையில் சேர்த்துக்கொள்ள எப்போதுமே பெரியளவில் தயக்கம் காட்டப்பட்டு வந்துள்ளது என்பது உண்மையே. அதற்கும் பல காரணங்கள் உண்டு. எவ்வாறாயினும் ஒரு மாற்றுக்கருத்தையும் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் ஒரு காலத்தில் கனோன் டொயில், ஜேம்ஸ் ஹேட்லிசேஸ், ஏர்ல் ஸ்டென்லி கார்ட்னர் பிற்காலத்தில் சிட்னி ஷெல்டன், ஜெப்ரி ஆர்ச்சர், வில்பர் ஸ்மித், பிரெடரிக் போர்சித், ஹெரால்ட் ரொபின்ஸ் (இவர்களைத்தான் நான் வாசித்ததுண்டு) போன்றவர்கள் மிகப்புகழ் பெற்ற மர்மக்கதை எழுத்தாளர்கள். இதே போன்று 1950கள் 60 களில் மேதாவி, சிரஞ்சீவி, ஆர்.எஸ்.மணி, தமிழ்வாணன் போன்றவர்களும் புகழ்பெற்ற மர்மக்கதை நாவலாசிரியர்களாக பரிணமித்தார்கள். பல்துறை தமிழறிஞர்களும் இவர்களுடைய நூல்களை இளமைக்காலத்தில் வாசித்தவர்களேயாவர். வயது போகப்போகத் தமது வாசிப்பு ஆர்வங்களை மாற்றிக்கொண்டு புதுமைப்பித்தன், கு.ப.ரா., மௌனி என மாறிச்சென்றவர்களும் உண்டு. எவ்வாறாயினும் இவர்களுடைய ஆரம்ப கால வாசிப்பு ஆர்வம் மேற்கூறிய மர்ம நாவல்களிலேயே தொடங்கியது எனலாம். எனினும் 1950களில் பல தமிழ் நாட்டுச் சிறுவர் சஞ்சிகைகளும் (கல்கண்டு, கரும்பு, கண்ணன், அம்புலிமாமா போன்றன) வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதில் தமது பங்களிப்பைச் செய்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் சூழலில் அக்காலத்து வீரகேசரி ஆசிரியர் எழுதிய நந்தினி, பத்மினி, தாரிணி போன்ற விறுவிறுப்பான நாவல்களை யாமும் மிகுந்த விருப்பத்துடன் வாசித்தோம். இவை யாவும் எமது வாசிப்புப் பழக்கத்தின் விருத்திக்குத் துணை நின்றமைக்கு அவற்றின் விறுவிறுப்பு அம்சம் ஒரு காரணமாக இருந்ததை மறுக்க முடியாது.

நவீன தமிழ் நாவலிலக்கிய வரலாற்றை ஆராய்பவர்கள் ஆரம்ப காலத்தில் எழுந்த மர்ம நாவல்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றார்கள். பேரா சிரியர் க. கைலாசபதி இது பற்றிச் சற்று ஆர்வத்துடன் பலவற்றைக் குறிப்பிடுகின்றார். 20 ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தில் வெளிவந்த தமிழ் நாவல்கள், ஆங்கில நாவல்களின் மொழி பெயர்ப்பாகவோ அல்லது தழுவல்களாகவோ இருந்தன. அவற்றில் வெளிவந்த தமிழ் நூல்களில் பெரும்பாலானவை மர்மநாவல் வகையைச் சேர்வன என அவர் குறிப்பிடுகின்றார். ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், வை.மு. கோதைந–ாயகி அம்மாள் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடும் பேராசிரியர் இதே காலப்பகுதியில் இலங்கையிலும் சில மர்ம நாவல்கள் எழுதப்பட்டதாகக் கூறுகின்றார். (பவளகாந்தன், அருணோதயம், அரங்கநாயகி போன்றன)

அவருடைய கருத்தின்படி மர்ம நாவல்கள் தோன்றிய காலத்தை நாவல் வரலாற்றில் ஒரு இருண்ட காலம் எனக்கூறிக்கொள்வது நாகரிகமான செயலாகி விட்டது என்பதோடு இந்நாவல்கள் பலராலும் நிராகரிக்கப்பட்டும் விட்டன. இப்பேராசிரியரின் கருத்தில் இத்தகைய துப்பறியும் கதைகளை அவர்கள் எழுதியதில் தவறொன்றும் இல்லை என்றும் முதிர்ச்சியடைந்த இலக்கிய விமர்சகர்கள் கூட ஆங்கிலத் துப்பறியும் கதைகளைப் படித்து வாசித்து இன்பத்தை பெற்றுள்ளனர் எனவும் கைலாசபதி பதிவு செய்துள்ளார். (பார்க்க தமிழ் நாவல் இலக்கியம் 1999 பக்கம் 132)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு சுவராஸ்யமான விடயம் என்னவென்றால் தொடர்ந்து நாவல்களை எழுதியவர்கள் விறுவிறுப்புக்கும் பரபரப்புக்கும் மத்தியில் தேசியம், பழம் பெருமை போன்ற "புனித வஸ்துக்களையும் தமது நாவல்களில் சேர்த்துக்கொண்டனர். பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் ஆகிய கல்கியின் புகழ் பெற்ற நாவல்களில் இந்த "பரபரப்பு" அம்சம் இருக்கவே செய்கிறது. கல்கியும் கூட அக்காலத்து பரபரப்பு நாவல்களை விரும்பி வாசித்தார் என்றும் அதன் காரணமாக அவரிலும் அந்தப் பாதிப்பு காணப்பட்டது என்றும் கைலாசபதி தெரிவிக்கின்றார்.

வெளிப்படையாகக் கூறுவதாயின் தமிழ் மக்கள் மத்தியில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தனைவிட கல்கியும் சாண்டில்யனுமே அதிகமாக வாசிக்கப்பட்டனர் என்று கூறுவது மிகையாகாது. ஒரு வகையில் இத்தகைய பரபரப்பு நாவல்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஆரோக்கியமான இலக்கிய வாசிப்புப்பழக்கம் ஏற்படத்தடையாக இருந்தன என்று கூறுவதை விட அந்நூல்கள் பிற்கால வாசிப்புக்கான ஒரு அடித்தளமாக விளங்கின என்ற கருத்தையே வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆரம்ப கால துப்பறியும் நாவல்களை ஆராய்ந்த பெ.கொ.சுந்தரராஜன் அவை பற்றியும் பின்வருமாறு கூறுகிறார். இத்தகைய நாவல்கள் இலக்கிய மதிப்பீட்டுக்குத் தகுந்தவையல்ல என்றாலும் அன்று வெகுவாகப் பரவிவந்த வாசக ரசிகத்தன்மை பற்றிய நிலையை அறிந்து கொள்ள உதவுகின்றன. மேல்நாட்டு இறக்குமதி சரக்கான இவை தழுவல் முறையில் தமிழ் நாட்டின் சூழ்நிலையை நிலைக்களமாக கொண்டிருந்தமையால் அன்றைய சமுதாயத்தின் சில அம்சங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன. சமுதாய நிலைகள் சில இந்த நாவல்களில் படம் பிடித்துக்காட்டப்படுகின்றன. (சுந்தரராஜன், தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய சங்கம் 1976) எனவே ஆய்வாளர்கள் இத்தகைய நாவல்களை முற்றாக ஒதுக்கிவிடும் நோக்கில் செயற்படவில்லை.

எவ்வாறாயினும் தமிழ் நாட்டுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மர்ம நாவல்கள் சிறிய அளவில் கூட வெளிவரவில்லை. கோடிக்கணக்கான மக்கள் தொகையைக் கொண்ட தமிழகத்தில் பல்வேறு வகைப்பட்ட வாசகர்கள் இருந்தமையினால் நாவல்களும் பல்வேறுபட்டனவாக அமைந்தன. காத்திரமான வாசகர் கூட்டத்தோடு மர்மநாவல்களை விரும்பும் ஒரு பெரிய வாசகர் கூட்டத்தின் தேவைகளையிட்டு மர்ம நாவல்கள் எழுச்சியுற்றன. இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் பல்வேறுபட்ட இன்னல்கள், போராட்டங்கள், அடக்குமுறைகள், இனக்கலவரங்கள் போன்றவற்றுக்கு மத்தியில் வாழ்ந்தமையால் படைப்பிலக்கியங்கள் கூடிய அளவுக்கு அவற்றைப் பிரதிபலிக்கும் முறையில் எழுந்தன.

அத்துடன் வெளிவந்த படைப்புகளும் சமுதாய மனித நேய மற்றும் யதார்த்த இலக்கிய நோக்கில் விமர்சனத்துக்குள்ளான ஒரு நிலைமையும் உண்டு. இதன் காரணமாக மர்ம நாவல்களைத் துணிந்து எழுதும் ஊக்கம் எழுத்தாளர்களுக்கு இருக்கவில்லை. அவற்றை நாடும் சாதாரண வாசகர்கள் தமிழகத்து மர்ம நாவல்களுடன் திருப்தி அடைய இலங்கை படைப்பிலக்கியக்காரர்கள் சமுதாய நிலைமைகளைப் பிரதிபலிக்கும் எழுத்து முயற்சிகளில் ஈடுபட நேர்ந்தது.

இவ்வகையில் திரு சடகோபனின் இந்நூல் நிச்சயமாக ஒரு புதிய முயற்சி எனலாம். ஏற்கனவே கூறியது போல அவருடைய கவித்துவம், இலக்கியப்பயிற்சி என்பன இந்நூலை எழுதி முடிக்க அவருக்குத்துணை புரிந்துள்ளதை நூலை வாசிக்கும் போது அறியலாம். இலங்கைச் சூழலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட இந்நாவல் வாசகர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கலாம். இலங்கை வாசகர்களின் ஆதரவும் புரிந்துணர்வும் அவருக்கு கிட்ட வேண்டும் என நம்புகின்றேன்.

**சோ. சந்திரசேகரன்**

ஓய்வு நிலை பேராசிரியர்

01.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலக நாவல் இலக்கியம், தமிழ் நாட்டின் நாவல் இலக்கியம் என்பவற்றுடன் இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியத்தை ஒப்பிடும்போது அதனில் ஏனையவற்றுடன் ஒட்டாத தனித்தன்மை ஒன்றை அவதானிக்க முடிகின்றது. அதற்கு ஒரு காரணமாக பிரித்தானிய பேரரசு 1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் கையகப்படுத்தி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தபோது சிங்களவர்களைப்போல் நாம் இலங்கையர்கள் என்ற உணர்வு நிலையில் இல்லாமல் தமிழர்கள் தமிழ் சிறுபான்மையினத்தினர் என்ற வகையில் தனியாகப் பாதிக்கப்பட்டனர் என உணர்ந்தமையினைக் குறிப்பிடலாம். ஒரு வகையில் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டனர் என்று கூறலாம்.

இந்தப்பாதிப்பே அரசியல் அநீதிக்கெதிரான தமிழ் மக்களின் போராட்டமாக பின்னர் பரிணமித்தது. பின்னர் சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிரான மேலும் பல அரசியல் காரணிகளும் இணைந்து கொண்டன. இத்தகைய ஒரு நிலையில் தமிழ் மக்களின் கலை கலாசாரம், இலக்கியம், பண்பாட்டு விழுமியங்களுக்கு ஊடாக தமிழ் சமூகமானது எப்போதும் விடுதலை நோக்கிய தேடலுக்கூடாக பயணிக்கின்ற செல்நெறியை கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த பயணத்தில் பல்வேறு இலக்கிய கலை வடிவங்களும் முக்கிய பங்கு வகித்துள்ளன. இந்த கண்ணோட்டத்தில் இலங்கையில் தமிழ் நாவல் இலக்கியத்தை உற்று நோக்கும் போது அவ்விலக்கியமானது தனது ஏனைய அனைத்து இலக்கியப் பண்புகளையும் துறந்து சமூக விடுதலை, சமூக அநீதிக்கெதிரான சிருஷ்டிகளையே முன்னிறுத்தி உயர்ந்ததாக கருதி அங்கீகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஏனைய கலை இலக்கிய நோக்கங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட இலக்கியங்கள், நாவல்கள் நிராகரிக்கப்பட்டதுடன் அவை சிறந்தவை, உயர்ந்தவை, காத்திரமானவை என்ற அளவு கோள்களுக்குள் வாரமல் போய்விட்டன.

ஒரு நூலை வாசிப்பதன் முதல் நோக்கம் வாசிப்பு இன்பத்தை பெறுவதா-கவும் இரண்டாவதாக அறிவுத் தேடலாகவும் இருத்தல் வேண்டும். எழுத்தின் மூலம் சமூக விடுதலையைத்தூண்டுவது என்பது எழுத்தின் ஒரு விசேட நோக்கமாகவே இருக்க முடியும். ஒரு நாவலைப்பொறுத்தவரை அது வெற்றியடைய முதல் தேவை அதனை வாசிக்கும் வாசகனுக்கு ஒரு உயஉவான வாசிப்பு இன்பத்தை அது வழங்க வேண்டும் என்பதாகும். அத்தகைய வாசிப்பு இன்பத்தை அவன் பெறும்போது அந்த வாசிப்பூடாக தான் சேமித்து வைத்திருக்கின்ற அறிவு மட்டத்தில் இருந்து தன் கற்பனையை பிரயோகிக்கின்றான். இத்தகைய அவனது கற்பனையும் வாசிப்பு இன்பமும் கிரகித்தல் தன்மையும் ஒவ்வொரு மனிதனிலும் விரல் அடையாளங்கள் வித்தியாசப்படுவது போல் வேறுபடுகின்றன.

அதனால்தான் ஒரு படைப்பாளி ஒரு படைப்பை சிருஷ்டித்தவுடன் அந்தப்படைப்பை பொறுத்தவரையில் சிருஷ்டி கர்த்தா இறந்து போய்விடுகிறான் என்று கூறப்படுகின்றது.

இவ்விதம் கூறப்படுவதற்கு காரணம் ஒரு படைப்பாளியின் எண்ணத்தில் உருவான அந்நூலில் படைப்பாளி என்ன நோக்கங்களை வைத்து எழுதி-னானோ அவற்றை புரிந்து கொள்ளாமல் அந்த நோக்கங்களை ஒவ்வொரு வாசகனும் வித்தியாச வித்தியாசமாகவே புரிந்து கொள்கின்றமையாகும். இத்தகைய வித்தியாசமான புரிந்து கொள்ளலுக்குக் காரணம் ஒவ்வொரு வாசகனதும் அறிவு மட்டம் வேறுபடுவதாகும். மறுபுறத்தில் கூறுவதாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பராயம் முதல் நூல்களை வாசிக்கும் பழக்கமுள்ள ஒருவன் அதன் வாயிலாக வெறுமனே அறிவு விருத்தியடைதலை மட்டுமல்லாது தன் கற்பனை ஆற்றலையும் ஆளுமை விருத்தியையும் விசாலமாக்கிக் கொள்கிறான் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

ஆதலால் முன்சொன்னது போல், ஈழத்து நாவல்களிலும் ஏனைய கலை வடிவங்களிலும் உயர் வாசிப்பு இன்பத்தையும் ரசனை இன்பத்தையும் பெற முடியாத போது வாசகன் தமிழ் நாட்டுப்படைப்புக்களையும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அல்லது வேறு மொழி தெரிந்தவர்கள் அத்தகைய மொழி மூலமான படைப்புக்களையும் நாடுகின்றனர். இத்தடையை பல எழுத்தாளர்கள் தகர்த்தெறிய முற்பட்ட போதும் அவஉகளை ஜனரஞ்சக எழுத்தாளஉகள் என்ற கோஷத்துக்குள் கொண்டு வந்து இலக்கிய விமஉசனங்கள் ஓரங்கட்டி ஒதுக்கி வைத்தார்கள்.

நான் விஜய் சிறுவஉ பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராக 2003 முதல் 2008 வரை கடமையாற்றிய போது சிறுவர்களுக்காக 150க்கும் மேற்பட்ட சிறுவஉ சிறுகதைகளையும் பல குறுந்தொடர் நாவல்களையும் எழுதினேன். அப்போது எனக்கு மேற்படி தடைகள் காணப்படவில்லை. அத்தகைய நிலையில் தான் பெரியவர்களுக்கு எழுதும் போதும் ஏன் இதே உரைகல்லை பயன்படுத்தக்கூடாது என்று கருதினேன்.

அத்தளத்தில் இருந்து படைக்கப்பட்ட நாவல்தான் இந்த “இரத்த வரலாறு” இது சூரியகாந்தி பத்திரிகையில் தொடராக வெளி வந்தபோது சட–கோபன் போன்றவர்கள் இத்தகைய சிருஷ்டிகளை படைக்கக்கூடாது என்று ஒரு சில மூத்த எழுத்தாளர்கள் கருத்துக்கூறினார்கள். ஆனால் இளம் எழுத்தாளர்கள் மத்தியிலும் இளைஞர் மத்தியிலும் நல்லதொரு வரவேற்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவல் பெற்றது. நாவல் முற்றுப்பெற்றதும் எனக்கு வந்த கடிதங்களும் தொலைபேசி உரையாடல்களும் அதற்கு சான்றுகள்.

வாழ்வின் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொண்டு வெற்றி கொள்வதென்பதே ஒவ்வொரு தனி மனிதனதும் பிரச்சினையாகும். இதற்கான ஒரே வழி தாமே தமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான அறிவைப் பெற்றிருத்தலாகும். அத்தகைய அறிவினை ஒருவன் கல்வி கற்கும் பாட-சாலை ஆசிரியர்கள், அவன் வாசிக்கும் நூல்கள், பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் என்பவற்றின் வாயிலாகவே பெறுகிறான். ஆனால் இன்றைய கல்வி முறையும் பாடசாலைக் கல்வியும் ஒருவனுக்கு வாழ்வுப்பிரச்சினைகளை எதிர் கொள்ளத்தக்க அறிவை வழங்குவதில்லை. பரீட்சையில் எவ்வாறு சித்தியடையலாம்? பரீட்சைகளில் அதிக புள்ளிகளை பெறுவதெப்படி? அதிக பணம் சம்பாதிக்கும் உத்தியோகங்களை பெறுவதெவ்வாறு? என்பதற்கே இன்றைய நமது நாட்டின் கல்வி முறை வழிகாட்டுகின்றது. ஆசிரியர்களும் வாழ்க்கை வழிகாட்டியாக அமையாமல் மேற்படி கொள்கை வழியே செல்கின்றார்கள்.

இவ்விதம் பரீட்சையில் சித்தியடைந்து அதிக மதிப்பெண்களை பெறுவதற்காக பெற்றறொரும் தம்பிள்ளைகளை நெருக்குகின்றார்கள். இதனால் டியூசன் வகுப்புக்கள் பெருகிப்போய் விட்டன. காலை 6 மணிக்கு பாடசாலைக்கு செல்லும் மாணவன் பாடசாலை விட்டு பின் டியூசனுக்கும் சென்று வர இரவு பத்து மணியாகிறது. இதனால் அவர்களின் வாசிக்கும் நேரமும் ஏன் விளையாடும் நேரமும் கூட அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. எனவே நாட்டில் நற்பிரஜைகளோ? அறிவு சார் சமூகமோ! உருவா-கும் வாய்ப்பு மிகக்குறைந்து போய்விட்டது. மறுபுறத்தில் போதைப்பொருள் பாவனை. குற்றச் செயல்கள் அதிகரிப்பு என்பனவும் பெருகி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இருக்கும்போது கல்வி, கலை, இலக்கியம், வாசிப்பு, நற்பிரஜைகளை உருவாக்குதல், ஆடல், பாடல், ஓவியம் என்பனவற்றை பற்றிப்பேசாமல் ஒரு சாரார் குற்றமிழைப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று கோஷம் போடுகின்றார்கள். நான் விஜய் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த போது எனது எழுத்து வாயிலாக பல்லாயிரக்கணக்கான வாசகர்களை உருவாக்கியிருந்தேன். எனது இந்த நாவல் துளியளவிலாவது வாசிப்புப் பழக்கத்தை தூண்டுமாயின் அதுவே எனது வெற்றியாகும் என்று கருதுவேன்.

சட்டத்தரணி இரா. சடகோபன்,
பிரதம ஆசிரியர் சுகவாழ்வு
ஸ்தாபக ஆசிரியர் "விஜய்"
17 B, ரிச்சர்ட் டி சொய்சா
ஊடகவியலாளர் வீடமைப்புத்திட்டம்,
பத்தரமுல்ல.
தொ.பே : 0777 679231
மின்.அ : updrf@yahoo. com
இணையம் : www.updrf.blogspot.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி!

- நண்பரும் மூத்த எழுத்தாளருமான
  சாஹித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப்
- சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர், ஆர். ராஜலிங்கம்
- ஓவியர் எஸ்.டி. சாமி
- வீ.அசோகன் இணைப்பாளர், வீரகேசரி நிறுவனம்
- அன்டன் சுகந்தன், முகாமையாளர், வத்தளைக்கிளை, வீரகேசரி
- செல்வி எம்.பிரியதர்ஷினி, துணை ஆசிரியர், சுகவாழ்வு ஆரோக்கிய சஞ்சிகை
- என் இல்லத்தரசி எஸ்.கிரேஸ்,
  அன்புச் செல்வங்கள்
  எஸ்.ஷர்மினி, எஸ். தன்ரக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவள் யார்?

**மிக** இருட்டு.

கட்டியான இருட்டு என்று அழைக்கலாம். நேரம் இரவு பதி னொன்றைத் தாண்டி முப்பது விநாடிளைப் பூர்த்தி செய்திருந்தது.

கடந்த ஒரு வார காலமாக பெய்து வரும் அடை மழை-யின் தீவிரம் இன்னமும் குறைந்திருக்கவில்லை. அதனுடன் சேர்ந்து வீசுகின்ற காற்று நிலைமையை மேலும் மோசமாக்கிக் கொண்டிருந்தது.

இருள் மிக இருந்ததனாலோ என்னவோ தெருவிளக்குகள் இருளைப் போக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தன. வழக்கமாகக் காணப்படும் வெளிச்சத்திலும் பார்க்க குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான வெளிச்சத்தினையே அவை உமிழ்ந்து கொண்டிருப்பதை போன்றதொரு எண்ணத்தினை உருவாக்கின.

இடையிடையே ஏற்பட்ட இடியும் மின்னலும் காதைச் செவிடாக்கி கண்களைக் குருடாக்கி விடுமோ என்ற அச்சத்தை உண்டுபண்ணின.

கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருந்து பிரயாணிகள் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். பத்து மணிக்கு வரவேண்டிய "கண்டி இன்ட சிட்டி எக்ஸ்பிரஸ்" பதினொன்று முப்பதுக்கு வந்து சேர்ந்ததால் பலர் ரயில்வே திணைக்களத்தைச் சபித்தவாறே விரைவாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

நாட்டின் அண்மைக்கால யுத்த நிலவரத்தால் இப்போதெல் லாம் இரவு எட்டு மணிக்கு முன்னர் வீடுகளுக்குப் போய்விடவே எவரும் விரும்பினர். எட்டு மணியைத் தாண்டினால் பஸ் சேவை மிகக் குறைந்து விடுவதால் போக்குவரத்து சிரமமாகி விடுகின்றது.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அந்தப் பெண் அந்த இருளில் கொட்டும் மழையில் இடி மின்னலுக்கு அஞ்சாமல் விர்ரென்று நடந்து கொண்டிருக்கிறாள்.

அவளது தீர்மானமான அந்த நடையின் வேகம், எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியிலும் இருந்த உறுதி அவள் ஏதோ ஒரு காரியத்தைச் சாதிக்கப் புறப்பட்டிருக்கிறாள் என்பதனையும், அதனைக் குறி வைத்தே செல்கிறாள் என்பதனையும் சொல்லாமல் சொல்லின.

அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள சற்று நெருங்கிச் சென்று பார்த்தல் அவசியம்.

அவள் இப்போது அந்தப் பிரகாசமான நடுச்சந்தி விளக்குக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வந்திருந்ததால் அவளது உருவத்தைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

சுமார் இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயது இருக்கும். அவள் முகத்தில் எடுத்த மாத்திரத்தில் எவரதும் கவனத்தைக் கவரக்கூடிய தாக இருந்தது. இடது தாடைக்கு சற்றே மேல் கன்னத்துக்கு கீழே அமைந்திருந்த ஒரு குங்குமப் பொட்டு அளவிலான மச்சம். மிகப் பளபளப்பான அகலமான கரிய கண்கள் ஒரு முறை பார்த்தால் மறக்க முடியாதவை. அவளில் காணப்பட்ட ஏதோ ஒரு கவர்ச்சி அதனை வெறுமனே அழகு என்று கூற முடியாது. ஒரு வசீகரம், எந்த ஆண்மகனிலும் அவனது ஆண்மையை சீண்டிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், அவள் ஒரு வித்தாரக் கள்ளி தான் என்பதற்குச் சான்றுகள் பல இருந்தன.

இந்த இரவு ஜாமத்தில் தனியாக அவள் என்ன செய்கிறாள்? உண்மையில் அவள் அசாத்திய துணிச்சல் காரியாகத்தான் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் இவ்விதம் தனியாகச் செல்லும் பெண்களுக்கு என்ன நடக்கும் என்பது நாம் அறியாததா? ஆனால் அவள் அவற்றைப் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை.

மழை மீண்டும் வீசியடித்தது. அவள் ஒரு கையில் குடையுடனும் மறு கையில் பயணப் பையுடனும் விரைந்து கொண்டிருந்தாள். அருகில் இருந்த சந்தியை அடைந்ததும் எந்தப் பாதையில் பயணத்தைத் தொடர்வது என்ற கேள்வி எழுந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரிடம் கேட்கலாம்?


சற்று எட்ட அந்தப் பொலிஸ்காரன் நின்றிருந்தான்.

ரெயின்கோட்டும் தொப்பியும் அவன் உடம்பை இறுக மூடியிருந்தன.

"நியூ எம்ப்ரெஸ் ஹோட்டலுக்கு வழி காட்ட முடியுமா?" அவள் அந்தப் பொலிஸ்காரனிடம் சிங்களத்தில் கேட்டாள்.

அந்தப் பொலிஸ்காரன் அவளை சற்றே ஆராய்ந்தான். அவளது அழகிய தோற்றம் அவனைக் கிறங்கச் செய்தது. கூடவே சந்தேகத்தையும் கிளப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவள் பெயர் சித்ராம்பரி

நியூ எம்ப்ரெஸ் ஹோட்டல் பற்றி அந்தப் பொலிஸ்காரனுக்கு நன்கு தெரியும். அந்த ஹோட்டல் நிழலான செயல்களுக்குப் பெயர் போனது. அண்மையில் கூட விபசாரத்தில் ஈடுபட்டமைக்காக ஐந்து இளம் பெண்கள் அந்தக் ஹோட்டலில் இருந்து கைது செய்யப்பட்டிருந்தனர். எல்லாவற்றையும் விட அவள் பேசிய சிங்களம் அவனை சிந்திக்க வைத்தது. அவள் உச்சரிப்பில் பண்டைய அரச காலத்து சாயல் படர்ந்திருந்தது.

ஒவ்வொரு சொல்லின் இறுதியிலும் "ஞ" சத்தம் அழுத்தத்துடன் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சிந்தனையைக் கலைக்க அவன் மீண்டும் கேட்டான்..... “நியு எம்ப்ரெஸ் ஹோட்டல்”

“நேரே சுமார் நூறு யார் தூரம் நடந்து சென்று வலதுபுறம் திரும்பவும்”

“நன்றி...” சற்றும் தாமதியாமல் அவள் சரேலெனத் திரும்பிய போது அந்தக் குங்குமப்பொட்டகலமான பெரிய மச்சத்தை அந்தப் பொலிஸ்காரன் கவனிக்கத் தவறவில்லை.

அவள் நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னரேயே அவன் அவசரமாக அவளை எச்சரிப்பது போல் கூறினான்.

“உங்களைப் போன்ற நல்ல பெண்மணிகள் தங்குவதற்கு அந்த ஹோட்டல் உகந்ததல்ல மிஸ்.....!”

“நன்றி... நான் அங்கே தங்கப் போவதில்லை......” அவள் திரும்பிப் பார்க்காமலேயே கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

பொலிஸ்காரன் கடமையைச் செய்து விட்டதில் திருப்தியடைந்தான். அதற்கு மேல் தன்னால் உதவ முடியுமென்று அவனுக்குத் தோன்ற வில்லை. அவன் மனதில் மீண்டும் அந்தக் கேள்வி எழுந்தது. “இந்த இரவில் நியூ எம்ப்ரெஸ் ஹோட்டலுக்கு அவள் ஏன் செல்கிறாள். அந்த ஹோட்டல் மனித குலத்தின் அந்த பழைமை வாய்ந்த தொழிலுக்கு மிகப் புகழ் பெற்றது. அவர்கள் யார் தமது ஹோட்டலுக்குத் தங்க வந்தாலும் எந்தக் கேள்வியையும் கேட்பதில்லை. அத்துடன் ஒரு மணித்தியாலத்துக்கு இவ்வளவு என்று தான் அறைக்கு வாடகை வசூலிப்பார்கள்.

அவனுக்கு வியப்பாக இருந்தது.... இவளும் அப்படிப்பட்டவளா?

அந்த இரவைப் போல நியூ எம்ப்ரெஸ் ஹோட்டலும் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. இரவில் ஹோட்டலைக் கவனித்துக் கொள்ள ஒரு மெனேஜர் மட்டுமே இருந்தார். அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனேஜர் என்ற கௌரவமான சொல் கொண்டு அழைத்தாலும் சந்தர்ப்பத்தில் விளக்குப் பிடிக்கும் கேவலமான வேலை யையும் தானே செய்ய வேண்டியிருப்பதனை எண்ணி தன்னையே அவர் நொந்து கொண்ட சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு.

நடுத்தர வயதுடைய மருதநாயகம் மலைநாட்டின் முக்கிய நகர்களில் ஒன்றான நுவரெலியாவில் இருந்து வேலை தேடி கொழும்புக்கு வந்து செய்வதறியாது அலைந்தபோது ஹோட்டல் உரிமையாளர் இன்னின்ன வேலையெல்லாம் செய்யத்தயாரா? என்று உத்தரவாதம் வாங்கிய பின்னர் அந்த மெனேஜர் வேலை-யைக் கொடுத்தார்.

தனது வேலையுடன் இத்தனை அசிங்கமான சங்கதிகள் இணைந்திருக்கும் என்று கருதியிராத மருதநாயகம் வேலை கிடைத்தால் போதும் என்று அவற்றையெல்லாம் ஒத்துக் கொண்டு வேலையில் சேர்ந்தார்.

அங்கு நடக்கும் பல நாடகங்கள் அவருக்கு ஒவ்வாததென்ற போதும் தன் விதியை நொந்து அவற்றுக்கு ஒத்து ழைக்க வேண்டியிருந்தது.

அந்த ஹோட்டலுக்கு வரும் ஆண்களும் பெண்களும் அநேகமாக குடும்பத்துக்கு வெளியில் தாம்பத்தியம் நடத்துபவர்கள். ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ ஹோட்டல் அறையை வாடகைக்கு எடுத்து தமது காரியத்தை முடித்துக்கொண்டதும் சட்டென்று வெளியேறி விடுவார்கள்.

ஹோட்டலிலேயே தங்கியிருந்து தமது தொழிலைச் செய்து வரும் ஒரு சில பெண்களையும், இரவில் மட்டும் நிழலான காரியங்களில் ஈடுபடும் சந்தேகத்திற்கிடமான சில ஆசாமிக ளையும் தவிர அந்த ஹோட்டலில் நிரந்தரமாகத் தங்குவோர் யாரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மசமசப்பான சிந்தனையில் ஈடுபட்டு தனது காரியங்களுக்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டிருந்த மருதநாயகத்தின் சிந்தனை முன் கதவை யாரோ அவசரமாகத் திறந்து கொண்டு வரும் கிறீச்சிட்ட சத்தத்தைக் கேட்டு கலைந்தது.

உடம்பெங்கும் சோம்பலேறி மிகத் தளர்ந்து போயிருந்த அவரது உடலும் உள்ளமும் திடீரென வியப்புணர்ச்சியால் சிலிர்த்தன.

அவரது இந்த ஐந்து வருட கால ஹோட்டல் வாழ்க்கையில் இத்தகைய அழகான, கௌரவமான ஒரு பெண் இந்த ஹோட்டலுக்கு வருகை தந்தது கிடையாது.

இவள் எதற்காக இங்கு வந்தாள்?

வழி தவறி வந்திருப்பாளோ? !

அவரது சிந்தனையில் பல குழப்ப நட்சத்திரங்கள் வர்ண ஜாலமிட்டபோது அவள் கௌண்டர் அருகில் வந்து அந்தக் கேள்வியை விட்டெறிந்தாள்.

"கீர்த்தி ஸ்ரீ சூரிய பண்டார இன்னவாத?"

அவள் சிங்கள உச்சரிப்பில் காணப்பட்ட பண்டைய கண்டிய அரச காலத்து உச்சரிப்புக்கும் அவளின் நவீன காலத்துத் தோற்றத்துக்கும் சம்பந்தம் காணப்படாததை நினைத்து மேலும் வியப்பெய்திய மருதநாயகம் அவள் முகத்தின் இடது பக்கம் கீழ் கன்னத்தில் அமைந்திருந்த அந்தக் குங்குமப் பொட்டகல மச்சத்தையும் கவனிக்கத் தவறவில்லை.

அவள் அந்தக் கேள்வியை மீண்டும் கேட்டாள். மருதநாயகம் அவளைக் கண்டு அசந்து போயிருப்பதனை அவள் கவனித்தபோதும் அதனை அவள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

வியப்பில் இருந்து விடுபட்ட மருதநாயகம் அவளுக்கு வழி காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“யார்! பண்டாரவா?...... முதலாம் மாடி 26ஆம் இலக்க அறை”

அவள் அநாயாசமாக அவ்விடத்தில் இருந்து அகன்று விரைந்து முன் ஹாலைக் கடந்து முதலாம் மாடி நோக்கி படி களில் ஏறினாள்.

மருதநாயகத்தின் மனதில் மீண்டும் வியப்புக் கலந்த சந்தேக மேகங்கள் கவிழ்ந்தன. இவள் ஏன் பண்டாரவைச் சந்திக்க வேண்டும். அத்தகைய மனிதனுடன் அவளுக்கு என்ன வேலை இருக்கிறது? அவர் தன்னையே கேட்டுக்கொண்டார். அவள் கையில் பிரயாணப்பை இருந்தது. அப்படியானால் அவள் அன்று இரவு அங்கே தங்கப் போகின்றாளா? அவள் தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் வராமல் இருந்தால் பண்டாரவுக்கு போன் பண்ண வேண்டும். மருதநாயகம் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

அவள் முதலாம் மாடியை அடைந்து மங்கலான விளக்கொளி யில் 26ஆம் இலக்க அறையை நோக்கிச் சென்றாள். அவள் அந்த அறைக்கு முன்னே வந்ததும் சற்றே நிதானித்தாள். பின்னர் தனது கையுறை அணிந்த வலது கரத்தினை சற்றே உயர்த்தி இரண்டு விரல்களால் மாத்திரம் கதவினைத் தட்டினாள். “டொக்.... டொக் .....” என்ற சத்தம் சிறிது மிகையாகத் தோன்றி ஓய்ந்தது.

அவள் மீண்டும் கதவைத் தட்ட எத்தனிக்க முற்பட்டபோது கதவு திறந்து கொண்டது. வாயிலில் கீர்த்தி ஸ்ரீ சூரிய பண்டார நின்றிருந்தான்.

“வந்து விட்டாயா? நீ வருவாயா, வரமாட்டாயா?” என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். அவன் கண்கள் அவள் மீது மேய்ந்தன.

அவன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

“தலைவர் எந்த ஒரு விடயத்தையும் செய்யத் தீர்மானித்து விட்டால் அதன் பின் பின்நிற்பதில்லை. அதன் மீது யாரும் சந்தேகப்படவோ, கேள்வி கேட்கவோ முடியாது...... கூடாது”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பண்டாரவைத் தொடர்ந்தவாறே கூறினாள். தம்மையும், தமது அமைப் பையும் அவன் இலகுவாக எண்ணிவிடக் கூடாது என்ற எச்சரிக்கைத் தொனி அவள் குரலில் காணப்பட்டது.

பண்டாரவும் அவளின் கண்டிப் பான குரலைக் கவனிக்கத்தான் செய்தான். வந்தவுடனேயே அவள் தனக்கு ஆணையிடுவதுபோல் பேசியது அவனுக்குப் பிடிக்கவில்லை. பெண்கள் ஆணுக்கு எப் போதும் சமமாக மாட்டார்கள் என்பதும் அவர்கள் ஆண்களுக்கு சுகமளிப்பதற்கு மட்டுமே லாயக்கானவர்கள் என்பதும் அவனது ஆணித்தரமான கருத்து.

அந்த அறையில் அவ்வளவாக வெளிச்சம் இருக்கவில்லை. ஒரு மேசையும் ஒரு கட்டிலும் சில நாட்காலிகளும் மட்டும் இருந்தன. மேசை மேல் ஒரு விளக்கும் காகிதக் குப்பைகளும் குவிந்தி ருந்தன. அந்த அறையின் தோற்றம் அவன் அழகுணர்ச்சி மிகக் குறைந்தவன் என்பதனை அப்படியே பறை சாற்றியது.

அவன் அவள் கரங்களில் இன்னமும் வைத்துக் கொண்டிருந்த பிரயாணப் பையையும் குடையையும் வாங்கிச் சென்று ஓரமாக வைத்துவிட்டு வந்தான்.

அவன் அவள் அருகில் வந்ததும் அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"என் பெயர் சித்ராம்பரி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரகசிய அமைப்பு

சித்ராம்பரி என்ற பெயர் அவனுக்கு விந்தையானதாக இருந்தது. அவள் சிங்கள இனத்தவள் தானா என்ற சந்தேகத்தையும் கிளப்பியது. ஆனால் அவற்றையெல்லாம் சிந்திக்க அவன் தயா ராக இல்லை. தான் நீண்ட காலம் எதிர்பார்த்த ஒரு சந்தர்ப்பம் இப்போது தனக்குக் கிடைத்திருப்பதாக அவன் கருதினான்.

ஆனால் இவ்வளவு அழகிய பெண்ணொருத்தி இதில் சம்பந்தப் பட்டிருப்பாள் என்று அவன் கனவிலும் கருதவில்லை. அதனை அவன் விரும்பவும் இல்லை. அவன் பொதுவாகவே பெண்களை வெறுப்பவன். அதுவும் அழகிய பெண்களை மிக வெறுப்பவன்.

அதற்கு மிகப் பெரிய காரணம் இருந்தது.

அவன் எழுந்து சென்று லைட் சுவிட்சைப் போட்டான். அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரில் பொருத்தியிருந்த கண்ணாடியில் தன் முகத்தின் பிரதி பிம்பத்தை ஒரு முறை பார்த்தான்.

அந்த கோரமான முகம் அவனுக்குப் பழக்கப்பட்டது தான் என்ற போதும் இப்போது அந்த முகத்தைக் கண்டு மேலும் அவன் அருவருப்படைந்தான். சில காலத்துக்கு முன்பு கொழும்பு நகரில் கஸினோ கிளப்புகளின் வளர்ச்சி அபரிமிதமாக ஏற்பட்ட போது அவற்றுக்கிடையே பலத்த போட்டிகள் ஏற்பட்டன. பல பாதாள உலகக் கும்பல்கள் கூலிக்கு அழைக்கப்பட்டு மோதல்கள் இடம்பெற்றன. T56, கைக்குண்டுகள், அஸிட் சகிதம் இவர்கள் மோதிக் கொண்டபோது ஒரு குண்டு பண்டாரவின் முகத்தை அலங்கோலம் செய்து விட்டது.

அவனே அந்த எதிரணிக் கும்பலுக்குத் தலைமை தாங்கிச் சென்றிருந்தான். அவன் கைக்குண்டால் தாக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டிருந்தபோது அவனது சகாக்களால் கூட அவனை அடையாளம் காண முடியாமல் இருந்தது.

அவனை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த போது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள் தீவிரமாக முயன்ற போதும் இதுவும் ஒரு மனித முகம்தான் என்று இனம் காணும் அளவுக்கு மாத்திரம் அவர்களால் அவன் முகத்தை மாற்றியமைக்க முடிந்தது. அவனது இரண்டு கண்களில் இடது கண் சதைப் பிண்டங்களால் மூடப்பட்டிருந்தது. ஒரு கண் மட்டுமே முழுமையாகவிருந்தது.

மூக்கு, உதடுகள், தாடை என்பவற்றுக்குக் குறுக்கே பாரிய வெட்டு விழுந்து கிழிந்திருந்ததுடன் கீழ் பற்கள் வெளி-யே வந்திருந்தன. முகத்தின் ஏனைய பகுதிகள் முற்றுப் பெறாத களிமண் சிற்பத்தின் முகம் போல் இருந்தன.

பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையில் ஈடுபட்ட டாக்டர்கள் புண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமானதும் மீண்டும் வந்தால் ஒரு வருட காலத்தில் முகத்தை ஓரளவு சீர் செய்ய முடியும் என்று கூறினார்கள். ஆனால் அவன் மீண்டும் டாக்டர்களைச் சந்திக்கச் செல்லவே இல்லை. அதற்கு அவனுக்கு நேரம் கிடைக்கவேயில்லை.

இக்காலத்திலேயே அவனுக்கு கோணப்பு கரலியத்த பண்டாரவின் நட்பு கிடைத்தது. அவன் பெயரில் காணப்பட்ட பண்டார என்ற வாசகமும் அவன் செய்த சில நம்பிக்கைக்குரிய வேலைகளும் காரணமாக அவன் கோணப்பு கரலியத்த பண்டாரவின் மிக நம்பிக்கைக்குரிய பணியாளனானான். அத்துடன் கோணப்பு கரலியத்த பண்டாரவிடம் இருந்து திருப்திகரமான வகையில் பண வரவுகள் கிடைத்தன. இதனால் அவன் தனது முகத் தோற்றத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. எல்லாவற்றையும் விட பணந்தான் அவனுக்கு முக்கியம்.

அந்த அருவருப்பான முகத்துடன் வாழ்வது ஆரம்பத்தில் சில மாதங்கள் வரை மிகக் கசப்பான அனுபவமாக இருந்தது. ஆனால் விரைவிலேயே அந்த முகத்தைக் காட்டி ஏனையோர் முகத்திலும் தோன்றும் வியப்புணர்வையும் பின்னர் அவன் முகத்தை எதிர்கொள்ள முடியாமல் படாரென அவர்கள் முகத்தை திருப்பிக் கொள்வதனையும் அவன் ஒரு குரூரமான மனச் சந்தோஷத்துடன் ரசிக்கத் தொடங்கினான்.

தன் முகத்தைப் பார்த்ததும் சித்ராம்பரியிடமும் இதே விளைவுகளையே எதிர்பார்த்தான். அவளிடம் என்ன உணர்வுகள் தோன்றுகின்றன என்று பார்ப்பதிலும் அவள் அதிர்ச்சி அடைவதைப் பார்த்து ரசிப்பதிலும் அவன் குறியாக இருந்தான்.

ஆனால் அதில் அவன் ஏமாற்றமே அடைந்தான். அவள் அவன் முகத்தை ஆராய்ந்த போது அவள் கண்களில் ஆச்சரியமோ அல்லது ஏமாற்றமோ வியப்போ ஒன்றுமே தோன்றவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உன் மூஞ்சியை இன்னும் கொஞ்சம் பழுது பார்த்திருக்கக்கூடாதா” என்று அவள் சாதாரணமாகவே கேட்டாள்.

அவள் அவனை அவ்வளவுக்கு மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டமையை அவனால் சகிக்க முடியவில்லை. அவன் அவள் மீது மிகப்பெரும் சீற்றம் கொண்டான். அவள் குரல்வளையைப் பிடித்துத் தூக்கி சுவரில் மோத வேண்டும் போல் ஒரு உணர்ச்சிப் பிரவாகம் அவனுள் எழுந்து அவன் முகத்தை மேலும் விகாரமாக்கியது. திடீரென்று அவள் கோணப்பு கரலியத்தவின் ஆள் என்பதும் ஒரு முக்கிய விடயம் பற்றி நேரில் பேச கண்டியில் இருந்து வந்திருக்கிறாள் என்பதும் அவனுக்கு நினைவுக்கு வந்தன. கோணப்பு கரலியத்தவின் இரகசிய இயக்கத்தில் சேரும் வாய்ப்பு அவள் மூலமே அவனுக்கு வந்துள்ளது. அவள் மீது கோபப்படுவதால் தனக்குத்தான் நட்டம் ஏற்படும் என்பதை அவன் உணர்ந்தான். அவன் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

அவன் தனது முகத்தை வேறு திசை நோக்கித் திருப்பிக் கொண்டு தன் உணர்ச்சிகளை வடிய விட்டான்.

அவனுள் என்ன நடக்கின்றதென்பது அவள் அறியாததில்லை. அவள் அதனைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவள் சற்று அப்பால் காணப்பட்ட மேசைக்கருகில் இருந்த கதிரையில் சென்று அமர்ந்தாள். பண்டாரவும் ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

அவன் அவளை மீண்டும் ஒரு முறை நோட்டம் விட்டான். அவள் பிரயாணத்தில் களைப்படைந்திருந்தாலும் அவள் தன்னை அலங்கரித்திருந்த விதம் எவரையும் கிறங்க வைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவன் தன் உணர்ச்சிகளை மறைக்க மறுபுறம் திரும்பி சிகரட் ஒன்றை பற்ற வைத்தான். அவள் தான் வந்த விடயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதற்கு தயாரானாள்.

நமது வேலையை வெற்றிகரமாக முடிப்பதற்கு பொருத்தமான ஆள் ஒருவனை தெரிவு செய்தாயிற்றா என்று அவள் கேட்டாள்.

"ஆம்.... ஆளைத் தேடுவதற்கு சற்று காலதாமதம் ஆனாலும் பொருத்தமான ஒரு ஆளைப் பிடித்துள்ளேன்" பண்டார தனது கைக்கடிகாரத்தில் பார்வையைச் செலுத்தினான். இன்னும் சில நிமிடங்களில் அவன் இங்கு வந்து விடுவான். நீயே அவன் தி-றமையைப் பரீட்சித்துக் கொள்ளலாம்.

"இது விடயத்தில் எந்தத் தவறும் இடம்பெற அனுமதிக்க முடியாது. இங்கு நாம் மேற்கொள்ளப் போகும் முதல் திட்டம் இதுவாகும். இதில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும்" அவளது அழகிய நீலோற்பலக் கண்கள் அவனது கரிய ஒற்றைக் கண்ணை கூர்ந்து நோக்கின. "நீ தெரிவு செய்திருக்கும் அந்த மனிதன் யார் ?"

"அவன் பெயர் சந்திரரத்ன பெரேரா, அவனை சந்தரே என்றே எல்லோரும் அழைப்பர். பொலிஸாரிடம் அவனைப் பற்றி எந்தப் பதிவுகளும் இல்லை. அவன் தனது வாழ்க்கையை சர்க்கஸ் கம்பனி ஒன்றில் இணைந்து ஆரம்பித்தான். பின்னர் அவன் சர்க்கஸில் பிரபல கத்தி எறியும் நிபுணனாகப் பெயர் பெற்றான். அவன் குறி எப்போதும் தப்பியதில்லை. அவன் சர்க்கஸ் வாழ்வைத் துறந்து இரத்தினபுரியில் இரத்தினக்கல் சுரங்கம் தோண்டும் தொழிலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளான். அதற்கான முதலீட்டினை பெற்றுக் கொள்ளவே இந்த வேலையை முடித்துத் தர சம்மதித்துள்ளான். அவன் முன்பு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தில் கடமையாற்றிவிட்டு தப்பி ஓடி வந்தவன். தப்பி ஓடி வந்தவன் என்று கூட கருத முடியாது. ஏனெனில் அவன் முல்லைத்தீவு இராணுவ முகா மில் கடமையாற்றிய போது முல்லைத்தீவு இராணுவ முகாம் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டதால் காணாமல் போனோரின் பெயர் பட்டியலில் இடம்பெற்றவன். அவன் உயிருடன் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் அவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது”

சித்ராம்பரி, பண்டார சொன்ன விபரங்களைக் கேட்டு சிந்தனையில் ஆழ்ந்தாள். இதுவரை அவள் சம்பந்தப்பட்ட எந்தத் திட்டமும் தோல்வியடைந்ததில்லை. அதன் பொருட்டே கோணப்பு கரலியத்த பண்டார இந்தக் கொழும்புப் பிரயாணத்துக்கு தன்னைத் தெரிந்தெடுத்திருந்தார் என்பது அவளுக்குத் தெரியும்.

இந்தத் திட்டத்தில் ஏற்படக்கூடிய எந்தக் குளறுபடியும் கோணப்புவின் பெருங்கோபத்துக்கிலக்காகும் என்பதும் அதன் பாதிப்பு பாரதூரமானதாக இருக்கும் என்பதும் அவள் அறியாததல்ல.

அவள் சிந்தனையையும் மௌனத்தையும் கலைத்த பண்டார கூறினான்.

“இந்த காரியத்தை சந்தரேயால் செய்ய முடியாது என்றால் வேறு யாராலும் முடியாது”

“காரியத்தைக் கெடுத்து விட மாட்டானே?” மீண்டும் அவள் அப்படிக் கேட்டது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் மௌனம் சாதித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொலை நாடகம்

சித்திராம்பரி கேட்ட பல கேள்விகளும் பண்டாரவுக்கு எரிச்சலை ஏற்படுத்தின. அவன் என்ன நினைக்கிறான் என்பதனை புரிந்து கொண்ட சித்ராம்பரி கூறினாள்.

"சரி... நீ தீர்மானமாக இருந்தால் நான் ஒன்றும் சொல்லவில்லை" பண்டார சமாதானமடைந்தான்.

"ஏனைய ஏற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன?" அவன் கேட்டான்.

"எவ்வளவு பணம் தர வேண்டும் என்பதும் எப்படி கொடுக்க வேண்டும் என்பதும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றிரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தரே அந்த வீட்டுக்குச் சென்று கீரிப்பிள்ளையும் அந்த எச்சரிக்கை கடிதமும் வைக்கப்பட்டுள்ள கூடையை வீட்டின் முன்னறை மேசையில் வைத்து விட்டு வருவான். நாளை இரவு ஒன்பது மணிக்கு நாம் அனுப்பி வைக்கும் ஆள் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த வீட்டுக்குச் செல்வான்..” இவ்விடத்தில் பண்டார இடைமறித்தான். எனக்கு ஒரு விடயம் சரியாகப் புரியவில்லை. அவன் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருந்தால் என்ன செய்வது?

“நீ அதைப் பற்றி கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை. அந்த மனிதன் ஒரு போதும் பணத்தைக் கொடுக்க சம்மதிக்கமாட்டான். அதனால் தான் அவனை நாம் தெரிந்தெடுத்துள்ளோம். அவன் மிரட்டிப் பணிய வைக்கக்கூடிய ஆள் அல்ல”

“அப்படியானால் சரி” அந்த விடயத்தில் தலையிட நான் தயாராக இல்லை. ஆனால் அவன் பணம் கொடுக்க சம்மதித்தால் விஷயம் பிழைத்துப் போகும்”

அப்படி நடக்காது.

“நல்லது.... அப்படியானால் இன்று இரவு ஒன்பதே முக்கால் மணிக்கு சந்தரே அந்த வீட்டுக்கு போவான். உன்னுடன் கத்தியைக் கொண்டு வந்திருக்கிறாயா?”

“அவள் பின் பக்கமாக திரும்பிக் குனிந்து கீழே வைத்திருந்த பிரயாணப் பையை திறந்தாள். அந்த சொற்ப வினாடிகளில் அவள் உடுத்திருந்த ரவிக்கைப் பின் புறம் சற்று உயர அவளது வழவழப்பான இடுப்புப் பகுதி பளிச்சிட்டது. அவன் மனதில் மீண்டும் கசப்பான உணர்வுகள் தலை தூக்கின.

இத்தகைய அழகிய இந்தப் பெண் தான் அனுபவிப்பதற்கல்ல என்பதனை அவன் ஏற்க மறுத்தான். ஆனால் என்ன செய்வது. அழகிய பெண்கள் அவன் முகத்தை ஏறெடுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதில்லையே. அவள் பிரயாணப் பையைத் திறந்து அந்த நீள் சதுர மரப்பெட்டியை மெதுவாக எடுத்து மேசை மேல் வைத்தாள். அதனைத் திறந்து அதனுள் இருந்து ஒரு அகலமானதும் கூர் நுனியைக் கொண்டதுமான கத்தியை எடுத்தாள். அதன் கைப்பிடி யானைத் தந்தத்தில் மிக நூதனமான வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது.

பண்டார மிகக் கவனமாகத் திருப்பித் திருப்பி அந்த கத்தியை சோதனை செய்தான். அவன் முகம் அதிருப்தியைக் காட்டியது.

"இது ஆபத்தைக் கொண்டுவரும். அரும் பொருட் காட்சிக் கூடத்தில் இருக்க வேண்டிய கத்தியை இங்கே கொண்டு வந்திருக்கிறாய். இத்தகைய கத்தியை பயன்படுத்தினால் பொலிஸ் நம்மை இலகுவாகக் கண்டுபிடித்து விடும்"

"இந்தக் கத்தி... இப்படி செய்யப்பட்டுள்ளமைக்கு விசேட காரணம் உண்டு. அது நமது இரகசிய இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது. நாம் இதுவரை எமது எல்லா வேலைகளிலும் இத்தகைய கத்திகளையே பயன்படுத்தி வந்திருக்கிறோம். இது நமக்கெனவே விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. இதனை செய்தவனை யாராலும் கண்டு பிடிக்க முடியாது."

பண்டார மிகக் கடுமையாக யோசித்தான். அவன் குரல் மேலும் அதிருப்தியுடன் வெளி வந்தது.

"இந்தக் காரியத்துக்கு இத்தகைய நாடகத்தனமான ஏற்பாடுகள் அவசியந்தானா?"

"எவற்றை நாடகத் தனமான ஏற்பாடுகள் என்று குறிப்பிடுகின்றாய்?" அவள் கேள்வியில் கண்டிப்பு தொனித்தது.

"கீரிப்பிள்ளை... தந்தக் கைப்பிடியுடன் கூடிய கத்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கைக் கடிதம் இவை எல்லாம் அவசியம்தானா?"

"இந்த முழுத் திட்டத்திலுமே அவசியமான அம்சங்கள் அவைதான் என்பதனை ஏன் புரிந்து கொள்ளவில்லை. இந்த ஏற்பாடுகளின் வாயிலாகத்தான் உலகம் நம்மை யார் என்று தெரிந்து கொள்ளப் போகின்றது. பத்திரிகைகள் இவற்றைத்தான் பெரிதுபடுத்திப் பிரசுரிக்கும். கீரிப்பிள்ளை எங்கிருந்து வந்தது என்று பலரும் கேள்வி எழுப்புவார்கள். இந்த கொலைக்கு கிடைக்கும் பிரசித்தியில் தான் நமது அடுத்த வெற்றி தங்கியுள்ளது. ரவி பெருஞ்சித்திர நாயக்கனின் இறப்பைப் பற்றி சகலரும் அறிந்திருந்தால் தான் நாம் அடுத்த முறை எச்சரிக்கைக் கடிதம் அனுப்பும் முன்பே எவனும் பணம் கொடுப்பான். நாம் வெறு-மனே கொலை மிரட்டல் விடுப்பவர்கள் அல்ல. உண்மையாகவே கொலை செய்பவர்கள்தான் என்பதனை சகல மகாஜனங்களும் அறிந்திருக்க வேண்டும். அதற்காகத்தான் கீரிப்பிள்ளை, தந்த பிடி போட்ட கத்தி ... இந்த நாடகமெல்லாம் புரிந்ததா? அவள் ஒரே மூச்சில் கூறி முடித்தாள்.

பண்டாரவுக்கு வியப்பாக இருந்தது. இதுவரை இவ்விதம் திட்டம் போட்டு அவன் வேலை செய்தது கிடையாது. யாராவது ஆணையிட்டால் துப்பாக்கி எடுத்து சுடவும் வெடிகுண்டு எறியவும், கடத்திக் கொண்டு வரவும் கொலை செய்யவும் மட்டுமே அவன் பழக்கப்பட்டிருந்தான். இது அவனுக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

முதல் தடவையாக சித்ராம்பரி மீது அவனுக்கு மதிப்பும் மரியா தையும் ஏற்பட்டது.

அவன் மேசையருகில் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த அதி விசேசம் சாராயப் போத்தலைத்திறந்து கிளாசில் ஊற்றாமலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடக் மடக் கென்று நான்கு மிடறுகள் விழுங்கினான்.

பண்டாரவுக்கு கரலியத்த பண்டாரவை கடந்த இரண்டு வருடங்களாகத் தெரியும். அவன் கண்டியின் மிகப் பெரும் பணக்காரன் என்பதும், கண்டிய உயர் குடியைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க ஒரு புள்ளி என்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால் அவனது இரகசிய இயக்கம் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவ்வப்போது சில நிழலான கைங்கரியங்களை நிறைவேற்றும்படி கரலியத்தவிடம் இருந்து கட்டளைகள் வரும். அப்போதெல்லாம் அவற்றை பண்டார கச்சிதமாக நிறைவேற்றியுள்ளான். அவற்றுக்கு அவன் எதிர்பார்த்ததை விட அதிக பண வெகுமதிகள் கிடைத்திருக்கின்றன. இந்த முறை கரலியத்த பெரிதாக எதனையோ செய்யப் போகிறான் என்பதை மட்டும் அவன் கிரகித்திருந்தான்.

அவன் சிந்தனையைக் கலைப்பதற்கென்றே ரூம் டெலி போன் கிணு கிணுத்தது. பண்டார டெலிபோன் ரிசிவரை எடுத்தான். மருதநாயகத்தின் குரல் ஒலித்தது.

“இங்கே ‘சந்தரே’ என்று கூறிக் கொண்டு ஒரு ஆள் வந்திருக்கின்றான். அனுப்பட்டுமா?”

“அனுப்பி வை”

“இன்னொரு விடயம்” மருதநாயகம் தொடர்ந்தார்

“என்ன?”

“அந்தப் பெண் இன்று இரவு தங்குகிறாளா என்று தெரிய வேண்டும். அப்படியானால் உங்களுக்கு அடுத்ததாக ரூம் போட்டுத் தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார சித்ராம்பரியைப் பார்த்தான். "உனக்கு தங்குவதற்கு இங்கே ரூம் வேண்டுமா?"

"அவள் வேண்டாமென்று" தலையசைத்தாள்.

"அவள் இங்கு தங்க மாட்டாள்"

பண்டார மருத நாயகத்துக்குப் பதிலளித்தான்.

"அப்படியானால் அது உனது துரதிஷ்டமே" மருதநாயகம் கூறிவிட்டுச் சிரித்தார்.

பண்டார டொக் என்று ரீசீவரை வைத்தான். அவன் கோபம் அதில் பிரதிபலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரி தப்பாது

சந்திரரத்ன பெரேரா என்று அழைக்கப்பட்ட சந்தரே நீண்ட நெடிய தோற்றமுடையவன். அவனுடைய கூர்மையான மூக்கும் கழுகுப் பார்வையும் சுருட்டை முடியும் மெல்லிய தோற்றமும் அவனை சர்க்கஸுக்குப் பொருந்தமானவனாகக் காட்டின.

அவன் கறுப்பு கோடு போட்ட கோட்டும் கறுப்பு காற்சட்டையும் அணிந்திருந்தான். தலைக்கு கெப் வைத்திருந்தான்.

அவன் மருதநாயகத்தின் வரவேற்பறை கரும பீடத்தில் சாய்ந்த வாறே பிரிஸ்டல் ஒன்றைப் பற்றவைத்து கட்டியாக புகையை ஊதினான். அதற்கு மேலாக மெண்டிஸ் வாசனை பீறியடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத நாயகம் வெறும் சாராய நெடியைத் தாங்கிக் கொள்வா ரேயன்றி சிகரட் புகையும் சேர்ந்து வரும் நாற்றத்தை தாங்கிக் கொள்ள மாட்டார். அவருக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது.

"நிறையப் போட்டிருப்பாய் போல் தெரிகிறது. போ.... போ.. ரூம் நம்பர் *26*"

சந்தரே சற்று நகர்ந்தவன் திரும்பி வந்தான். "என்ன சொன்னாய்" அவன் குரல் கரகரப்பாக தண்ணீர் பீப்பாயை சரலைக் கற்பாறையில் உருட்டியது போல் இருந்தது. அவன் மருதநாயகத்தின் சட்டைக் கொலரை முறுக்கிப் பிடித்து பலமாக உலுக்கினான். மருத நாயகத்துக்கு பொறி கலங்கி வண்ண வண்ண நட்சத்திரங்கள் பளிச்சிட்டன. சீண்டக் கூடாதவனை சீண்டி விட்டமைக்காக தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டார்.

அவன் பிடியைத் தளர்த்தினான்.

"வாயைத் திறந்தாய்...ஒரு பல்லும் மிச்சமிருக்காது"

அவன் உறுமிவிட்டு மாடிப்படிகளில் ஏறினான். மருதநாய கம் கதிர்காமக் கந்தனுக்கு நன்றி தெரிவித்தார். சந்தரேயின் சீற்றத்துக்கு அவன் குடித்திருந்தது மட்டும் காரணமல்ல. அவன் நிறையக் குழம்பிப் போயிருந்தான். அவன் நாடி நரம்புகள் மிகத் தளர்ந்திருந்தன. அன்று மாலை முழுவதும் அவன் குடித்த வண்ணமே இருந்தான். இதுவரை காலத்தில் அவன் பல சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறான். ஆனால் யாரையும் கொலை செய்தது கிடையாது. கடந்த இரண்டு மாதங்களாகவே அந்த இரத்தினபுரி இரத்தினக்கல் சுரங்கத்தை வாங்கி விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் வெகுவாக வேரூன்றி வந்திருந்தது. ஆனால் அதற்கு ஐம்பது இலட்சம் ரூபாய் தேவைப்பட்டது. அதனை யார் கொடுப்பார்கள். இந்த நேரத்தில் தான் பண்டார அவனை அணுகி விசயத்தைக் கூறியிருந்தான். இந்த திட்டம் ஏற்பாடு செய்துள்ள படி நிகழ்ந்தால் யாராலும் கண்டுப்பிடிக்க முடியாது என்பதற்கு அவன் உத்தரவாதம் அளித்திருந்தான்.

ஆனால் சந்திரே பொலிஸாரை அவ்வளவு மட்டமாக மதிப்பிடத் தயாராக இல்லை. பொலிஸார் கொலைகாரன் செய்யும் தவறுகள் மீதே பெரிதும் கண் வைப்பார்கள். திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்படும் எந்தத் தவறும் கொலைகாரனை காட்டிக் கொடுத்து விடும்.

பண்டார இவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை அவன் சந்தரேயை சமாதானப்படுத்தியிருந்தான்.

"சந்தரே உனது மூளையைப் பயன்படுத்த ஏன் மறுக்கிறாய்? பொலிஸார் உன்னைத் தேடி வருவதற்கு அவர்களிடம் உன்னைப் பற்றிய எந்த ஆதாரமும் குறிப்புக்களும் இல்லை. இதற்கு முன் எந்தக் குற்றத்துக்கும் பொலிஸார் உன்னைக் கைது செய்தது கிடையாது. அவர்களிடம் உன்னைப்பற்றிய பதிவுகளோ விரல் ரேகை அடையாளங்களோ இல்லை. எனவே உன்னை சந்தேகப்பட எந்தக் காரணமும் இல்லை. அத்துடன் இந்தக்காரியத்தை முடித்ததுடன் நீ உனது இரத்தினக்கல் தோண்டும் தொழிலுக்கு சென்று விடுவாய். அதன் பின் உன்னை யாரும் தேட மாட்டார்கள்"

ஆனால் கொலை செய்யும் போது வீட்டில் வைத்தோ அல்லது வீட்டில் இருந்து வெளியேறும் போதோ யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து விட்டால்.... அவன் மீண்டும் குழம்பிப் போனான். அந்த சந்தர்ப்பத்திலேயே அவன் குடிக்க ஆரம்பித்தான். இரண்டு மூன்று கிளாஸ் மெண்டிஸ் அதி விசேடம் உள்ளே போனதும் அவன் தெளிவடைந்தான். காரியம் முடிவடைந்த உடனேயே இரத்தினபுரிக்குப் போய் ஆரவாரமின்றி கம்மென்று இருந்து விட வேண்டும். அவன் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

அவன் மாடிப்படிகளைக் கடந்து 26 ஆம் இலக்க அறையை அடைந்து கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த போது அவன் கண்களில் முதல் தென்பட்டது சித்ராம்பரிதான். அவளும் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள்.

"ஓ.கே. சந்தரே! கதவைச் சாத்தி விட்டு இங்கே வந்து உட்கார். இவள் சித்ராம்பரி. நம்முடன் திட்டத்தில் இணைந்து தொழில்படுபவள்" பண்டார கூறினான்.

"வாவ் அப்படியா? ரொம்ப நல்லது. இந்தத் துண்டை எங்கே பிடித்தாய் பண்டார" என்று கூறியவாறே சந்தரே அவள் அருகில் சென்று அவள் தொடையை லேசாகத் தட்டி "ஹாய் பேபி. நீ எங்களுடன் சேர்ந்து செயற்படும்போது நான் நிறைய விடயங்களைச் சொல்லித் தருவேன்" என்றான்.

சித்ராம்பரிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவனை பொசுக்கி விடுவது போல் அவள் முறைத்துப் பார்த்தாள்.

"நிறுத்து! பேச வேண்டும் போது மட்டும் நீ பேசினால் போதும்" அவள் மிகக் கண்டிப்புடன் கூறினாள்.

"நோ பேபி, என்னிடம் அப்படிப் பேசாதே, நானும் நீயும் இன்னும் நிறைய விடயங்கள் சேர்ந்து செய்ய வேண்டியுள்ளது" அவன் மோகப் பார்வை வீசினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசயம் கட்டு மீறிப் போவதைக் கவனித்த பண்டார நாற்காலி யில் இருந்து எழுந்து சந்தரே அருகில் சென்று அவன் கன்னத்தில் பளார் என்று ஒன்று வைத்தான். பொறி கலங்கிய சந்தரே நிதானத்துக்கு வந்தான்.

அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொண்டே பரிதாபமாக விழித்தான். அவன் இதை எதிர்ப்பார்க்கவில்லை.

"இவன் நமது காரியத்துக்கு சரி வருவான் என்று நினைக்க வில்லை. நிறையக் குடித்திருக்கிறான். கொஞ்சமும் ஒழுக்கம் தெரியாதவன்". சித்ராம்பரி சந்தரே அந்த அறையில் இல்லாதது போல் நினைத்துக் கொண்டு பண்டாரவிடம் கூறினாள்.

"இல்லை, சந்தரேயால் இந்தக் காரியத்தை செய்ய முடியும். அவன் ஏதாவது தவறு செய்தால் நானே அவனைக் கொன்று விடுவேன்" பண்டார தீர்மானமாகக் கூறினான்.

சந்தரேயின் நாடி மேலும் தளர்ந்தது. பண்டாரவை அவனுக்கு நன்கு தெரியும். அவன் சொன்ன வார்த்தைகளை அர்த்தத்துடனேயே சொல்கிறான் என்பதும் அவனுக்குத் தெரியும். அவன் மௌனமாக இருந்தான்.

"சந்தரே மடையன் மாதிரி உளறாதே உன்னால் காரியத்தை செய்ய முடியுமா முடியாதா?"

சந்தரேக்கு வேறு மார்க்கம் இல்லை. அவன் தலையை மட்டுமே அசைத்தான். பண்டார மேசை மீதிருந்த அந்த நீள் சதுர பெட்டியைத் திறந்து அதனுள்ளிருந்த கத்தியை எடுத்து சந்தரேயிடம் நீட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்த கத்தியைத்தான் நீ பயன்படுத்த வேண்டும், எங்கே இப்போது உனது திறமையை இவளுக்கும் காட்டு பார்க்கலாம்”

அந்த கத்தியை ஆராய்ந்த சந்தரேயின் கண்கள் பிரகாசமடைந்தன. உயிரிழந்திருந்த அவன் மீண்டும் உயிர் பெற்றது போல் சுறுசுறுப்படைந்தான்.

அவன் அந்த அறையைச் சுற்றிப்பார்த்து ஒரு இலக்கைத் தேடினான். பின் தனது பொக்கட்டில் இருந்து ஒரு சீட்டுக்கட்டை எடுத்தான் அதில் இருந்து ஒரு டயமண்ட் ஏஸ் சீட்டை உருவி அறையின் எதிர் சுவரில் பொருத்தினான். அறையில் இருந்த மங்கலான வெளிச்சத்தில் சித்ராம்பரியால் சீட்டை நன்கு தெளி வாகப் பார்க்க முடியவில்லை.

சந்தரே அறையின் அடுத்த விளிம்புக்குச் சென்றான். வலது கையின் மறுபுறத்தில் கத்தியை மட்டமாக வைத்து குறி பார்த்தான். அடுத்தகணம் கத்தி விர்ரென்று சுழன்று சென்றது. அது சுவற்றில் பதியும் சத்தம் சரக்கென்று கேட்டது.

பண்டார மேசை லைட்டை அத்திசை நோக்கி செலுத்தினான். கத்தி டயமண்ட் சீட்டின் மிக மத்தியில் ஊடறுத்துச் சுவற்றில் பாதி செருகப்பட்ட நிலையில் இருந்தது. சித்தராம்பரி திருப்திய டைந்தாள்.

பண்டார கூறினான்.

“சந்தரேயால் இப்படி நூறு முறைகள் செய்ய முடியும். அதில் ஒரு முறையாவது அவன் குறி தப்பியிருக்காது, இந்த நாட்டில் இப்படிச் செய்யக்கூடிய திறமை உள்ளவன் அவன் மட்டுமே” சந்தரே பெருமையடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீரிப்பிள்ளை

சந்தரேயின் குறி பார்த்து கத்தி வீசும் திறமையை சித்தராம்பரி உள்ளுக்குள்ளேயே வியந்தாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவிரும்பவில்லை. அப்படிச் செய்வது அவனிடம் தன் மீதுள்ள மரியாதையை மேலும் குறைக்கும் என்று அவள் கருதினாள்.

“உன்னிடம் திறமை இருக்கிறது. ஆனால் அதற்குரிய கட்டுப் பாடுகள் தான் இல்லை”.

“அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எனது பொறுப்பு” பண்டார உத்தரவாதமளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் எனக்கு இப்போதே கொஞ்சம் பணம் வேண்டும்" சந்தரே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தான்.

சித்தராம்பரி விருட்டெனத் திரும்பி அவனை ஒரு புழுவைப் பார்ப்பது போல் அசூயையுடன் பார்த்தாள். அவள் குரல் மிகத் தீர்மானமாக ஒலித்தது.

"உனக்குரிய பணம் ரவி பெருஞ்சித்திர நாயக்கனின் தலை உருண்டதும் கிடைக்கும். அதற்கு முன் அல்ல" இதனைக் கூறிவிட்டு அவள் சட்டென்று எழுந்து கொண்டாள்.

"நாளை இரவு 11.30 மணிக்கு நான் உன்னுடன் தொடர்பு கொள்வேன். அப்போது எனக்கு நீ ஒரு விவரமான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.'

சந்தரே ஏதோ கூறும் பொருட்டு ஒரு அடி முன் வைத்தான். ஆனால் பண்டார அவனை பேச முடியாதபடி சைகையாலேயே தடுத்து விட்டான்.

"எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் உடனடியாகப் போக வேண்டும். சொன்னதெல்லாம் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். காரியத்தைக் கச்சிதமாக முடிக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்" என்று பண்டாரவிடம் கூறிய சித்ராம்பரி தனது பிரயாணப் பையையும் குடையையும் எடுத்துக் கொண்டாள்.

"காரியத்தில் எந்தத் தவறும் இடம்பெறக் கூடாது. உன்னை நான் நாளை சந்திக்கின்றேன்." அவள் அந்த ரூமைவிட்டு வெளி யேறினாள். அவர்கள் இருவரும் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலை பத்து மணி இருக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை. ராம்ஜீ உலகநாதன் வீட்டில் தேங்கிக் கிடந்த சில வேலைகளை முடித்துத் தீர்த்து விடும் நோக்கில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அவன் தனது வசதிக்காக அலுவலகத்தையும் வீட்டில் இருந்த முன்னறையிலேயே வைத்திருந்தான். வீடும் அலுவலகமும் கொழும்பு கறுவாக்காடு ரொஸ்மிட் பிளேசில் கொழும்பு நகர சபை மண்டபத்தை ஒட்டியதாக அமைந்திருந்தது.

அவன் அன்றைய வேலைகளை ஒவ்வொன்றாக எப்படி செய்து முடிப்பது என்று ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தபோது டெலி போன் மணியடித்தது.

அவன் ரிசிவரை காதில் பொருத்தி "ஹலோ.... ராம்ஜீ ஹியர்" என்றான்.

மறுபுறத்தில் ஒரு பரபரப்பான பெண் குரல் ஒலித்தது.

"ராம்ஜீ... நான் ரவி பெருஞ்சித்திரத் தேவனின் மனைவி லீலா மணி பேசுகிறேன். உங்களை அவசரமாக சந்திக்க வேண்டும்".

ரவி என்று சுருக்கமாக அழைக்கப்படும் ரவி பெருஞ்சித்திர நாயக்கனையும் அவன் மனைவி லீலாமணியையும் அவனுக்கு நீண்ட நாட்களாகத் தெரியும். அவர்கள் அவனது குடும்ப நண்பர்கள். அவன் அண்மையில் வெளிநாடு சென்றுவிட்டு நாடு திரும்பியதில் இருந்து சிலகாலம் அவன் அவர்களை சந்திக்கவில்லை.

இப்போது லீலாமணிக்கு அப்படி என்ன அவசரம் நேர்ந்திருக்க வேண்டும்!

அவன் பதிலளித்தான்..."மிஸிஸ் லீலாமணி ... நான் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் போகவில்லை வீட்டில்தான் இருக்கிறேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம்."

லீலாமணி தான் உடனே வருவதாகக் கூறிவிட்டு போனை வைத்துவிட்டாள்.

லீலாமணி குடும்பத்தினரும் ரவி குடும்பத்தினரும் கொழும்பின் பெரிய பணக்கார குடும்பத்தினர் வரிசையில் முன்னிற்பவர்கள். இந்த இரண்டு குடும்பத்தினரும் திருமணத்தால் இணைந்த போது செல்வம் மேலும் குவிந்தது.

லீலாமணி சீரும் சிறப்புமிக்க பணக்காரப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டிருந்தாலும் பகட்டானவள் அல்ல. அவள் சமூகத்தின் கட்டுக்கோப்புகளுக்கும், நியதிகளுக்கும் மதிப்பளிப்பவளாகவே இருந்தாள். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்தபோதே அவள் ரவியைச் சந்தித்தாள்.

ரவியும் அவளுக்கு மிகப் பொருத்தமானவனாகவே இருந்தான். அவன் முகாமைத்துவ கல்வியில் சிறப்புப் பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்தான். பல்கலைக்கழகத்தில் அவன் அவளுக்கு இரண்டு வருடம் சீனியர். அங்கே மாணவப் பருவத்தில் மலர்ந்த காதல் பின்னர் படிப்பு முடிந்ததும் பெற்றோர்களின் ஆசிர்வாதத்துடன் திருமணத்தில் பூர்த்தியானது.

அதன்பின்னரும் அவர்கள் வாழ்வில் வசந்தமே வீசி வந்தது. ரவி அவனது தந்தையின் வியாபாரத்தில் தானும் பங்கேற்றுக்கொண்டான். அவளும் அவனுக்கு உதவி வந்தாள். இப்போது அவள் வாழ்வில் என்ன பிரச்சினை ஏற்பட்டிருக்க முடியும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாமணி டெலிபோனில் பேசி அரைமணி நேரம் கடந்திருக்கும் அவளது பச்சை நிற பி.எம்.டபிள்யூ.ராம்ஜீயின் வீட்டு நுழைவாயிலில் வந்து நின்றது. அவளே காரை ஓட்டிக்கொண்டு வந்திருந்தாள்.

ராம்ஜீ முற்றத்துக்கே சென்று அவளை அழைத்து வந்தான்.

"வா லீலா... ரவி எப்படி இருக்கிறான்? நலம்தானே"

அவள் புன்னகைத்தாள். ஆனால் அதில் செயற்கைத்தன்மை தெரிந்தது. பலவந்தப்படுத்தி புன்னகைத்தது போல் இருந்தது. பிரச்சினை கொஞ்சம் சீரியஸானதாகவே இருக்க வேண்டும் என்று ராம்ஜீ ஊகித்தான்.

ரவியும், லீலாவும் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த அதே காலப்பகுதியிலேயே ராம்ஜீயும் அதே பல்கலைக்கழத்தில் சட்டக்கல்வி பயின்று கொண்டிருந்தான். அவர்கள் வேறு வேறு துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்த போதும் மாணவர் சங்கம், தமிழ் இலக்கிய மன்றம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் சேர்ந்தே ஈடுபட்டிருந்ததால் அப்போதிருந்தே அவர்கள் நல்ல நண்பர்களாக இருந்தார்கள்.

ராம்ஜீ லீலாவை வரவேற்பறைக்கு அழைத்து வந்து அங்கிருந்த விசாலமான ஷோபாக்களில் ஒன்றில் அமர வைத்தான். அவன் அவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சில நிமிடங்கள் அனுமதித்தான்.

"என்ன குடிக்கிறாய் லீலா..." அவன் ஒரு சிகரட்டைப்பற்ற வைத்தவாறே கேட்டான். பின் அருகில் இருந்த "பெல்லை' அழுத்தினான்.

"சில்லென்று ஏதாவது..." அவள் சுவாரஸ்யமில்லாமலே கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அழுத்திய அழைப்பு மணியோசை கேட்டதும் அவனது வீட்டுச் சேவையாளரான கிருஷ்ணசாமி வந்தார். அவருக்கு அறுபது அல்லது அறுபத்தைந்து வயதிருக்கும். இன்னமும் திடகாத்திரமானவராக இருந்தார். ராம்ஜீயின் தந்தை உலகநா தன் காலத்தில் இருந்தே அந்த வீட்டுடன், ஒட்டிக்கொண்டவர் அவர். அவரை அவன் ”சாமி' என்றே உரிமையுடன் அழைப்பான். அவனை சிறுவயதில் இருந்தே தூக்கி வளர்த்தவர் அவர்.

“சாமி... கூலா ஏதாவது கொண்டு வாங்க....” என்று கூறியதும் அவர் தலையசைத்தார். அவருக்கும் லீலாமணியை நன்கு தெரியுமாதலால் அவளும் அவரைப் பார்த்து நட்புறவுடன் தலையசைத்தாள். சாமிக்குப் பொதுவாக இந்த தலுக்கிக்குலுக்கும் பணக்கார வர்க்கத்துப் பெண்களைப் பிடிக்காது. ஆனால் லீலாமணி அவற்றுக்கு விதிவிலக்கு ஆதலால் அவள் மீது அவர் மரியாதை வைத்திருந்தார்.

அவர் ஒரு டிரேயில் இரண்டு மென்பான டின்களையும், இரண்டு கிளாஸ்களையும் கொண்டு வந்து லாவகமாக அவற்றை உடைத்து நுரைபொங்க கிளாஸ்களில் ஊற்றி விட்டு சென்றார்.

அதன் பின்னரே அவன் வாயைத் திறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலை மிரட்டல்

"என்ன லீலா உன் நடவடிக்கைகள் மர்மமாகவே உள்ளன. ரவி ஏதும் வேறு பெண்ணுடன் ஓடிவிட்டானா?"

அவன் நகைச்சுவையுணர்வுடனேயே கேட்டான்.

"அப்படி இருந்தால் கூட பரவாயில்லையே. நானே சமாளித்திருப்பேன். இது கொலை மிரட்டல்... யாரோ "கீரிப்பிள்ளை' என்பவன் ஐந்து கோடி ரூபா பணம் கொடுக்காவிட்டால் ரவியைக் கொலை செய்துவிடுவதாகப் பயமுறுத்தி எழுதியிருக்கான்"

"இதற்காகவா இப்படி பயந்து போய்விட்டாய்" ராம்ஜீ பலமாக நகைத்தான்.

"சிரிக்காதே ராம்ஜீ... நான் நொந்து போயிருக்கிறேன்... இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை இரண்டாவது லெட்டர் வந்துள்ளது. அத்துடன் ஒரு கூடையில் வைத்து உயிருள்ள கீரிப்பிள்ளையையும் அனுப்பி இருக்கிறான். இன்று நள்ளிரவுக்குள் ஐந்து கோடி ரூபாவை கொடுக்காதுவிட்டால் ரவியின் உயிர் பறிக்கப்படும் என்று கூறியுள்ளான்" அவள் சிறிது நடுக்கத்துடனே கூறினாள்.

தனது கணவன் கொலை செய்யப்பட போகிறான்தான் என்ற செய்தி ஒரு பெண்ணை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது ராம்ஜீ அறியாததல்ல.

லீலா அடைந்திருந்த கலவரமும், பதற்றமும் நியாயமானதே.

தானும் பீதியடைந்ததாகக் காட்டிக்கொண்டால் லீலா மேலும் அச்சம் கொள்வாள் என்பதால் தனது குரலில் எந்தவித தடுமாற்றத்தையும் காட்டாமல் அவளுக்கு ஆறுதல் சொன்னான் ராம்ஜீ.

"கவலைப்படாதே லீலா... இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றுதான் நினைக்கிறேன். நாம் ஆராய்ந்து பார்க்காமல் எந்த முடிவுக்கும் வருவது நல்லதல்ல"

அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"எங்கே அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்திருக்கிறாயா?"

"இல்லை ராம்ஜீ... அதனை ரவி வீசி எறிந்துவிட்டார். அவர் இதனை கொஞ்சமும் கணக்கெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரியும்தானே அவரது போக்கு. இது ஒரு பைத்தியக்காரனின் வேலையாக இருக்கும் என்று கருதுகிறார்"

"அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது லீலா. ரவி போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பணக்காரர்களுக்கு இத்தகைய மிரட்டல் கடிதங்கள் வருவது சகஜம்தான். இந்தக் கடிதங்களை எழுதியவன் ”கீரிப்பிள்ளை’ என்று கையெழுத்துப் போட்டிருக்கிறான் என்று கூறினாய் அல்லவா? அதுதான் சந்தேகத்தைக் கிளப்புகின்றது. அவன் உண்மையில் கொலைகாரனாக இருந்தால் ஏன் “கொலைப்புலி’ ”நரபலி நரசிம்மன்’ என்று பெயர் வைத்துக்கொள்ளாமல் கீரிப்பிள்ளை என்ற சாதாரண மிருகத்தின் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறான்”

“இதே கருத்தைத்தான் ரவியும் கூறுகிறார். ஆனால், எனக்கென்னவோ மிகவும் பயமாக இருக்கிறது. சாதாரண கடிதமாக மட்டும் இருந்தால் பரவாயில்லை. உயிருள்ள கீரிப்பிள்ளையை ஏன் அனுப்ப வேண்டும்” லீலாவின் நடுக்கத்தை மறைக்க அவள் மிகச் சிரமப்பட்டாள். அவள் தடுமாறியவாறே பேசினாள். ராம்ஜீ அவளை இடைமறிக்காமல் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

“இன்று காலை, காலைச் சாப்பாடு சாப்பிடுவதற்காக உணவு மேசைக்கு வந்தபோது அங்கே மூடப்பட்ட வித்தியாசமான கூடை ஒன்று இருந்தது. அந்தக் கூடையை இதற்கு முன்பு நான் பார்த்திருக்கவில்லை. நான் எங்கள் வீட்டு சேவையாளனான பொன்னம்பலத்தைக் கூப்பிட்டு அந்தக் கூடையை திறக்கச் சொன்னேன். திறந்ததுதான் தாமதம். ஒரு கபில நிற பிராணி அதனுள்ளிருந்து துள்ளிப் பாய்ந்தது. ஒரு நிமிடம் அது தனது சிவந்த கோபமான கூரிய கண்களால் எங்களை கொலை வெறி கொண்டு வெறித்துப் பார்த்தது. அதன் குஞ்சம் போன்ற வால் கோபத்தால் நேராக நிமிர்ந்திருந்தது. அடுத்த கணத்தில் அது மின்னலென ஜன்னலை நோக்கி ஓடி வெளியில் புதர்க்காட்டில் சென்று மறைந்துவிட்டது. அந்த ஜந்து ஒரு கீரிப்பிள்ளைதான். அதில் சந்தேகமில்லை. அந்தக் கூடையில் இரண்டாவது கடிதம் இருந்தது. அதில் தட்டச்சு யந்திரத்தால் பொறிக்கப்பட்ட ஒரு செய்தி இருந்தது. அதன்படி இன்றிரவு 10 மணிக்கு பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆள் ஒருவன் அனுப்பி வைக்கப்படுவான் என்றும் அவனிடம் ஐந்து கோடி ரூபா கொடுக்கப்பட வேண்டும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ரவி மரணத்தைச் சந்திப்பான் என்றும் எழுதப்பட்டிருந்தது. ஓ!... ராம்ஜீ.... எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை” அவள் கிட்டத்தட்ட குமுறி அழும் நிலைக்கு வந்துவிட்டாள்.

“விசயம் உண்மையில் வெகு தூரத்துக்குத்தான் போயிருக்கின் றது. ஆமாம்... அந்த கீரிப்பிள்ளை இருந்த கூடை எப்படி அங்கே வந்து சேர்ந்திருக்கும்”

“அதுதான் எனக்கும் நம்ப முடியாமல் உள்ளது. யாராவது அதனைக் கொண்டுவந்து வைத்திருக்க வேண்டும். நான் இந்த விடயத்தை பொலிசுக்கு அறிவிக்க வேண்டுமென்று கூறினேன். ஆனால், ரவிக்கு அதில் உடன்பாடில்லை. இந்த விடயம் பத்திரிகைகளுக்குத் தெரிந்தால் அவர்கள் பெரிதுபடுத்திவிடுவார்கள் என்றும் பின்னர் தனது நண்பர்கள் தன்னைப் பார்த்து நகைப்பார்கள் என்றும் அவர் கூறுகின்றார்”

ராம்ஜீ தனது குறுந்தாடியை சற்றே தடவிக் கொண்டான். அவன் சிந்தனை சற்றே சிறகடித்தது... என்ன செய்யலாம்...!? அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

“லீலா... ரவி கூறுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. இத்தகைய ஒரு விடயம் பத்திரிகைகளில் வெளிவந்தால் அது ரவியின் அந்தஸ்துக்கும் வியாபாரத்துக்கும் நல்லதல்ல. இந்த சவாலை நாமே சந்திப்பதுதான் நல்லது. உண்மையில் பொலிசுக்கு அறிவித்தால் கூட அவர்கள் பெரிதாக ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஒரு நோஞ்சான் பொலிஸ்காரரை பிடித்து காவலுக்குப் போடுவார்கள். அவனால் ஒரு தீவிர கொலைகாரனைத் தடுக்க முடியுமா? இது அவ்வளவு தூரத்துக்குப் போகும் என்று நான் கருதவில்லை. ஆனால், நாம் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது நல்லது. நான் இன்று இரவு எட்டு மணிக்கெல்லாம் எனது உதவியாளர் ஜெய்சிங்கையும் கூட்டிக்கொண்டு வருகிறேன். ஜெய்சிங்கைத் தெரியும்தானே. எந்த நெருக்கடியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிக்கத்தக்கவன். முன்பு இராணுவத்தில் கடமையாற்றியவன். நீ ரவியிடம் ஒன்றும் கூற வேண்டாம். நான் தற்செயலாக அங்கு வந்ததுபோல் வருகிறேன். இன்று இரவு ஏதும் நடக்கும் என்று நான் கருதவில்லை. ஆனால், எது நடந்தாலும் நானும் ஜெய்சிங்கும் ரவியும் சேர்ந்தால் அவற்றை முறியடிக்க முடியும் என்று பூரணமாக நம்புகிறேன்"

லீலா நிம்மதியடைந்தாள். அவனது நம்பிக்கை அவளுக்கு ஆறுதலளித்தது. எதையும் செய்யக்கூடிய ராம்ஜீயின் ஆற்றல் குறித்து லீலாவுக்கு பூரண விசுவாசமிருந்தது.

"நானும்கூட இவையெல்லாம் முற்றிலும் பைத்தியக்காரத்தனமோ என்றுதான் நினைக்கிறேன். ஆனால் அதற்காக சும்மா இருந்துவிட என் மனம் இடமளிக்கவில்லை. நீ வீட்டுக்கு வருகிறாய் என்பது நிம்மதியளிக்கின்றது"

"சரி.... இந்த நிமிடத்தில் இருந்து நீ இது தொடர்பில் கவலைப்படுவதனை விட்டுவிடு"

அவள் புறப்பட்டாள். ராம்ஜீ அவளது கார் வரையில் சென்று வழியனுப்பி வைத்துவிட்டு வந்தான். உண்மையில் இந்தக் கீரிப்பிள்ளை என்பவன் யார்? எந்த அளவுக்கு அவன் தீங்கிழைக்கக்கூடியவனாக இருப்பான் என்பதனை அவனால் நிச்சயித்துக் கொள்ள முடியவில்லை.

எதற்கும் இந்த விடயத்தை டி.எஸ்.பி. சிங்கராயரிடம் சொல்லி வைப்போம் என்று கருதினான். அவன் தொலைபேசிக்கருகில் சென்று விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அத்தியட்சரின் இலக்கத்தைச் சுழற்றினான்.

ஆனால், டி.எஸ்.பி. சிங்கராயர் யாரோ ஒரு வி.ஐ.பி.யுடன் பகல் சாப்பாட்டுக்குப் போய்விட்டாரென்றும் மாலை ஆறு மணிக்குத்தான் வருவார் என்றும் பதில் கிடைத்தது. அவரது கையடக்கத் தொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியும் மூடி வைக்கப்பட்டிருந்தது. ராம்ஜீ அந்த முயற்சியை அத்தோடு கைவிட்டுவிட்டான்.

அப்போது நண்பகல் கடந்து 45 நிமிடங்கள் ஆகியிருந்தன. அவனது அழகிய செயலாளர் நளாயினி தலையைக் காட்டினாள். நளாயினி வெறுமனே அவனது செயலாளர் மட்டுமல்ல.... கிட்டத்தட்ட அவனது வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனையவை அனைத்திலும் அவள் ஒரு முகாமையாளராகவே செயற்பட்டாள்.

அவளது இயல்பையும் சுதந்திரமான புத்திசாலித்தனமான இயக்கத்தையும் புரிந்துகொண்டு ராம்ஜீ அவளுக்கு அதிகமான சுயாதீனத்தை வழங்கியிருந்தான். நளாயினி பிற்பகல் ஒரு மணிக்கு வர்த்தக அமைச்சரின் பகல் போசன விருந்துக்கு அவன் அழைக்கப்பட்டிருந்ததை ஞாபகப்படுத்தினாள். அன்றிரவு ஏதும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டியுள்ளதா என்று அவன் கேட்டான்.

அன்றிரவு பி.எம்.ஐ.சி.எச். மண்டபத்தில் சௌந்தர்ய சுந்தரியின் நாட்டிய அரங்கேற்றத்துக்கு அழைப்பு உள்ளது என்று அவள் ஞாபகப்படுத்தினாள். அந்த நாட்டிய நிகழ்ச்சிக்கு தான் போகவில்லையென்றும் அன்றிரவு திருவாளர் கீரிப்பிள்ளையிடம் தனக்கு அலுவல் உள்ளதென்றும் அவன் கூறினான்.

அவளுக்குப் புரியவில்லை. அவள் விழித்தாள். இப்போதைக்கு அதனை அவளுக்கு விளங்கப்படுத்தத் தேவையில்லை என்று அவன் நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கப்பம் கேட்ட கடிதம் எங்கே?

ராம்ஜீ உறுதியளித்தபடி சரியாக எட்டு மணிக்கெல்லாம் ரவி பெருஞ்சித்திர நாயக்கனின் வீட்டை அடைந்தான். அவன் அழைப்பு மணியை அழுத்தியபோது ரவியின் பணியாள் பொன்னம்பலம் வந்து கதவைத் திறந்தார்.

இதற்குள் ஆரவாரம் கேட்டு முன் மண்டபத்தில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த ரவி வெளியே வந்தான். அவன் ராம்ஜீயைப் பார்த்து ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தான். அதேசமயம் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அவன் வந்தது மன ஆறுதலாகவும் இருந்தது.

அவன் தனது சிந்தனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல்... "வா! ராம்ஜீ... என்ன திடீரென்று இந்தப் பக்கம்...?" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவாறே வரவேற்றான்.

"ஒன்றும் இல்லை... இந்தப் பக்கமாக போனேன்... அப்படியே உன்னையும் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்."

ரவி அவன் பதிலை நம்பத் தயாராக இல்லை. ராம்ஜீ காரணமில்லாமல் எந்த வீட்டுக்கும் போக மாட்டான் என்பது அவனுக்குத் தெரியும். அப்படியானால் கீரிப்பிள்ளை விடயத்தை லீலா அவனிடம் சொல்லித்தான் அவன் வந்திருக்க வேண்டும் என்று அவன் மனதிற்குப்பட்டது.

"சும்மா கயிறு திரிக்காதே ராம்ஜீ... லீலா உன்னிடம் இந்தக் கீரிப்பிள்ளை விடயத்தைக் கூறி எனக்கு பாதுகாப்பு வழங்க அழைத்திருக்கிறாள்... அப்படித்தானே..."

அவன் ஒரேயடியாக விஷயத்தை உடைத்து விட்டமை ஒரு வகையில் நல்லதென்றே ராம்ஜீக்குப்பட்டது. எனவே அவன் கூறியதை ராம்ஜீ மௌனமாக ஏற்றுக் கொண்டான்.

"என்ன ராம்ஜீ... நீ கூடவா இதனை நம்புகிறாய்?"

ரவி அவனை உள்ளே அழைத்து வந்தான். இதற்கிடையில் லீலாவும் அங்கே வந்து விட்டாள். மூவரும் முன் மண்டபத்தில் அமர்ந்தனர்.

"இதில் நம்புவதும் நம்பாமல் இருப்பதும் ஒன்றுமில்லை ரவி... எந்தப் பைத்தியக்காரன் இப்படிச் செய்தான் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் சற்றுப் பரீட்சித்துப் பார்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அவன் வெறுமனே பயமுறுத்தல் கடிதம் மாத்திரம் அனுப்பியிருந்தால் பரவாயில்லை. ஏன் அவன் உயிருள்ள கீரிப்பிளையைப் பிடித்து அனுப்பும் அளவுக்குப் போக வேண்டும்."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்..." என்று குறுக்கிட்டாள் லீலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன் உனக்கு ஞாபகமில்லையா ரவி... நாம் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது நமது ஜூனியர் மாணவி ஜெயசாந்தியின் ஹேண்ட் பேக்குக்குள் பகிடியாக எலி ஒன்றை பிடித்துப் போட்டு அனுப்பினோமே...!” அந்தப் பழைய இனிய நினைவுகளை ஒருதரம் மூவரும் மீட்டுப் பார்த்தனர். பின்னர் மூவருமே சேர்ந்து சிரித்தனர். நடக்கப் போகும் பயங்கரத்தை அவர்கள் உணரவில்லை. சில கணங்கள் கழிந்தன.

ராம்ஜீ தான் முதலில் பேசினான்.

“அந்தச் சம்பவத்தை இதற்கு ஒப்பிடாதே ரவி. அந்த மாதிரி பகிடி விடும் சந்தர்ப்பம் இப்போது இல்லை.”

“அப்படியானால் ஐந்து கோடி ரூபாவை கொடுத்து விடச் சொல்கிறாயா?”

நான் அப்படிச் சொல்லவில்லை. இந்த விடயத்தை மேலும் கொஞ்சம் பரீட்சித்துப் பார்ப்போம் என்றுதான் கூறுகின்றேன்.

“எப்படிப் பரீட்சிப்பது...?”

“எங்கே அந்தப் பயமுறுத்தல் கடிதங்கள் இரண்டையும் கொண்டு வாருங்கள். பார்க்கலாம்...” முதல் கடிதத்தை கோபத்தில் எரித்து விட்டேன். மற்றது எனது படுக்கையறையில் உள்ள மேசை டிராயரில் உள்ளது. இரு நான் பொன்னம்பலத்திடம் சொல்லி எடுப்பிக்கிறேன்” என்று கூறியவாறே அவன் எழுந்து சென்று அழைப்பு மணியை அடித்தான்.

அவனது விசுவாசமான பணியாள் பொன்னம்பலம் உடனே வந்தார்.

“பொன்னம்பலம் எனது படுக்கையறையில் உள்ள மேசை டிராயரில் நீளக் கவரில் ஒரு கடிதம் வைத்திருக்கிறேன் எடுத்து வாருங்கள்”.

“நல்லது ஐயா” பொன்னம்பலம் கடிதத்தினை எடுத்துவரச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடங்கள் அவ்விடத்தில் மௌனம் நிலவியது.

பொன்னம்பலம் வெறுங் கையுடன் வந்தார். அவர் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"என்னாச்சு பொன்னம்பலம்?"

"ஐயா.. டிராயரில் கடிதத்தைக் காணவில்லை."

"நன்றாகத் தேடிப் பார்த்தீர்களா?" ரவி அதிர்ச்சியுடன் கேட்டான்.

உடனே லீலா மேல் நோக்கி ஓடினாள் கடிதத்தைத் தேடுவதற்கு. ரவியும், ராம்ஜீயும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

என்ன தேடியும் கடிதத்தைக் காணவில்லை.

அப்படியானால் திரும்பவும் யாரோ அங்கு வந்து போயிருக்க வேண்டும். இந்த உண்மை மூவரையும் கல்லென உறைய வைத்தது.

கடிதங்களைக் காணவில்லை என்றால் யாரோ அவற்றை அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். அப்படியானால் யாரோ ஒரு மனிதன் யாருக்கும் தெரியாமல் இரண்டு முறைகள் அந்த வீட்டுக்கு வந்து போயிருக்கிறான். மூன்றாம் முறையும் அவன் ஏன் வர முடியாது? இம்முறை அவன் வருவது...

எதற்கும் இலகுவில் கலங்கி விடாத ராம்ஜீக்குக் கூட இந்த உண்மையை சகிக்க முடியாதிருந்தது. லீலா நடுங்கிப் போனாள். ரவி பயத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது வெற்றுப் பார்வை பார்த்தான்.

"நீ என்ன நினைக்கிறாய் ராம்ஜீ..." ரவி சற்று கலக்கத்துடனே கேட்டான்.

"விசயம் சற்று பாரதூரமாகப் போவது போல் தெரிகிறது. எதற்கும் பொலிஸூக்கு அறிவிப்பது நல்லது" என்றான் ராம்ஜீ.

நிகழ்வுகள் சற்றே கடுமையான நிலைமையைச் சுட்டிக் காட்டியுள்ளமையை அவன் ரவிக்கு எடுத்துக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ரவியால் இதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் மிகப் பிடிவாதமாகவே இருந்தான். பொலிஸுக்கு சொல்வதாலும் அதனால் ஏற்படப் போகும் எதிர்மறையான விளைவுகளும் பத்திரிகைகளில் வரும் செய்திகளும் அவன் குடும்பத்தைப் பற்றிய கட்டுக்கதைகளையும் அவன் விரும்பவில்லை. ஆதலால் பொலிஸுக்குச் சொல்லும் யோசனையை அவன் அடியோடு மறுத்து விட்டான்.

ரவியின் இந்தப் போக்கால் அதிகம் அதிர்ச்சிக்குள்ளானவள் லீலாதான்.

"ஐயோ... ரவி பிடிவாதத்தைக் கைவிட்டு ராம்ஜீயின் ஆலோசனைப் படி பொலிஸுக்குச் சொல்வோம்... ரவி" என்று அவள் கதறியேவிட்டாள்.

எனினும் ராம்ஜீ ரவியின் நிலைமையை புரிந்து கொண்டவனாய் லீலாவுக்கு ஆறுதல் கூறினான்.

"பொறு லீலா... ரவி பயப்படுவதிலும் அர்த்தம் உள்ளது. பொலிஸ் இங்கு வருவதால் நிலைமையில் பெரிதும் மாற்றம் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. நாம் நான்கு பேர் ஆண்கள் இருக்கின்றோம். வெளியில் எனது உதவியாளன்? ஜெயசிங் மிகக் கவனமுடன் இங்கேயே கண் வைத்திருப்பான். எம்மால் முடியா விட்டால் வேறு யாராலும் நிலைமையைச் சமாளிக்க முடியாது."

அப்போது கூடத்தில் இருந்த சுவர்க்கடிகாரம் பத்து முறை அடித்து ஓய்ந்தது.

லீலாவுக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது.

கொலைகாரனின் எச்சரிக்கைக் கடிதத்தின் படி கப்பமாகக் கேட்டிருக்கும் ஐந்து கோடி ரூபாவை பெறுவதற்கான ஆள் சரியாக இரவு பத்து மணிக்கு வர வேண்டும்.

ரவி லீலாவின் முகத்தில் ஏற்பட்டிருக்கும் பயப் பிராந்தியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்தான். அவனும் சஞ்சலம் அடைந்திருந்தாலும் அதனை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் "பயப்படாதே லீலா... இதெல்லாம் சுத்த பைத்தியக்காரத்தனம்.... நீ வேண்டுமானால் பார்... பணத்தைப் பெற யாரும் வர மாட்டான்...."

அவன் சொல்லி முடித்த அதேகணத்தில் வாயிலில் யாரோ வந்துள்ளமைக்கு அடையாளமாக அழைப்பு மணி அடித்தது. லீலா துள்ளிக் குதித்தெழுந்து ரவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அவன் அவள் தோளில் தட்டி ஆறுதல்படுத்தினான். அவன் கண்கள் ராம்ஜீயை நோக்கி கேள்விக் குறி எழுப்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரத்தத்தில் ரவி

அவர்கள் மூவரும் சில கணங்கள் செய்வதறியாது அசைவற்றிருந்தனர்.

அவர்கள் காதுகள் ஏதும் அசைவுகளின் ஒலியை மாத்திரம் கூர்மையாக செவிமடுத்துக் கொண்டிருந்தன. பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்தைக் கடந்து சென்று வாசல் கதவை திறக்கும் சத்தமும் இலேசான முணுமுணுப்புக்களும் கேட்டன. அதனைத் தொடர்ந்து பொன்னம்பலம் அங்கு வந்து புரொண்ட்லைன் கூரியர் சேவையைச் சேர்ந்த ஆள் ஒருவர் வந்திருப்பதாகவும் ஒரு பார்சலை பெற்று வர வேண்டுமென்று தனக்கு பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறுவதாக அறிவித்தார்.

லீலாவின் முகம் இப்போது சவம் போல வெளுத்துப் போய் விட்டிருந்தது.

ரவி மிகக் கோபம் கொண்டிருந்தான். "எங்கே அந்த ஆள்... பார் அவனை என்ன செய்கிறேன் என்று?" கோபத்துடன் முன்னே பாய்ந்தான்.

அவனைத் தடுத்த ராம்ஜீ நிலைமையைத் தான் கையாள்வதாகவும் அவர்களை அங்கேயே இருக்கும்படியும் கூறி விட்டு ரவியின் பதிலுக்கு காத்திராமல் வாயிற் பக்கம் சென்றான். பொன்னம்பலம் அவனைத் தொடர்ந்தார்.

ராம்ஜீ வராந்தாவுக்கு வந்தபோது அங்கே புரன்ட் லைன் கூரியர் சேவை நிறுவனத்தின் பெயர்க்குறி தரித்த சீருடை அணிந்த 18 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் நின்றிருந்தான்.

ராம்ஜீயைக் கண்டதும் அவன் கூறினான். "ஐயா நான் புரொன்ட்லைன் கூரியர் சேவை நிறுவனத்தைச் சேர்ந்தவன். இங்கே ரவி பெருஞ்சித்திரநாயக்கன் என்பவரிடம் இருந்து பார்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை பெற்று வர வேண்டும் என்று எனக்கு என் நிறுவனத்திடம் இருந்து பணிப்புரை தரப்பட்டுள்ளது. நான் பார்சலை பெற்றுக் கொள்ளலாமா?" அந்த இளைஞன் மிகப்பணிவுடன் பேசினான்.

அவன் தனது குறிப்புப் புத்தகத்தைத் திறந்து தனக்கு வழங்கப்பட்டிருந்த ரவியின் பெயரையும் முகவரியையும் கூறி-னான். அவன் உண்மையைதான் பேசுகிறான் என்பதனை நிதானித்துக் கொண்ட ராம்ஜீ அவனிடம் மேலும் விபரங்களை அறியும் பொருட்டு சில கேள்விகளைக் கேட்டான்.

"இந்தப் பார்சலை எங்கே ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளது?" இந்த பார்சலை எடுத்துச் சென்று ஜெம்பிரிட்ஜ் ஓட்டலில் திருவாளர் ரஞ்சித் பத்திரனவிடம் ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளது. ஐயா அவர் எனக்காக அங்கே காத்திருப்பார்"

"அவரை எப்படி நீ அடையாளம் காண்பாய்?"

அந்த இளைஞன் இந்த கேள்விகளையெல்லாம் கண்டு மருட்சி அடைந்தான். பின் கூறினான் திருவாளர் விஜேவர்தன சிவப்பு வண்ண கோட்டும் வெள்ளைத் தொப்பியும் அணிந்திருப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது என்று கூறிய அவன் "ஏன் ஏதும் பிரச்சினையா?" என்றும் சந்தேகம் கிளப்பினான்.

ஒன்றுமில்லை என்று தெரிவித்த ராம்ஜீ கொஞ்சம் பொறு பார்சலை கொண்டு வந்து தருகிறேன் என்று கூறி விட்டு பொன்னம்பலத்திடம் தன்னுடன் வரும்படி ஜாடை காட்டி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த அறைக்குச் சென்றான்.

அடுத்த அறைக்குள் சென்ற ராம்ஜீ சில செய்திப் பத்திரிகைகளையும் பிறவுண் பேப்பரும் ஒட்டுவதற்கு செலோ டேப்பும் கொண்டு வரும்படி பொன்னம்பலத்திடம் தெரிவித்து விட்டு பார்சல் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டான்.

சில நிமிடங்களில் பார்சல் தயாராகி விட்டது. அதன் அளவு, பாரம் என்பவற்றில் திருப்தியடைந்த ராம்ஜீ அதனை எடுத்துக்கொண்டு அந்த இளைஞனிடம் வந்தான்.

"இதோ நீ எதிர்பார்க்கும் பார்சல், ஆனால் நீ நான் சொல்கிறபடி செய்ய வேண்டும். இந்தப் பார்சலை இரவு பதினொரு மணிக்கு முன்னர் ஜெம்பிரிட்ஜ் ஒட்டலுக்கு கொண்டு செல்லக்கூடாது. பதினொரு மணியைத் தாண்டிய பின்பே இதனை திருவாளர் பத்திரனவிடம் ஒப்படைக்க வேண்டும் புரிகிறதா?" என்று கூறிய ராம்ஜீ அந்த இளைஞனின் கைகளில் இரண்டு 500 ரூபா நோட்டுக்களையும் திணித்தான்.

அதனை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட அந்த இளைஞன் தான் அப்படியே செய்வதாகத் தெரிவித்தான். அதன் பின் அவன் வந்த வழியாகத் திரும்பிச் சென்று விட்டான். ராம்ஜீ அந்த இளைஞனை அனுப்பி விட்டு லீலாவும் ரவியும் இருந்த கூடத்துக்கு வந்தான். அவர்கள் இன்னமும் அதிர்ச்சியில் இருந்து விடுபடவில்லை. லீலா ரவியின் கரங்களை இறுகப் பற்றியிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ வெளியில் நடந்தவற்றை விபரமாக அவர்களிடம் கூறினான். பார்சல் பத்திரன என்பவரிடம் ஜெம்பிரிட்ஜ் ஹோட்டலில் ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் கூறினான்.

அத்துடன் இந்த விடயத்தை இப்போதாவது பொலிஸுக்கு தெரிவிப்பது நல்லது ரவி, நான் டி.எஸ்.பி. சிங்கராயரின் காதில் இதனைப் போடுவதுடன் அவரிடம் இருந்து பொலிஸ் உதவியைப் பெற்றுக் கொள்வது நல்லது என்று நினைக்கின்றேன் என்று கூறினான். ரவி அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. அவன் மனம் குழம்பிப் போயிருந்தது. இந்த மாதிரி பைத்தியங்களைத் தொடர்ந்தும் மக்களுக்கு தொந்தரவு செய்ய அனுமதிக்கக்கூடாது என்று கூறிக்கொண்டே ராம்ஜீ டெலிபோனை எடுத்து டி.எஸ்.பி. சிங்கராயரின் தொலைபேசி இலக்கத்தைச் சுழற்றினான்.

இரண்டு முறை தொலைபேசி இலக்கங்களை சுழற்றிய பின்னர் தான் தெரிந்து கொண்டான். அது வழமைக்கு மாறாக இருந்ததென்பதை அது மௌனமாகவே இருந்தது. தொலைபேசி வேலை செய்யவில்லை. அப்படியானால் யாரோ லைனைத் துண்டித்திருக்கிறார்கள்.

தாம் ஒன்றுக்குமேற்பட்ட மிகப் பயங்கரவாதிகளுடன் புளங்குகிறோம் என்பதையும் ஆரம்பத்தில் இந்த விடயத்தை இலகுவாக எடுத்துக் கொண்டு விட்டோமே என்றும் அவன் முதன் முறையாக வருத்தப்பட்டான்.

உண்மையில் நிலைமை இத்தனை பாரதூரமானது என்பதை தான் முன்பே உணராமல் போனமை குறித்து அவன் தன்னையே நொந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் மாற்றத்தைப் புரிந்து கொண்ட லீலா பதறியபடி ராம்ஜீயிடம் வந்தாள். அவன் அவளிடமும் ரவியிடமும் தொலை பேசி தூண்டிக்கப்பட்ட விடயத்தைக்கூறினான். அத்துடன் அவன் தன் மனதில் எழுந்த சில சந்தேகங்களையும் கூறினான்.

ரவி நாம் ஆரம்பத்தில் இருந்தே இந்த மனிதனை விளையாட்டாக நினைத்தது தவறு. நான் நினைக்கிறேன். அந்தக் கூரியர் இளைஞன் கொண்டு வரும் பார்சலைப் பெற இந்த மனிதன் ஜெம்பிரிட்ஜ் ஹோட்டலில் இருக்கப் போவதில்லை. அவன் உண்மையில் கப்பம் வசூலிப்பவனாக இருந்தால் அந்த இளைஞன் வீட்டை விட்டு வெளியேறியதுமே அவனை மடக்கிப் பிடித்து பார்சலில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருப்பான். அதன் பிறகு தான் அவன் தொலைபேசி லைனைத் துண்டித்திருக்க வேண்டும்.

அடுத்த நடவடிக்கையாக அவன் அங்கு வருகை தரக்கூடும். அவனை சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். நம்மிடம் வீட்டுக்குள் மூன்று ஆண்களும் வெளியில் ஒருவருமாக 4 ஆண்கள் உள்ளோம். ஆதலால் நிலைமையைச் சமாளிக்கலாம் என்று கருதுகிறேன் . எதற்கும் பொன்னம்பலத்திடமும் உசாராக இருக்கும் படி கூறி வைக்க வேண்டும். வெளியில் காவல் புரியும் ஜெய்சிங் விசயம் அறிந்தவன். சூழ்நிலை அறிந்து நிலைமைக்கேற்ப செயற்படுவான் என்று கூறிய ராம்ஜீ தன் பாக்கெட்டில் இருந்து செல்போனை எடுத்து டி.எஸ்.பி. சிங்கராயரை அழைத்தான். அவ ரிடம் ரத்தினச் சுருக்கமாக விசயத்தை விளக்கி இன்ஸ்பெக்டருடன் பொலிஸ் குழுவை அனுப்பக் கோரினான். அவர் அவ்வாறு செய்வதாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் குழு வருவதற்கு இன்னும் அரை மணி நேரமாவது பிடிக்கும்.

நிலைமைகளைக் கணிப்பீடு செய்த ராம்ஜீ பொன்னம்பலத்திடம் விசயத்தைக் கூறி தன் பார்வையில் ரவியை வைத்துக் கொள்ளும் படியும் தான் வீட்டுக்குள் வருவதானால் எந்த வழியைப் பயன் படுத்தக்கூடும் என்று சோதிக்கப் போவதாகவும் கூறி விட்டு முதலில் மாடியை பரிசோதிக்கச் சென்றான்.

அவன் மாடியை அடைந்த அதே கணத்தில் சட்டென்று மின் விளக்குகள் அனைத்தும் அணைந்து போய் விட்டன. தான் ஒரு டோர்ச் வைத்திராததை எண்ணி மீண்டும் தன்னை நொந்து கொண்ட ராம்ஜீ அந்த கட்டியான கும்மிருட்டில் தன் கண்கள் பழக்கப்படும் வரை சற்று நிதானித்தான்.

சில நொடிகள் யுகங்களெனக் கழிந்தன. அந்த அசுர அமை தியைக் கிழித்துக் கொண்டு லீலாவின் அலறல் அந்த சுற்று வட்டாரத்தையே அதிர வைத்தது.


ராம்ஜீ தட்டுத்தடுமாறி கீழ் நோக்கி விரைந்தான். அவன் ரவியும் லீலாவும் இருந்த அறையை அடைந்தபோது அறையின் கண்ணாடி ஜன்னல்களுக்குப் போடப்பட்டிருந்த சிவந்த திரைச்சீலைகள் விரி யத் திறந்திருந்தன. நிலவொளி பாலென உள்ளே பாய்ந்திருந்தது. லீலாவும் பொன்னம்பலமும் சிலையென நின்றிருந்தனர். ரவிக்கு என்ன நடந்தது என்பதை அறிய ராம்ஜீ பாய்ந்து சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி ரத்த வெள்ளத்தில் மல்லாந்தவாறு வீழ்ந்து கிடந்தான். அவன் மார்பில் தந்த வேலைப்பாடுகளுடன் கூடிய கத்தி ஒன்று ஆழப்பதிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாய்ந்தது கத்தி... வீழ்ந்தது தலை...!

**வானி**ல் நிலாவொளி பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அமைதியான இருளில் மரங்களில் இருந்த வண்டுகளும், சுவர்க் கோழிகளும் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. மற்றப்படி பேய் அமைதி சூழ்ந்திருந்தது.

பண்டாரவின் அறிவுறுத்தலின்படி ரவி பெஞ்சித்திர நாயக்கனின் வீட்டின் பிரதான மண்டபத்துக்கு வெளியில் ஜன்னலோரம் செடி கொடிகளுக்கு மத்தியில் தன் நேரம் வரும் வரையில் காத்திருந்தான் சந்தர ரத்ன பெரேரா.

சுமார் அரை மைலுக்கு அப்பால் உள்ள பிரதான மின் மாற்றிக் கருகில் தான் இருப்பதாகவும் சரியாக பத்தே முக்கால் மணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் போது மின் இணைப்பைத் துண்டிப்பதாகவும் அப்போது வெளிச்சம் வேண்டி ஜன்னலைத் திறக்க ரவி பெருஞ்சித்திர நாயக்கன் என்ற சிவந்த உயரமான மெல்லிய மனிதன் வருவான் என்றும் அந்தச் சந்தர்ப்பத்தை சந்தரே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் பண்டார கூறியிருந்தான்.

அந்த அமைதியிலும் குளிரான காலநிலையிலும் சந்தரேயின் முகத்திலும் தேகத்திலும் வியர்வை பெருக்கெடுத்தோடியது. அவனது வலது கையில் சித்திராம்பரி அவனிடம் கொடுத்த தந்தக் கைப்பிடியுடன் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அந்த கத்தி நிலவொளியில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று அந்த வீட்டின் சகல மின் விளக்குகளும் ஒளி உமிழ்வதை நிறுத்தி விட்டன. வீடு பூரண இருளில் மூழ்கியது. பண்டார தன் பங்குக் கடமையை நிறைவேற்றி விட்டதனை சந்தரே உணர்ந்தான். அவன் அசையாமல் ஜன்னல்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். சில நொடிகள் கழிந்திருக்கும். யாரோ ஜன்னல் கொண்டிகளை திருகித் திறக்கும் சத்தம் கேட்டது. ஜன்னல்கள் திறக்கப்படுவதனையும் திரைச் சீலைகள் விலக்கப்படுவதனையும் சந்தரே பார்த்தான்.

உயரமான, மெலிந்த, சிவந்த உருவம் ஜன்னலோரம் தெரிவதை அவன் அவதானித்தான். ரவி பெஞ்சித்திர நாயக்கன் எப்படி இருப்பான் என பண்டார வர்ணித்திருந்தது அவனுக்குப் பொருந்துவதை அவன் உணர்ந்தான். இலேசான நிலவொளிக்கீற்றுக்கள் ரவியின் முகத்தில் படர்ந்தன. அவை ஏற்கனவே வெளிறிய முகத்தை மேலும் வெளிரச் செய்தன.

சந்தரே தனது வலக்கரத்தை மெதுவாக உயர்த்தி குறி பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விர்ரென்று கத்தியைப் பாயச் செய்தான். சர்க்கஸில் இலக்குக்கு கத்தியெறிந்து நன்கு பயிற்சி பெற்றிருந்த அவனுக்கு இது மிக இலகுவான இலக்காக இருந்தது. அதனைத் தொடர்ந்து "தடால்" என்ற சத்தமும் "வீல்" என்ற அலறலும் அவனுக்குக் கேட்டன. அவன் விரைந்து அடர்ந்த மரஞ்செடிகளுக்கிடையில் மறைந்து போனான்.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமார் அங்கு வந்து சேர்வதற்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டன. ராம்ஜீ தன்னை நொந்து கொண்டு சோகமே உருவாக முன்னறையில் அமர்ந்திருந்தான்.

அவனது தன்னம்பிக்கை முற்றிலும் தகர்ந்து போயிருந்தது.

மிஸ்டர் ராம்ஜீ... நடந்தவற்றை இன்னும் விபரமாகக் கூறுங்கள். அப்போது தான் அடுத்த நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். இன்ஸ்பெக்டர் வினவினார்.

ராம்ஜீ... சகலத்தையும் ஆரம்பம் முதல் கூறினான். லீலா தன்னை சந்திக்க வந்தது. பயமுறுத்தல் கடிதம், கீரிப்பிள்ளை விடயம் தான் ரவிக்கு பாதுகாப்புக்காக வந்தமை எல்லாவற்றையும் கூறினான்.

உண்மையில் ரவியின் சாவுக்கு நான் தான் பொறுப்பு என்று கூறி வருத்தப்பட்டான்.

"நானும் பொன்னம்பலமும் ஜெய்சிங்கும் சேர்ந்து ரவியைப் பாதுகாத்து விட முடியும் என்று நினைத்தேன். எனது உதவியாளன் ஜெய் சிங்கை வெளியில் இருந்து வீட்டைக் கவனிக்கச் செய்தேன்."

"அவனுக்கு என்ன நடந்திருக்கும்" இன்ஸ்பெக்டர் சந்தேகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். அவனைத் தேடிப் பார்த்தேன். அவனைக் காணவில்லை. சிலநேரம் அவன் கொலைகாரனைப் பின் தொடர்ந்து போயிருக்கலாம். அப்படியானால் எந்த நேரத்திலும் அவன் என்னுடன் தொடர்பு கொள்ளக்கூடும்."

"எனக்கு மேலும் சில விபரங்கள் வேண்டும் ராம்ஜீ"

"கேளுங்கள்"

நீங்கள் கொலைகாரனைப் பார்த்தீர்களா?

"இல்லை... நான் லீலாவையும் பொன்னம்பலத்தையும் ரவியுடன் விட்டுவிட்டு வீட்டை சோதிப்பதற்காக மாடிக்குச் சென்றேன். நான் மாடியை அடைந்தபோது மின் விளக்குகள் அனைத்தும் திடீ-ரென அணைந்துபோய் விட்டன. அதனைத் தொடர்ந்து யாரோ "தடால்" என்று விழும் சத்தமும் லீலா, ரவியின் மனைவி "வீல்" என்று வீறிட்டு அலறும் சத்தமும் கேட்டது. உடனே நான் மீண்டும் அவர்கள் இருந்த மண்டபத்துக்கு பாய்ந்து வந்தேன். அங்கே ரவி இரத்த வெள்ளத்தில் மல்லாந்தவாறு வீழ்ந்து கிடந்தான். அவன் மார்பில் ஒரு கத்தி ஆழப் பதிந்திருந்தது" விளக்கினான் ராம்ஜீ.

அதன் பின் இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமார் பொன்னம்பலத்தையும் லீலாவையும் விசாரித்து வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொண்டார்.

லீலா கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் நிலையில் இருக்கவில்லை. அவள் பாதி மயக்கமடைந்த நிலையில் இருந்தாள். ராம்ஜீ செல்போன் மூலம் தனது செயலாளர் நளாயி-னியை அழைத்து நிலைமையைக் கூறி லீலாவைக் கவனித்துக் கொள்ள அவளை அங்கு வருமாறு அழைத்தான். அவளும் உட னடியாகவே ஒத்துக்கொண்டாள். லீலாவுக்கு தற்போது நாளாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னியின் துணை மிக அவசியமாகவே தேவைப்பட்டது.

அப்போது ராம்ஜீயின் செல்போன் கிணுகிணுத்தது. ராம்ஜீ தொலைபேசியை காதில் வைத்தான். அவன் எதிர்பார்த்தபடி அழைப்பு ஜெய்சிங்கிடம் இருந்துதான்.

அவன் மிகச் சுருக்கமாக செய்தியை மட்டும் கூறினான்.

"சேர்...உடனடியாக பொரளை கொட்டா ரோட், பாவா பிளேசுக்கு வாருங்கள். சந்தியைத் தாண்டி "ரிட்ஸ்" தியேட்டரைக் கடந்தால் வலது புறம் திரும்பும் வீதி....

நான் அருகில் உள்ள மெட்ரோ டெலிபோன் பெட்டிக்கு அருகில் இருப்பேன்...."

"ரைட்"

ராம்ஜீ டெலிபோனைக் கட் பண்ணிவிட்டு இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமாரிடம் வந்தான். தான் வீட்டுக்குப்போவதாகவும் தனது உதவியாளன் ஜெய்சிங்கிடம் இருந்து ஏதும் தகவல் தெரிந்தால் அவரை அழைப்பதாகவும் அவரிடம் கூறினான்.

ஜெய்சிங் அழைத்த விடயத்தை இப்போதைக்கு அவரிடம் கூறுவதால் அவர் பரபரப்பு ஏற்படுத்த, அதனால் கொலையாளிகள் எச்சரிக்கை அடையக்கூடும் என்று அவன் கருதினான்.

அப்போது மணி நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. கொழும்பில் நிலவிய பாதுகாப்பு கெடுபிடிகள் பொதுவான தனி மனித நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியிருந்தன. ராம்ஜீ கொழும்பின் உயர் மட்ட சமூகத்தின் ஒரு அங்கத்தினனாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததால் பல சமூக ஒன்று கூடல்களிலும் கலந்து கொள்பவன். எனவே முப்படைத் தலைமைகள், பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேலிடங்கள் அவனுக்கு மிக நெருங்கிய பரிச்சயங்களாக இருந்தன. தனது உதவியாளன் ஜெய்சிங்கைக் கூட அவர்களுக்கெல்லாம் அறிமுகஞ் செய்திருந்தான். ஆதலால் நள்ளிரவு நடமாட்டங்கள் அவனைக் கட்டுப்படுத்துவதில்லை.

அவன் ஐந்து நிமிடத்தில் பொரளை "பாவா பிளேஸை" சென்றடைந்தான். பாவா பிளேஸ் அதிக வெளிச்சம் இல்லாமல் சிணுங்கிக் கொண்டிருந்தது. பிரதான பாதையுடன் ஒட்டியிருந்த அந்த மெட்ரோ டெலிபோன் பூத்தை அதன் இள மஞ்சள் வண்ணம் மிக இலகுவில் காட்டிக் கொடுத்தது.

அதனையொட்டி டெலிபோன் தூண் மறைவில் ஒரு மனித உருவம் அசைவதை ராம்ஜீயின் கழுகுக் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

அது ஜெய்சிங்காக இருக்கக்கூடும் என்று அனுமானித்த ராம்ஜீ சற்று தூரத்திலேயே கார் எஞ்சினை அணைத்துவிட்டு மெதுவாக அதனை ஓரங் கட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொலைஞனும் கொலைநீயும்

தூரத்திலேயே வருவது ராம்ஜீயின் கார்தான் என்பதனை அதன் சத்தத்தில் இருந்தே ஊகித்துக் கொண்ட ஜெய்சிங் வெளிச்சத்துக்கு வந்தான்.

ஜெய்சிங் அருகில் வந்ததும் அவனிடம் நடந்ததைச் சொல்லும்படி ராம்ஜீ கேட்டான்.

"நான் ரவியின் வீட்டைக் கண்காணித்துக் கொண்டிருந்தபோது வீட்டின் ஒருபுறம் இருந்து இருளில் பதுங்கிப் பதுங்கி ஒரு உருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதைக் கண்டு மெதுவாக அதனைப்பின் தொடர்ந்தேன். அவன் சுமார் 500 யார்களுக்கு அப்பால் மரங்களுக்கு அடியில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்பு நிற டொயோட்டா கொரல்லா காரில் ஏறி இங்கு வந்தான். நான் எனது பைக்கை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தேன்.

"அவன் எப்படி இருப்பான்".

"கறுப்பு நிறம் உயரமானவன். மெலிந்திருந்தான். முழுக்கை சேட்டும், நீண்ட காற்சட்டையுடன் சப்பாத்தும் அணிந்திருந்தான்".

"இப்போது அவன் எங்கே?"

ஜெய்சிங் சற்று தூரத்தில் வரிசையாகக் காணப்பட்ட வீடுக ளுக்கு மத்தியில் சற்று உயரமான குறுகிய ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தைக் காட்டினான். சுமார் பத்துப் பன்னிரெண்டு அடி அகலத்தில் மூன்று மாடிகளைக் கொண்டு உயர்ந்து இருளில் மூழ்கிக்கிடந்த அந்தக் கட்டிடம், மாடிக்கு இரண்டு ஜன்னல்களையும், நடுவில் இருந்து இருபுறமும் திறக்கக் கூடிய கதவுகளையும் கொண்டு காணப்பட்டது.

"இந்தக் கட்டிடத்தில் இருந்து வெளியேற பின்பக்கத்திலோ பக்க வாட்டிலோ வேறு வழிகள் உண்டா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை சேர்... நான்... செக் பண்ணிவிட்டேன்"

"அப்படியானால் அவன் இன்னமும் இங்கு தான் இருப்பான்"

"அவன் மட்டுமல்ல... ஒரு பெண்ணும் இருக்கிறாள்"

"அவள் யார்?"

"அவள் உயரமான கட்டான உடல் அமைப்புக் கொண்டவள். ஐந்து நிமிடத்துக்கு முன்தான் இங்கு வந்தாள். டீ சேட்டும், டெனிம் காற்சட்டையும் அணிந்திருந்தாள்".

"நல்லது?... ஜெய்சிங். நான் இப்போது அங்கே போகப் போகிறேன். நீ கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். நான் அங்குபோய் ஏதும் பிரச்சினையில் மாட்டிக் கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்தானே. உன்னுடைய துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொள். இவர்கள் மகா பயங்கரமானவர்கள். ரவியைக் கொலை செய்து விட்டார்கள்".

ரவி கொலை செய்யப்பட்டதைக் கேட்டு ஜெய்சிங் அதிர்ச்சியடைந்தான்.

"நான் அதைப்பற்றி பிறகு கூறுகிறேன்" என்று கூறிய ராம்ஜீ... மீண்டும் ஜெய்சிங்கை எச்சரித்தான். "அவன் தப்பிக்க முயற்சி செய்தால் மாத்திரம் தடுத்து நிறுத்திவிடு.... மிகக் கவனம் தேவை".

"சரி சேர்" ஜெய்சிங்கின் குரலில் கவலை தொனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ அக்கட்டிடத்திற்குள் நுழையும் சாத்தியக் கூறுகள் பற்றி நோட்டம் விட்டான். முன் கதவை திறக்க முயல்வது புத்திசாலித்தனம் அல்ல. அவர்கள் இருந்தால் கீழேதான் இருக்க வேண்டும். மாடி ஜன்னல் வாயிலாக உள்ளே நுழைவது நல்லது.

ராம்ஜீ... மேலே ஏறுவதற்கு தனக்கு "தள்ளு" ஒன்று தருமாறு ஜெய்சிங்கிடம் கூறினான்.

ஜெய்சிங் கராத்தேயில் தேர்ச்சி பெற்றவன். ஆதலால் தனது கரங்களை மடித்து விரல்களால் பூட்டுப் போட்டு தம் பிடித்துக்கொண்டான். அதில் ராம்ஜீ ஏறியதும் மேல் நோக்கி எகிறச் செய்தான். இலகுவில் மாடி பெல்கனி கொங்கிறிட் பல-கைகளை பற்றிப் பிடித்த ராம்ஜீ குரங்கு போல் தாவி மேலே ஏறி அதிகம் வெளிச்சம் படாத இடது புற ஜன்னலை அடைந்தான்.

ஜெய்சிங்கை விலகி இருக்குமாறு ஜாடை செய்துவிட்டு ஜன்னலை ஆராய்ந்தான். ஜன்னல் கண்ணாடிகளில் தன் கண்களை பொருத்தி உள்ளே ஏதும் தெரிகின்றதா என்று பார்த்தான். உள்ளே இருந்த மங்கலான வெளிச்சத்தில் அறை காலியாக இருந்தமை தெரிந்தது.

ராம்ஜீ தன் பொக்கட்டில் இந்த சிறிய பேனாக்கத்தியை எடுத்து ஜன்னல் நீம்பல்களுக்கிடையே உள்ளே நுழைந்து கொண்டிகள் அகப்படுகின்றதா என்று துலாவினான்.

சில நொடிகளிலேயே கொண்டியைத் தொடுத்திருந்த கம்பியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம்கண்டு கொண்ட ராம்ஜீ மெதுவாக மேல் நோக்கிக் கம்பியைத் தள்ளினான். சிறிது முயற்சியின் பின் கொண்டி விடுபட்டது. மெதுவாக ஒற்றை ஜன்னலை மட்டும் திறந்த ராம்ஜீ பூனையைப் போல உள்ளே வழுக்கிச் சென்றான்.

அறையில் தளபாடங்கள் ஒன்றும் இருக்கவில்லை. உள் கதவு மூடியிருந்தது. கதவுகளில் தன் காதுகளைப் பொருத்திய ராம்ஜீ பேச்சு சத்தம் ஏதும் கேட்கிறதா என்று கூர்ந்து அவதானித்தான். நிசப்தத்தை தவிர வேறு சத்தங்கள் இல்லை.

அவன் கைப்பிடியைத் திருகி கதவைத் திறந்தான். எதிரே கீழ் இறங்கும் மாடிப்படிகள் தெரிந்தன. கீழே ஹோலில் இருந்து மங்கலான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

ராம்ஜீ நிழலுடன் நிழலாக ஒட்டிக் கொண்டவாறே சிறிதும் ஓசை எழாதபடி மாடிப் படிகளில் மெதுவாக இறங்கினான். சில படிகள் இறங்கியதுமே அவனுக்கு அந்த ஹோலின் ஒரு பகுதி தெரிந்தது.

போத்தல் ஒன்றின் வாயில் செருகியிருந்த மெழுகுவர்த்தி மங்கலான வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் இரு உருவங்கள் எதிர் எதிரே அமர்ந்து கொண்டி ருந்தன.ஒரு ஆண். ஒரு பெண்.

அந்த பெண்... சித்ராம்பரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆண்... சந்திரரத்ன பெரேரா.

எதற்கும் அஞ்சாதவன் என்று பெயர் பெற்ற ராம்ஜீயின் திடமான மனது கூட ஒரு கணம் திடுக்கிட்டது. அங்கே அந்த அறையில் இருந்த இரண்டு பேரும் சாத்தானின் பிரதிநிதிகளாகத் தோன்றினர் அவன் பார்வைக்கு.

அவர்கள் இருவரும் கடுமையான வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். ராம்ஜீ தனது காதுகளைத் தீட்டிக் கொண்டு கூர்மையாகக் கவனித்தான்.

"அவன் இறந்து விட்டான்.... நீ சொன்னபடி எனக்குரிய பணத்தைக் கொடுத்து விடு. நான் விரைவில் வெளியேறிவிட வேண்டும்" சந்தரே மூச்சு வாங்க வாங்க கூறினான்.

"அவன் இறந்து போய்விட்டான் என்பதற்கு என்ன ஆதார முள்ளது" அவள் கடுமையாகக் கேட்டாள். "அவன் இறந்து போய் விட்டான் என்று நான் நிச்சயமாகத் தெரிந்து கொண்ட பின்புதான் உனக்கு பணம் கிடைக்கும். அதற்கு முன் ஒரு சல்லிக் காசு கூட தருவதற்கில்லை".

'சித்ராம்பரி' இது அநீதி... நீ வேண்டுமென்றால் அந்த வீட்டுக்குப் போய் பார்த்துவிட்டு வா.... அவனைக் கொல்வது கடினமாக இருக்கவில்லை... அவன் ஜன்னலருகே வந்தான். அவன் மார் பைக் குறி வைத்தே நான் கத்தியை வீசினேன்"

"குறி தப்பவில்லை என்பதனையும், நீ குறி வைத்து வீசியது ரவிதான் என்பதனையும் நான் உறுதிப்படுத்திக் கொண்டபின் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு பணம் கிடைக்கும் சந்தரே!"

சந்தரே ஆத்திரத்துடன் கத்தினான்.

"நீ பணம் தரப் போகிறாயா இல்லையா?"

"தருகிறேன்... நாளை காலை பத்திரிகைகளிலும் வானொலியிலும் இந்த செய்தியை அறிந்த பின்பு. அப்படித்தான் எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது."

சித்ராம்பரியின் வார்த்தைகள் மிக நிதானமாக வெளிவந்தன. அவள் பேசிய சிங்களம் பழைய அரச காலத்து உச்சரிப்பை ஞாபக மூட்டின.

ராம்ஜீ அவர்கள் தான் கொலைகாரர்கள் என்பதனையும் இக்கொலைக்குப் பின்னால் மேலும் சிலர் இருக்கக்கூடும் என்றும் கிரகித்துக் கொண்டான். அவர்கள் முகங்களை சரியாக கவனிக்க மேலும் இரண்டு படிகள் அவன் கீழ் இறங்கினான். அவனது அசைவுகளில் ஒரு பூனையின் அவதானம் இருந்தது.

இப்போது அந்த இருவரின் முகங்களை நன்கு பார்க்க முடிந்தது.

கண்களில் குரூரமும் ஓநாய் போன்ற முகமும் கூரிய மூக்கும் கொண்ட அந்த நெடி துயர்ந்த ஆண் உருவம் கறுப்பு கோடுபோட்ட சேர்ட்டும் கறுப்பு முழுக்காற்சட்டையும் அணிந்திருந்தது. அவன்தான் கொலைகாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு எதிரேயிருந்தவள் ஒரு பெண். அவள் முகத்தில் நேரடியாகவே மெழுகுவர்த்தியின் வெளிச்சம் விழுந்தது.

அவளின் தோற்றம் அவனுக்கு ஆச்சரியத்தையும் அதேசமயம் அதிர்ச்சியையும் தந்தது. அத்தகைய அழகிய பெண் ஏன் இக்கொலைக் காரியத்தில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அவன் அவள் முகத்தை மேலும் ஆராய்ந்தான்.

அவள் முகத்தின் இடது பக்கம் கீழ்த் தாடைக்கு சற்றே மேல் அமைந்திருந்த அந்த குங்குமப் பொட்டகல மச்சம் அவளுக்கு மேலும் அழகுசேர்த்தது. மின்னலடித்து ஒளி வீசிய அவள் காந்தக் கண்களில் கண்டிப்பும் காரிய சூரத்தனமும் தாண்டவமாடின. அவளுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதுகளே இருக்குமென ராம்ஜீ கருதினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாதப்பிரதிவாதங்கள்

"இதோ பார் சித்ராம்பரி இதற்கு மேலும் என்னால் காத்திருக்க முடியாது. நாளை அதிகாலை எனக்கு ஒரு கொடுக்கல் வாங்கல் உள்ளது. இரத்தினபுரியில் இரத்தினக் கல் சுரங்கம் ஒன்றை வாங்க வேண்டும். அதிகாலையில் பணத்தைக் கொடுக்காவிட்டால் பிஸ்னஸ் கைமாறி விடும். இதற்காகத்தான் நான் இந்தக் காரியத்தையே செய்தேன். நீ பணத்தைக் கொடுக்காவிட்டால் என்ன நடக்கும் என்று தெரியாது" சந்தரேயின் ஆத்திரம் எல்லை மீறியிருந்தது.'

அவளும் அதே கண்டிப்புடன் கூறினாள். அவள் வலது கரம் இப்போது அவளது ஓவர் கோட் இடுப்புப் புறத்தில் சொருகியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கியில் பதிந்திருந்தது. "இதற்கு மேல் உன்னுடன் பேச்சு கிடையாது. நாளை காலை ஏழு மணிக்கு இதே இடத்தில் உனக்குப் பணம் கிடைக்கும். அதுவும் நீ காரியத்தை கச்சிதமா முடித்திருந்தால் மட்டும் தான்"

சந்தரே அமர்ந்திருந்த கதிரையில் இருந்து சீறி எழுந்தான். ஒரு காலால் கதிரையை உதைத்துத்தள்ளினான். "அது நடக்காது.... உன்னை எப்படி கையாள்வது என்று எனக்குத் தெரியும். வா இப்போதே என்னோடு... உன்னிடத்துக்குச் சென்று பணத்தை எடுத்துக் கொள்கிறேன்" அவன் அவளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தான்.

"நில் அங்கேயே, சந்திரே.... இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் நீ பிணமாவாய்" அவள் கையில் இப்போது ஒரு துப்பாக்கியிருந்தது. அவள் மிக அவதானமுடன் அவனை நோக்கினாள். அவன் அந்தத் துப்பாக்கியைப் பார்த்தான். கண்கள் மருண்டன. இரண்டடிகள் பின்வாங்கினான்.

அவள் மற்றுமொரு கரத்தால் தனது செல்போனை எடுத்தாள். அவனை அவதானித்த வண்ணமே விரல்களால் 333555 ரேடியா கேப் எண்களைச் சுழற்றினாள். "ஹலோ ரேடியோ கேப்"

அதற்கு மேல் ஒரு நிமிடமும் தாமதிக்காத ராம்ஜீ தான் வந்த பாதையை நோக்கி விரைந்தான். சில நிமிடங்களிலேயே அவன் ஜெய்சிங் இருந்த இடத்தை அடைந்தான்.

"ஜெய்சிங்"

"சேர்" ஜெய்சிங் இருளில் இருந்து வந்தான்.

இன்னும் சில விநாடிகளில் அந்தப் பெண் வெளியில் வருவாள். நான் அவளைப் பின் தொடர்கிறேன் நீ இங்கே இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பார்த்துக்கொள். அநேகமாக அவன் நாளை காலை ஏழு மணி வரை எங்கும் போக மாட்டான். அப்படி வெளியேறி-னால் அவனைப் பின் தொடர்ந்து செல் இவ்வாறு ராம்ஜீ கூறும் போதே அவ்வீட்டின் முன் கதவு திறந்தது.

சித்ராம்பரி சுற்று முற்றும் பார்த்தபடி வெளியில் வந்தாள். ராம்ஜீயும் ஜெய்சிங்கும் இருளில் பதுங்கிக்கொண்டனர்.

அவள் பிரதான பாதையை அடைந்த உடனேயே ரேடியோ கேப் ஒன்று வந்தது. அவளருகில் நின்றது. அவள் அதில் ஏறிக்கொண்டதும் கார் நகர்ந்தது.

ராம்ஜீ ஜெய்சிங்கின் தோளைத் தட்டி சைகை செய்து விட்டு தன் காரை நோக்கி விரைந்தான்.

அவளது டாக்ஸி வாட்பிளேஸ் வழியாக டவுண் ஹோலை அடைந்து, பெரியாஸ்பத்திரி சந்தியில் 120 பஸ் பாதையை நோக்கித் திரும்பியது. பின் விகாரமகாதேவி பூங்காவுக்குப் பின் புறமாகச் சென்று கலாபவனத்தைக் கடந்து ஆனந்தகுமார சாமி மாவத்தை வழியாக பிளவர் ரோட், குயீன்ஸ் அபார்ட்மென்ட் கொண்ட மோனியம் வீடமைப்புத் திட்டத்தின் முன் நின்றது.

அவள் டாக்ஸியில் இருந்து இறங்கி அந்த அப்பார்ட்மென்ட் வீடமைப்புத் திட்டத்தின் பிரதான கேட்டுக்குச் செல்லாமல் பக்கமாக இருந்த சிறிய புறக்கதவை திறந்து கொண்டே உள்ளே போனாள்.

மிக கவனமுடன் அவளது கவனத்தைக் கவர்ந்து விடாதபடி அவளைப் பின் தொடர்ந்து சென்ற ராம்ஜீ அந்தக் கட்டிடத்திற்கு அருகில் இருந்த பெட்டிக் கடைக்கருகே பதுங்கிக்கொண்டான்.

அவள் அந்தக் கட்டிடத்துக்குள் சென்ற சில விநாடிக-ளில் மூன்றாம் மாடியில் ஒரு அப்பார்ட்மென்ட் வீட்டில் யாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கைப் போடுவதும் பின்பு ஒரு உருவம் ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்ப்பதும் தெரிந்தது. அது அவள் தான் என்று நிச்சயித்துக் கொண்ட ராம்ஜீ பொறுமையுடன் காத்திருந்தான்.

சுமார் பதினைந்து நிமிடங்களின் பின் மீண்டும் விளக்குகள் அணைக் கப்பட்டன. ராம்ஜீ அந்தக் கட்டிடத்தில் இருந்து வெளியேற வேறு வழிகள் இல்லை என்பதை நிச்சயித்துக் கொண்டதும் தன் காரை நோக்கி நடந்தான்.

அவன் தனது காரை அடைந்ததும் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் குமாருடன் தனது செல்போனால் தொடர்பு கொண்டான்.

"இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமார் நான் ராம்ஜீ பேசுறேன். நான் நினைத்தப்படியே எனது உதவியாளன் ஜெயசிங் ஒரு மனிதன் வீட்டை விட்டு வெளியேறுவதனைப் பார்த்திருக்கிறான். அவனை பொரல்லை பாவா பிளேஸ் வரை பின் தொடர்ந்து பிரதான வீதிக்கு சில வீடுகள் தாண்டியுள்ள மூன்று மாடிக் கட்டிடம் வரை சென்றுள்ளான். அவன் அங்கு தான் இருக்கிறான். இதில் ஒரு அழகிய பெண்ணுக்கும் சம்பந்தம் உள்ளது. அவள் இப்போது பிளவர் ரோட் குயீன்ஸ் அப்பார்ட் மென்டில் இருக்கிறாள். நான் இங்குதான் இருக்கிறேன்"

"நல்ல காரியம் செய்தீர்கள் ராம்ஜீ. உங்கள் இருவருக்குமே நான் உடனடியாக பொலிஸ் உதவி அனுப்புகிறேன். நானும் இன்னும் பத்து நிமிடத்தில் அங்கு வருகிறேன்"

ராம்ஜீ காரில் இருந்தவாறே அந்தக் கட்டிடத்தையும் இப்போது இருளில் மூழ்கியிருந்த அந்த மூன்று மாடி வீட்டையும் இமை மூடாமல் அவதானித்துக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் கழிந்திருக்கும். இருளில் இருந்து இரண்டு பொலிசார் தோன்றினர். அவர்கள் ராம்ஜீயின் கார் நிற்குமிடத்திற்கு வந்து தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டனர். இன்னும் ஐந்து நிமிடங்களில் இன்ஸ்பெக்டர் அங்கு வந்து விடுவார் என்றனர்.

அந்த பொலிஸ் காரர்களில் ஒருவர் அந்தக் கட்டிடத்தின் பின் பகுதியைத் தான் ஆராய்வதாகக்கூறி விட்டுச் சென்றார். மற்றப்பொலிஸ்காரரும் ராம்ஜீயும் தொடர்ந்தும் அந்தக் கட்டிடத்தை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது தான் அன்றைய நிகழ்வுகளை தொடர்ச்சியாக நினைத்துப் பார்த்தான் ராம்ஜீ. தன்னால் லீலா மணிக்குக் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்ற முடியவில்லை என்று நினைக்கும் போது மிக வருத்தமாக இருந்தது. ரவியின் மறைவை அவளால் தாங்கிக்கொள்ள முடியுமா? அவள் அவனை உயிருக்கும் மேலாக நேசித்தாள். இது ஏன் இப்படி நடந்தது. யோசிக்க யோசிக்க அவனுக்கு அதிகக்களைப்பாக இருந்தது.

அப்போது இன்ஸ்பெக்டர் ரஞ்சித் குமார் மேலும் மூன்று சிவில் உடைப்பொலிஸ் காரர்களுடன் வந்து சேர்ந்தார்.

“என்ன ராம்ஜீ, என்ன நடக்கிறது?” இன்ஸ்பெக்டர் கேட்டார்.

ராம்ஜீ, ரவியின் வீட்டில் இருந்து சந்தரேயை ஜெய்சிங் பின் தொடர்ந்தது முதல் பொரளை கொட்டா ரோட், பாவா பிளேஸ் வீட்டில் சித்ராம்பரிக்கும் சந்தரேக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாசணை அவன் ரவியைக் கொலை செய்தமைக்கான பணத்தைக் கேட்டமை, அவள் அதிகாலையில் தருவதாக சொன்னமை எல்லாவற்றையும் அவரிடம் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது இரண்டு பேர் வெளியில் நில்லுங்கள்" என்று கூறி விட்டு மற்ற சிவில் உடை பொலிஸ் காரரையும் ராம்ஜீயையும் கூட்டிக்கொண்டு இன்ஸ்பெக்டர் அக்கட்டிடத்தின் மூன்றாம் மாடியை அடைந்து சித்ராம்பரி இருக்கும் பிளட்டின் கதவைத் தட்டினர்.

ஆரம்பத்தில் மெதுவாகவும் பின் பலமாகவும் தட்டினார். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கதவுப் பிடியைத் திருகினார். கதவு திறந்து கொண்டது. உள்ளே நுழைந்து லைட்டைப் போட்டார்கள்.. அங்கே யாரும் அண்மையில் தங்கியிருந்ததற்கான அடையாளங்களே இருக்கவில்லை. முன்னறை, படுக்கையறை, ஹோல், சமையலறை எல்லாம் காலி.

பறவை பறந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிரடி நடவடிக்கை

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமாரும் ராம்ஜீயும் பொலிஸ் காரர்களும் சேர்ந்து அந்த அப்பார்ட்மெண்ட் வீட்டை ஒரு அங்குலம் விட-ாமல் சோதித்துப் பார்த்தார்கள். எந்தத் தடயமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

அவள் கீழ்தளத்துக்கு வந்து கீழே இருந்த பொது மலசலகூட ஜன்னல் வழியாகக் குதித்துத் தப்பித்திருக்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர் ஆத்திரமடைந்தார்.

ராம்ஜீ அவளைப் பின் தொடர்ந்து வந்ததை அவள் எப்படியோ அறிந்து விட்டாள். நமது கவனத்தைத் திசைத்திருப்பத் தான் இந்த கட்டிடத்துக்குள் நுழைந்து நாடகமாடியிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தனது அடுத்த குருவியையும் எச்சரிக்கை செய்யக்கூடும். ஆதலால் அங்கே காவல் இருப்போரை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

அவர் ஏனைய பொலிஸ்காரர்களை அழைத்தார். பொரல்ளை பாவா பிளேசில் காவல் இருக்கும் பொலிசாரிடம் விசயத்தைக் கூறி எச்சரிக்கையாக இருக்கும் படியும், சித்ராம்பரி என்ற பெண்ணின் அங்க அடையாளங்களை ராம்ஜீயிடம் இருந்து பெற்று சகல வீதிக்காவல் சாவடிகளுக்கும் அறிவிக்கும்படியும் கட்டளையிட்டார்.

பொலிஸார் விரைந்து செயற்பட்டனர். இன்ஸ்பெக்டர் ஒரு பொலிஸ் காரரை அவ்விடத்தில் காவல் இருக்குமாறும், கைரேகைகளை பரீட்சிப்பதற்கு ஏற்பாடு செய்யும் படியும் பணித்துவிட்டு ஏனையோரை பாபா பிளேசுக்கு போகும்படியும் துரிதப்படுத்தினார்.

அனைவரும் பொலிஸ் காரில் ஏறிக் கொண்டனர். ராம்ஜீ தன் காரில் பொரல்லை நோக்கி விரைந்தான்.

அவர்கள் அனைவரும் பொரல்லை பாபா பிளேஸை அடைந்த போது அங்கு வழமைக்கு மாறான அமைதி நிலவியது.

சீருடையில் இல்லாத குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு சார்ஜன்டும், ஒரு உத்தியோகத்தரும் எச்சரிக்கையுடன் இருந்தனர். ஜெய்சிங் அதே இடத்தில் இருந்து தனது கடமையைச் செய்து கொண்டிருந்தான்.

"குருவி இன்னமும் உள்ளேதான் இருக்கிறதா?" இன்ஸ்பெக்டர் கேட்டார். "அப்படித்தான் சேர் நினைக்கிறேன். எந்தவித அசைவுகளும் ஏற்படவில்லை" சார்ஜன்ட் பதில் சொன்னார்.

"சரி... அவனையாவது கைப்பற்றுவோம் எல்லோரும் கவன மாக இருக்கவேண்டும். இவர்கள் மிக அபாயகரமானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத தொடர்புகள் ஏதும் கூட இருக்கலாம்.”

“சரி கட்டிடத்தின் உள்ளே செல்வதற்கான வழிகளைப் பார்ப்போம். கதவின் அமைப்பை பரிசீலித்தீர்களா?”

கதவில் மேலும் கீழும் இரண்டு கொண்டிகள். நடுவில் பூட்டு கதவைத் திறப்பதனைவிட பல்கனியில் இடது புறம் உள்ள ஜன்னல் ஊடாக நுழைவது சுலபம் சார்ஜன்ட் முன்பு ராம்ஜீ பயன் படுத்திய அதே ஜன்னலை சுட்டிக்காட்டினார்.

“சரி... நீங்கள் இருவரும் சென்று அவனை பிடிப்பதற்கு முயலுங்கள்.”

“உயிருடன் பிடிப்பது நல்லது. கவனமாக இருக்கவேண்டும்” சார்ஜன்டும்,பொலிஸ் உத்தியோகத்தரும் பதுங்கிப் பதுங்கிக் கட்டிடத்தை அடைந்தனர்.

ராம்ஜீ... ஜெய்சிங் இருக்கும் இடத்துக்குச் சென்றான். அந்த அதிரடி நடவடிக்கையில் நேரடியாக அவர்களுடன் ஈடுபட ராம்ஜீ விரும்பியபோதும் இன்ஸ்பெக்டருக்கு அது பிடிக்காது என்பதனை அவன் உணர்ந்து அவர்கள் செயற்படுவதனை வெறுமனே அவதானித்துக் கொண்டிருந்தான்.

பதுங்கிச் சென்ற இரண்டு பொலிசாரும் ஒருவர் மற்றருவருக்கு உதவ மெதுவாக பெல்கனியில் ஏறினர்.

அவர்கள் பெல்கனியில் ஏறி ஜன்னலை அடையுமுன்பே உள்ளே இருட்டான ஜன்னல் கண்ணாடிகளுக்குப் பின்னே அசைவு தெரி-வதை ராம்ஜீ அவதானித்தான்.

உடனேயே அவன் சத்தமிட்டு பொலிஸ்காரரர்கள் இருவரையும் எச்சரித்தான். எனினும் அவர்கள் சுதாகரித்துக் கொள்வதற்குள் வெடிச்சத்தம் கேட்டது.

முன்னால் சென்ற பொலிஸ்காரரர் ஐயோ என்று அலறிக்கொண்டு சரிந்தார். அவரை பொலிஸ் சார்ஜன் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

தொடர்ந்து மேலும் பல வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஜன்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடிகள் துகள்களாக சிதறின. சில விநாடிகள் யாரும் அசை யாமல் அப்படியே இருந்தனர். தொடர்ந்து அமைதி நிலவியது.

இன்ஸ்பெக்டரும் ஏனையோரும் வீட்டின் அருகில் ஓடிச் சென்றனர்.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமார் ராம்ஜீயையும், ஜெய்சிங்கையும் அங்குவர வேண்டாமென்றும் இதில் தலையிடவேண்டாம் என்றும் எச்சரித்தார்.

தங்களால் மேலும் உதவ முடியும் என்று ராம்ஜீ எவ்வளவோ கூறிப்பார்த்தான். இன்ஸ்பெக்டர் மசியவில்லை. அவர்கள் இரு வரையும் வீட்டுக்குப்போகும்படி அவர் கண்டிப்பாகக் கூறி விட்டார்.

டி.எஸ்.பி. சிங்கராயருக்கு அவர்களையும், அவர்கள் வல்லமை யும் தெரிந்த அளவுக்கு இந்த இன்பெக்டருக்குத் தெரிய நியாயமில்லை. எனவே அவர்கள் சற்று தூரத்தில் இருந்து நடப்பதை அவதானிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இன்ஸ்பெக்டரும் ஏனைய பொலிஸ்காரர்களும் சேர்ந்து மெதுவாக பல்கனியில் இருந்து சூடுபட்ட பொலிஸ் காரரை இறக்கினர். இன்ஸ்பெக்டர் சூடுபட்ட இடத்தை பரிசீலித்தார். குண்டுபொலிஸ் காரரின் கழுத்தை ஊடுருவிச் சென்றிருந்தது. மேலும் அவரைப் பரிசீலித்த இன்ஸ்பெக்டர் அவரது உயிர் பிரிந்திருந்ததை புரிந்து கொண்டார்.

இன்ஸ்பெக்டரின் முகம் சிவந்தது. அவரது ஆத்திரம் அதிகரித்தது. அவர் விரைந்து ஆணையிட்டார்.

விரையுங்கள் கதவை இடித்து அவனைப் பிடியுங்கள். அவசியம் ஏற்பட்டால் சுடத் தயங்கவேண்டாம்.

சார்ஜன்டும் சிவிலுடைப்பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் துப்பாக்கிகளை ஏந்தியபடி விரைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுரங்கப்பாதை

சார்ஜன்ட் நான்கு முறை கதவுப் பூட்டை நோக்கி சுட்டு பின் பிடியைத் திருக கதவு திறந்து கொண்டது. பின்னர் மிகக் கவனமாக அடிமேல் அடியெடுத்து பதுங்கிப் பதுங்கி ஒவ்வொருவராக உள்ளே நுழைந்தனர்.

உள்ளேயிருந்து எந்தவித எதிர்ப்பும் வராதமை கண்டு இன்ஸ்பெக்டருக்கு சந்தேகம் எழுந்தது. அந்த ஒடுக்கமான மூன்று மாடிக் கட்டிடத்தில் இருந்த எல்லா அறைகளையும் அவர்கள் கவனமாக சோதனையிட்டனர். அங்கே எந்த மனிதனும் ஒளிந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் அவர்கள் அங்கிருந்து தப்பிக்கும் வேறு மார்க்கங்கள் உள்ளனவா என்பதனை ஆராய்ந்தனர். இறுதியாக கீழ்த்தளத்தில் இருந்த சமயலறையில் அலுமாரிக்குப் பின்னால் அங்கிருந்து வெளியேறுவதற்கு சுரங்கவழி ஒன்றிருப்பதனை கண்டுபிடித்தனர்.

அவ்வழியில் இறங்கிச் சென்ற பொலிஸார் அச்சுரங்கம் 150 அடிகளுக்கப்பால் இருந்த சாக்கடை சுரங்கக் கால்வாயில் இணைவதையும், அச்சாக்கடை சுரங்கத்துக்குள் நுழைந்தால் இலகுவாக பிரதான பாதையோரம் இருக்கும் ஏதாவது ஒரு சாக்கடை கால்வாய் மூடியைத் திறந்து கொண்டு வெளியேறிவிட முடியும் என்பதையும் அறிந்து வந்து இன்ஸ்பெக்டரிடம் கூறினர்.

இரண்டாம் முறையும் தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த இன்ஸ்பெக்டருக்கு அவர்களை எப்படியும் மடக்கிப் பிடித்துவிட வேண்டும் என்ற உத்வேகம் அதிகரித்தது.

அவர் இத்தகைய சந்தர்ப்பங்களில் வழமையாகச் செய்யும் ஏற்பாடுகளை செய்யச் சொன்னார். அந்தக் கட்டிடத்தை சீல் வைக்கச் செய்தார். பின் இரண்டு பொலிஸாரை அவ்விடத்துக்கு காவல் வைத்து விட்டு விட்டு வெளியே வந்தார்.

இத்தனை நேரம் அந்த கட்டிடத்துக்குள் சென்ற யாரும் வெளிவராததாலும், வெடிச்சத்தம் ஒன்றையும் கேட்காததாலும் கலவரமும் சந்தேகமும் அடைந்திருந்த ராம்ஜீயும், ஜெய்சிங்கும் இன்னும் ஐந்து நிமிடம் பொறுத்திருந்து பின் உள்ளே செல்வதென்று தீர்மானித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நேரத்தைக் கடத்துவதற்கு இரண்டு சிகரட்டுக்களை ஊதிக் கொண்டிருந்தனர். அந்த டிசம்பர் மாத குளிரிலும், கும்மிருட்டிலும் பாரிய பொறுப்பொன்று தலைமேல் அழுத்த நிதானத்துடன் காத்திருந்தனர்.

அப்போதுதான் இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குமார் பரபரப்புடன் வெளியில் வந்தார். அவர் வெளியில் ராம்ஜீயும் ஜெயசிங்கும் காத்திருப்பதைக் கண்டதும் தன் தோல்வி உணர்வுகளை மறைத்துக்கொண்டு சமாளித்தார்.

"மிஸ்டர் ராம்ஜீ... குருவிகள் இரண்டுமே தப்பிவிட்டன. இங்கிருந்த பயல் உள்ளே சுரங்கப் பாதை வைத்து தப்பியிருக்கிறான். ஆனால், இவர்கள் இருவருமே வெகு தூரம் சென்றுவிட முடியாது. கொழும்பிலும் சுற்றுப்புறத்திலும் எல்லா வாகனங்களையும் சோதனையிடும்படி பணித்திருக்கிறேன்". என்றார்.

ராம்ஜீ தன்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போனமைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டான். ரவி பெருஞ் சித்திரநாயக்கனின் சாவுக்குத் தனது இயலாமையே காரணமாக இருந்துவிட்டதென்றும், அவனது சாவுக்கு காரணமானவர்கள் தமக்கு மிக அரு கில் இருந்துள்ளபோதும் அவர்களை பிடிக்க முடியாமல் போய்விட்டமையை எண்ணி பெரிதும் நொந்து கொண்டான்.

அடுத்து என்ன செய்வது? அவர்களை பிடிக்காமல் ஓயப் போவதில்லை. அவன் தன்னுள் திடசங்கற்பம் பூண்டுகொண்டான்.

ரவியை கொலை செய்ய முற்பட்டவர்கள் யார்? அவர்கள் எதற்காக ரவியைக் கொலை செய்தனர்? அவர்களுக்கும் ஏதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத குழுக்களுக்கும் சம்பந்தம் இருக்கலாமா? இதில் சம்பந்தப்பட்டிருக்கும் அந்த அழகிய பெண் யாராக இருக்கும்?

ராம்ஜீயின் மனதில் பலவிதமான கேள்விகள் எழுந்தன. அவன் மிகவும் குழம்பிப் போனான். மிகவும் ஆத்திரம் அடைந்திருந்த அவனுக்கு இப்போது தேவையானதெல்லாம் சற்றே ஓய்வும் தெளிவான சிந்தனையும்தான்.

அவன் ஜெய்சிங்கை அழைத்து காரை எடுக்கச் சொன்னான். அவர்கள் வீட்டையடைந்தபோது மணி அதிகாலை இரண்டரை யாகியிருந்தது.

மேசை மீது வைக்கப்பட்டிருந்த சில சிக்கன் சேண்ட் விச்கள், ஒரு விஸ்கி போத்தல், சிகரட் பெட்டி சகிதம் ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டமர்ந்த ராம்ஜீ ஒரு கிளாசில் சிறிது விஸ்கியை ஊற்றி ஜெய்சிங் இருந்த பக்கம் தள்ளினான்.

ராம்ஜீயின் நிலையை புரிந்து கொண்டிருந்த ஜெய்சிங்கும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இருவரும் விஸ்க்கியை அருந்தியவாறு பாதி இருளில் அமர்ந்திருந்தனர். ரவி பெருஞ்சித்திரநாயக்கர் தேவன் இறந்து போய்விட்டதை அவர்களால் நம்ப முடியவில்லை. ராம்ஜீயின் பதினைந்து வருட கால நண்பன் அவன். அவனைவிட ரவியின் மனைவி லீலாமணியை அவன் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறான். அடுத்த சில நாட்களில் நடக்கப் போவதை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

அதிகாலை 4 மணி இருக்கும். நியூ எம்ப்ரெஸ் ஹோட்டல் வழக்கம் போல் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. ஹோட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனேஜர் மருதநாயகம் வரவேற்பறைக் கவுண்டரிலேயே கவிழ்ந்து படுத்து குரட்டை விட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அந்த ஹோட்டலுக்கு யாரும் வரப்போவதில்லை என்ற நம்பிக்கை அவரை ஆழ்ந்த தூக்கத்தில் அமிழச் செய்திருந்தது.

ஆனால், யாரும் எதிர்பார்க்காத ஒரு பெண் அந்த ஹோட்டலுக்குள் பரபரப்புடன் நுழைந்தாள்.

பார்த்த மாத்திரத்தில் மூளை வளர்ச்சி சற்று குன்றியவள் போல் தோன்றினாள். கலைந்து சடை பிடித்திருந்த கூந்தல், கருகிக் காய்ந்து போன முகம், முன் பல் ஓட்டை விழுந்து கறைப்படிந்திருந்தது. பச்சையும் சிவப்பும் கலந்த தொள தொளத்த சட்டையும் பாவாடையும் அவளை அரைப் பைத்தியக்காரியாகக் காட்டியது.

அவள் மருதநாயகத்துக்கருகில் வந்து "டொக்... டொக்" என்று மேசையைப் பலமாகத் தட்டினாள். மூன்றாம் முறை அவள் மேசையைத் தட்டியபோதுதான் மருதநாயகத்தின் குரட்டையொலி மறைந்து அசைவு தெரிந்தது. மருதநாயகம் மிக எரிச்சலுடன் கண் விழித்தார். உலகத்திலேயே அவர் வெறுக்கும் ஒரேயொரு விடயம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது எழுப்பப்படுவதுதான்.

தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையில் அல்லலுற்ற மருதநாய கம் தனக்கு முன் ஒரு பைத்தியக்காரியைக் கண்டு மருட்சிய டைந்தார்.

"என்ன வேண்டும்?... ரூம் கிடையாது"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வாயிலிருந்து கேள்வியும் பதிலும் எரிச்சலுடன் வெளிவந்தது.

அவள் கைப்பையைத் திறந்து இரண்டாயிரம் ரூபா நோட்டு ஒன்றை நீட்டினாள். மருதநாயகத்துக்கு அந்த நோட்டைக் கண்டதும் சுய உணர்வு வந்துவிட்டது. கடந்த சில நாட்களாகவே அவருக்கு "எக்ஸ்ட்ரா' வருமானம் குறைவு. அத்துடன், அவர் அந்த வேலை யில் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு மற்றுமொரு காரணம் அத்தகைய வருமானத்தின் கவர்ச்சிதான்.

அவர் மறு பேச்சின்றி... இவள் இந்த நேரத்தில் எங்கே இருந்து முளைத்து வந்தாள்? என்ற சந்தேகத்துடன் இரண்டாம் மாடியில் 24ஆம் இலக்க அறைத் திறப்பை எடுத்து நீட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரும் குற்றங்கள்

சித்ராம்பரி திறப்பை அவசரமாக பிடுங்கிக்கொண்டு மாடிப் படிகள் நோக்கி நடந்தாள். "அவள் யாராக இருக்கும்?" மருதநாயகத்துக்கு மீண்டும் சந்தேகம் எழுந்தாலும் 2000 ரூபா அவர் சந்தேகங்களை திசை திருப்பி விட்டிருந்தது.

இரண்டாம் மாடியை அடைந்த அவள் தன் ரூமுக்குச் செல்லாமல் 26 ஆம் எண் அறையை சென்று கதவைத் தட்டினாள்.

அறையில் இன்னமும் மெல்லிதான வெளிச்சம் காணப்படுவதனை கதவுக்கு ஊடாக அவதானித்த அந்தப் பெண் மீண்டும் ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவைத் தட்ட முற்பட்ட போது கதவு திறந்து கொண்டது. பாதி திறந்த கதவூடாக கீர்த்தி ஸ்ரீ சூரிய பண்டாரவின் கோரமான முகம் தெரிந்தது.

இந்த அதிகாலை வேளையில் ஒரு பைத்தியக்காரி தன் கதவைத் தட்டக்கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

“யார் நீ.... என்ன வேண்டும்”

அவன் குரல் எரிச்சலுடன் வெளி வந்தது. அவள் அவசர அவசரமாக கதவைத்தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். சூரிய பண்டாரவின் திகைப்பு நீங்கு முன்பே அவள் தான் அணிந்திருந்த போலித் தலை முடியையும் பல் செட்டையும் கழற்றினாள்.

சூரிய பண்டார மேலும் திகைத்தான். அவள் வேறு யாருமல்ல. சித்ராம்பரி தான். அவள் அவன் திகைப்பை சற்றும் பொருட்படுத்தவில்லை. சட்டென்று உள்ளே நுழைந்த அவள் கதவை மூடினாள். அறை முழுவதும் சாராய நெடியும் சிகரட் புகையும் பிரிக்க முடியாத படி பரவியிருந்தன. அறையின் ஒரு ஓரமாக இருந்த மேசையில் முக்கால் போத்தல் சாராயம் தீர்ந்து விட்ட நிலையில் “மென்டிஸ் அதி விசேசம்” சாராய போத்தலும் பல சிகரெட்டுத்துண்டுகளும் சிதறிக் கிடந்தன. இக் காட்சியும் நெடியும் அவளுக்கு அருவருப்பையும் குமட்டலையும் ஏற்படுத்தியது.

“சந்திர ரத்னவிடம் இருந்து ஏதும் செய்தி வந்ததா?” ஆத்திரமும் அருவருப்பும் அவள் குரலில் கொப்பளித்தன.

சற்று நேரத்துக்கு முன்னர் அவன் போன் பண்ணினான், பொலிஸ் அவனைப் பிடிக்க மிக அருகில் வந்து விட்டதாகவும் மிகப் பிரயத்தனப்பட்டு தப்பி விட்டதாகவும் கூறினான். நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தில் எங்கோ தவறு ஏற்பட்டு விட்டது.

“எங்கும் தவறு ஏற்படவில்லை, அவன் ரவி பெருஞ்சித்தர நாயக்கனின் வீட்டில் இருந்து வெளியேறிய போது எவனோ அவனைப் பின் தொடர்ந்துள்ளான். அதன் பின் நான் பொரளை பாபாபிளேசில் இருந்து வெளியேறிய போது என்னையும் ஒருவன் பின் தொடர்ந்தான். திட காத்திரமான உயர்ந்த ஒரு மனிதன். அவன் பொலிஸ்காரனாக இருக்க முடியாது.”

“அவன் கண்ணில் இருந்து தப்ப முடியாமல் போகவே நான் பிளவர் ரோட் குயீன்ஸ் அப்பார்ட்மெண்டில் வாடகைக்கு எடுத்திருந்த ரூமுக்குச் சென்றேன். அங்கிருந்து பார்த்த போது அந்த மனிதன் காரை விட்டிறங்கி தனது செல்போன் மூலம் யாருடனோ தொடர்பு கொள்வது தெரிந்தது. நான் உடனே இந்த வேசத்தைப் போட்டுக் கொண்டு அங்கிருந்து தப்பி விட்டேன். நான் திரும்பி வரும் போது ஒரு பொலிஸ் கார் அவ்விடத்துக்குச் செல்வதையும் பார்த்தேன். ”

அவள் கூறியதை கவனமுடன் கேட்டுக்கொண்ட சூரிய பண்டார கூறினான்.

“சந்திரரத்ன தப்பிக்கும் முயற்சியில் பொலிஸ் காரன் ஒருவனையும் கொன்று விட்டான். அவன் அவனது பணத்தை உடனேயே கேட்கிறான். அவனை நகரத்தில் இருந்து வெளியேற்றுவதும் இனி கஷ்டமான காரியமாக இருக்கும்”

சித்திராம்பரி அறையில் இருந்த அந்த ஒரேயொரு மேசைக்கருகில் வந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள். மேசை மீதிருந்த சாராயப் போத்தல் பாதி குடித்த கிளாஸ் சிகரட்டுத்துண்டுகள் எல்லாம் சேர்த்து வயிற்றைக் குமட்டிய போதும் சகித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சந்திரரத்ன இப்போது எங்கே இருக்கிறான்” அவள் குரல் கண்டிப்புடன் வெளி வந்தது.

“அவன் அவனது காதலி மாலினியின் பிளட் அறையில் ஒளிந்து கொண்டிருக்கிறான். மாலினியை உனக்குத் தெரிந்திருக்குமென்று கருதுகின்றேன். முன்பு தலைவரின் வேலை ஒன்றை அவள் செய்து கொடுத்திருக்கிறாள்.”

“மாலினி.... ஹேம மாலினி.... ஆம் அவளை எனக்கு ஞாபகமிருக்கிறது. அவள் சந்திர ரத்தினவின் காதலி என்பது எனக்குத் தெரியாது. அத்துடன் அவள் அவ்வளவு நம்பகமானவளும் அல்ல.....”

“நம்பகமானவள் அல்ல என்று நீ அவளைக் குறிப்பிடுவதன் அர்த்தம்...!” சூரிய பண்டார சந்தேகத்துடன் கேட்டான்.

“சிலவேளை அவர்கள் இருக்குமிடத்தை அறிந்து அவர்கள் பொலிசிடம் சிக்கி விட்டால் அவளையும் சந்திரரத்தினவையும் நமது அமைப்புடன் முடிச்சுப் போட்டுப் பார்க்க எவ்வளவு நேரம் பிடிக்கும்? சந்திர ரத்ன உன்னைப் பற்றி அவளிடம் ஏதும் விபரங்கள் கூறியிருக்கக்கூடுமா?”

இந்த உண்மையை சித்ராம்பரி வெளிப்படுத்தியபோது எதற்கும் அஞ்சாத சூரிய பண்டாரவே சற்று ஆடிப் போய்விட்டான். அது அவன் குரலிலும் தெரிந்தது.

“எனக்குத் தெரியாது. சிலவேளை அவன் ஹேம மாலினியிடம் இது பற்றி பேசியிருக்கக் கூடும்” சில நொடிகள் மௌனத்துக்குப் பின் சித்ராம்பரி தனது கனத்த கைப்பையைத் திறந்தாள். அதில் இருந்து இரண்டு வேறு வேறு சிறு பார்சல்களைத் தனித்தனியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாள். இரண்டையும் மேசை மீது வைத்தாள்.

பண்டார கவனமுடன் அவதானித்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் கேள்விக்குறிகள் நட்சத்திரங்களாக சுடர் விட்டுக் கொண்டிருந்தன.

"என்ன இவை?"

"ஒன்றில் ஐம்பது லட்சம் ரூபா நோட்டுக்களாக உள்ளன. ரவி பெருஞ்சித்திர நாயக்கனை கொலை செய்பவனுக்குச் சேர வேண்டிய பணம். மற்றது ஏற்கனவே ரவியை கொலை செய்வ தற்குப் பயன்படுத்தியது போன்ற மற்றுமொரு கத்தி."

"சித்ராம்பரி அந்த இரண்டு பார்சல்களையும் பண்டாரவிடம் நீட்டினாள். சந்தரே இனி நமக்குப் பயன்பட மாட்டான். அவனைப் பற்றிய விபரம் பொலிசாரிடம் உள்ளது. எப்படியும் அவனை பொலிசார் பிடித்து விடுவார்கள். அவனை பொலிஸ் பிடித்தால் அவன் உன்னைப் பற்றிய விபரங்களையும் என்னைப்பற்றியும் கக்கி விடுவான்." அதன் பின் நமது திட்டங்கள் அனைத்தும் பிழைத்துப் போய் விடும்.

பண்டார அந்த இரண்டு பார்சல்களையும் ஒரு முறை ஆர்வத்துடன் பார்த்தான். அவை இரண்டையும் எடுத்துக் கொண்டான். பணப்பார்சலை அலுமாரியில் வைத்து மூடினான். கத்தியை எடுத்து தனது கோட் பொக்கெட்டில் போட்டுக் கொண்டான். அவன் வெளியில் செல்ல ஆயத்தமானான்.

சித்ராம்பரி அவன் திரும்பி வரும்வரை அங்கு காத்திருப்பதாக கூறினாள். அவன் திரும்பி வந்ததும் ஹேமமாலினியை என்ன செய்வது என்று தீர்மானிக்க வேண்டும். சந்தரேயையும் ஹேமமாலினியையும் ஒன்றாக பார்த்தால் பொலிசார் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளை தெரிந்து கொள்ளலாம். இப்படி சிந்தித்த சித்ராம்பரி கதவருகே சென்று விட்ட பண்டாரவை அழைத்தாள்.

"ஹேமமாலினி இருக்கும் இடம் தெரியுமா?"


"தெரியாது..."

"ஆனால் தெரிந்து கொள்வேன்" என்று கூறி கதவைத் திறந்த பண்டார மீண்டும் உள்ளே திரும்பி பணத்தை என்ன செய்வது என்று கேட்டான்.

"அது சந்தரேக்கு சேர வேண்டியது" பண்டாரவின் கோர முகத்தில் ஒளி ஏற்பட்டது. அவன் ஓநாய்போல் ஒரு பார்வை பார்த்து விட்டு கதவை மூடினான்.

ஐம்பது லட்சம் ரூபாய். சந்தரேக்கு அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. அவன் கபடமுடன் எண்ணியவாறு இருளில் விரைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மறைந்துள்ள மர்மங்கள்

அடுத்த நாட் காலை மிகத் தாமதித்தே ராம்ஜீ எழுந்திருந்தான். அன்றைய அவசர வேலைகளை செய்து முடிக்க பகல் பொழுதாகியிருந்தது. நண்பகல் பன்னிரெண்டு மணியை அண்மித்த போது அவனது செயலாளினி நளாயினி அவன் ரூமுக்குள் வந்தாள். கொழும்பு பொலிஸ் தலைமையகத்தின் குற்றப்புலனாய்வு பிரிவுக்குரிய பொறுப்பான டி.எஸ்.பி. சிங்கராயர் அவனை சந்திக்க வந்திருப்பதாகவும், ஹோலில் காத்திருப்பதாகவும் அறிவித்தாள்.

ராம்ஜீக்கு பொலிஸ் என்றாலே இப்போது எரிச்சலாக இருந்தது. மிக அருகாமையில் இருந்த கொலைகாரர்களையே அவர்களால் பிடிக்க முடியவில்லை என்பதை நினைத்த போது அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம்... கோபமாக வந்தது.

நளாயினி டி.எஸ்.பி. வந்திருப்பதாக கூறிய பின்பும் அதனைப் பொருட்படுத்தாத ராம்ஜீ லீலாமணியின் உடல் நிலை எப்படி இருக்கிறது என்று விசாரித்தான். அதற்கு அவள் லீலாமணியின் உடல் நிலை இப்போது தேறி வருவதாகக் கூறினாள். அதன் பின் அவள் மீண்டும் ஒரு முறை சிங்கராயரின் வருகை பற்றி அறிவித்தாள்.

"டி.எஸ்.பி.க்கு தன்னிடம் என்ன வேண்டுமாம்?" என்று நாளாயினியிடமே கேள்வியைக் கேட்ட ராம்ஜீ, அவரை வரச் சொல்லுமாறு கூறியனுப்பினான்.

அவள் சென்ற சில நொடிகளில் டி.எஸ்.பி.யின் பருத்த தேகம் ராம்ஜீயின் அலுவலகத்தில் நுழைந்தது. என்னதான் பொலிஸ் மீது வெறுப்பு ஏற்பட்டாலும் டி.எஸ்.பி. சிங்கராயரின் வருகை அவனுக்கு ஆறுதல் தராமல் இல்லை. டி.எஸ்.பி. சிங்கராயரை அவனுக்கு நீண்ட நாட்களாகத் தெரியும். பல விடயங்களில் அவனுக்கு அவரும், அவருக்கு அவனும் உதவி புரிந்துள்ளனர். பல தெளிவில்லாத விடயங்கள் தொடர்பில் அவர்கள் இருவரும் விவாதித்துத் தெளிவு பெற்றுள்ளனர். எதனையும் பொலிஸ் கோணத்தில் இருந்தே பார்ப்பதால் பல உண்மைகள் புலப்படாமல் போவதை நன்கு புரிந்திருந்த சிங்கராயர் பல சிக்கல்களை மூன்றாவது மனிதனின் புலன்கள் வாயிலாக அறிவதற்கு எத்தனித்த போதெல்லாம் அவர் ராம்ஜீயின் உதவியை நாடி வருவது வழக்கம். நூற்றுக்கு தொன்னூறு சதவீதமான இத்தகைய சிக்கல்களுக்கு ராம்ஜீ, திருப்திகரமான பதில்களை வைத்திருப்பது வழக்கம்.

இன்றும் அப்படியொரு சூழ்நிலையிலேயே ராம்ஜீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கராயரும் சந்தித்துக் கொள்கின்றனர்.

"என்ன ராம்ஜீ... நெற்றிக்கண் திறந்தது போல்... அவ்வளவு கோபம்!?" அவனது கண்களில் கோபம் கொப்பளிப்பதைப் புரிந்து கொண்ட சிங்கராயர் இயல்பாகவே கேட்டார்.

"உண்மையில் முழு பொலிஸ் டிபாட்மெண்டையும் எரித்து விட வேண்டும் போல் கோபம்தான்.. இருந்தாலும் என்ன செய்வது?" கையில் கிடைத்த கொலைகாரர்களை பிடித்துக்கொள்ளாமல் நழுவவிட்டு விட்டார்களே?" ராம்ஜீயும் கோபத்தை பெரிதாக வெளிக்காட்டாமலேயே கூறினான்.

"கவலைப்படாதீர்கள்... அவர்கள் எங்கேயும் போய் விடமாட்டார்கள். இப்போது ஒளிந்து கொண்டிருந்தாலும்... விரைவில் அவர்கள் வெளியே வருவார்கள். அப்போது தப்பமாட்டார்கள்."

"நான் நம்பமாட்டேன்... உங்களால் அவர்களைப் பிடிக்க முடியும் என்றும் நான் கருதவில்லை" ராம்ஜீ நக்கலாகவே கூறினான்.

"மிஸ்டர் ராம்ஜீ அவர்களே! உங்கள் கோபம் எனக்குப் புரிகின்றது... ஆனால் அதைப் பற்றி இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை. அதைவிட மிகச் சீரியஸான ஒரு விடயத்தை உங்களிடம் பேச வந்துள்ளேன். "நீங்கள் விரும்பினால்.... இந்தக் "கீரிப்பிள்ளை" பற்றி பல தகவல்களை உங்களுக்குச் சொல்வேன்." டி.எஸ்.பி. சிங்கராயர் இருக்கையில் மேலும் நன்கு சாய்ந்து அமர்ந்து கொண்டார்.

"சொல்லுங்கள்"

ராம்ஜீயின் கோபம் இப்போது சற்றே தணிந்திருந்தது. அவன் அருகில் இருந்த மேசைக்குச் சென்று இரண்டு கிளாஸ்களில் விஸ்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டு வந்து ஒன்றை டி.எஸ்.பி.யிடம் நீட்டினான்.

"அதைப் பெற்றுக்கொண்ட டி.எஸ்.பி.சியர்ஸ் கூறி ஒரு மிடறு விழுங்கினார். பின் தொண்டையைச் செருமி சரிப்படுத்திக்கொண்டு நீண்ட சொற்பொழிவொன்றுக்கு தயாராவதனைப் போல் பேசத் தொடங்கினார்.

"இந்தக் கீரிப்பிள்ளை சாமான்யமானவன் அல்ல. ஏற்கனவே மூன்று கொலைகளைச் செய்துள்ளான். அனைத்தும் இதே பாணியில். இந்தியாவின் தமிழ் நாட்டில் ஒரு கொலையும், கேரளா மாநிலத்தில் ஒன்றும், மாலைதீவில் ஒரு கொலையும் செய்துள்ளான். இந்த கொலைகளுக்கிடையில் என்ன சம்பந்தம் உள்ளது. அல்லது அரசியல் காரணங்கள் உள்ளனவா என்பதனை அறிய முடியவில்லை"

"மற்றுமொரு சிந்திக்க வேண்டிய உண்மை என்னவென்றால் கொலைகளை செய்ய அவன் மேற்கொள்கின்ற முறையும், பயன்படுத்தும் கத்தியும்"

டி.எஸ்.பி தனது கிளாசில் இருந்து மீண்டும் விஸ்கியை ஒரு மிடறு விழுங்கினார். ராம்ஜீ ஆர்வத்துடன் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

விட்ட இடத்தில் இருந்து டி.எஸ்.பி.தனது பேச்சைத் தொடர்ந்தார்.

"உண்மையில் கொலையை செய்பவனுக்கும் கொலையை செய்யக் கட்டளை இடுபவனுக்கும் எந்தவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. மூன்றாவது ஆளொருவனைக் கொண்டே அவர்கள் கொலையைச் செய்விக்கின்றார்கள். இரண்டு சந்தர்ப்பங்களில் கொலையைச் செய்தவன் பிடிபட்டிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையை செய்யச் சொன்னவர்கள் தொடர்பில் அவர்களிடம் இருந்து எந்தவிதமான பிரயோசனமான தகவலும் கிடைக்கவில்லை."

"தமிழ் நாட்டின் பிரபல வர்த்தகர் கிருஷ்ண தேவராயநாயக்கன் கொலை செய்யப்பட்ட போது அவரை கொலை செய்வதனை தமிழ் நாட்டுப் பொலிஸார் மடக்கிப் பிடித்த போதும் அவனுக்கு கொலை உத்தரவு கொடுத்த மனிதன் பற்றி அவனால் ஒன்றும் கூற முடியவில்லை. கறுப்புக் கண்ணாடியுடன் கூடிய கறுப்புக் காரில் வந்த ஒருவன் ஒரு கத்தியையும், பணத்தையும் கொடுத்து கொலையை எப்படி செய்ய வேண்டுமென பாழடைந்த இருண்ட கட்டிடம் ஒன்றுக்கு அழைத்து விபரம் கூறியதாக மட்டும் தெரிவித்துள்ளான்.

"இக்கொலைகளுக்குப் பின்னணியில் மிகப் பயங்கரமான கும்பல் ஒன்று மிகக் கவனமுடன் செயற்படுகின்றது என்பது மட்டும் தெரிகிறது" என்று கூறிய டி.எஸ்.பி. சிங்கராயர் தனது பிரிப்கேசைத் திறந்து அதில் இருந்து மற்றுமொரு தட்டையான சற்று நீளமான சிறு பெட்டியை எடுத்துத் திறந்தார். அதில் இருந்து கையளவான அகன்ற கூர்மையான எறியும் கத்தியொன்றை எடுத்து மேசை மேல் வைத்தார். அது ரவி பெருஞ்சித்தநாயக்கனை கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி.

ராம்ஜீ அக்கத்தியை எடுத்து மேலும் கீழும் திருப்பித் திருப்பிப் பார்த்தான். தந்தக் கைப்பிடியுடன் கூடிய அந்தக் கத்தி அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டு மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு செய்யப்பட்டிருந்தது. சில நிமிடங்கள் வரை அக்கத்தியைக் கூர்ந்து அவதானித்த ராம்ஜீக்கு வியப்பும், ஆச்சரியமும், குழப்பங்களும், கேள்விக் குறிகளும் தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்த சிந்தனையின் பின் அவன் டி.எஸ்.பியை ஏறெடுத்துப் பார்த்தான். டி.எஸ்.பி.யும் அவன் சொல்லப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

“இத்தகைய கத்தியை நவீன காலத்தில் கொலை செய்வதற்கு யாரும் பயன்படுத்துவதில்லை. அத்துடன் இது அசல் கத்தியுமல்ல. கண்டி ராஜதானியை நாயக்க வம்சத்து அரசர்கள் அரசாட்சி செய்த போது இத்தகைய எறி கத்திகளை அவர்கள் பயன்படுத்தியதாக எங்கோ படித்த ஞாபகம். சிலவேளை எனது ஊகம் தவறாகக் கூட இருக்கலாம்.” தான் நினைத்ததைக் கூறினான் ராம்ஜீ.

நீங்கள் நினைத்தது சரி ராம்ஜீ. ஏற்கனவே கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களில் இருந்து மேலும் மூன்று இத்தகைய கத்திகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அவை எல்லாமே இதேபோன்ற கத்தியின் நகல்களாகவே உள்ளன. இவை கண்டிய அரச பரம்பரைக் காலத்தைச் சேர்ந்தவை. ஆதலினால்....” சற்று நிறுத்தினார் டி.எஸ்.பி.

“ஆதலினால்...” பதில் கேள்வி எழுப்பினான் ராம்ஜீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தந்தப் பிடியுடனான கத்தி

நடந்து முடிந்து விட்ட நான்கு கொலைகள். அதற்கு பயன்படுத்தப்படும் கத்தி, கீரிப்பிள்ளை என்பவை தொடர்பில் பல விடயங்களை ராம்ஜீயும், டி.எஸ்.பி. சிங்கராயரும் விவாதித்தார்கள்.

"இந்தக் கத்தியை அந்தக் கும்பல் பயன்படுத்தியதில் ஏதும் நோக்கம் இருக்க வேண்டும்."

"நானும் அப்படித்தான் கருதுகிறேன். அந்த நோக்கத்தினையும் அதன் பின்னணியையும் கண்டுபிடித்தால் கொலைகளைப் பற்றி அறிய சுலபமாக இருக்கும்."

"மற்றுமொரு விடயம்"

"என்ன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கொலையுடன் தொடர்புடைய அந்தப் பெண்... அவள் பெயர் சித்ராம்பரி... அவள் பேசிய சிங்கள மொழி உச்சரிப்பு இக் காலத்தில் வழக்கில் இல்லை. அது கண்டிச் சிங்கள மன்னர்கள் காலத்து உச்சரிப்பாக இருந்தது. எனவே இந்தக் கொலைகளுக்கு விசேட நோக்கங்கள் இருக்க வேண்டும். சிலவேளை ஏதும் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். அது சரி கொலை செய்யப்பட்டவர்களின் அரசியல் தொடர்புகள் பற்றி விசாரித்தீர்களா?" ராம்ஜீயின் பேச்சு புதிய கோணம் நோக்கித் திரும்பியது.

"அவர்கள் நேரடியாக எந்த அரசியலுடனும் தொடர்புடையவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் அனைவரும் உயர் குலத்தைச் சேர்ந்த தமிழ் பெருங்குடி மக்கள்" என்றார். டி. எஸ். பி.

ராம்ஜீயின் முகத்தில் புதிய பிரகாசம் தெரிந்தது. சில விடயங்கள் தெளிவாவதை அவன் உணர்ந்தான். அவன் உற்சாகத்துடன் உரையாடலைத் தொடர்ந்தான்.

"மிஸ்டர் சிங்கராயர்! நான் நினைக்கிறேன் நாம் இப்போது பேசியவற்றை தெளிவுபடுத்திக் கொண்டால் நிறைய உண்மைகள் வெளிப்படும் போல் தெரிகிறது. மற்றுமொரு புதிரையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும்."

"அது என்ன" டி.எஸ்.பி. ஆர்வமுடன் வினவினார்?" "இந்தக் கீரிப்பிள்ளை விடயம்" பொதுவாக கொலைகாரர்கள் கொடிய அர்த்தந்தரும் கொடூரமாக கொலை புரியும் புலி, சிங்கம், கருநாகம், கருந்தேள் முதலிய பெயர்களையே தமக்குச் சூட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். ஆனால் இவன் ஏன் கீரிப்பிள்ளை என்று பெயர் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம்."

"நானும் இதைப் பற்றி சொல்ல நினைத்தேன் ராம்ஜீ, இவன் கீரிப்பிள்ளை என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பது ஆட்களை பயமுறுத்த அல்ல என்பது நிச்சயமாகின்றது. அப்படியாயின் "கீரிப்பிள்ளை" என்ற பெயரைத் தேர்ந்தெடுக்க ஏதும் வேறு காரணம் இருக்க வேண்டும். அல்லது அதனை ஒரு அடையாளச் சின்னமாகவும் பயன்படுத்தலாம்.

"ஆம். .. இது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவது அவசியம். சிலவேளை கொலைகாரன் மனநிலை பாதிக்கப்பட்ட பைத்தியக்காரனாகவும் இருக்கலாம்."

"நல்லது ராம்ஜீ, நான் உங்களிடம் வெறுமனே இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மட்டும் வரவில்லை என்பதனை நீங்கள் ஊகித்திருப்பீர்கள். உங்கள் உயிர் நண்பன் கொலை செய்யப்பட்டிருக்கும் இத்தறுவாயில் இக் கொலையைத் துப்பறிவதற்கு நீங்கள் உதவி புரிவீர்கள் என்று கருதுகிறேன்." டி. எஸ்.பி. தனது விஸ்கி கிளாசை முடித்து விட்டு மற்றுமொன்றை நிரப்பிக் கொண்டார்.

"ராம்ஜீ தன்னால் முடிந்த உதவியை செய்வதாகவும் அதற்கு முன்னர் அந்த குங்குமப் பொட்டகல கன்னத்தாடை மச்சக்காரி பற்றியும் அந்தக் கொலை காரனைப் பற்றியும் சில தகவல்களை சேகரித்துக் கொள்வது நல்லதென்று கருதுவதாகவும் டி. எஸ். பி.யிடம் தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதமிருந்த விஸ்கியை ஓரே மூச்சில் விழுங்கிய டி. எஸ். பி. சிங்கராயர் புறப்படுவதற்கு தயாரானார். தனது உடையையும் தொப்பியையும் சரி செய்து கொண்ட டி. எஸ்.பி. இறுதியாக ராம்ஜீயிடம் கூறினார், "ராம்ஜீ இந்த விடயம் நம் இருவருக்கும் இடையில் மாத்திரம் இருக்கட்டும். நீங்கள் இது விடயத்தில் மிகக் கவனமுடன் செயற்பட வேண்டும். அத்துடன் உங்கள் நடவடிக்கைகளையும் அறிந்தவற்றையும் எனக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டும். நானும் இது சம்பந்தமாக ஏதும் புதிதாக தெரிந்து கொண்டால் உங்களுக்கு அறிவிக்கின்றேன்."

இவ்வாறு கூறிய டி. எஸ்.பி. அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

தனது குறுந்தாடியைத் தடவியவாறு மேலும் இரண்டு கிளாஷ் விஸ்கியை விழுங்கிய பின்னரும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த ராம்ஜீயை கிருஷ்ண சாமியின் குரல் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

அன்று அவன் பகலுணவுக்குச் சென்றபோது பிற்பகல் இரண்டு மணி.

நாட்டில் கொலை, கொள்ளை அதிகரித்து விட்டது. கொலைகாரர்கள் மிகப் பெருகி விட்டார்கள். இதற்கு நாட்டில் இப்போது நிலவுகின்ற யுத்த சூழ்நிலை முக்கிய காரணம். மறுபுறம் ஊழல் மலிந்த அரசியல், அரசியல் வாதிகள் தொடர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் எதிர்க்கட்சிக்காரர்களை கொலை செய்வதற்குக் கூட தயங்குவதில்லை. பணம் வாங்கிக் கொண்டு கொலை செய்வதற்கு நிறைய ஒப்பந்த கொலையாளிகள் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேலதிகமாக யுத்த முனையில் இருந்து தப்பித்து ஓடி வரும் படை வீரர்களும் வேறு வழியில்லாமல் கொலை, கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

இவர்கள் கூடித்திரிந்து உலாவும் இடம் எது? அதற்கு பாதாள உலகம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

அது எங்கே இருக்கும் ? கொழும்பின் இருண்ட நிழலான பகுதிகளில் எல்லாம் அது இருக்கும். ஆனால் தெரிந்தவர்களுக்கு மட்டும் தான் தென்படும்.

அன்று மத்தியானம் கீரிப்பிள்ளை தொடர்பாக டி.எஸ்.பி. சிங்கராயர் சொன்ன பல உண்மைகள் ராம்ஜீயின் காதுகளில் தொடர்ந்து ரீங்காரமிட்டவண்ணம் இருந்தன.

"கீரிப்பிள்ளை என்று தன்னை அழைத்துக் கொள்பவன் ஒரு மகா பயங்கரமான கொலைகாரன். அவன் கொலை செய்வதற்கு தானே நேரில் வருவதில்லை. பாதாள உலகத்து கூலிக்குக் கொலை செய்யும் ஒப்பந்தக்காரரர்களையே பயன்படுத்துகிறான். எனவே கொலைகாரர்களை தேடும் பணியை அங்கிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

ரெஸ்ட்டோரண்டுகள், நைட் கிளப்புகள், கஸினோக்கள் மலிந்து விட்ட கொழும்பு நகரத்தில் விபசாரிகளும், பாதாள உலகக் கும்பல்களும் அவற்றைச் சுற்றியே இயங்குகின்றன என்பது அவனுக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ யோசித்தான், எங்கே இருந்து ஆரம்பிப்பது ?

ஆம் அவனுக்கு நைட் கிளப்களிலும் ரெஸ்ட்டோரண்டுகளிலும் இசை வழங்கும் 'நைட் ரைடர்ஸ்' இசைக் குழுவைச் சேர்ந்த பைலா பாரூக் என்பவனைத் தெரியும். அவனை அணுகினால் சில விபரங்களைப் பெறலாம்.

அவன் உற்சாகத்துடன் தன் செல்போனை எடுத்து நம்பர்களை அழுத்தினான்.

"ஹலோ .... பைலா பாரூக், நான் ராம்ஜீ பேசுகிறேன் சாயந்திரம் ஏதும் வேலை உண்டா?"

"இல்லை பொஸ், இப்போதெல்லாம் கொஞ்சம் கோடை"

"ரைட் அப்படியானால் சரியாக மாலை ஐந்து மணிக்கு கிளப் திரீ ஸ்டார் ரெஸ்ட்டோர்ன்ட் பாரில் சந்திப்போம்"

கிளப் திரீஸ்டார் அதற்கேயுரிய பாணியில் இரைச்சலுடன் காணப்பட்டது. ராம்ஜீ தனது காரை சற்றுத் தூரத்திலே பார்க் செய்து விட்டு கிளப் பாரை நோக்கி விரைந்தான்.

பைலா பாரூக் எங்கேயாவது தென்படுகின்றானா என்று அவன் கண்கள் தூலாவித் தேடின. அப்போது ஐந்து மணிதான் ஆகி இருந்ததால் பாரில் அவ்வளவாக கூட்டம் காணப்படவில்லை. அச்சமயம் அவனை நோக்கி ஒரு உருவம் விரைந்து வருவதை உணர்ந்த ராம்ஜீ அந்த மங்கலான வெளிச்சத்தில் அது பைலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருக்காகத்தான் இருக்கும் என்று ஊகித்தான்.

பைலா பாருக் முன்னைவிட மிக மாறிப் போயிருந்தான். மெலிந்த அவன் உருவம் வரட்சியைக் காட்டியது. முகத்தில் பருக்கள் வந்து போன வடுக்கள் கருமையாகவும் ஆழமாகவும் பதிந்து போயிருந்தன. தான்தோன்றித்தனமாக வளர்ந்திருந்த அடர்த்தியில்லாத தாடி தொட்டம் தொட்டமாக நரைத்திருந்தது. உச்சி மண்டையில் சொட்டை விழுந்திருந்தாலும் தலை முடியை தோற்பட்டை வரை வளர்த்திருந்தான்.

அவன் ராம்ஜீயை இலகுவில் இனம் கண்டு கொண்டான். மலர்ந்த முகத்துடன் “ஹாய் பொஸ்” என்று முகமன் கூறி வரவேற்ற பாருக் ஓடி வந்து கட்டித் தழுவி ஆரவாரப்படுத்தினான்.

முன்பு ராம்ஜீயும் மற்றும் நண்பர்களும் வெறுமனே சுற்றித் திரிந்த காலத்தில் பைலா பாருக்கும் அக் கூட்டத்தில் இடம் பெறுவான். பாடக் கூடியவன் கலகலப்பானவன் என்பதால் அவனை எல்லோருக்கும் பிடிக்கும். பைலா பாட்டுக்கள் பாடுவதாலேயே பைலா பாருக் என்று பெயர் வாங்கி விட்டான்.

இடையில் ராம்ஜீயின் தந்தை இறந்தபின் ராம்ஜீ முற்று முழுதாக தந்தையின் வியாபார விடயங்களில் மூழ்கிப்போய் விட்டதால் அவர்கள் சந்தித்துக் கொள்ளவில்லை. அக்காலத்தில் பாருக் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி அவஸ்தைப்பட்டான் என்றும் கேள்விப்பட்டான். நண்பர்கள் கூடிக் குழாவி குடித்துக் கும்மாளமிட்ட போதுகளில் ராம்ஜீயும், ரவியுமே செலவுக்கான பில்லை கொடுப்பது வழக்கமாகி விட்டிருந்ததால் ஏனைய நண்பர்கள் அவர்கள் இருவரையும் “பொஸ்’ என்று தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பார்கள்.

அவர்கள் இருவரும் ஒதுக்குப்புறமான அதிகம் இரைச்சல் இல்லாத ஒரு பகுதியில் இருந்த மேசைக்கு சென்று அமர்ந்தார்கள். வெயிட்டரை அழைத்து வெளிநாட்டு பிரெண்டி, ஜின்ஜர் ஏல், ஐஸ், பைட். சிகரட் என்பனவற்றை ஓடர் செய்து விட்டு ஆசுவாசமாக அமர்ந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராம்ஜீயும், பைலா பாரூக்கும் வழமையான தத்தமது விசாரிப்புக்களின் பின் தமது சந்திப்பின் நோக்கம் பற்றி கவனத்தைத் திருப்பினார்கள்.

ராம்ஜீ நேரடியாகவே உரையாடலுக்கு வந்தான்.

"பாரூக்.... ரவி கொலை செய்யப்பட்டது பற்றி கேள்விப்பட்டிருப்பாயே"

"ஆமாம்... பொஸ்... ரவி எந்தக் கரச்சலுக்கும் போகாதவன் ஆயிற்றே... அவனுக்கு என்ன நடந்தது. எனக்குக் கூட இது அதிர்ச்சியாகத்தான் இருந்தது."

"என்ன செய்வது பாரூக். நான் அவனுடன் கூட இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை.”

“யார்... எதற்காக கொலை செய்திருப்பார்கள் என்று கருதுகிறீர்கள் பொஸ்”

இது சம்பந்தமாக உன்னுடன் பேசி சில விபரங்களைத் தெரிந்து கொள்ளத்தான் இன்று உன்னைத் தேடி வந்தேன”

“என்னாலான எந்த உதவியையும் நான் செய்யத்தயார்” உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான் பாரூக்.

“எனக்கு சில மனிதர்கள் பற்றிய தகவல்கள் தேவை”

“கேளுங்கள் பொஸ்”

“கீரிப்பிள்ளை என்று பெயர் வைத்துக்கொண்டுள்ள ஒருவன் அண்மைக் காலமாக பல கொலைகள் செய்தும், கப்பம் வாங்கியும் வருகின்றான். கேள்விப்பட்டதுண்டா?”

“இப்போதுதான் கேள்விப்படுகிறேன் பொஸ்”

“பரவாயில்லை... அவன் இதுவரை யாரிடமும் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. அவன் ஒப்பந்த கொலைகாரர்களை வைத்தே கொலை செய்து வருகிறான். இதில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருக்கிறாள். அவள் பெயர் சித்ராம்பரி. சிவந்த, அழகும் வசீகரமும் மிக்கவள். இடது கன்னத் தாடைக்கு சற்று மேலே குங்குமம் பொட்டகல மச்சம் ஒன்று காணப்படும். இவளை எங்காவது பார்த்திருக்கிறாயா?’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாரூக் சற்று யோசித்துவிட்டு அதற்கும் தெரியவில்லை என்ற பதிலையே சொன்னான்.”

“நான் அறிந்து கொள்ள விரும்பும் மூன்றாவது நபர் ஒரு ஒப்பந்தக் கொலைக்காரன். கும்மிருட்டிலும் கூட குறிபார்த்து கத்தி எறியக்கூடியவன். நெடி துயர்ந்தவன். கருப்பாக இருப்பான். கூறிய மூக்கு, சுருட்டை முடி கொண்டவன்...’

“ராம்ஜீ கூறி முடிக்கும் முன்பே பாரூக் இடைமறித்தான்..’ பொறுங்கள் பொஸ்... நீங்கள் குறிப்பிடும் அடையாளங்களின் படி அவன் “சந்தரேயாகத் தான் இருக்கும்”

“ஆம் அவன் பெயர் சந்தரேதான். அவனைத் தெரியுமா?” ராம்ஜீ கொலைக்காரனைப் பிடித்து விட்டது போல் சந்தோசப்பட்டான்.

“பல கரோக்கி கிளப்களில் அவனைக் கண்டிருக்கின்றேன். முன்பு சர்க்கசில் கத்தியெறிபவனாகத் தொழில் பார்த்தவன். பின்பு கடத்தல், போதைப்பொருள் வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டவன். அவனை அண்மைக்காலங்களில் நான் பார்க்கவில்லை. ஆனால் அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். அவள் பெயர் ஹேமமாலினி. ஹேமா என்று அழைப்பார்கள். அவள் ஒரு நடனக்காரி. பிரதீபா கரோக்கி ரெஸ்ட்டோரண்டில் நடனமாடுவாள்.”

ஹேமாவை சந்தித்தால் சந்தரேயைக் கண்டு பிடித்துவிட முடியும் என்று நம்பிய ராம்ஜீ மேலும் சிறிது நேரம் பாரூக்குடன் பேசிக் கொண்டிருந்தான்.

அன்றைய இரவுச் சாப்பாட்டை பாரூக்குடன் முடித்துக்கொண்ட ராம்ஜீதான் புறப்படுவதாகத் தெரிவித்தான். சந்தரேயும் அவனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடையவர்களும் மிகவும் பயங்கரமானவர்கள் என்றும், தம்மைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டவர்கள் எவரையும் அவர்கள் உயிருடன் விட்டு வைப்பதில்லை என்றும் கூறிய பாருக் இது தொடர்பில் மிகக் கவனமுடன் செயற்படும்படி ராம்ஜீயை எச்சரித்தான்.

தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் திறன் தனக்கிருக்கின்றதென மிகத்திடமாகத் தெரிவித்த ராம்ஜீ புறப்படுவதற்குத் தயாரானான். அத்தறுவாயில் "பாருக் ஆரம்பத்தில் இப்போதெல்லாம் கோடை" என்று தெரிவித்ததை ஞாபகப்படுத்திக் கொண்டு, ஐந்து ஆயிரம் ரூபா நோட்டுக்களை எடுத்து பாருக்கின் கையில் திணித்தான். முதலில் அதனை மறுத்தாலும் பின்னர் பாருக் ஏற்றுக்கொண்டான்.

இது தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைத்தால் தனக்குத் தெரிவிக்கும்படி தன் செல்போன் நம்பரையும் கொடுத்து கூறிவிட்டு ராம்ஜீ தன் கார் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தான்.

இலங்கை முதலீட்டுச் சபையால் வர்த்தக அபிவிருத்திக்கென வழங்கப்படும் பல்வேறு சலுகைகளையும் பயன்படுத்தி அண்மைக்காலத்தில் கொழும்பு நகரில் புற்றீசல்கள் போல் சீன, ஜப்பானிய மற்றும் கொரிய கரோக்கி ரெஸ்ட்டூரண்டுகள் முளைத்திருந்தன. இவை மத்திய தரத்திலும் சற்று குறைந்த அந்தஸ்துடையன. எனினும் ஸ்டார் தரத்திலான பெரிய ஹோட்டல்களில் கிடைக்காத சில "சேவைகள்", வசதிகள் இங்கு கிடைக்குமென ராம்ஜீ அறிந்திருந்தான்.

அத்தகைய ரெஸ்ட்டூரண்டுகளில் ஒன்றுதான் பிரதீபா கரோக்கி ரெஸ்டூரண்ட். ஆனால் இது இந்திய முதலீட்டுப் பங்களிப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவின் பெருநகர்களில் ஒன்றான "மும்பாய்" பாணி சிவப்பு நிற வகையறாக்கள் இங்கு கிடைக்கும் என்பது தெரிந்தவர்களுக்கு மட்டும் தெரிந்த ரகசியம்.

ராம்ஜீ அந்த ரெஸ்ட்டூரண்டை அடைந்தபோது இரவு மணி பத்து. கூத்தும், கும்மாளமும் மிகக் கலகலப்பாகக் காணப்பட்டது. அப்போதுதான் ரெஸ்ட்டூரண்ட் களைகட்ட ஆரம்பித்திருந்தது. ராம்ஜீ உள்ளே நுழைந்து காலியாக இருந்த ஒரு மேசையில் சென்றமர்ந்து கொண்டான்.

அங்கிருந்த மேடையில் இசைக் குழுவினரின் இசைக்கேற்ப, ஹிந்திப்பாடலுடன் நான்கு பெண்கள் மிகவேகமாக குலுங்கிக் குலுங்கி நடனமாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் இருவர் உள்ளூர் பெண்கள் மற்ற இருவர் மும்பாயில் இருந்து வரவழைக்கப்பட்டவர்கள். அந்த உள்ளூர் பெண்களில் ஒருவரை சந்தித்து பேசினால் ஹேமமாலினியைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம். சில வேளை அந்த இரண்டு பெண்களில் ஒருத்தி ஹேமாவாக இருக்கலாம். அவன் நடனம் முடியும் வரை அங்கே காத்திருப்பதெனத் தீர்மானித்தான். வேறு யாரிடமும் அவளைப் பற்றி விசாரிப்பது ஆபத்தான செயல் என்று உணர்ந்தான்.

அவன் தனியாக காலியான மேசையில் அமர்ந்திருப்பதனைக் கண்ணுற்ற ஒரு வெயிட்டர் என்ன தேவை என விசாரிக்க வந்தான். அவனிடம் டபிள் பிராண்டியும், ஜிஞ்சர் ஏல் மற்றும் ஐஸ் முதலானவற்றை ஓடர் செய்துவிட்டு பொறுமையுடன் காத்திருந்தான்.

நடனம் முடிவடைய இரவு பதினொரு மணியாயிற்று. பெண்கள் நால்வரும் ஆடை மாற்றும் பிரத்தியேக அறைகளுக்குச் சென்றுவிட்டனர். சற்றே சிந்தனை செய்த ராம்ஜீ அருகில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிட்டரை அழைத்தான். "சற்றுமுன் நடனமாடிய உள்ளூர் பெண்களில் ஒருவரை சந்திக்க வேண்டும்" என்று கூறி அவன் கையில் இரகசியமாக ஆயிரம் ரூபா தாள் ஒன்றைத் திணித்து ஏற்பாடு செய்யும்படி கூறினான்.

அதனை வேறுவிதமாகப் புரிந்துகொண்ட வெயிட்டர் "வாகனம் கொண்டு வந்துள்ளீர்களா?" என்று வினவினான். "ஆம்" என்று ராம்ஜீ பதிலளிக்கவே, ரெஸ்ட்டூரண்டின் பின்புறத்தைக் காட்டி பின்புறம் உள்ள இரண்டு வாயில்களில் இடப்பக்கமுள்ள வாயில் அருகில் காத்திருக்குமாறு கூறினான்.

ராம்ஜீ பில்லைச் செலுத்திவிட்டு தான் காரை நிறுத்திய இடத்துக்குச் சென்றான். காரைத் திருப்பிக் கொண்டு ரெஸ்ட்டூரன்டின் பின்புறம் சென்று காத்திருந்தான்.

சுமார் 20 நிமிடங்களின் பின்னர் ரெஸ்ட்டூரண்டின் பின்புறக்கதவு திறந்தது. அந்த வெயிட்டரும் அவனைத் தொடர்ந்து ஒரு பெண்ணும் வந்தனர். அவ்விடத்தில் வேறு கார்கள் இல்லாததால் அக்காரைக் காட்டி வெயிட்டர் அப்பெண்ணிடம் ஏதோ கூறுவது தெரிந்தது. பின் வெயிட்டர் சென்றுவிட அவள் மட்டும் வந்தாள். இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பழக்கப்பட்டிருந்த அந்தப் பெண் ராம்ஜீ கதவைத் திறந்ததும் காரில் ஏறிக்கொண்டாள்.

உள்ளே ஏறிக்கொண்டு கதவைச் சாத்திய உடனேயே அவள் கேட்டாள், "வீடா... ஹோட்டலா?..." அவன் விசயம் புரியாமல் மேலும் கீழும் பார்த்தான். அவள் பொருட்படுத்தாமல் மேலும் பேசிக்கொண்டே போனாள்- "ஹோட்டலுக்கு வரவேண்டுமென்றால் நான் சொல்லும் ஹோட்டலுக்குத் தான் போக வேண்டும். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைப் பணம் மணித்தியாலத்துக்கு மூவாயிரம் ரூபாய"

அவளுடன் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே காரை ஸ்டார்ட் பண்ணிய ராம்ஜீ காரை பிரதான வீதி நோக்கி செலுத்தினான். பின்னர் கார் யூனியன் பிளேஸ், சிலேவ் ஐலண்ட், கொம்பனித்தெரு, மாக்கான் மாக்கார் மாவத்தை ஆகிய வீதிகளைக் கடந்து காலி முகத்திடலை சென்றடைந்தது. பாவா கடை பெட்ரோல் மாக்ஸ் வெளிச்சத்தில் அவ்வேளையிலும் சிலர் கொத்துரொட்டியை சுவைத்துக்கொண்டிருந்தனர். நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி கொஞ்சமும் சிந்திக்காத இளைஞர் கூட்டமொன்று டின்களையும், போத்தல்களையும் தட்டி ஓசையெழுப்பி கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது.

ராம்ஜீ காரை தாஜ்சமுத்திரா ஹோட்டல் கேட்டுக்கு முன்பாக சற்றே இருளான இடத்தில் நிறுத்தினான். அந்தப் பெண் ஆச்சரியமும் பயமும் அடைந்து "ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள" என்று கேட்டாள்.

அவளைப் பயப்பட வேண்டாமென்று கூறிய ராம்ஜீ, தான் அவளை அழைத்து வந்ததன் நோக்கத்தைக் கூறினான். தனக்குத் தேவையான தகவல்களைத் தந்தால் அவள் கேட்கும் தொகையைத் தருவதாகவும் கூறினான். அதற்கு அவள் தான் அவனுடன் வந்ததால் அன்றைய வருமானம் தனக்குக் கிடைக்காமல் போய்விடும் என்றும் அதைத் தந்தால் போதும் என்றும் கூறினாள். அதற்கு சம்மதித்த ராம்ஜீ அவளுக்கு ஹேமமாலினியைத் தெரியுமா? என்று கேட்டான்.

"தெரியும்" என்று பதிலளித்த அவள் குரலில் பயமும் தயக்கமும் அப்பட்டமாகப் பிரதிபலித்தன.

அவளை மேலும் மசிய வைக்க வேண்டுமாயின் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றால்தான் முடியும் என்பதனை உணர்ந்த ராம்ஜீ தனது பர்சை எடுத்து அதில் இருந்து நான்கு ஆயிரம் ரூபா நோட்டை உருவி அவள் கையில் திணித்தான்.


அதன்பின் அவள் முகம் பிரகாசமடைந்தது. அவள் கூறினாள்.

"ஹேமா என்னுடன் எங்கள் கிளப்பில் தான் நடனமாடுகிறாள். ஆனால் அவள் இரண்டு தினங்களாக வரவில்லை. அவளுக்கு கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி வீடமைப்புத் தொடர்மாடிக் கட்டிடத்தில் அப்பார்ட்மென்ட் ஒன்று உள்ளது. இரண்டாம் மாடி 15ஆம் இலக்கம். அதனைத் தவிர கொள்ளுப்பிட்டி ரம்யா ஹோட்டலிலும் ரூம் ஒன்று வைத்திருக்கிறாள். இதனை அவள் தொழிலுக்கு மட்டும் பயன்படுத்துவாள்.

இந்தத் தகவல்களால் திருப்தியடைந்த ராம்ஜீ காரை ஸ்டார்ட் செய்து கொண்டே அவளை எங்கே இறக்கிவிட வேண்டும் என்று கேட்டான்.

அவள் தன்னை நவலோக்க வைத்தியசாலைக்கருகில் விட்டுவிடுமாறும் அங்கிருந்துதான் டாக்ஸி பிடித்துக்கொள்வதாகவும் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த இலக்கு அவளா?

ராம்ஜீ லிபர்ட்டி தொடர் மாடி வீடமைப்புக் கட்டிடத்தை அடைந்த போது நள்ளிரவு பன்னிரெண்டு மணி 15 நிமிடம் ஆகியிருந்தது. வீதியில் ஓரிரண்டு கார்கள் செல்கின்ற ஓசையைத் தவிர வேறு சந்தடிகள் இருக்கவில்லை. வீடமைப்புத் திட்டத்தின் செக்கியூரிட்டி உத்தியோகத்தர்கள் நுழைவாயிலில் ஒரு விலையுயர்ந்த பி. எம். டபிள்யூ. கார் வந்து நிற்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து தூக்கம் களைந்து கேள்வி ஒன்றும் கேட்காமலேயே கதவைத் திறந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்துக்கு நன்கு பழக்கப்பட்டவன் போல் கார்ப் பார்க்கிங்கில் காரை நிறுத்தி விட்டு மாடிப்படியேறி 2 ஆம் மாடிக்கு வந்த ராம்ஜீ 15 ஆம் இலக்க கதவின் முன் வந்து நின்றான்.

உள்ளே ஏதும் அரவங்கள் கேட்கின்றனவா என்று சற்று நிதானித்த பின் அழைப்பு மணியை அழுத்தினான். வீட்டுக்குள் எங்கோ ஒரு மூலையில் மணியடிக்கும் சத்தம் கேட்டது. பல முறை அழுத்தியும் யாரும் கதவைத் திறக்காததால் மெதுவாக கைப் பிடியைப் பிடித்து திருகினான். அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும் விதத்தில் கதவு திறந்து கொண்டது.

உள்ளே கவனமுடன் நுழைந்த ராம்ஜீ மெதுவாகத் துளாவி லைட் சுவிட்சைப் போட்டான். முன்னறையில் அண்மைக் காலத்தில் யாரும் வசித்தமைக்கான அடையாளங்கள் இல்லை. சோபா, கெபினெட், டீ.வி. மேசை எங்கும் ஒரே தூசி படிந்திருந்தது.

ராம்ஜீ பக்கவாட்டில் இருந்த அறை நோக்கிச் சென்றான். அந்த அறைக்கு யாரோ சிலர் சென்று வந்ததற்கான காலடித் தடங்கள் தரையில் புழுதியில் தெளிவாகத் தெரிந்தன. கதவு மெலிதாக திறந்திருந்தது. பூனை போல் மெதுவாகச் சென்ற ராம்ஜீ ஓசை எழாமல் கதவைத் திறந்து அறையின் லைட்டைப் போட்டான்.

அங்கே...!

சந்தரே கட்டிலில் மல்லாந்தவாறு விழுந்து கிடந்தான். அவன் நெஞ்சில் ஆழமாக ஒரு கத்தி கைப்பிடிவரை பதியும் வகையில் மூர்க்கமாக செருகப்பட்டிருந்தது.

அந்தக் கத்தி...

அதே விதமான கத்தி... யானைத் தந்தத்தில் குடைந்து செதுக்கப்பட்டு வேலைப்பாடுகளுடன் கூடிய கத்தி. ராம்ஜீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதறியாது திகைத்து நின்றான். அவன் உடம்பெங்கும் வியர்வை பெருக்கெடுத்தோடியது.

சந்திரரத்ன பெரேரா என்ற சந்தரேயைக் கொலை செய்ததன் மூலம் கொலைகாரர்களுக்கு என்ன நன்மை என்று ராம்ஜீ யோசித்தான். அவனைப் பற்றிய விபரம் பொலிஸாருக்கு தெரிந்து போய் விட்டது என்பதை கொலைகாரர்கள் அறிந்து கொண்டதும் அவனை ஒழித்து விட்டார்கள்.

அப்படியானால் அடுத்த ஆபத்து!

ஹேமமாலினி...?

ராம்ஜீ மெதுவாகச் சென்று சந்தரேயின் கைகளைத் தொட்டுப் பார்த்தான். அவன் உடம்பில் இன்னமும் சூடு இருந்தது. அதன் மூலம் அவன் கொலை செய்யப்பட்டு இன்னமும் மூன்று மணி நேரம் பூர்த்தியாகவில்லை என்று ஊகித்தான் ராம்ஜீ.

ராம்ஜீ அந்த அறையை நோட்டமிட்டான். சுமார் இரண்டு, மூன்று வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. டின் மீன், பால்மா, வெங்காயம், பருப்பு, சீனி, அரிசி என்பன ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நிலைமை சீரடையும் வரை அங்கே ஒளிந்திருக்க சந்தரே திட்டமிட்டிருக்கிறான். இவையெல்லாம் ஹேமமாலினியின் உதவியுடன்தான் நடந்திருக்க வேண்டும். அது உண்மையாயின் அவர்கள் ஹேமமாலினியை விட்டு வைக்க மாட்டார்கள்.

ராம்ஜீ உடனடியாக அங்கிருந்து வெளியேறினான். ஹேமமாலினியின் அடுத்த முகவரி ரம்யா ஹோட்டல். அது லிபர்ட்டி தொடர் மாடிக்கட்டிடத்தில் இருந்து வெகு தூரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. பத்து நிமிடத்தில் அங்கே சென்று விட முடியும். ராம்ஜீ தன் காரை நோக்கி விரைந்தான்.

வெளியே இரவுக் கருக்கலுடன் இணைந்து இப்போது மழையும் தூறிக் கொண்டிருந்தது. வாகனங்களின் சந்தடிகளும் அடங்கிப் போய் விட்டிருந்தன. அமைதியான இரவு, பிசுபிசுத்த மழை மற்றும் சந்தரேயின் கொலை என்பன அந்த இரவை அதிபயங்கரமானதாகப் பெரிதுபடுத்தின.

ராம்ஜீ சிந்தனைகள் அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி விட்டு ரம்யா ஹோட்டலுக்கு விரைந்தான். ஹேம மாலினியைக் கண்டுபிடித்தால் பாதி மர்மங்களுக்கு விடை கிடைத்து விடும் என நினைத்தான்.

ஹோட்டல் ரம்யாவை ராம்ஜீ சென்றடைந்த போது மழை மேலும் பலமாகப் பெய்யத் தொடங்கியிருந்தது. அந்த நடு நிசியில் அத்தகைய ஒரு மழை பெய்வதனால் யாருக்கும் சிரமம் இருக்காது என்று வர்ண பகவான் நினைத்திருக்கக் கூடும். நல்ல வேளை அந்த ஹோட்டலுக்குக் கூரையிட்ட முகப்பு இருந்ததால் ராம்ஜீ நனையாமல் தப்பித்தான்.

அத்தகைய ஹோட்டலுக்கு இரவு நேர வாடிக்கையாளர்களே அதிகம் வருவதால் ஹோட்டல் வரவேற்பு மேசையில் அமர்ந்திருந்த இளைஞன் ராம்ஜீயைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. ஆனால் இந்த நள்ளிரவில், அத்தகைய கொட்டும் மழையில் இப்படியும் மனிதர்கள் அலைவார்களா என்று அவன் ஏளனத்துடன் நோக்கினான்.

அவனை நிதானத்துடன் அணுகிய ராம்ஜீ “ஹேமமாலினி இருக்கிறாளா?’ என்று கேட்டான்.

அந்தக் கேள்வியைப் பொருட்படுத்தாத அந்த இளைஞன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை சேர்... ரஞ்சனியும் லீலாவும் தான் இருக்கிறார்கள். ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கேட்டான்.

இந்தப் பதிலால் மேலும் பதற்றமடைந்த ராம்ஜீ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு காற்சட்டைப் பையில் இருந்து பர்சை எடுத்து ஆயிரம் ரூபா தாள் ஒன்றை உருவி அவன் கையில் வைத்து மீண்டும் கேட்டான்.

"ஹேமமாலினி எங்கே?"

இந்த செயலால் புத்துணர்ச்சி பெற்ற அந்த இளைஞன் இவன் யாராக இருக்கும் என்பது போல் சற்று நிமிர்ந்து ராம்ஜீயின் முகத்தை அளவெடுப்பது போல் பார்த்தான். பின் ஆர்வமில்லாமல் கூறினான்.

"அவங்களை சுமார் பத்து மணிக்கு ஒரு பெண் வந்து கூட்டிப் போனாங்க சேர்."

"பெண்" கூட்டிப் போனாள் என்றதும் ராம்ஜீ மேலும் பதறிப் போனான். இருந்தாலும் வழமையான குரலில் நிதானத்துடன் பேசினான்.

"யார் அந்தப் பெண்?"

"தெரியாது சேர்"

"எப்படி இருந்தாள் என்று சொல்ல முடியுமா?"

இளைஞனுக்கு இப்போது ராம்ஜீ மேல் சந்தேகம் வந்தது. வந்தவன் பொலிஸ்காரனாக இருப்பானோ?" என்று நினைத்தான். ஆனால் ராம்ஜீயின் தோற்றம், உடை, வந்திறங்கிய கார் என்பன அவன் சந்தேகத்தைப் போக்கின. இருந்தாலும் அவன் தயங்கித் தயங்கியே பதிலளித்தான்.

"வந்தவள் சற்று உயரமாக சிவப்பாக, கவர்ச்சியாக இருந்தாள் சேர். அவளது இடது கன்னத்துக்கு கொஞ்சம் மேலே தள்ளி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மச்சம் இருந்தது."

இப்போது ராம்ஜீக்குப் புரிந்தது. வந்தவள் சித்ராம்பரிதான். அப்படியானால் ஹேமமாலினி இன்னமும் உயிருடன் இருப்பாள் என்பது சந்தேகம் தான். இனிமேல், அப்போதைக்கு தன்னால் ஒன்றும் செய்வதற்கில்லை என்று கருதிய ராம்ஜீ.... இதுவரை நடந்த விடயங்களை டி. எஸ். பி. சிங்கராயரிடம் தெரிவிப்பது நல்லது என்று நினைத்தான். அவன் தன் கால் சட்டைப் பையில் இருந்து செல்போனை உருவியவாறு தன் காரை நோக்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நளாயினியின் கண்டுபிடிப்பு

அடுத்த நாள் காலை ராம்ஜீ எழுந்திருந்த போது காலை பத்து மணிக்கு மேலாகியிருந்தது. அவனது அழகிய செயலாளினி நளாயினி அதிகாலையிலேயே வந்திருந்து, அவன் சார்பில் அவனது வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தியிருந்தாள்.

ராம்ஜீ எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து கிருஷ்ண சாமி தயாரித்து வைத்திருந்த இட்டிலிகளில் ஐந்தை விழுங்கி விட்டு டீயை மடக் மடக்கென்று குடித்து விட்டு சிகரட் ஒன்றையும் பத்திக் கொண்டு தனது அலுவலக மேசைக்கு வந்தான்.

முதல் நாள் நடந்த சம்பவங்கள் இன்னமும் கனவு போல் அவன் நினைவை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. உடம்பு வலியெடுத்திருந்தது. அடிக்கடி கைகளை உயர்த்தி உடம்பை வளைத்து சோம்பல் முறிக்க வேண்டியிருந்தது. அவன் படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவஸ்தை நளாயினிக்கு நகைப்பை ஏற்படுத்தியது.

அவள் அன்று வந்திருந்த கடிதங்கள் அடங்கிய தட்டு, நோட்டுப் புத்தகம், பேனா சகிதம் வந்து ஒரு புன்னகையுடன் குட் மோனிங் சொன்னான்.

நளாயினியின் அந்த மலர்ந்த முகம் ராம்ஜீயை எப்போதும் அவள் பால் ஈர்ப்பது வழக்கம்.

அவள் புன்னகைத்த போது பளிச்சிட்ட அந்த முத்துப் பல் வரிசையும் சிங்கப் பல்லுக்கும் அதன் முதற்பல்லுக்கும் இடையில் முளைத்திருந்த அந்த சிறிய கோணல் பல்லும் சிரிக்கும் போது அவளுக்கு வித்தியாசமான அழகை ஏற்படுத்தியது. அதற்கும் மேலாக அவள் மெல்லிய பருத்தி சேலைகளையே தேர்ந்தெடுத்து உடுக்கும் நளினமும் ராம்ஜீயை எப்போதும் கிறங்க வைக்கும். அவள் சிணுங்கினால் ஏற்படும் கவர்ச்சியை அனுபவிப்பதற்காகவே அவளை பல முறை அவன் சீண்டுவதும் உண்டு.

இப்போதும் கூட அவளது மலர்ந்த முகமும் நளினமான புன் சிரிப்பும் அவன் அனுபவித்த பாதி சோம்பலை நீக்கி விட்டன.

"நளாயினி... வா இங்க உட்கார் இன்று எந்த வேலையையும் செய்யும் மன நிலையில் நான் இல்லை. வா உன்னுடன் சில விசயங்கள் பேச வேண்டும்"

நளாயினிக்குப் புரிந்தது. அவன் மிகவும் மனக்குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறான் என்பது. கடந்த சில நாட்களில் நடந்து விட்ட சங்கிலிக் கோர்வையான சம்பவங்களால் அவளும் பாதிக் கப்பட்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கடிதங்களை ஓரமாக வைத்து விட்டு அவனுக்கு முன்னால் அமர்ந்தாள். ரவி பெருஞ்சித்திர நாயக்கவின் மனைவி லீலா மணியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அவன் அவளிடம் ஒப்படைத்திருந்தான்.

"நளாயினி, லீலா எப்படி இருக்கிறாள்"

"இப்போது பரவாயில்லை. ஆனால் ரவியின் ஞாபகம் வரும் போதெல்லாம் மயக்கம் போட்டு விடுகிறாள். இன்னும் ஒரு வாரமாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமென்று டாக்டர்கள் கூறியுள்ளார்கள்".

அவள் குணமாகியதும்.. அவளை அவளது பழைய வீட்டுக்கு அனுப்புவதால் அவளின் மன நிலை தொடர்ந்து பாதிக்கப்படலாம். அதனால் அவளுக்கு நமது கின்ரோஸ் பீச் வீட்டை ஏற்பாடு செய்து கொடுத்து விடு"

"சரி சேர்..." என்று ஆமோதித்தாள் நளாயினி. அதனைத் தொடர்ந்து ராம்ஜீ தனக்கு முதல் நாள் ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் கதை போல் கூறினான்.

நடனமாடும் பெண்கள், 'ரம்யா ஹோட்டல்' மற்றும் கிளப் பற்றிய விபரங்களை அவன் கூறிய போது நளாயினிக்கு கொஞ்சம் கூச்சமாக இருந்த போதும் அவனது ஏனைய அனுபவங்கள் அவளுக்கு மயிர்க்கூச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தின. அவள் அவன் கூறியவைகளை மிக ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டாள்.

இறுதியாக அவன் கூறினான்

"குறைந்த பட்சம் ஹேமமாலினியைக் கண்டு பிடிக்க முடிந்திருந்தால் பல மர்மங்கள் துலங்கியிருக்கும். இப்போது அவளையும் கூட்டிக் கொண்டு அந்த மாயக்காரி சித்ராம்பரி மறைந்து விட்டாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை உரையாடலில் அதிகம் கலந்து கொள்ளாது ராம்ஜீ பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த நளாயினி நிமிர்ந்து அமர்ந்தாள். அவள் ஏதோ கூறப்போவதை உணர்ந்து கொண்ட ராம்ஜீ அவள் பேசுவதற்கு இடமளித்தான்.

அவள் கூறினாள்.

"சேர் நீங்கள் இந்த கீரிப்பிள்ளை, தந்தக் கைப்பிடியுடன் கூடிய கண்டிய மன்னர் காலத்து கத்தி, கண்டிய மன்னர் காலத்து சிங்கள உச்சரிப்புடன் கூடிய மச்சமுள்ள பெண், அவர்கள் கொலை செய்வதற்கு தேர்ந்தெடுக்கும் ஆட்கள் முதலான விபரங்களை ஏற்கனவே என்னிடம் கூறியிருக்கின்றீர்கள். இவற்றையெல்லாம் வைத்து நான் சில நூல்களை நூலகத்தில் இருந்து எடுத்து ஆராய்ச்சி செய்தேன்.

"சொல்... சொல்.. என்ன கண்டுபிடித்தாய்" உற்சாகப்படுத்தினான் ராம்ஜீ. அவனுக்குத் தெரியும் அவள் ஏதோ கண்டு பிடித்திருக்கிறாள் என்று.

அவள் தொடர்ந்தாள்.

எனக்கென்னவோ கொலைகாரர்கள் கண்டியில் தான் இருக்க வேண்டும் போல் தோன்றுகின்றது. அத்துடன் இக் கொலைகளுக்கும் அரசியல் பழிவாங்கல்களுக்கும் சம்பந்தம் இருக்கும் போலும் தோன்றுகின்றது.

அவள் தான் நூலகத்தில் இருந்து எடுத்து வந்திருந்த கண்டியச் சரித்திரம் என்ற நூலை எடுத்து வந்து மேசை மீது வைத்தாள். ராம்ஜீ அவளை ஆர்வத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அந்த புத்தகத்தில் இருந்து சில பக்கங்களை புரட்டியவாறு கூறினாள்,

கண்டி இராச்சியம் 1815 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இராணுவத்தால் கைப்பற்றப்படும் போதும் அதற்கு முன்னரும் கண்டி இராச்சியத்தை அரசாண்டவர்கள் தமிழ் நாட்டின் மலபார் கேரள வம்சத்தைச் சேர்ந்த நாயக்க வம்சத்து தமிழ் மன்னர்கள். இவர்கள் அரச நிர்வாகத்தில் தமது நெருங்கிய உறவினர்களான தமிழர்களையே உயர் அதிகாரிகளாக நியமித்தனர். பிற்காலத்தில் இந்த மன்னர்கள் மதுரை நாயக்க மன்னர்களின் அரச வம்சத்தில் இருந்து தமது பட்டத்து தேவியரை தேர்ந்தெடுத்து திருமணம் செய்தனர். இதனால் பிற்காலத்தில் இலங்கையில் எஞ்சியிருந்த ஒரே சுதேச இராச்சியமான மலையக கண்டி இராச்சியத்திலும் சிங்கள மன்னர்கள் அற்றுப் போயினர். இக் காலத்தில் கண்டி அரசில் பதவி வகித்த உயர் அரச நிர்வாகப் பிரிவுத் தலைவர்களாக இருந்த பிரதானிகள் எனப்பட்ட அதிகாரிகள், நிலமேக்கள், திசாவை மகா திசாவை என்போரின் செல்வாக்கு மிக அதிகமாக இருந்தது. இவர்கள் குறுநில மன்னர்கள் போலவே செயற்பட்டனர்.

கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னரான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் கண்ணுசாமி என்ற தமிழ் மன்னன். இவனுக்கு சட்டப்படி அரச உரிமை இல்லாவிட்டாலும் அப்போது மகா அதிகாரப் பதவியில் இருந்த பிலிமத்தலாவையின் விருப்பப்படி இவன் அரச சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டான்.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் கண்டி இராச்சியத்தில் அதிகார்கள், நிலமேக்கள், திசாவைகள் மத்தியில் அதிகாரப் போட்டியும் அதன் விளைவாக பல சூழ்ச்சிகளும் சதிகளும் இடம்பெற்றன. மகா நிலமேயாக இருந்த பிலிமத்தலாவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அரசனுக்கெதிராக சதி செய்தான் என்ற குற்றச்சாட்டின் பேரில் அரசன் சிரச்சேதம் செய்து கொன்றான். அதன்பின் மகா நிலமேயாக இருந்த எகலப்பொலவும் இரண்டாம் மகா அதிகாரராக இருந்த மொல்லி கொடவும் பரம வைரிகளாகச் செயற்பட்டனர்.

எலகப் பொலவுக்கு அந்நிய மன்னனான விக்ரம ராஜசிங்கனை விரட்டி விட்டு தானே சிங்காசனத்தில் அமரும் ஆசையும் உள்ளூர இருந்தது. இதனால் மன்னனுக்கெதிராக இவன் சூழ்ச்சி செய்கிறான் என்ற குற்றச்சாட்டின் மீது இவனது நிர்வாகப் பகுதியான சத்கோரள என்ற நிலப்பரப்பு இவனிடம் இருந்து பறிக்கப்பட்டு மொல்லிகொடவுக்கு வழங்கப்பட்டது. இவனை மிகத் தூரத்துப் பிரதேசமான சப்ரகமுவ பகுதிக்கு அரசன் அனுப்பினான்.

இதனால் மனம் குமுறிய எகலப்பொல மகா நிலமே சப்ரகமுவ பகுதி மக்களுடன் சேர்ந்து அரசனுக்கெதிராக கிளர்ச்சி செய்தான். இச் செயலால் கொதிப்படைந்த ராஜசிங்க மன்னன் அவன் மீது தேசத்துரோக குற்றம் சுமத்தி எகலப்பொலவின் மனைவி குமாரி ஹாமி, அவனது இரண்டு மகன்மார், இரு புத்திரிகள் மற்றும் மைத்துனி ஆகியோரைப் பிடித்து வந்து மக்கள் முன்னிலையில் வைத்து சிங்கள பௌத்தர்களின் புனித வணக்கத்தலமான தலதா மாளிகையின் முன்றலில் மரண தண்டனை விதித்து மிகக் கோரமாக கொலை செய்வித்தான்.

இந்த நீண்ட சரித்திரக் கதையை நளாயினி கூறி முடித்து நீண்டதொரு பெரு மூச்சு விட்டாள்.

இதுவரை ஆர்வத்துடன் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த ராம்ஜீ அதிருப்தியுடன் புருவத்தை சுழித்தான். இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளுக்கும் எகலப்பொலவின் சோக வரலாற்றுக்கும் அவனால் முடிச்சுப் போட முடியவில்லை. நளாயினி தனது நேரத்தை வீணாக்குகிறாளோ என்று கூட நினைத்தான். அவனது சிந்தனைப் போக்கின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட நளாயினி,

"என்ன பொஸ் இவள் என்ன சரித்திரம் படிப்பிக்கிறாள் என்று யோசிக்கிறீர்களா?" என்று கூறி நகைத்தாள்.

அவளின் சரியான இந்த யூகத்தால் அசந்து போன ராம்ஜீ "இல்லை...இல்லை எனது செயலாளர் மீது எனக்கு நம்பிக்கையுள்ளது. மேலே சொல் இதற்கும் கொலைகளுக்கும் என்ன சம்பந்தம்?"

அவன் அசடு வழிந்தவாறே கூறினான். நளாயினி மிகுந்த உற்சாகத்துடனும் பரிகாசத்துடனும் அவனைப் பார்த்தாள். பின் துள்ளிக் குதித்து மேசையருகில் சென்று பல வண்ணப் படங்களுடன் கூடிய கனத்த புத்தகம் ஒன்றை எடுத்து வந்தாள்.

பிற்கால கண்டி இராச்சியம் என்று தலைப்பிடப்பட்டிருந்த அந்த புத்தகத்தில் இருந்து கண்டி இராச்சியத்தின் நிர்வாகம் என்ற பிரிவைப் புரட்டி அடையாளமிட்டிருந்த ஒரு பக்கத்தை எடுத்து பிரித்து அவன் முன் நீட்டினாள்.

அதில்...

கண்டிய நிர்வாக உடை தரித்து கம்பீரமான ஆண் உருவமொன்று கொடி ஒன்றை ஏந்தியவாறு குதிரை மீது அமர்ந்திருக்கும் வண்ணச் சித்திரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் கீழே எகலப்பொல மகா நிலமே என்று எழுதப்பட்டிருந்தது. ராம்ஜீ அந்தப் படத்தையும் நளாயினியையும் மாறி மாறிப் பார்த்தான். '

நளாயினி தன் கையிலிருந்த உருப்பெருக்கிக் கண்ணாடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவனிடம் நீட்டினாள். பின் அந்தப் படத்திலிருக்கும் மனிதனின் வலது இடுப்பில் தொங்கும் கத்தியையும் அவன் பிடித்திருக்கும் கொடியையும் அவதானிக்குமாறு கூறினாள்.

அவன் உருப்பெருக்கி கண்ணாடியின் உதவியில் அவற்றைப் பார்த்தான். அந்த கத்தி கொலைகள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே மாதிரி கைப்பிடியுடன் கூடிய வேலைப்பாடுகள் கொண்டிருந்தது. அந்தக் கொடியில் சிவப்புக் கண்களுடன் சீறிப்பாயும் கீரிப்பிள்ளையின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்த உண்மையை உணர்ந்து உறைந்து போன ராம்ஜீ சில பல நிமிடங்கள் அசையாமலிருந்தான்.

பின் நளாயினைப் பார்த்து தான் உடனே டி.எஸ்.பி. சிங்ராயரைப் பார்க்கப் புறப்பட்டு வருவதாக அவருக்குத் தெரிவிக்கும் படி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்று சிந்திய இரத்தம்

கொழும்புக் கோட்டையின் மேற்கு மூலையில் துறை முகத்தின் பழைய நுழைவாயிலுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. பொலிஸ் தலைமையகம். ஒரு காலத்தில் மிகுந்த கலகலப்பும் பரபரப்பும் மிகுந்த வர்த்தகப் பிரதேசமாக இருந்த அந்தப்பகுதி இப்போதெல்லாம் ஆள்நடமாட்டமின்றி பாழடைந்து போயிருந்தது.

அந்தப் பகுதி முற்றிலும் சுற்றி மறைக்கப்பட்டு கம்பிவேலி போடப்பட்டு தடை செய்யப்பட்ட பிரதேசமாக ஆக்கப்பட்டிருந்தது. நாட்டின் தற்போதைய யுத்த நிலைமை கருதி அப்பிரதேசம் அதி கூடிய பாதுகாப்பு வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அப் பிரதேசதிற்குள் செல்லும் யாராவது கம்பிக் கேட்டுக்கப்பால் கொஞ்சம் எட்டிப்பார்த்து விட்டால் போதும் பாதுகாப்பு படையினர் உள்ளே அழைத்துச் சென்று நன்கு விசாரித்து நாலு தட்டுத்தட்டாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட மாட்டார்கள்.அதுவும் எட்டிப் பார்த்தது ஒரு தமிழனாக மட்டும் இருந்து விட்டால் வேறுவினையே வேண்டாம். துறைமுகத்தைத் தாக்க பாரிய திட்டத்துடன் வந்த புலி உறுப்பினர் வளைத்துப் பிடிக்கப்பட்டார் என்று பத்திரிகைகளில் அடுத்த நாள் செய்திகளும் வெளிவந்து விடும்.

இவ்வித சிந்தனைகளுடன் பொலிஸ் தலைமையகத்துக்குள் நுழைந்த ராம்ஜீ டி.எஸ்.பி சிங்கராயரின் அலுவலகத்தை நோக்கிச் சென்றான். ஏழாம் மாடியில் இருந்த டி.எஸ்.பி யின்அலுவலகத்தின் சலூன் பாணியிலான ஊசலாடும் தொங்கும் அறைக்கதவுகளை கிறிச் கிறிச் ஒலியுடன் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

அந்த அலுவலகம் ஏற்கனவே அவனுக்குப் பரிச்சயமானது தான். ராம்ஜீ உள்ளே நுழைந்த போது டி.எஸ்பி. ஏதோ வரைபடங்களையும் தேசப்படங்களையும் வைத்துக்கொண்டு திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் முகம் மலர வரவேற்றார்.

இருவரும் கை குலுக்கிக் கொண்ட பின் ஓரமாக இருந்த சோபாவில் சென்று பேசுவதற்கு வசதியாக அமர்ந்து கொண்டனர். டி.எஸ்.பி. இரண்டு கோப்பி கொண்டு வரும் படி ஒரு பொலிஸ்காரரை அழைத்துக் கூறினார்.

ராம்ஜீ முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

“ஹேமமாலினி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தனவா?”

“இன்னமும் இல்லை.... கொழும்பைச் சுற்றியுள்ள எல்லா பொலிஸ் நிலையங்களையும் உசார்ப்படுத்தியுள்ளேன் விரைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் தகவல்கள் கிடைக்கலாம்" என்று சற்று தாமதித்த டி.எஸ்.பி "ஏதும் விசேடம் உண்டா?" என்று வினவினார்.

"கொலைக்காரர்கள் கண்டியில் இருந்து செயற்படுகிறார்கள். என்பதற்கான சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதனை ஆதாரம் என்று சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. வெறும் அனுமானம் தான்"

"ஏன் இப்படியான அனுமானத்துக்கு வந்தீர்கள் ராம்ஜீ?"

"காரணம் கீரிப்பிள்ளையும் அந்தக் கத்தியும் தான்"

"அப்படியென்றால்?"

"ஏற்கனவே நாம் இந்தத் தந்தப்பிடி கத்தியைப் பற்றி பேசியிருக்கின்றோம். கண்டி இராச்சியத்தின் இறுதிக்கால மன்னர் ஆட்சியின் போது இந்தக் கத்தி பாவனையில் இருந்துள்ளது என்பது நமக்குத் தெரியும். இது தொடர்பில் எனது செயலாளர் நளாயினி சில ஆய்வுகள் செய்து சில உண்மைகளைக் கண்டறிந்துள்ளாள்."

"சொல்லுங்கள்" டி.எஸ்.பி உற்சாகப்படுத்தினார்.

"கடைசி கண்டி மன்னனாகிய ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் காலம் மிகக்குழப்பங்கள் நிறைந்ததாகவே இருந்தது. ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் உண்மையான அரச உரித்து உடையவன் அல்ல. அப்போதைய மகாஅதிகாரம் பதவியில் இருந்த பிலிமத்தலாவ என்பவனின் சதியினாலேயே இவன் அரசுரிமை பெற்றான். இவன் காலத்தில் மன்னனுக்கு சார்பான பிரதானிகள் ஒரு குழுவாகவும் மன்னனுக்கு எதிரானவர்கள் மற்றொரு குழுவாகவும் செயற்பட்டுள்ளனர்"

ராம்ஜீ சற்றே பேச்சை நிறுத்தி பின் மீண்டும் தொடர்ந்தான்.

"இவர்கள் ஒருவருக்கொருவர் பரம எதிரிகளாக செயற்பட்டு மன்னனிடம் ஒருவருக்கு எதிராக மற்றவர் கோள் சொல்லி பலரை மன்னனைக் கொண்டே கொலை செய்வித்தும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் மன்னனை மிக வெறுத்தவன் எகலப்பொல என்ற மகா நிலமே. இவன் ஒருவனே தமிழ் மன்னனை விரட்டி விட்டு சிங்கள அரசன் ஒருவனை சிம்மாசனத்தில் இருத்த வேண்டும் என்று செயற்பட்டவன். இவன் தானே முடிசூட்டிக் கொள்ளவும் உள்ளூர விரும்பியதாகத் தெரிகின்றது.

இதனால் இவன் அரசனுக்கு எதிராக கிளர்ச்சி செய்து பின்னர் ஆங்கிலேயரிடமும் தஞ்சம் புகுந்தான். இதனைத் தொடர்ந்து ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் எகலப் பொலவின் மனைவி மக்களை மிகக் கொடூரமாக மக்கள் முன்னிலையில் வைத்து பகிரங்கமாக கொலை செய்வித்தான"

இவ்வாறு கூறிய ராம்ஜீ தான் நளாயினி கொடுத்த புத்தகத்தில் இருந்து கத்தரித்து எடுத்து வைத்திருந்த எகலப்பொலவின் படத்தை எடுத்து டி.எஸ்.பி.யின் மேசை மீது வைத்தான். பின் அதில் இருந்த கீரிப்பிள்ளை மற்றும் கத்தி சம்பந்தமான உண்மைகளையும் கூறினான்.

இருந்தாலும் ராம்ஜீ கூறிய இந்த சரித்திரக் கதையை டி.எஸ். பி நம்பத் தயாராக இல்லை. அவர் கூறினார்.

"ராம்ஜீ... கதை மிக சுவாரஸ்யமாக இருக்கின்றது. நீங்கள் சொல்லும் எகலப் பொலவும் மற்றும் மனிதர்களும் சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்திருந்த சரித்திர மனிதர்கள். இரண்டு நூற்றாண்டுகள் கடந்த பின்னர் நாம் இந்தக் கதையை மீண்டும் கிளறிப் பார்த்து கொலைகளுடன் சம்பந்தப்படுத்துதலில் ஏதும் பிரயோசனம் உண்டா என்று தெரியவில்லை"

நீங்கள் அப்படி சொல்வீர்கள் என்பது நான் எதிர்ப்பார்த்தது தான். அது போலிஸ்காரனின் புத்தி. கேள்விகளும் சந்தேகங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தொழிலுடன் சம்பந்தப்பட்டவை என்பது நான் அறியாததல்ல. நான் சொன்ன கண்டிச் சரித்திரம் வெறுமனே 200 ஆண்டு கால பழைய சரித்திரம் அல்ல. அதன் விளைவுகள் இன்றும் நம் மத்தியில் உயிர் வாழ்வதால் தான் நாம் இன்று இந்த நாட்டில் இத்தனை பெரிய இனப்பிரச்சினைக்கு முகங் கொடுத்திருக்கின்றோம்"

"சொல்வதை நேரடியாகச் சொல்லுங்கள் ராம்ஜீ"

"கண்டியச்சரித்திரம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படுகின்றது. என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"எப்படி?"

"தலதா மாளிகையும் அதன் பெருவிழாவான எசல பெரகராவும் வருடா வருடம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவது நமக்குத் தெரியும். இந்தத் திருவிழாவை ஏற்படுத்தியவன் விமல தர்மசூரிய என்று பெயர் பெற்ற கோணப்பு பண்டார என்பவன். இவன் சப்பிரகமுவ மாகாணத்தில் தெல்கம விகாரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்த தாதுவை மீண்டும் கண்டிக்கு எடுத்துச் சென்று தலதா மாளிகையைக் கட்டுவித்தான். இது இடம்பெற்றது 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலத்தில். அதன் பின் 400 வருடங்களாக எசல பெரகரா இடம்பெற்று வருகின்றது.

முன்பு மன்னர் காலத்தில் இந்த எஸல பெரகராவின் போது கண்டி ராச்சியத்தின் நிலமேக்களும் அதிகாரிகளும் திசாவைகளும் ஒன்று கூடுவார்கள். அவர்களின் பதவி அந்தஸ்துக்கேற்ப விழாவில் மரியாதை வழங்கப்படும். இவர்கள் தமது பதவி வழி முழுச் செல்வாக்கையும் அதிகாரத்தையும் இந்த விழாவில் பயன்படுத்துவார்கள். மற்றவரை விட தானே பெரியவன் என்று காட்ட முயல்வார்கள். இவர்களது போட்டியும் பொறாமையும் வஞ்சமும் பிற்காலத்தில் இங்கிருந்து தான் உருவாகின. இதன்போதுதான் எஹலப்பொல நிலமேயும் மொல்லி கொட நிலமேயும் ஒருவரையொருவர் ஒழித்துக் கட்டுவதாக சூளுரைத் தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உணர்ச்சி பொங்க கூறி வந்த ராம்ஜீ தனது ஆவே சத்தைக் கட்டுப்படுத்த சற்றே நிறுத்தினான். நாடக பாணியிலான இந்தப் பேச்சை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்த டி.எஸ்.பி தொடர்ந்தும் மௌனமாகவே இருந்தார். ராம்ஜீயை இது விடயத்தில் தாம் முற்றாக ஈடுபடுத்தி விட்டதை எண்ணி அவர் உளளூர திருப்தியடைந்தார்.

ராம் ஜீ மேலும் கூறினான்.

என்னைப் பொறுத்தவரையில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் எகலப்பொலவின் மனைவி குமாரிஹாமி, அவன் மகன்மார்கள், மத்தும பண்டார, லொக்கு பண்டார அவனது இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் பலர் தலதா மாளிகையின் முன்றலில் மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட போது அவர்கள் சிந்திய இரத்தம் இன்னமும் உறையவில்லை என்றே தோன்றுகிறது. அந்தக் கொலைகளின் தொடர்ச்சியாக இன்றைய கொலைகள் ஏன் இருக்கக்கூடாது என்றும் தோன்றுகிறது"

ராம்ஜீ தனது கருத்தை மிக ஆணித்தரமாக முன்வைத்த போது டி.எஸ்.பி சிங்கராயர் சிலையென அமர்ந்திருந்தார்.

"நன்று ராம்ஜீ. நான் தொடர்ந்து நீங்கள் இதில் ஈடுபட வேண்டுமென்றே விரும்புகிறேன்" இவ்வாறு கூறிய டி.எஸ்.பி சிவந்திருந்த ராம்ஜீயின் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தார். அவன் உணர்ச்சி வயப்பட்டமை எகலப்பொலவின் மனைவி மக்கள் சார்பிலா? இல்லை கொலை செய்யப்பட்ட தன் நண்பன் ரவி சித்திரவேலு நாயக்கர் மீதான பச்சாத்தாபத்திலா என்பதனை டி.எஸ்.பி யால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏன் ராம்ஜீயால் கூடத்தான் உணர்ச்சி புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் சில விநாடிகளுக்கு தன் நிதானம் தன்னிடம் இருந்து விலகிப் போயிருந்ததை எண்ணி உள்ளூர வெட்கப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பழைய டிரங்க் பெட்டி

உணர்ச்சி வசப்பட்டு கண்டியின் இறுதிக் கால வரலாற்றை மீட்டுப் பார்த்த ராம்ஜீ தன் சுய கட்டுப்பாட்டுக்குள் வர சில நிமிடங்களை எடுத்துக் கொண்டான். அத்தகைய உணர்ச்சி வெளிப்பாட்டுக்குப் பின் ஏனோ அவன் மனம் சாந்தம் அடைந்தது. ரவியின் மரணம் அவன் மனதை பெரிதும் பாதித்திருந்தது. அவனைக் கொன்றவர்களைக் கண்டு பிடித்து அவர்களை நையப்புடைக்க வேண்டும் போல் தோன்றியது.

அதன் பின் நிலவிய அமைதியைக் கலைத்த ராம் ஜீ,

"தான் இன்னும் இரண்டு நாட்களில் இது தொடர்பில் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாய்வு செய்வதற்காக கண்டி செல்லவிருப்பதாகவும் தனது கண்டிப் பயணம் தொடர்பில் கண்டிப் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டாமெனவும் அதனை இரகசியமாக வைத்திருக்கும் படியும் டி. எஸ். பி. யிடம் கேட்டுக் கொண்டான்.

டி. எஸ். பி. யும் அதற்குச் சம்மதித்தார். அத்துடன் எது நடந்தாலும் தனக்கு அறிவிக்கும் படியும், தொடர்ந்து 24 மணி நேரத்துக்கு அவனிடம் இருந்து ஏதும் செய்தி வராவிட்டால் தான் கண்டி டி. எஸ். பி. யுடன் தொடர்பு கொள்வதாகவும் தெரிவித்தார்.

ராம்ஜீ புறப்படுவதற்கு ஆயத்தமானான். அப்போது டி. எஸ். பி. யின் மேசையில் இருந்த டெலிபோன் மணி ஏதோ ஒரு அவசர செய்தியை உடனே அறிவிக்க வேண்டும் என்ற தோரணையில் அலறியது.

டி. எஸ். பி. யும் அதே அவசரத்தில் ரிசீவரை எடுத்து காதில் பொருத்தி ஹலோ என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் டி. எஸ். பி. சிங்கராயரின் கண் கள், புருவம், நெற்றி என்பன சுருங்கி விரிந்த விதத்தில் இருந்து அவர் காதில் நாராசம் போன்ற தொரு செய்தி பாய்ந்து கொண்டிருக்கின்றது என்பதனை ராம்ஜீ புரிந்து கொண்டான்.

பேசி முடித்ததும் ரிசீவரை உரிய இடத்தில் பொருத்திய டி. எஸ். பி. மிகுந்த விசனத்துடன் தனக்குக் கிடைத்த செய்தியைத் தெரிவித்தார்.

"ராம்ஜீ... பொலிஸாருக்குக் கிடைத்திருக்கும் தகவலின்படி ஹேமமாலினியை யாரோ கொலை செய்து உடலை களனிப் பாலத்துக்கருகில் ஆற்றில் வீசியெறிந்துள்ளார்கள். அவளது உடலை சற்று முன் பொலிஸார் மீட்டுள்ளனர்."

இப்படி ஒரு தகவல் வரக் கூடும் என்று தான் எதிர்பார்த்ததாக ராம் ஜீ கூறினான்.

டி. எஸ். பி. தான் ஹேமமாலினியின் உடலைப் பார்வையிடுவ தற்காக அவ்விடத்துக்குச் செல்வதாகவும் அவனும் வருகின்றானா... என்றும் ராம்ஜீயிடம் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வேறு வேலை இருக்கின்றது என்று கூறிய ராம்ஜீ புறப்படுவதற்குத் தயாரானான். அப்போது அவனை மீண்டும் தடுத்த டி. எஸ். பி. அறையில் ஒரு ஓரத்தில் சுவரில் நிமிர்த்தி சாய்த்து வைக்கப்பட்ருந்த ஒரு டிரங்க் பெட்டியை நோக்கி அவனது கவனத்தைத் திருப்பினார். அன்று காலை ஹேமமாலினியின் லிபர்ட்டி பிளாசா அபார்ட்மென்டை சோதனையிட்ட போது அந்த டிரங்க் பெட்டியை எடுத்து வந்ததாகத் தெரிவித்த டி. எஸ். பி. ராம்ஜீ விரும்பினால் அதனைப் பார்வையிடுமாறு தெரிவித்தார்.

தான் அவசரமாக வெளியே செல்வதாக தெரிவித்த டி. எஸ். பி. அவனது கண்டிப் பயணத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தார். பின் தனது அலுவலக உதவியாளரை அழைத்து ராம்ஜீக்குத் தேவையானதை வழங்கும்படி கூறி விட்டு புறப்பட்டுச் சென்றார்.

ராம்ஜீ அந்த பழைய டிரங்க் பெட்டியை உற்று நோக்கினான். அத்தகைய பெட்டிகளை இப்போது யாரும் பயன் படுத்துவதில்லை. சுமார் நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பலரும் அத்தகைய டிரங்க் பெட்டிகளை பிரயாணங்களின் போதும் தமது பிரத்தியேக உடைமைகளை பாதுகாப்பாக வைத்திருக்கவும் பயன் படுத்தியுள்ளனர். அத்தகைய டிரங்க் பெட்டியொன்றை கிருஷ்ணசுவாமி அவரது அறையில் வைத்திருந்ததை அவன் பார்த்திருக்கின்றான். சிலர் பரம்பரை பரம்பரையாக அத்தகைய பெட்டிகளைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர் என்பது அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் பெட்டி அண்மையில் தான் பெயின்ட் பூசி புதுப்பிக்கப்பட்டிருந்தது. அதில் ஹேமமாலினி அதிக அக்கறை கொண்டிருந்திருக்கக் கூடும் என்று ராம்ஜீ நினைத்தான்.

ராம்ஜீ அந்தப் பெட்டியை எடுத்து வந்து மேசை மீது வைத்துத் திறந்தான். அந்தப் பெட்டியைப் போலவே அதில் இருந்த பொருட்களும் பழையனவாகவே இருந்தன. அதனை திறந்த போது பழைய பொருட்களுக்கே உரிய வழமையான நெடியும் கூடவே வெளி வந்தது.

ராம்ஜீ அந்தப் பெட்டியில் இருந்த பொருட்களை புரட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டிப் பார்த்தான். பழைய உடுப்புக்கள், பித்தளை, வெள்ளி நகைகள், அவளது அம்மா காலத்தவையாக இருக்க வேண்டும். அவற்றில் அவனைக் கவர்ந்த அம்சம் அவை அனைத்துமே கண்டிய உயர் பாரம் பரிய கலாசாரத்தைச் சேர்ந்தவை. இறுதியாக அவன் கண்ணில் பட்டது சில புகைப் படங்கள் அடங்கிய ஒரு கடித உறை.

அதில் இருந்த படங்கள் அனைத்தையும் அவன் மேசை மீது பரப்பினான். சில படங்கள் அண்மைக் காலத்தவை. அவளும் சந்தரேயும் இணைந்து எடுத்துக் கொண்டவைகள். அவர்கள் இரு வரும் ஆழமான காதலர்கள் என்பதற்கு அவை சாட்சிகளாக இருந்தன.

ஏனைய படங்கள் ஹேமமாலினி தனியாக எடுத்துக் கொண்ட வைகள். குழந்தைப் பருவத்தில் இருந்து அண்மைக் காலம் வரை பல தோற்றங்களில் அவள் அந்தப் படங்களில் காட்சி தந்தாள். அவற்றில் ஒரு படம் அவன் சிந்தனையைக் கவர்ந்தது.

அந்தப் படம் சில வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கண்டிய பாணியில் மணப்பெண் போல் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஒரு கட்டிடத்தின் முன்றில் இருந்து எடுத்துக்கொண்டது. அந்தப் படத்தில் அவளை விட படத்தின் பின்னணியில் இருந்த கட்டிடம் தான் அவனைப் பெரிதும் ஈர்த்தது.

அந்தக் கட்டிடம் 16 ஆம் நூற்றாண்டு கண்டிய வரலாற்றை அவனுக்கு ஞாபகப்படுத்தியது. ராஜமாளிகை போன்ற வேலைப் பாடுகளுடன் காணப்பட்டது. ஓரளவு சிதிலமடைந்த பழைய கட்டிடம். அக் கட்டிடம் ஒரு மலைப் பாங்கான சரிவான பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். படம் பக்க வாட்டில் இருந்து எடுக்கப்பட்டிருந்தது. தூரத்தில் கண்டி ஏரியும், அதற்கு அப்பால் தலதா மாளிகையின் பத்திருப்பு கோபுரமும் மிகத் தெளிவாகத் தெரிந்தன.

ராம்ஜீயின் மூலையின் எங்கோ ஒரு ஓரத்தில் பொறி தட்டியது போலிருந்தது. அவன் அந்தப் படத்தை மாத்திரம் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கவரில் போட்டு தன் கால் சட்டைப் பைக்குள் சொருகிக் கொண்டான். பின் எல்லாப் பொருட்களையும் அவசரமின்றி ஒவ்வொன்றாகப் பெட்டியில் அடுக்கினான். பெட்டியை மூடி இருந்த இடத்தில் வைத்தான்.

அங்கிருந்த பொலிஸ் காரரிடம் தான் புறப்படுவதாகக் கூறி விட்டு வெளியேறினான்.

அவன் தீர்மானித்து விட்டான். அவனுடைய கேள்விகளுக்கான விடைகளை கண்டிக்குச் சென்றுதான் தேடவேண்டும் என்று.

அடுத்த இரண்டு நாட்களையும் கண்டிப் பிரயாணத்தைத் திட்டமிடுவதில் செலவழித்தான் ராம்ஜீ. அவனது வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் சில வாரங்களுக்கு ஒத்திப் போட வேண்டியிருந்தது.

இதற்கிடையில் நளாயினியின் வரலாற்றுக் கண்டுபிடிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் தகுந்த பரிசொன்றை அவளுக்கு அளிக்க வேண்டும் என்று நினைத்த ராம்ஜீ, பருத்திச் சேலைகளுக்கு தலை நகரில் புகழ் பெற்ற நிறுவனமாக விளங்கும் நெஷனல் ஹேண்ட்லூம் எம்போரியத்துக்குச் சென்றான். நளாயினிக்குப் பிடித்த மெல்லிய நீல நிறத்தில் ஊதாக் கோடுகளுடன் கூடிய பருத்தி நூல் சாரி ஒன்றை தெரிவு செய்து கொண்டான். அங்கிருந்த பெண்ணிடம் சொல்லி அதற்கேற்ற பிளவுஸ் துணியையும் தெரிவு செய்து கொண்டான். கிட்டத்தட்ட நளாயினியின் அங்க அளவுகளுடன் இருந்த மற்றுமொரு பெண்மணியின் உதவியுடன் தையல் அளவுகளைப் பெற்று அதே நிறுவனத்தில் இருந்த தையல் சேவையில் பிளவுசையும் தைப்பதற்கு கட்டளை கொடுத்து விட்டு பின்னேரம் வீடு செல்லும் போது பெற்றுக் கொள்வதாகக் கூறிச் சென்றான்.

அன்று அவன் பல வேலைகளையும் முடித்துக் கொண்டு வீடு செல்லும் போது பின்னேரம் மூன்று மணியாகியிருந்தது.

நளாயினி அவனுக்காகக் காத்திருந்தாள். கண்டிக்குச் சென்றால் அங்கு தங்கியிருக்க வசதியான பங்களா ஒன்று தேவை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ கருதினான். கண்டியில் பங்களாக்கள் வாடகைக்குப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனமான "வில்லா சேர்விசஸ்' நிறுவனத்துக்கு போன் செய்து கண்டி ஏறியைச் சுற்றி அல்லது அதற்கு அருகாமையில் பங்களா ஒன்று கிடைக்குமா... என்று பார்க்கச் சொல்லி நளாயினியைப் பணித்திருந்தான்.

ராம்ஜீ வீட்டையடைந்து நேராக அவனது அலுவலகத்துக்குச் சென்ற போது நளாயினியும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

"நளாயினி...' ராம்ஜீ தனது இருக்கையில் சென்று அமர்வதற்கு முன்பே அவளை நோக்கி அழைத்தான்.

"எஸ். பொஸ்" என்றவாறு பின்னே சென்ற நளாயினியும் அவனது மேசைக்கு முன் சென்று அமர்ந்தாள்.

"கண்டிப் பிரயாண ஏற்பாடுகள் எந்த மட்டில் இருக்கின்றன?" அவன் அவளிடம் கேட்டான்.

"கண்டி ஏரியைச் சுற்றி இப்போதைக்கு பங்களாக்கள் காலியில்லை. கண்டிப் பெரஹரா அண்மிப்பதால் சுற்றுலாப் பிரயாணிகள் அதிகம் கண்டியை நோக்கிப் படையெடுத்துள்ளனர். ஆனால் தலதா மாளிகைக்கு இடது புறம் ஏரிக் கப்பால் மலைக்கு மேல் வேஸ் பார்க் என்ற ஒரு இடம் இருக்கின்றது. இந்த, வேஸ்பாக் என்ற இடம் முன்னர் கண்டி மன்னன் காலத்தில் குதிரைகளுக்கு தீனியாகப் போடுவதற்காக, அருகம் புல் வளர்க்கும் பிரதேசமாக பயன்பட்டுள்ளது. அதனையொட்டி பங்களா ஒன்று காலியாக இருப்பதாக "வில்லா சேர் விசஸ்' தெரிவித்தனர்.

"வேஸ் பார்க்... இந்த இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாக ராம்ஜீ நினைத்தான். அந்தப் பங்களாவையே ஏற்பாடு செய்து விடும்படியும் பணித்தான்.

"அதன் பின்னர் கிருஷ்ணசாமியையும் ஜெயசிங்கையும் அழைத்து வருமாறு கூறினான். அவள் சென்று "கிருஷ்ணசாமியை சமையலறையில் இருந்தும், ஜெயசிங்கை தோட்டத்தில் இருந்தும் அழைத்து வந்தாள்.

எல்லோரும் வந்ததும் ராம்ஜீ கண்டிப் பிரயாணத் திட்டத்தை விளங்கப்படுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீல மலைத் தொடர்களின் நடுவில்....!

ராம்ஜீ நளாயினி, ஜெய்சிங் கிருஷ்ணசாமி ஆகியோர்களுடன் தமது கண்டிப் பிரயாணம் தொடர்பில் மந்திராலோசனை நடத்தினான். எடுத்த எடுப்பில் அது ஒரு சுற்றுலா பயணம் என்பது போல் தோன்றினாலும் அதில் பல உயிராபத்துக்கள் நிறைந்திருப்பதை அவர்கள் யாருமே உணர்ந்திருக்கவில்லை.

"நாளாயினியும் கிருஷ்ணசாமியும் நாளைக்கே கண்டிக்குப் புறப்படுகின்றீர்கள். இரண்டு மூன்று வாரங்கள் அல்லது அதற்கு மேலும் கண்டியில் தங்க வேண்டியிருக்கும். அதற்கேற்றாற்போல் சாமான், தட்டு முட்டுக்களை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் செல்ல லேண்ட் ரோவர் "டிபெண்டர்" ஜீப் வண்டியை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு அங்கே நிறையத் தேவைகள் இருக்கும்"

"முதலில் செல்லும் நீங்கள் பங்களாவை சரிப்படுத்தி வைத்தி ருங்கள். நானும் ஜெய்சிங்கும் இன்னும் இரண்டு தினங்களில் வந்து சேர்ந்து விடுவோம்"

இவ்வாறு கூறியவன் ஜெய்சிங்கை அழைத்து தனது காரில் ஒரு பொதி செய்யப்பட்ட பெட்டி இருக்கின்றதென்றும் அதனை எடுத்து வருமாறும் கூறினான். ஏனையோர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஜெய்சிங் அந்த பெட்டியைத் தூக்கி வந்த போது அதில் என்ன இருக்கும் என்று அனைவரதும் முகத்தில் கேள்விக்குறி எழுந்தது.

பெட்டியைப் பெற்றுக் கொண்ட ராம்ஜீ கூறினான்.
"நளாயினிக்கு ஒரு பரிசு தரப் போகின்றேன். ரவியைக் கொலை செய்தவனை கண்டு பிடிக்கும் பாரிய பணியில் எந்தத் திசை நோக்கி நகர்வது என்று தெரியாமல் இருந்த நமக்கு ஒரு திசையைக் கண்டு பிடித்துக் காட்டியவள் நளாயினி. அதனால் இந்தப் பரிசு" என்று கூறியவன் எங்கே எல்லோரும் கை தட்டுங்கள் என்று கூறியவாறே அந்தப் பெட்டியை நளாயினியின் கைகளில் திணித்தான். அதனைத் திறந்து பார்க்குமாறும் கூறினான்.
அதனைத் திறந்து பார்த்த நளாயினிக்கு அவள் கண்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ப முடியவில்லை. ராம்ஜீ தனக்கு அப்படியொரு பரிசளிப்பான் என்று அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை. தனக்குப் பிடித்த கலரில் தனக்குப் பிடித்த சாரி. அத்துடன், ரவிக்கையும் தைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளமையை நினைத்தபோது அவள் உள்ளத்தில் தேனாறு பிரவகித்தது. அவள் ஊமைச் சிலையானாள்.

"என்ன நளாயினி.... இப்படி திகைத்துப் போய் விட்டாய்.... இதுவொன்றும் பெரிய விலை மதிப்புள்ள பரிசல்லவே..." ராம்ஜீ அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தான்.

அதற்குப் பதிலாக நளாயினி ஒன்றும் பேசவில்லை. ஆனால் அந்தப் பரிசு எவ்வளவு விலை மதிப்பற்றது என்பது அவள் மனதுக்கு புரிந்தது. அத்துடன் அவன் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் தனக்கு ஈரமான ஒரு இடம் கிடைக்குமா என்று நீண்ட காலமாக அவள் மனதில் எழுந்திருந்த எதிர்பார்ப்பிற்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் புதியதொரு ஒளிக்கீற்று தோன்றியது போல் இருந்தது. அவள் மனதில் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு என்ற பெண்மைக்குரிய நான்கு குணங்களும் மெல்ல உயிர் பெற்று விசுவரூபமெடுப்பதை அவள் வெளிப்படையாக உணர்ந்தாள். அத்தகைய நிலையில் ராம்ஜீயின் அடுத்த நடவடிக்கை அவளை மேலும் சங்கோஜப்படுத்தியது.

"நளாயினி.... பரிசை பெற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. நாங்கள் எல்லோரும் பார்க்கும் விதத்தில் உடுத்திக் கொண்டு வந்தால்தான் திருப்தியாக இருக்கும்" ராம்ஜீ வேண்டுகோள் விடுத்தான்.

ஏனையோருக்கு இந்த நடவடிக்கை வித்தியாசமானதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகவும் இருந்த போதும் அவர்கள் அனைவரும் அதற்கு ஒரு சேர ஆதரவு தெரிவித்தனர். நளாயினி சற்று நேரம் தயங்கி தவிர்க்கப் பார்த்தாலும் ராம்ஜீ மேல் அவளுக்கிருந்த மெல்லுணர்வுகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து அவள் சம்மதித்தாள்.

அவள் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று உடுத்தத் தொடங்கினாள். ரவிக்கையை உடுத்திய போது அவளுக்கு மிக வியப்பாக இருந்தது. அளவுகள் அத்தனை தூரம் அவளுக்கு பொருத்தமாக இருக்கும் என்று அவள் நினைத்திருக்கவில்லை. இந்த அளவுக்குத் தனக்குப் பொருந்தும்படி துல்லியமாக உடுப்புக்கள் தெரிவு செய்ய வேண்டுமானால் அவன் எந்த அளவுக்கு தன் மீது ஈடுபாடு கொண்டிருக்க வேண்டுமென்று நினைத்த போது மிகச் சந்தோசமாக இருந்தது. திடீரென்று தனது எடை குறைந்து வானத்தில் மிதப்பது போலவும் உணர்வுகள் ஏற்பட்டன. அவள் ஒரு மணப் பெண் போல் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அவள் மெல்ல நடந்து அவர்கள் முன்னிலையில் வந்தபோது ராம்ஜீ தன்னை பெண் பார்க்க வந்திருப்பது போன்ற உணர்வுகள் மேலிட மிகுந்த வெட்கத்துடன் காணப்பட்டாள்.

அவளில் ஏற்கனவே இருந்த இயல்பான நளினம், உதட்டில் சதா தவழ்ந்திருக்கும் மெலிதான சிரிப்பு, மருண்ட மான் விழிகள் போன்ற கண்கள், இவற்றுக்கும் மேலாக அவள் வெட்கப்பட்ட பாங்கு என்பன அவளுக்கு புதியதோர் மாயத் தோற்றத்தை அளித்தன. ராம்ஜீ மிக நீண்ட நேரமாக அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கெண்டிருந்தான். அவள் அதனை உணர்ந்தும் தன் பார்வையைத் தாழ்த்தி வழமையாக இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் பாவனை செய்து கொண்டு தனது இருக்கையில் வந்தமர்ந்தாள். இந்த நாடகம் தொடர்ந்து நீடிக்காதா என்று மனதுக்குள் நினைத்த போதும் இடம், ஏவல், பொருள் என்பன தொடர்பில் பிரக்ஞை அடைந்தவனாக தன்னை சுதாகரித்துக் கொண்ட ராம்ஜீ அன்றிரவு தனது கணக்கில் அனைவருக்கும் விருந்தளிக்கப் போவதாகவும் தயார் படுத்தும்படியும் பணித்தான். அத்துடன் பின்னால் நடக்கப் போகின்ற ஒரு நீண்ட நாடகத்தின் முதல் அத்தியாயம் முடிவு பெற்றது.

**நளா**யினியும் கிருஷ்ணசாமியும் கண்டிக்குப் புறப்பட்டுச் சென்ற அன்று மாலையே அவளிடம் இருந்து எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்ற தகவல் கிடைத்தது. எனினும் இரண்டு நாட்களின் பின்னரே ராம்ஜீயும் ஜெய்சிங்கும் கண்டி நோக்கிப் புறப்பட்டனர்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை மத்தியானத்துக்கு மேல் அவர்கள் கண்டியை அடைந்தனர். கண்டி வேஸ் பார்க்கையொட்டி நளாயினி ஏற்பாடு செய்திருந்த நுவரவில்லா என்ற பங்களாவைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு அதிகம் சிரமமாக இருக்கவில்லை. ராம்ஜீயை விட ஜெய்சிங்குக்கே கண்டி நகரும் அதன் சுற்றுப்புறமும் நன்கு தெரியும். ஜெய்சிங்கே காரை செலுத்திச் சென்றதால் அவன் நேரடியாகவே அந்த பங்களாவின் வாசலுக்கே காரைக் கொண்டு சென்று நிறுத்தினான்.

கார் வரும் சத்தம் கேட்டு நளாயினியும் கிருஷ்ணசாமியும் வெளியே சென்று பார்த்தனர். வழமையான முகமன்கள் கூறி அவர்களை அழைத்துச் சென்றனர். எல்லோரும் ஒரு முறை வீட்டைச் சுற்றிப் பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீக்கு எடுத்த மாத்திரத்திலேயே அந்த வீடு பிடித்துப் போய் விட்டது. வீட்டைச் சுற்றி நன்கு விசாலமான வீட்டுத் தோட்டம் ஒன்று காணப்பட்டது. வீடு மலைப் பாங்கான ஒரு இடத்தில் அமைந்திருந்ததால் ஜில் என்ற காற்று வேறு வீசியது. வேர்வையும் புழுதியும் நிறைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் கொழும்பு நகர் வாசிகளுக்கு கண்டியின் அந்தச் சூழல் உடம்புக்கு மிக இதமானதாக இருந்தது.

வீட்டையும் முற்றத்தையும் பார்வையிட்ட ராம்ஜீ மிகத் திருப்தியடைந்து முன்றலில் விசாலமாகக் கிளை பரப்பியிருந்த வேப்ப மரத்திற்கடியில் போடப்பட்டிருந்த நாற்காலி மற்றும் மேசையால் கவரப்பட்டவனாய் அதில் சென்று அமர்வதற்காகச் சென்றான்.

அப்போது அவனை இடை மறித்த நளாயினி அவன் பார்க்க வேண்டிய ஒரு காட்சியிருப்பதாகவும் தன்னுடன் வரும்படியும் கூறினாள். "நளாயினி இத்தனை ஆர்வமுடன் கூப்பிடுகின்றாளே.... போய்ப் பார்க்கலாம் என்று நினைத்த ராம்ஜீ அவளைப் பின் தொடர்ந்தான்.

இதற்கிடையில் கிருஷ்ணசாமியும் ஜெய்சிங்கும் வீட்டுக்குள் வேலையாகப் போயிருந்தனர்.

நளாயினி அவனை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றாள். பின்புறம் நன்கு வெளிச்சமாகவும் தெளிவான வானத்தையும் கொண்டு விளங்கியது. சற்று தூரத்தில் மிகப் பள்ளத்தில் கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரியும், தலதா மாளிகையும் சிறிதாகத் தோன்றின. அதற்கப்பால் கண்டி நகரம் நன்கு விசாலமாய் விரிந்து பரந்து காணப்பட்டது.

ராம்ஜீ பலமுறை கண்டி நகரத்துக்கு வந்திருக்கிறான். ஆனால் அந்த நகரத்தை இப்படியொரு கோணத்தில் இருந்து பார்த்தது கிடையாது. தூரத்தே நீண்ட வரிசை வரிசையான மலைக் குன்றுகளின் தோற்றம் அவனை வியக்க வைத்தன. மிகத் தூரத்தே நூற்றுக்கணக்கான பெண்கள் பச்சையும் நீலமும் கலந்த போர்வையைப் போர்த்திக் கொண்டு மல்லாந்து படுத்துறங்குவது போன்று ஒரு பசுமையான காட்சி தென்பட்டது. சில சமயம் நம் கண்ணுக்கு மிக அருகில் இருக்கும் அபூர்வமான இத்தகைய அழகிய காட்சிகளைக் கூட காண முடியாத அளவுக்கு சூழ்நிலை நமது கண்களை குருடாக்கி விடுவது கண்டு அவன் வருத்தப்பட்டான்.

ராம்ஜீ தொடர்ந்து சில நிமிடங்கள், சிறு சிறு குன்றுகளும், உச்சிகளுடன் கூடிய மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த அந்த இயற்கைக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது நளாயினி அவன் கைகளில் பைனா குலர் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

தேவையறிந்து நடக்கும் அவள் செய்கையை உள்ளூர மெச்சிக் கொண்ட ராம்ஜீ அந்தத் தொலைநோக்கிக்கூடாக மீண்டும் நோக்கி னான்.

இப்போது தூரத்து பச்சை மலைக்காட்சிகளை விட அருகேயி ருந்த நகரத்துக் காட்சிகள் அவன் சிந்தனையைக் கவர்ந்தன.

முதலில் கண்டி ஏரி, அதனைச் சுற்றியுள்ள தாமரை இதழ் நுனி போன்ற வடிவமைப்புடன் கூடிய அந்த ஏரிக்கரையோர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிற் சுவர், அதனையொட்டி சிறு தேவாலயம், அதற்கப்பால் தலதா மாளிகையின் முற்றவெளி, கண்டா மணி, தலதா மாளிகையின் சுற்றுப்புறச் சுவர், கண்டி மன்னர்கள் மக்களுக்கு காட்சி தருவதற்காகக் கட்டிய பத்திருப்பு மண்டபம் இப்படியாக காட்சிகள் விரிந்து பரந்து சென்றன.

அவன் சிந்தனையிலும் ஒரு கனவுலகம் விரிந்தது.

சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக கண்டிய வரலாற்றுக்கு சாட்சியாக விளங்கும் அந்த தலதா மாளிகை கட்டிடம் பழைய வரலாற்று நிகழ்வுகளை அவன் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காரிருள் கவ்விய மலையக ராச்சியம்

சுமார் இரண்டு நூற்றாண்டுக்கு முன்பொரு நாள் தலதா மாளிகையை அண்டியதாகக் காணப்பட்ட ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னனின் மாளிகை மிகப் பரபரப்புடனும் கலவரத்துடனும் காணப்பட்டது. மாளிகையில் இருந்து காவலர்களும் படை வீரர்களும் வருவதும் போவதுமாக இருந்தனர். குதிரை வீரர்கள் அக்காலத்து போர்ச் சீருடை தரித்து, இடையில் தொங்கிய பளிச்சிடும் நீண்ட போர் வாள்களுடன் விரைந்து பறந்து சென்றனர்.

வீதியெங்கும் மக்கள் கூட்டம் இரு மருங்கும் குழுமிக் காணப்பட்டது. அவர்கள் எதையோ வேடிக்கை பார்ப்பதற்காக குழுமியிருந்தனர். அவர்கள் முகங்களில் சந்தோஷமில்லை. கண்கள் மிக மிரண்டு காணப்பட்டன.

அப்போது வீதியின் தூரத்துக் கோடியில் பெரிய இரைச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. குதிரை வீரர்கள் சிலர் ஆண்களையும், பெண்களையும், இரண்டு சிறுவர்களையும், சில பெண் குழந்தைகளையும் நீண்ட கயிறு கொண்டு பிணைத்து இழுத்து வந்தனர்.

இதனைக்கண்டு குழுமியிருந்த மக்கள் கூட்டம் பேரிரைச்சல் இட்டு "ஐயோ... ஐயோ" என்று அழுதது. பலர் மார்பில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து கதறி அழுதனர்.

அவ்விதம் கதறக் கதற இழுத்து வரப்பட்டவர்கள் வேறு யாருமல்லர். அவர்கள் எகலப்பொலவின் மனைவியும் மக்களும் வீட்டுப் பணியாளரும்தான்.

அவர்கள் தலதா மாளிகைக்கும், சத்தரதேவால என்று அழைக்கப்பட்ட நான்கு தேவாலயங்களுக்கும் நடுவில் அமைந்திருந்த 'தேவசங்கிந்த' என்ற சதுக்கத்துக்கு இழுத்து வரப்பட்டனர்.

சிறு குழந்தையை இடுப்பில் சுமந்திருந்த எகலப்பொல குமாரிஹாமி முதலாவதாகவும், இரண்டாவதாக டிங்கிரி மெனிக் கேவும், பின்னர் லொக்கு பண்டார, அதன்பின் மத்தும பண்டார என வரிசைப்படி அவர்கள் சதுக்கத்தில் நிறுத்தப்பட்டனர்.

சிங்கள மக்களால் வடுக அரசன் என்று அழைக்கப்பட்ட கொடுங்கோல் மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க அரசன் தலதா மாளிகையின் பத்திருப்பு மண்டபத்தில் கடுங்கோபத்துடன் இருந்தான். அவன் பல்லைக் கடித்து அங்கும் இங்கும் உலாவியபடி அருகில் இருந்த மகா நிலமேயான மொல்லிகொட நிலமேயை பெருங்குரலில் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கண்கள் மிகச் சிவந்து இரண்டு தீப்பந்தங்கள் போல் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. முகம் சினம் கொண்ட சிறுத்தைப் புலியின் முகத்தை விட கர்ணகடூரமாக இருந்தது. அவன் கன்னங்கள், மூக்கு, காது போன்ற ஏனைய அவயவங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிப்பு வந்தவை போல் துடித்துக் கொண்டிருந்தன.

கீழே தியவதன நிலமேயும் மேலும் பல நிலமேக்களும் குழுமி இருந்தனர். சில நிமிடங்களில் பறை தம்பட்டம், தாரைகள் என்பன பெருஞ் சத்தத்துடன் முழங்கி ஒருசேர ஓய்ந்தன. அதனைத் தொடர்ந்து பெரும் நிசப்தம் நிலவியது.

எகலப்பொல குமாரிஹாமியின் இடுப்பில் இருந்த அவளது கடைசிக் குழந்தை பயத்தால் வீறிட்டு அலறியது. நிசப்தத்துடன் சோகமும் பீதியும் மிகக் கட்டியாக அப்பிப்போய் இருந்தன.

தியவதன நிலமே சில அடிகள் முன் வைத்து சற்று முன்னே வந்தார். அவர் பெருங்குரலெடுத்து மன்னனின் கட்டளை ஒன்றை வாசித்தார்.

"அரச கட்டளை, சகலரும் கேளுங்கள்! மலையக ராச்சியத்தின் மேதகு அரசருக்கு எதிராக கிளர்ச்சி செய்த எகலப்பொல திசாவை சப்ரகமுவையில் இருந்து கொழும்புக்குத் தப்பியோடி, மலையக ராச்சியத்தை ஆங்கிலேயருக்குப் பிடித்துக் கொடுப்பதற்காக பெரும் படையுடன் வரவிருப்பதாக தெரிய வந்துள்ளது. ராஜத்து ரோகியும், தேசத்துரோகியுமான எகலப்பொலவுக்கு தண்டனை வழங்க முடியாதுள்ளதால், சிங்கள அரச நீதியின்படி அவனது மனைவியையும், பெண் குழந்தைகளையும் நீரில் அமிழ்த்தி கொல்லும்படியும், ஆண் குழந்தைகளை சிரச்சேதம் செய்து கொல் லும் படியும் மகாராஜா இத்தால் கட்டளையிட்டுப் பணித்துள்ளார்"

இதைக் கேட்ட எகலப்பொல குமாரிஹாமி மிகச் சீற்றம் கொண்டாள். அவள் தான் கூந்தலைக் கலைத்தாள், போட்டிருந்த நகைகளை கழற்றி விசிறி எறிந்தாள். அவள் தோற்றம் மதுரையை எரித்த கண்ணகியின் தோற்றத்தை ஒத்ததாக இருந்தது.

அவள் பெருங்குரலில் கூறினாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏ! குரூர மனம் படைத்த வடுக மன்னனே! உனக்குத் தேவை என்னுடையதும் எனது குழந்தைகளதும் ரத்தம் தான் என்றால் நானும் எனது குழந்தைகளும் இந்த நாட்டின் விடுதலைக்காக மிகுந்த மனத்திருப்தியுடன் ரத்தம் சிந்தத் தயாராக உள்ளோம். அந்த ரத்தத்தின் மீது ஆணையாக கூறுகிறேன், எனது கணவர் எகலப்பொல நிலமே, ரத்தவெறி பிடித்த வடுக அரசனை அவன் சிம்மாசனத்தில் இருந்து இறக்கி விரட்டியடிப்பார் என்பது திண்ணம். எமது இரத்தத்துக்குப் பதிலாக வடுக ராஜாவும் அவன் குடும்பத்தினரும் ரத்தப்பலி கொடுக்க வேண்டும் என்பது இன்று தீர்மானிக்கப்பட்டு விட்டது. எனது கணவருக்கு புத்த பெருமான் துணையிருக்கும்.’

அதனைத் தொடர்ந்து....

“இந்த நாய்களை இழுத்துச் செல்லுங்கள்” என்ற அரசனின் குரல் இடியென உரத்து முழங்கியது. கொலைஞர்கள் அவர்களை ஒவ்வொருவராக கொலைக்களம் நோக்கி இழுத்துச் சென்றனர்.

கடலில் மறையும் சூரியன் சிவந்திருப்பது இயற்கை. ஆனால் மலைகளில் சூரியன் மறையும் போது சிவந்திருப்பதனை ராம்ஜீ இப்போதுதான் பார்த்தான். அன்று மாலைப் பொழுது விரைவிலேயே வந்துவிடும் போல் இருந்தது. அந்தக் கொடுமையை சூரியனாலும் பார்த்துச் சகிக்க முடியவில்லையோ என்னவோ?

கொலைஞர்கள் முதல் இழுத்துச் சென்றது எகலப்பொலவின் மூத்த மகன் லொக்கு பண்டாரவை. அவன் பயந்த சுபாவமுள்ளவன். கொலைஞர்களின் இரும்புப் பிடியில் இருந்து திமிறித் தப்பிச் சென்று அம்மாவின் காலைக்கட்டிக் கொண்டு கதறினான்.

பின்பு இரண்டு பேர் அவனை திமிராமல் பிடித்துக்கொள்ள கொலைஞன் அவன் தலையைச் சீவி எறிந்தான். அவன் குரல் வளையில் இருந்து பொங்கிப் பீறியடித்த செவ்விரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தேவசங்கிந்த” என்ற அந்த தலதாமாளிகை சதுக்கம் பூராகிலும் சிந்தியது.

இரண்டாவதாக எகலப்பொலவின் இரண்டாவது புத்திரனான மத்தும பண்டாரவை கொலைஞர்கள் நெருங்கினர். அவன் வீரத்தனமிக்கவன். அப்பா மீது மிக அன்பு பாசம் செலுத்தியவன். தனது தந்தை எகலப்பொலவும், மாமா கெப்பெட்டிப்பொலவும் ராஜாவை விரட்டியடித்துவிட்டு கண்டிச் சிங்காசனத்தை கைப்பற்றுவார்கள் என்று கனவு கண்டவன்.

ஒன்பது வயது நிரம்பிய சிறுவனாக இருந்தாலும் மிகத் துணிச் சலுடன் அவன் கொலைஞர்களை எதிர்கொண்டான். அவன் அந்தக் கணம் வரை தனது தந்தை குதிரையில் வேகமாக வாளுடன் வந்து வடுக ராஜாவுடன் சண்டையிட்டு அவனைத் தோற்கடித்து தன்னையும் அம்மாவையும் காப்பாற்றுவான் என்று எதிர்பார்த்தான்.

அது நிறைவேறாததால் தன் தந்தை எப்படியாவது ஒரு நாள் படையுடன் வந்து வடுக ராஜாவை தோற்கடித்து கண்டி ராச்சியத்தில் சிங்கள ராஜ வம்சத்தை மீண்டும் தோற்றுவிப்பார் என்று நம்பிக்கை கொண்டான். தன் தந்தை தனது இறப்புக்காக பலிவாங்குவார் என்று அவன் பூரண விசுவாசம் கொண்டான்.

அவன் கொலைஞர்களை மிகத் தைரியமாக எதிர்கொண்டான். இரண்டு கொலைஞர்கள் அவன் அருகில் வந்து அவனை இழுத்துச் செல்ல முயன்றபோது அவன் அவர்கள் கரங்களை பலமாகத் தட்டி விட்டான். அவர்களைப் பார்த்து உரத்த குரலில் கூறினான். “துஷ்டர்களே? உங்கள் கறை படிந்த கரங்களால் என்னைத் தொடாதீர்கள். தொட்டால் உங்களுக்கு நடப்பது வேறு. நீங்கள் அழைக்கும் இடத்துக்கு நானாகவே வரத் தயார்” என்று கூறிய அவன் விறுவிறுவென கொலைக்களத்துக்குச் சென்றான். துண்டாடப்பட்டுக் கிடந்த தன் அண்ணாவின் முண்டத்தையும் தலையையும் ஒருமுறை நோட்டம் விட்டான். பின் தன் மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெப்பட்டிப்பொல திசாவையின் தலை கூட்டத்தில் எங்காவது தெரிகிறதா என்று பார்த்தான். அவன் கண்களில் கெப்பட்டிப்பொல தென்படவில்லை. தனது தந்தைக்கு அடுத்ததாக மாமா கெப்பட்டிப்பொல மீதே அவன் அதிக அன்பு வைத்திருந்தான்.

பின் அவன் கொலைஞனைப் பார்த்து தன் தலையை ஒரே வெட்டில் சீவிடும் படி பணித்தான். தன் தலையை ஒரே வெட்டில் சீவுவதற்கு வசதியாக அவன் முன் நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்த மரக்கட்டையில் தன் தலையை வைத்தான்.

கொலைஞனின் கொலைவாள் ஒரே வெட்டில் அவன் தலையைச் சீவி எறிந்தது. அவன் தலை தூரச் சிதறிச் சென்று மன்னனின் பார்வையில் நன்றாகப் படும்படி வீழ்ந்து நிமிர்ந்து நின்றது. துண்டிக்கப்பட்ட முகத்தில் இப்போதும் படர்ந்திருந்த மெல்லிய சிரிப்பு மன்னனை ஏளனம் செய்வது போல் இருந்தது.

மத்துமபண்டாரவும் ஏனையோரும் அன்று சிந்திய இரத்தத்தால் தேவசங்கிந்த சதுக்கம் முற்றிலும் சிவந்திருந்தது. அந்த சிவப்பின் பிரதி பலிப்போ என்னவோ மறைந்து கொண்டிருந்த சூரியனின் மேலும் சிவப்பாக ஒளிர்ந்தான். அதன்பின் சூரியன் தன் முகத்தை விருட்டென மலைகளுக்கிடையில் மறைத்துக் கொண்டான்.

மலையக ராச்சியத்தை காரிருள் கவ்வியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிர்பெறும் வரலாற்று மனிதர்கள்

வரலாற்றுக் காலம் முழுவதும் மறக்கப்பட முடியாத அந்தக் கொலைக் காட்சிகள் இப்போது தான் நடந்தவை போல் ராம்ஜீயின் மனதில் மிகப் பசுமையாகப் படிந்தன.

ராம்ஜீயின் கண்முன்னால் உயிர்த் துடிப்புள்ள திரை நாடகம் போன்று நிகழ்ந்த இந்தக் காட்சியால் அவன் உடம்பு வேர்த்திருந்தது. அவன் வேறொரு உலகத்துக்கு சென்று மீண்டவன் போல் உடலை சிலிர்த்துக் கொண்டான். அவன் நீண்ட நேரம் பைனாகுலரை வைத்துக் கொண்டு என்னதான் பார்க்கிறான் என்று சந்தேகித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாயினி அவன் கையில் இருந்த அந்த தொலைநோக்கியை வாங்கி தானும் பார்த்தாள். ஆனால் அவளுக்கு விசேடமான எந்தக் காட்சியும் தெரியவில்லை.

அப்போது கிருஷ்ணசாமியிடம் இருந்து சாப்பாடு தயார் என்ற அறிவித்தல் வந்தது. அனைவரும் பகல் சாப்பாட்டுக்காகச் சென்றனர்.

பகல் சாப்பாடு முடிந்ததும் சிறு தூக்கம் ஒன்று போட்டு முடித்த பின்னர் சுமார் நான்கு மணியளவில் சகலரும் வராந்தாவில் கூடினர்.

கிருஷ்ணசாமி தயாரித்திருந்த தேநீரை அருந்திய பின் அனைவரையும் அருகே வரும்படி ராம்ஜீ அழைத்தான். அவர்கள் அனைவரும் அமரும் விதத்தில் வராந்தாவில் விசாலமான வட்ட மேசையும் சுற்றி வர நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ராம்ஜீயும் நாளாயினியும் ஜெய்சிங்கும் மேசையில் அமர கிருஷ்ணசாமி எஜமான விசுவாசம் மேலிட சற்று தள்ளி வராந்தாவுக்கும் வாசலுக்குமிடையில் காணப்பட்ட வழுவழுப்பான சீமெண்டுத் திண்ணையில் அமர்ந்தார்.

ராம்ஜீ பொக்கெட்டில் இருந்து எடுத்த சிகரட் ஒன்றை பற்ற வைத்தவாறே பேசினான்.

"நாமும் கண்டியில் தங்கியிருக்கும் போது நமது தலைமையகமாக இந்த வீட்டைப் பயன்படுத்திக் கொள்வோம். நாம் தேடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகாரன் இந்த விரிந்து பரந்த கண்டி நகரத்தில் எங்கோதான் இருக்க வேண்டும். ஆனால் அவன் தலதா மாளிகைக்கு மிக அருகில் தான் இருக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு கூறுகின்றது. அதற்காக வெளிப்படையாக அவன் பெயரைச் சொல்லி நாம் விசாரிக்கத் தொடங்குதல் மிக ஆபத்தானதாகும். அத்துடன் கொலைகாரனுக்கு மிக அருகில் நாம் வந்துவிட்டதை அவன் ஊகிக்க இடமளிக்கக் கூடாது.

"அப்படியானால் நாம் நமது நடவடிக்கையை எவ்வாறு ஆரம்பிப்பது?" ஜெய்சிங் கேள்வி எழுப்பினான்.

"நாம் முதல் சில தினங்களுக்கு ஒன்றுமே செய்யப் போவதில்லை. நாம் சில விடயங்களை வெறுமனே அவதானிக்கப் போகின்றோம். குறிப்பாக நேரடி நடவடிக்கைகள் எதிலும் ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் கலந்து கொள்ளக்கூடாது. நீங்கள் இருவரும் எங்களுடன் தொடர்புபட்டவர்களாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. அப்போது தான் நளாயினிக்கும் எனக்கும் ஏதும் பிரச்சினை என்றால் உங்களால் எம்மைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும். ஆதலினால் நீங்கள் இருவரும் இப்போதைக்கு இந்த வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. வீட்டை நன்றாக நடத்திச் செல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு"

இவ்வாறு ராம்ஜீ கூறியபோது ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் அதிருப்தியுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். கிருஷ்ணசாமி நளாயினியை மிகப் பரிதாபமாகப் பார்த்தார். ஏற்கனவே கிருஷ்ணசாமி நளாயினியிடம் தான் எம்.ஜி. ஆரின் பரம ரசிகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எம்.ஜி. ஆரைப் போல் தனக்கும் சிலம்பம், கத்திச் சண்டை எல்லாம் போடத் தெரியும் என்றும் கூறியிருந்தார்.

உண்மையில் 1960 ஆம் ஆண்டுகளையொட்டி புரட்சித் தலைவர் என்று பெயர் பெற்ற நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன் நடித்த மலைக்கள்ளன், நாடோடி மன்னன், மர்மயோகி, மகாதேவி விக்கிரமாதித்தன் முதலான படங்கள்வெளியானதைத் தொடர்ந்து அப்போதைய இளைஞர் பரம்பரையினர் சிலம்பம், வாள் பயிற்சி என்பவற்றில் ஈடுபட்டனர். அத்தகையவர்களில் கிருஷ்ணசாமியும் ஒருவர் இப்போது அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்திருப்பதாக நினைத்தார். அதன் பொருட்டு தன்னுடன் சிலம்புக் கம்பும் பழைய வாளும் எடுத்து வந்திருந்தார். அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என வருத்தப்பட்டார்.

அவருடைய வருத்தத்தைப் புரிந்து கொண்ட ராம்ஜீ "கவலைப்படாதீர்கள் கிருஷ்ணசாமி. இந்த விவகாரம் இத்துடன் முடிந்து விடப் போவதில்லையே. கட்டாயம் உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்" என்று கூறினான்.

பின் அவன் நளாயினியை அழைத்தான்.

"நளாயினி! அடுத்த இரண்டு தினங்களுக்கு கண்டியின் வரலாறு தொடர்பில் மேலும் சில ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். நீ நாளை காலை முதற் தடவையாக இங்குள்ள புத்தகக் கடைகளுக்குப் போய் இது விடயத்தில் நமக்கு உதவக் கூடும் என்று கருதுகின்ற புத்தகங்களை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்துவிடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொடர்ந்து கூறினான்... "அத்துடன் தலதா மாளிகையை யொட்டி கண்டிய வரலாற்றுடன் தொடர்புடைய அரும் பொருட் காட்சியகம் ஒன்று இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கு சென்று ஏதும் தகவல் பெற முடியுமா என்று பார். குறிப்பாக கண்டி ராச்சியத்தின் நிர்வாகப் பிரிவுகள் அவற்றுக்கான கொடி மற்றும் சின்னம் என்பனபற்றி ஏதும் தகவல்கள் கிடைக்கின்றனவா என்று பார்"

"எகலப்பொல நிலமே கண்டி ராச்சியத்தில் இருந்து தப்பியோடி ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தான். அதன் பின்னர் அவன் மனைவி மக்கள் ஸ்ரீ விக்ரம ராஜசிங்க அரசனால் கொலை செய்யப்பட்டனர். அதன் பின்னரான எகலப்பொல நிலமேயின் வரலாறு நமக்கு மிக முக்கியம் புரிந்ததா?"

ராம்ஜீ பேசி முடித்த போது நளாயினி புரிந்தது என்பதற்கு அடையாளமாக தலையை மட்டுமே ஆட்டினாள்.

"மற்றுமொரு விடயம்"

"என்ன"

"இது சம்பந்தமாக யாரிடமும் விசாரித்தால் அல்லது கேள்வி கேட்பதாயின் அது சரித்திர ஆய்வாளனின் கேள்வி என்ற தோரணையில் இருக்க வேண்டுமே தவிர கீரிப்பிள்ளையை தேடுகின்றோம் என்று யாரும் சந்தேகிக்கும் விதத்தில் இருக்கக் கூடாது.... என்ன?"

"சரி பொஸ்" என்று ஆமோதித்தாள் நளாயினி. அன்றைய நடவடிக்கைகளை அத்துடன் முடித்துக் கொண்ட ராம்ஜீ இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை டி.எஸ்.பி. சிங்கராயருக்குத் தெரிவிப்பதற்காக அவரது தொலைபேசி இலக்கங்களை சுழற்றி னான்.

அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் ராம்ஜீயும் நளாயினியும் புத்தகக் கடைகளில் இருந்து வாங்கி வந்து குவித்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு கண்டிய சரித்திர நூல்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்த போதும் அவர்களால் புதிதாக எதுவும் தகவல்கள் திரட்ட முடியவில்லை.

ராம்ஜீ மாலை வேளைகளில் தனக்குப் போரடித்த பொழுதுகளில் ஜெய்சிங்கையும் அழைத்துக் கொண்டு விஸ்கி போத்தலொன்றையும் உடைத்து வைத்துக் கொண்டு முற்றத்தில் இருந்த மரத்துக்கடியில் அமர்ந்து கொண்டு பொழுதைக் கழித்தான். நளாயினி தொடர்ந்தும் சளைக்காமல் வரலாற்று ஆய்வில் ஈடுபட்டிருந்தாள்.

அடுத்த நாள் மாலை சிறு தூக்கம் ஒன்று போட்டு விட்டு சுமார் ஐந்து மணியளவில் எழுந்திருந்த ராம்ஜீ, கிருஷ்ணசாமி சுடச்சுட போட்டுத் தந்த தேநீரை மிக ரசித்து உறிஞ்சிக் குடித்தான். நளாயினி தொடர்ந்தும் புத்தகக் கும்பலில் மூழ்கியிருந்தமையைப் பார்க்கும் போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்து விட்டால் அதனை நிறைவேற்றும்வரை அசராமல் செயற்படும் அவளின் வல்லமை அவன் சிந்தையைக் கவர்ந்தது. இதற்கு முன்பும் இது தொடர்பில் அவன் வியப்படைந்திருக்கின்றான்.

அவன் நளாயினியிடம் பேச்சுக் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன நளாயினி ஏதும் புதிய விடயங்கள் கிடைத்தனவா?"

"பெரிதாக ஒன்றும் இல்லை..... பொஸ்.... ஆனால் கண்டிய ராச்சியத்தின் இறுதிக்கால வரலாற்றில் எகலப்பொல நிலமேயின் வரலாறு மிகப் பரிதாபகரமானதாக இருந்துள்ளது. இவன் ஆட்சியைக் கைப்பற்ற அரசனுக்கெதிராக சதி செய்ததுடன் ஆங்கிலேயருக்கெதிராகவும் கிளர்ச்சி செய்துள்ளான். இறுதிக் காலத்தில் இவனது மைத்துனனான கெப்பட்டிப்பொல நிலமேயும் கிளர்ச்சிக் காரனாக மாறியுள்ளான்" அவள் சற்று நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

"மற்றுமொரு முக்கியமான விடயம் உள்ளது. நாம் நினைத்தது போல் எஹலப்பொல குமாரி ஹாமியும் அவனது இரண்டு பெண் குழந்தைகளும் நீரில் மூழ்கடிக்கப்பட்டு கொலை செய்யப்படவில்லை. மாறாக கோபமடைந்த ஸ்ரீ விக்ரமராஜசிங்க மன்னன் உரலும் உலக்கையும் கொண்டு வரச் சொல்லி எஹலபொல குமாரி ஹாமியின் கையாலேயே குழந்தைகளை உரலில் இட்டு இடித்துக் கொல்லும்படி பணித்திருக்கிறான். இதனைத் தாங்க முடியாத அவள் ஓடிச் சென்று கண்டி ஏரியில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளாள்" மீண்டும் சற்றே நிறுத்திவிட்டு தொடர்ந்து பேசினாள்.

"பின் அரசன் குழந்தைகளை உரலில் இட்டு இடித்துக் கொல்லும் படி கொலைஞர்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அதன் பின்னரே எஹலப்பொல நிலமேயும் கெப்பட்டிப்பொல நிலமேயும் ஆங்கிலேயருடன் இணைந்து கண்டி ராச்சியத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்துள்ளனர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"இறுதியில் இவர்களுக்கு என்ன நடந்தது" ராம்ஜீ இடையில் கேள்வி கேட்டான்

"இறுதியில் இவர்கள் ஆங்கிலேயருக்கெதிராக செயற்பட்டுள்ளமையால் கெப்படிப்பொல மற்றும் மடுகல்ல என்ற நிலமே ஆகியோர் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் கெப்பட்டிப்பொலவுக்கும் மடுகலவுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. எஹலப்பொலைக்கு என்ன நடந்தது என்பதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்" என்று கூறினாள் நளாயினி.

அத்துடன் உரையாடலை நிறுத்திய ராம்ஜீ தான் நகரத்துக்குப் போகப் போவதாகவும் அவளும் வருகிறாளா என்றும் வினவினான்.

அவள் தனக்கு மேலும் சில புத்தகங்களை படிக்க வேண்டியிருப்பதாகவும் தான் வரவில்லை என்றும் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாரந்த விநோத மனிதன்?

ராம்ஜீ தான் கண்டி நகரத்தை சுற்றிப் பார்த்து வரப் போவதாக தெரிவித்து நளாயினியை அழைத்த போதும் அவள் மறுத்ததால் ராம்ஜீ தான் மட்டும் போவதற்கான ஆயத்தங்களை செய்தான். அச்சமயத்தில் ஜெய்சிங் தான் வரவா என்று கேட்ட போதும் ஜெய்சிங் தன்னுடன் வருவதால் அவன் தன்னுடைய ஆள் என்பதனை பின்னர் எவரும் இனம் கண்டு கொள்ள வாய்ப்புள்ளது என்பதால் அவனை இப்போதைக்கு வெளியில் எங்கும் செல்ல வேண்டாம் என்று பணித்த ராம்ஜீ தானே காரை எடுத்துக் கொண்டு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சில விநாடிகளிலேயே கண்டியின் பிரதான வீதியை அடைந்தான். வீதியில் சன நடமாட்டம் அதிகமாக இருந்தது. வீதிகளில் காணப்பட்ட அதிகமான வெளிநாட்டினரின் பிரசன்னம் கண்டி பெரஹரா இடம்பெறவிருப்பதனை உணர்த்தியது. தலதா மாளிகையை அலங்கரிக்கும் வேலைகளும் வீதி அலங்கார வேலைகளும் கூட ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ராம்ஜீ தனது காரை கண்டி நீதிமன்றக் கட்டிடங்களுக்குச் செல்லும் பாதையில் கொண்டு சென்று நிறுத்தினான். அப்போது கண்டி தலதா மாளிகையுடன் ஒட்டியதாக அமைந்திருந்த தொல்பொருள் காட்சிச்சாலையின் பெயர்ப்பலகை அவன் கண்ணில் பட்டது. அந்த நேரத்தில் அது மூடியிருந்த படியால் அடுத்த நாள் பகல் பொழுதில் அங்கு சென்று பார்க்க வேண்டுமென்று மனதில் நினைத்துக் கொண்டான்.

மெதுவாக நடந்து தலதா மாளிகையைக் கடந்து கண்டி ராஜ வீதியை அடைந்த ராம்ஜீ ஏரிக்கரையோரம் இருந்த மேட்டில் ஏறி அங்கு போடப்பட்டிருந்த சீமெந்து இருக்கையில் அமர்ந்தான். அதில் இருந்து பார்ப்பதற்கு தலதா மாளிகையின் சுற்றுப்புறமும் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையும் மிக நன்றாகத் தெரிந்தன.

அந்த இரண்டு சரித்திரச் சின்னங்களும் மிக இலகுவாக கண்டிய வரலாற்றுக் காலத்தை மனக்கண்முன் கொண்டு வருவதனை உணர்ந்தான். அவன் அங்கிருந்து கொண்டே வருவோர் போவோரை அவதானித்துக் கொண்டிருந்தான். அருகே ஒரு சிறுவர் பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. பல சிறுவர்கள் கூச்சல் கும்மாளத்துடன் அங்கே விளையாடிக் கொண்டிருந்தனர்.

அந்தப் பூங்காவுக்கருகில் ஒரு ஐஸ்கிறீம் கடை காணப்பட்டது. சிறுவர்கள் அக்கடையில் ஐஸ்கிறீம் வாங்கி அருகே போடப்பட்டிருந்த சீமெந்து ஆசனங்களில் இருந்து சந்தோஷத்துடன் உறிஞ்சிக் கொண்டிருந்தனர். அந்தச் சிறுவர்களின் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்த ராம்ஜீயின் கண்களில் அவர்களுக்கு மத்தியில் அமர்ந்து ஐஸ்கிறீம் சுவைத்துக் கொண்டிருந்த ஒரு விநோதமான மனித உருவம் தென்பட்டது.

சிறுவர்களுக்கு மத்தியில் அந்த ஆஜானுபாகுவான பருத்த பெரிய மனித உருவம் சற்று விசித்திரமானதாக இருந்ததால் சட்டென்று அவன் கவனத்தைக் கவர்ந்தது. அந்த மனிதன் உருவத்தில் மாத்திரமன்றி நடை, உடை பாவனையிலும் வித்தியாசமானவனாகத் தோன்றினான்.

அவன் மன்னர் காலத்து அரண்மனைச் சேவகன் போல் உடை தரித்திருந்தான். இடுப்புக்குக் கீழ் பருத்தி வேஷ்டி போன்ற ஒன்றை பஞ்ச கச்சம் வைத்துக் கட்டியது போல் கால்களுக்கிடையில் சுருட்டிக் கட்டியிருந்தான். அந்த வேஷ்டி அகன்ற சிவப்புக்கரை கொண்டதாக இருந்ததால் பளிச்சென்றிருந்தது. மேலுடம்பில் கழுத்தில்லாததும் கையில்லாததுமான ஜிப்பா போன்ற பருத்தியுடையணிந்திருந்தான். அதிலும் கரைகளுக்கு சிவப்புப்பட்டி பொருத்தப்பட்டிருந்தது. நெடிதுயர்ந்த கருத்த சரீரம், தலைமொட்டை போடப்பட்டிருந்தது. உடம்பு முறுக்கேறி மல்யுத்த வீரன்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. கண்கள் சிவந்து முகம் கோணலாக இருந்ததால் எடுத்த எடுப்பில் அவன் முரடன் என்பதும் கொடூர குணம் கொண்டவன் என்றும் பார்ப்போருக்குத் தோன்றும்படி இருந்தது. அவன் தோற்பட்டைகள் இரண்டிலும் மேலும் கறுப்பாக பச்சை குத்தியிருந்தான்.

தன்னை யாரோ அவதானிப்பதை உள்ளுணர்வால் உணர்ந்த அவன் ராம்ஜீயின் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் சிறுத்தையின் சீற்றம் காணப்பட்டது. அவன் பார்வையைத் தவிர்த்துக் கொண்ட ராம்ஜீ வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

அவன் சிந்தனையில் அந்த மனிதன் யாராக இருக்கும் என்ற கேள்வியெழுந்தது. நிச்சயம் அவன் தீய சக்திகளுடன் தொடர்புடையவனாக இருக்க வேண்டும் என்று ராம்ஜீயின் உள் மனம் கூறியது. இவ்வாறு சில நொடிகள் சிந்தித்த ராம்ஜீ அந்த விநோத மனிதனை மீண்டும் ஒரு முறை நன்றாகப் பார்த்து விட வேண்டும் என்ற நோக்கில் அவன் இருந்த பக்கம் மெதுவாகத் திரும்பினான்.

அங்கே!

அந்த மனிதனைக் காணவில்லை. அவன் இருந்த இடம் காலியாக இருந்தது. அவன் மாயமாக மறைந்து போய் விட்டான். ராம்ஜீ சுற்றும் முற்றும் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் அவனைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ சற்று நேரம் திகைத்தான்.

திடீரென்று எப்படி அந்த மனிதன் மாயமாக மறைந்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை விட ஏன் மறைந்தான்? என்ற கேள்வியே அவன் மனதில் பூதாகரமானதாக எழுந்தது. அப்படியானால் தன்னை யாரும் அவதானிப்பதை அந்த மனிதன் விரும்பவில்லை. ஏன்? இப்போதைக்கு இந்தக் கேள்விக்கு விடை காணும் வாய்ப்புக்கள் இல்லை என்று கருதிய ராம்ஜீ அந்த ஐஸ்கிறீம் கடைக் காரனிடம் சென்றான்.

அவனிடம் ஐஸ்கிறீம் ஒன்றுக்கு பணிப்புரை வழங்கி விட்டு அந்த விநோத மனிதனைப் பற்றி விசாரித்தான்.

அவனைப் பற்றியா கேட்கிறீர்கள்! அவனைப் பார்ப்பவர்கள் எல்லாமே இதே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். அதற்கு அவன் தோற்றம் தான் காரணம். ஆனால் அவன் ஒவ்வொரு நாளும் தவறாமல் இங்கு ஐஸ்கிறீம் சாப்பிட மாலை ஆறு மணிக்கு வருகிறான் என்பதைத் தவிர வேறு விவரங்கள் தெரியாது. அவன் யாரிடமும் பேசி இதுவரை நான் பார்த்ததில்லை என்று பதில் கூறினான் ஐஸ்கிறீம் கடைக்காரன்.

ராம்ஜீக்கு ஐஸ்கிறீம் சாப்பிடும் மனநிலை இருக்கவில்லை. எனினும் வாங்கியதை என்ன செய்வது என்று நினைத்தவாறே அவசர அவசரமாக பாதி ஐஸ்கிறீமை விழுங்கி விட்டு மிச்சத்தை அருகில் இருந்த குப்பைக் கூடையில் எறிந்து விட்டு அவ்விடத்தை விட்டு கிளம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கு வந்து மூன்று நாட்களாகியும் இதுவரை உருப்படியாக ஒன்றும் கண்டு பிடிக்கவில்லையே என்பது மனதை உறுத்தியது. இருந்தாலும் அவசரப்பட்டு ஒரு அடி தவறாக எடுத்து வைத்து விட்டால் கூட அது பேராபத்தில் கொண்டு போய் விட்டு விடும் என்று கருதினான் ராம்ஜீ.

அவன் பலவாறு சிந்தித்தவாறே பல வீதிகளைக்கடந்து வந்தி ருந்தான். அவன் சற்றே நின்று தான் எவ்விடத்தில் இருக்கிறோம் என்று சுற்று முற்றும் பார்த்தான். அப்போது அவன் முன்னால் தெரிந்த பெயர்ப் பலகையில் இருந்து தான் புனித சில்வெஸ்டர் கல்லூரிக்கருகில் இருப்பதனை உணர்ந்து கொண்டான்.

அதற்கப்பாலும் செல்வது உகந்ததல்ல என்று தீர்மானித்த ராம்ஜீ வந்த பாதையில் செல்லாமல் குறுக்காக இருந்த பாதையில் சென்று தன் காரை அடைவது நல்லது என யோசித்து குறுக்குப் பாதைக்குள் நுழைந்து நடந்தான்.

அப்போது சற்றே இருட்டியிருந்தது. வீதி விளக்குகள் போடப்பட்டிருந்தாலும் அவற்றுக்கிடையில் அதிக இடைவெளியிருந்த தால் வீதியின் நடு நடுவில் இருள் கவிந்திருந்தது.

அவ்வீதி மேலும் பல வீதிகளை ஊடறுத்துச் சென்றது. மனித நடமாட்டமும் குறைவாக இருந்தது. அந்த வீதிகளுக்கு ராம்ஜீ பழக்கப்படாதவன் என்பதால் சற்று அச்சமாகவும் இருந்தது.

ராம்ஜீ எதனையும் பொருட்படுத்தாமல் நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ராம்ஜீக்கு சுமார் நூறு அடிகளுக்கு முன்னால் இருந்த மற்றுமொரு குறுக்குப் பாதையில் இருந்து வந்த பெண்ணொருத்தி அந்தப் பாதையில் நுழைந்து முன்னோக்கி நடந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததும் ராம்ஜீக்கு முன்பு ஐஸ்கிறீம் கடைக்கருகில் பார்த்த அந்த வினோத மனிதனின் ஞாபகம் வந்தது. காரணம் இந்தப் பெண்ணும் அதே பாணியில் உடையணிந்திருந்தாள். இடுப்புக்குக் கீழ் சிவப்புக் கரையுடன் கூடிய லுங்கி போன்று சுற்றிக்கட்டிய ஆடை. உடம்பில் கழுத்தில்லாத நீளக் கையுடன் கூடிய அதே வித சிவப்புக்கரை ஜிப்பா.

ராம்ஜீ தன் நடையின் வேகத்தைக் கூட்டி அவளை நெருங்கிச் சென்று பார்க்க நினைத்தான்.

அவன் ஓட்டமும் நடையுமாக சென்றாலும் விளக்கொளியைத் தவிர்த்து இருளிலேயே நகர்ந்தான். அவளது கவனத்தை திருப்பி விடக்கூடாது என்பதில் அவதானமாக இருந்தான். அவன் போட்டிருந்த ஸ்போர்ட்ஸ் ரக றப்பர் அடிப்பாதணி அதற்கு உதவியாக இருந்தது.

அவள் அடுத்த விளக்குக் கம்பத்தைக் கடந்து இடது புறம் திரும்பி அடுத்த வீதிக்குள் நுழைந்த போது ராம்ஜீயால் அவளைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.


இப்போது அவன் ஆச்சரியத்துடன் அதிர்ச்சியும் அடைந்தான். அவள் வேறு யாருமல்ல. சித்ராம்பரிதான். அவள் இடது புறமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிய போது அகலமான அவள் கன்னத்து மச்சம் அவளைக் காட்டிக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏமாற்றமடைந்த கெலப்பொல

**தன**க்கு மிகச் சமீபத்தில் சித்தராம்பரியை தான் அன்று சந்திக்கக்கூடும் என்று ராம்ஜீ ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுக்கு இரண்டு அதிர்ச்சிகள். ஒன்று அந்த கறுத்து தடித்து நெடிதுயர்ந்த மாய மனிதன். மற்றது கொலைகாரி சித்திராம்பரி. அவன் சிந்தனையில் இருந்து விடுபடுவதற்கு முன்பதாகவே அவள் இடதுபுறம் பிரிந்து சென்ற வீதிக்குள் நுழைந்து ராம்ஜீயின் பார்வையில் இருந்து மறைந்து சென்று விட்டாள். ராம்ஜீ மீண்டும் தன் வேகத்தை அதிகப்படுத்தினான்.

அவன் அந்த வீதி முனைக்குச் சென்று இடதுபுறம் திரும்ப முற்பட்ட போது திடீரென ஒரு பாரிய மனித உருவம் அவன் எதிரே தோன்றி வழியை மறைத்தது. அந்த உருவம் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமல்ல. அது அவன் ஐஸ்கிறீம் கடைக்கருகில் பார்த்த அதே உருவம்தான்.

திடீரென்று அந்த மனிதன் அவன் வழியில் தோன்றியதை எதிர்பார்க்காத ராம்ஜீக்கு காதைப் பொத்தி பளார் என்று கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. அவன் சில கணங்கள் ஆடாமல் அசையாமல் அந்த மனிதனை ஏறெடுத்துப் பார்த்தான்.

அந்த மனிதன் ஒன்றும் தெரியாதவன் போல் வழமை போலவே இருந்தான். ராம்ஜீக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் பதற்றத்தையும் கண்டு கொண்டவனாக காட்டிக் கொள்ளவில்லை.

அவன் கையில் சுருட்டு ஒன்றை உருட்டியவாறே நெருப்பெட்டி இருக்கிறதா என்று கேட்டான்.

ராம்ஜீக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இன்னும் சில கணங்கள் தாமதித்தால் அவன் சித்ராம்பரியை தவற விட்டு விடுவான். ராம்ஜீ அந்த மனிதனை விலக்கிக் கொண்டு முன் செல்லப் பார்த்தான். அதனைப் புரிந்து கொண்ட அந்த மனிதன் தானும் சற்று நகர்ந்து வழியை மேலும் மறைத்துக் கொண்டான்.

ராம்ஜீ அவன் முகத்தில் ஒரு குத்து விடலாமா? என்று யோசித்தான். ஆனால், குத்துச் சண்டை வீரன் போல் இறுகிய உடலைக் கொண்டிருந்த அந்த மனிதனை வீழ்த்துவது அத்தனை இலகுவானதல்ல என்று நினைத்தான். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு விட்டுப் பிடிப்போம் என்று கருதிய ராம்ஜீ சட்டைப் பையில் இருந்து லைட்டரை எடுத்து அவனது சுருட்டைப் பற்ற வைக்க உதவினான்.

சுருட்டைப் பற்ற வைக்க அவன் முகத்துக்கருகே குனிந்தபோது லைட்டர் வெளிச்சத்தில் அவன் கண்கள் கொதிக்கும் எண்ணெயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட நாவற்பழம் போல துள்ளுவதைக் கண்டான். அவை மிகக் குரூரமானவைகளாக அங்குமிங்கும் விழித்தன.

சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்ட அந்த மனிதன், "நன்றி' என்று ஏளனம் தொனிக்கும் குரலில் கூறி விட்டு ராம்ஜீயைக் கடந்து சென்று இருளில் மறைந்து விட்டான்.

இரண்டாம் முறையாகவும் சித்ராம்பரியை கை நழுவ விட்டுவிட்ட ராம்ஜீ சில கணங்கள் அங்கே தாமதித்து நின்றான். பின் வீடு திரும்புவதற்காக தன் கார் நிறுத்தப்பட்டிருந்த திசை நோக்கி நடந்தான்.

அவன் வீட்டை அடைந்த போது நளாயினியும் ஜெய்சிங்கும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கூறுவதற்கு நிறைய செய்திகள் இருக்கின்றன என்று தெரிவித்த ராம்ஜீ, எல்லோரையும் வராந்தாவில் கூடும்படி பணித்தான். அவர்கள் அனைவரும் சிறு கூட்டம் ஒன்றுக்குத் தயாராகினர்.

நளாயினி தன்னிடமும் அவர்களுக்குக் கூறுவதற்கு ஒரு "கதை' இருப்பதாகத் தெரிவித்தாள்.

முதலில் நளாயினியின் கதையைக் கேட்பதென்றும் பின்னர் தனது கதையைக் கூறுவதாகவும் ராம்ஜீ தெரிவித்தான்.

நளாயினி பேச ஆரம்பித்தாள்.

அவள் கூறினாள்.

"ஏற்கனவே எகலப்பொல மகாதிஸாவை அவன் குடும்பத்தினர் தொடர்பான வரலாறு நமக்குத் தெரியும். எகலப்பொல திஸாவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியும் அவனது மூன்று குழந்தைகளும் படு பாதகமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். எகலப்பொலவும் அவன் மனைவியும் இந்தப் படுபாதக செயல்களுக்காக பழி வாங்குவதுடன், கண்டி ராச்சியத்தில் இருந்து ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனை விரட்டியடித்து சிங்கள வம்சத்தை மீண்டும் கண்டி அரியாசனத்தில் இருத்தப் போவதாகவும் சபதம் செய்துள்ளனர்".

"ஆனால்..."

"ஆனால்... என்ன?" ராம்ஜீ அவளை உற்சாகப்படுத்தினான்.

"ஆனால்... எகலப்பொல குமாரிஹாமியும் அவள் குழந்தைகளும் கொலை செய்யப்பட்டு விட்டனர். அதன் பின் ஆங்கிலேயருடன் இணைந்து கொண்ட எகலப்பொல மகா திஸாவை தனக்கு ஆதரவான பிரதானிகள், தனது மைத்துனன் கெப்பட்டிப்பொல திஸாவை முதலானோருடன் இணைந்து கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனுக்கு எதிராக செயற்பட்டு யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு சார்பாக நின்றதுடன், 1815ஆம் ஆண்டு கண்டி மன்னன் சிறை பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதற்கும் காரணமாக இருந்தனர்."

நளாயினி சற்றே நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள்.

"ஆனால்... எகலப்பொல எதிர்பார்த்தபடி ஆங்கிலேயர் கண்டிச் சிம்மாசனத்தை அவனுக்கு வழங்கவில்லை. மாறாக கண்டிப் பிரதானிகளுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டதுடன், எகலப்பொலவுக்கு மகா அதிகாரம் பதவியை மட்டுமே தர முன் வந்தனர். ராஜசிம்மாசனத்தைத் தவிர அதற்குக் குறைவான எந்தப் பதவியையும் எகலப்பொல ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டான். அதன் பின் அவன் தன்னைச் சமாதானம் செய்து கொண்டு மறு விவாகம் புரிந்து கண்டியில் வசித்து வந்துள்ளான்.

1818ஆம் ஆண்டு வரை சுமார் மூன்று ஆண்டுகள் கண்டியில் புதிய மனைவியுடன் வசித்துள்ளான். பின்னர் ஆங்கிலேயருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக புரட்சி செய்த கெப்பிட்டிபொலவின் அணிக்கு உதவி செய்தான் என்ற காரணத்துக்காக கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டதுடன், 1825ஆம் ஆண்டு மொறிசியஸ் நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டான். பின் 1829ஆம் ஆண்டு தனது 59ஆவது வயதில் அவன் இறந்து போய் விட்டான். அவன் கண்டியில் மறுமணம் செய்து கொண்டு புதிய மனைவியுடன் வாழ்ந்த காலத்தில் அவனுக்கு புத்திரன் ஒருவன் இருந்தானா? என்பது தொடர்பில் வரலாற்றுப் பதிவுகள் இல்லை"

என்று நிறுத்திய நளாயினி இதனைத் தவிர மற்றுமொரு கதையும் உண்டு என்று கூறினாள்.

இதுவரை நளாயினி தெரிவித்த கதையை மிகத் தீவிரமான சிந்தனையுடன் கேட்டுக் கொண்டிருந்த ராம்ஜீ நிமிர்ந்து அமர்ந்து கொண்டதுடன், மிச்சத்தையும் கூறும்படி கேட்டான். ஏனையோர் ஆர்வத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

நளாயினி தொடர்ந்து கூறினாள்.

"எகலப்பொலைக்கு இரண்டு ஆண் குழந்தைகளான மத்தும பண்டார, லொக்கு பண்டார மற்றும் சிறு பெண் குழந்தை ஆகிய மூன்று குழந்தைகள் இருந்தனரென்றும் அவர்கள் அனைவரும் மனைவியும் ராஜசிங்க மன்னனால் கொல்லப்பட்டு விட்டனர் என்றும் பதிவுகள் கூறுகின்றன. ஆனால், சிங்கள கலைக் களஞ்சியத்தில் இருந்து பெற்ற தகவல்களின்படி அவனுக்கு மூன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும் இருந்துள்ளனர். அவர்களில் மூத்த புதல்வன் தாய், தந்தையருடன் வசித்திருக்கவில்லை.

ஆதலால், அவன் ராஜசிங்க மன்னனின் கரங்களில் சிக்கவில்லை என்பது தெரிகிறது. இது தொடர்பில் மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்" என்று கூறி முடித்தாள் நளாயினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது நளாயினி... இத்தகவல்கள் நாம் தேடிக் கொண்டிருக்கும் கொலையாளியுடன் மிகவும் பொருந்துகின்றன. இப்போது நாம் உறுதி செய்ய வேண்டியதெல்லாம் எகலப்பொலவின் குடும்பத்திலிருந்து ஆண் அங்கத்தவர்கள் எவராவது தப்பிப் பிழைத்திருந்தார்களா என்பதுதான். அப்படியானால் அவர்களின் வழித்தோன்றல்களுக்கு என்னவாயிற்று என்பதும் அவர்கள் கண்டியில் வாழ்ந்தார்களா? என்பதும் மீண்டும் ஆராயப்பட வேண்டும்"

"மற்றது நளாயினியின் தகவல்களின் படி எகலப்பொலவுக்கு மூன்று புத்திரர்கள் இருந்து இரண்டு புத்திரர்கள் மாத்திரம் கொலை செய்யப்பட்டிருந்தால் மூன்றாவது புத்திரனின் வழித்தோன்றல்களில் யாராவது ஒருவன் கொலைகாரனாக இருக்கலாம். அல்லது எகலப்பொல மறுமணம் செய்து கொண்டு வாழ்ந்த காலத்தில் அவனுக்கு புத்திரர்கள் யாராவது பிறந்திருக்கலாம். அவர்கள் தொடர்பாகவும் தேடிப் பார்க்க வேண்டும்"

இது தொடர்பான பதிவுகள் ஏதும் உள்ளனவா என்று கண்டி தொல்பொருள் காட்சியகத்தின் பதிவுகளில் தேடிப் பார்ப்பது நல்லது என்று கூறிய ராம்ஜீ தொடர்ந்து தான் சொல்லப் போகும் விடயங்களை மிக அவதானமாகக் கேட்கும் படி பணித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரும்பொருட்காட்சியகத்தில் ஆய்வு

**நளா**யினி எகலப்பொல தொடர்பிலும் இறுதிக்கால கண்டி ராச்சியத்தின் வரலாறு தொடர்பிலும் தெரிவித்த தகவல்கள் ராம்ஜீயை சிந்திக்க வைத்தன. விடை தெரியாத பல கேள்விகளுக்கு விடை கிடைத்திருப்பது போல் தோன்றியது.

அதன் பின் அவன் தான் கண்டியில் ஐஸ்கிறீம் கடையில் சந்தித்த வினோத மனிதன் தொடர்பிலும் அந்த குங்கும பொட்டு மச்சக்காரியை மீண்டும் கண்டது தொடர்பிலும் தெரிவித்தான்.

தனது பொக்கெட்டில் இருந்து சிகரட் ஒன்றை எடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்ற வைத்துக்கொண்ட ராம்ஜீ நீண்ட உரையாடல் ஒன்றுக்குத் தயாராகும் தோரணையில் பேசத் தொடங்கினான்.

"அந்தக் கொலைகாரி கண்டியில் தான் இருக்கிறாள் என்பது உறுதியாகி விட்டது. அத்துடன் நான் ஐஸ்கிறீம் கடையிலும் பின்னர் அந்தக் கொலைகாரியை பின் தொடரும் போதும் சந்தித்த விநோத மனிதனுக்கும் அந்த கொலைகார கும்பலுக்கும் தொடர்பு இருக்குமா என்பதை சரியாக ஊகிக்க முடியவில்லை.. சில வேளை இந்த நிகழ்ச்சிகள் தற்செயலான சம்பவங்களாக இருக்கலாம்" என்று சற்று நிறுத்திய ராம்ஜீ ஜெய்சிங்கையும் கிருஷ்ணசாமியையும் பார்த்தான்.

பின் அவன் கூறினான்

"ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் இனிமேல் தான் அதிக பங்களிப்புச் செய்ய வேண்டும். நீங்கள் இருவரும் நாளை மாலை ஆறு மணிக்கு கண்டி தலதா மாளிகைக்கு அண்மித்ததாக ராஜ வீதியில் அமைந்துள்ள ஏரிக்கரையோர சிறுவர் பூங்காவுக்கு அடுத்ததாக இருக்கும் லேக் வியூ ஐஸ்கிறீம் கடைக்குச் செல்லுங்கள். சரியாக மாலை ஆறு மணியளவில் அந்த விநோத மனிதன் ஐஸ்கிறீம் அருந்த அங்கு வருவான். அவன் விநோதமாக இருப்பதே அவனை இலகுவில் இனம் காண வழி வகுத்து விடும். அவன் உயரமாக வாட்ட சாட்டமாகவும் விசித்திரமாகவும் இருப்பான். கரிய பருத்த சரீரம், மொட்டைத்தலை, மன்னர் காலத்து அரண்மனைச் சேவகன் போல உடை தரித்திருப்பான். மேலுடையிலும் வேஷ்டியிலும் சிகப்புக்கரை போட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்பட்டைகள் இரண்டிலும் கறுப்பாக பச்சை குத்தப்பட்டிருக்கும்.

அந்த மனிதனை அவன் கொஞ்சமும் சந்தேகிக்காத விதத்தில் பின் தொடர்ந்து அவன் எங்கு செல்கிறான் என்பதை அறிய வேண்டும். அவன் மிகப் பயங்கரமானவனாக இருக்கக்கூடும். அவன் விடயத்தில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூறிய ராம்ஜீ சற்று நிறுத்தினான். பின் ஜெய்சிங்கையும் கிருஷ்ணசாமியையும் பார்த்து நீங்கள் இருவரும் லேன்ட் ரோவரை எடுத்துக் கொண்டு போங்கள். அதனை வீதியில் வசதியான இடத்தில் நிறுத்தி விட்டு உங்கள் வேலையைக் கவனியுங்கள். அந்த மனிதனைப் பின் தொடரும் போது இருவரும் சேர்ந்து செல்ல வேண்டாம். தனித்தனியாக இடைவெளி விட்டு செல்லுவது நல்லது" என்று அவர்களுக்கு அறிவுறுத்தினான்.

தங்களால் அந்த மனிதனை உரிய விதத்தில் கையாள முடியும் என்று தெரிவித்தான் ஜெய்சிங்.

அதனைத்தொடர்ந்து நளாயினியின் பக்கம் திரும்பிய ராம்ஜீ.

"நளாயினி நாமிருவரும் நாளை கண்டி அரும்பொருள் காட்சியகத்திற்குச் சென்று நமது வரலாற்று ஆய்வை அங்கு தொடரலாம் என்று கருதுகிறேன். அத்துடன் நாம் அனைவருமே சித்திராம்பரி எங்கும் தென்படுகின்றாளா என்றும் ஒரு கண் வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்"

அந்த விநோத மனிதனைவிட சித்ராம்பரியே நமக்கு மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் என்பதால் அவளை எங்காவது பார்த்தால் எந்த வேலையிருந்தாலும் அதனை உடனே விட்டு விட்டு சித்ராம்பரியை பின் தொடர வேண்டும். அவள் மிக மோசமான மாயக்காரி என்பதை மறந்து விட வேண்டாம்.

தன்னை யாராவது பின் தொடர்கிறார்கள் என்று தெரிந்தால் அவள் தனக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் பயன்படுத்தத் தயங்க மாட்டாள் அவள் தொடர்பில் மிகக்கவனம் தேவை.

சரி நண்பர்களே! நமது திட்டத்தின் மிகச் சுவாரஸ்யமான பகுதி நாளைதான் ஆரம்பிக்கப் போகிறது என்று கருதுகிறேன். ஆதலால் இன்றைய இரவை நன்றாக உறங்குவதில் செலவழியுங்கள். இத்துடன் இன்றைய கூட்டம் முடிவடைகிறது" என்று அறிவித்தான்.

அதன் பின் ஜெய்சிங்கையும் அழைத்துக் கொண்டு முற்றத்தில் விஸ்கி கிளாஸ்களுடன் அமர்ந்த ராம்ஜீ இந்த மூன்று நாட்களில் தான் அடைந்த முன்னேற்றத்தை டி.எஸ்.பி. சிங்கராயருக்கு அறிவிப்பது நல்லதென்று கருதினான். எனினும் அந்த மச்சக்காரி மற்றும் விநோத மனிதன் ஆகியோர் பற்றி அறிவிக்காமல் ஏனைய விடயங்களை மட்டுமே சொல்வது இப்போதைக்கு போதும் என்றும் அல்லது டி.எஸ்.பி. சிங்கராயர் கண்டி பொலிசாருக்கு அறிவித்தால் கொலைகாரனைப் பிடிப்பது கடினமாகி விடும் என்றும் சிந்தித்த ராம்ஜீ டி.எஸ்.பி.யின் தொலைபேசி இலக்கங்களை சுழற்றினான்.

அடுத்த நாள் நடக்கப்போகும் சம்பவங்கள் ராம்ஜீயின் வாழ்வில் உறங்காத இரவுகளையும் மறக்க முடியாத பாதிப்புக்களையும் ஏற்படுத்தப்போகின்றன என்பதனை ராம்ஜீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது உணர்ந்திருக்கவில்லை. அப்படி உணர்ந்திருந்தால் டி.எஸ்.பி. யிடம் பல விடயங்களையும் மறைக்க நினைத்திருக்க மாட்டான்.

அன்றைய காலைப்பொழுது வழமைக்கு மாறாக சற்று குளிராக இருந்தது. ராம்ஜீயும் ஏனையோரும் சற்று தாமதித்தே எழுந்திருந்தனர். வெளியில் சூரியக்கீற்றுக்கள் மூடு பனியை ஊடுருவி வர்ணக்கோலம் போட்டு விசிறிக்கிடந்தன. மூடுபனிக்கூடாக பச்சை மலைகள் நீல நிற கம்பளிப் போர்வையை போர்த்திக்கொண்டு அசையாமல் உறங்கிக் கொண்டிருந்தன. பறவைக்கூட்டங்களின் கீச்... கீச்... ஒலிகள் அந்த அழகிய காலைப்பொழுதுக்கு மேலும் வர்ணங்கள் சேர்த்தன.

கிருஷ்ணசாமி எல்லோருக்கும் முன்னராக எழுந்திருந்து தேநீர் போட்டுக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. அதனைத்தொடர்ந்து பங்களாவில் இருக்கும் மற்றவர்களும் ஒவ்வொருவராக எழுந் திருந்தனர். கிருஷ்ணசாமி எல்லோருக்குமாக தேநீர் தயாரித்து வராந்தாவுக்குக் கொண்டு வந்து மேசையில் வைத்தார். அனைவரும் மௌனமாகவே தேநீர் அருந்தி விட்டு அவரவர் வேலைகளில் அவசர அவசரமாக ஈடுபட்டிருந்தனர்.

ராம்ஜீயும் நளாயினியும் சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் கண்டி தொல்பொருள் காட்சியகத்துக்குச் செல்வதற்காகப் புறப்பட்டனர். புறப்பட்டுச் செல்லும் போது ஜெய்சிங்கையும் கிருஷ்ணசாமியையும் அழைத்து அன்றைய பணிகளை ஞாபகப்படுத்தினான் ராம்ஜீ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரும் தொல்பொருள் காட்சியகத்தை அடைந்தபோது காலை 9.30 மணி. அது ஒரு வார நாள் என்ற படியால் பெரிதாக சனக்கூட்டம் இருக்கவில்லை. பொதுவாக கண்டிக்கு வரும் சுற்றுலாப்பயணிகளைத் தவிர வேறு யாரும் அப்பக்கம் வருவது கிடையாது. எப்போதாவது பாடசாலை மாணவர்கள் திமு திமுவென்று நுழைந்து முழுக்காட்சியகத்தையும் அதமம் செய்து விட்டுப் போவார்கள். அத்துடன் பொதுவாகப் பார்ப்பதற்கென்று விசேடமான பொருட்கள் எதுவும் அங்கு இல்லை.

ராம்ஜீயும் நளாயினியும் 1800 ஆம் ஆண்டுக்கு முன்பும் பின்பும் கீர்த்தி ஸ்ரீ விக்ரமராஜசிங்க மன்னன் காலத்து வரலாற்று நிகழ்வுகளில் மட்டும் அக்கறை கொண்டிருந்ததால் அது தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைக்குமா என்று மட்டுமே தேடித்திரிந்தனர்.

அங்கே கண்டிய மன்னர்களான விமலதர்ம சூரியன் (விமலதர்ம சூரியன் தலதா மாளிகையை முதன் முதலில் கட்டுவித்தவன்) செனரத் பண்டார, அவனது புத்திரர்களான விஜயபால, குமாரசிங்க, ராஜசிங்கன், இரண்டாம் ராஜசிங்கன், நரேந்திர சிங்கன், கண்டியின் கடைசித் தமிழ் மன்னன் ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் ஆகியோர் காலத்து தொல்பொருட்கள் காலக்கிரமப்படி காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கெலப் பொலவின் கத்தி

ராம்ஜீயும் நளாயினியும் கண்டி தொல்பொருட் காட்சியகத்தில் தமக்கு ஏதும் துப்போ, துரும்போ கிடைக்காதா என அலசிக்கொண்டு வந்தனர். சுமார் அரை சகாப்த வரலாற்று பதிவுகள் அங்கு குவிந்து கிடந்தன. அவற்றை ஒவ்வொன்றாக குடைந்து ஆராய்வது இலகுவான காரியமல்ல.

மக்கள் அன்றாடம் பயன்படுத்திய பொருட்கள், கலை கலாசார நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள், ஆபரணங்கள், மட் பாண்டங்கள், இரும்புப் பொருட்கள், ஓவியங்கள், ஏட்டோலைகள், நாணயங்கள், இப்படி இன்னோரன்ன பொருட்கள் அங்கே வரிசைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமப்படி காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ராம்ஜீயும், நளாயினியும் இவற்றை மிகப் பொறுமையுடன் அவதானித்தும், ஆங்காங்கே எழுதப்பட்டிருந்த குறிப்புக்களை படித்தும் ஆராய்ந்தும் கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு காட்சிப் பொருளையும் மிக நிதானத்துடனும் மெதுவாகவும் ஆராய வேண்டியிருந்ததால் நேரம் மிக வேகமாகக் கடந்து கொண்டிருந்ததனை அவதானிக்கவில்லை.

ராம்ஜீ ஒவ்வொரு காட்சிக்கூடமாகப் பார்வையிட்டுக் கொண்டு வந்தவன் மன்னர்கள், பிரதானிகள் பயன்படுத்திய போராயுதங்கள், யுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், கத்திகள், வாள்கள், கேடயங்கள் முதலான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கூடத்துக்கு வந்ததும் முகம் மலர்ந்தான். சற்று தூரத்துக்கப்பால் ஏதோ ஒரு கலைப்பொருளைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த நளாயினியையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்த பொருட்களை துழாவ ஆரம்பித்தான் ராம்ஜீ.

அவர்கள் அத்தகைய பொருட்களை மிக ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டே வந்தனர். இறுதியாகக் காணப்பட்டவைகள் கீர்த்தி ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் காலத்தவை. அவற்றை அவர்கள் ஒவ்வொன்றாக ஆராய முற்பட்ட போது அவர்கள் இருவரது நெஞ்சங்களுமே மிக மிகப் படபடப்பாக இருந்தமையினை வெளிப்படையாக உணர்ந்தனர்.

குறிப்பாக கண்டிய மன்னர்களும், பிரதானிகளும் பயன்படுத்திய கத்திகள் என்ற தலைப்பின் கீழ் இருந்த பொருட்களை மிகக் கவனமுடன் அவதானித்தனர். நளாயினி ராம்ஜீக்கு கேட்கும் தொனியில் ஒவ்வொரு பொருளின் கீழும் எழுதப்பட்டிருந்த அந்தப் பொருளுடன் சம்பந்தப்பட்ட சுருக்கக் குறிப்பினை சத்தத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தாள். அப்படியே தொடர்ந்து வாசித்துக் கொண்டு வந்தவள் ஒரு குறிப்பைக் கண்டதும் சற்று நிறுத்தி ராம்ஜீயைப் பார்த்தாள்.

ராம்ஜீயும் அவள் பக்கம் திரும்பி அவள் கவனத்தை திசை திருப்பிய அந்தப் பொருள் என்னவென்று பார்த்தான். எனினும் அங்கே அந்தப் பொருள் இருக்கவில்லை. மாறாக அந்தப் பொருள் இருந்த இடம் வெற்றிடமாக இருந்தது. எனினும் அந்தப் பொருள் பற்றிய குறிப்பு அப்படியே இன்னமும் இருந்தது. அந்தக் குறிப்பைப் படிக்கும் எவருக்கும் அந்த இடத்தில் என்ன பொருள் இருந்திருக்கக் கூடும் என்பதனை இலகுவாக ஊகிக்க முடியும்.

அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

“18 ஆம் நூற்றாண்டின் முற்காலத்தைச் சேர்ந்த இந்த கத்தி எகலப்பொல மகா அதிகாரத்துக்கு சொந்தமானது. யானைத் தந்தத்தால் ஆன கை வேலைப்பாடுகளுடன் கூடிய கைப்பிடியைக் கொண்டு மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டது. இதனை எகலப்பொல மகா அதிகாரம் தனது மைத்துனரான கெப்பட்டிபொலவுக்கு 1814 ஆம் ஆண்டு பரிசாகக் கொடுத்திருந்தார். 1817 ஆம் ஆண்டு ஆங்கில அரசாங்கம் கெப்பட்டிபொலவை கைது செய்த போது அவரிடம் இருந்து இக்கத்தி கைப்பற்றப்பட்டது”

இக்குறிப்பை ராம்ஜீயும் நளாயினியும் சேர்ந்தே வாசித்தனர். அவர்கள் முகத்தில் வியப்பு, ஆச்சரியம், மகிழ்ச்சி ஆகிய முக பாவங்கள் மாறி மாறி இழையோடின. இருந்தாலும் அங்கிருந்த கத்திக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்குறி எழுந்தது. அங்கிருந்த காட்சியக பராமரிப்பாளரிடம் சென்று விசாரித்தால் உண்மை தெரியும் என்று நினைத்த ராம்ஜீ நளாயினியையும் அழைத்துக் கொண்டு பராமரிப்பாளரின் அலுவலகத்துக்கு விரைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருள் பராமரிப்பாளர் என்ற பெயர்ப் பலகை போடப்பட்டிருந்த அறைக்குள் அவர்கள் நுழைந்த போது மேசைக்கு மேல் பல்வேறு புத்தகங்கள் மற்றும் புராதனப் பொருட்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் தலை மட்டுமே மெதுவாகத் தெரிந்த ஒரு குள்ளமான மனிதர் யார் வருகிறார்கள் என்று நிமிர்ந்து பார்த்தார்.

தடித்த மூக்குக் கண்ணாடியும் அதற்குக் கீழ் இருந்த கூர்மையான மூக்கு நுனியும் அதற்குக் கீழ் இருந்த குறுந்தாடி, மீசை என்பவற்றுக்கு மத்தியில் மெல்லிய கோடுகள் போல் இருந்த உதடுகளும் அந்த மனிதரை "டின் டின்" சித்திரக் கதைகளில் வரும் பேராசிரியர் "கல்குலஸ்" பாத்திரத்தை நினைவுபடுத்தின.

அந்த மனிதருக்கு அறுபது வயதே ஆகியிருக்குமெனினும் அவர் எழுபது வயதை அடைந்தவர் போல் தோற்றம் தந்தார். தனது கண்களில் இருந்த மூக்குக் கண்ணாடியை அகற்றி விட்டு என்ன வேண்டும் என்பது போல் பார்த்தார். பின்னர் அவர்கள் தோற்றத்தைக் கண்டு அவர்கள் வெறுமனே புறக்கணிக்கக் கூடியவர்கள் அல்ல என்று நினைத்தவர் போல் அருகில் இருந்த நாற்காலிகளைக் காட்டி அமரும்படி சைகை செய்தார்.

நாற்காலிகளில் அமர்ந்து கொண்ட இருவரும் தம்மை அறிமுகம் செய்து கொண்டனர்.

ராம்ஜீ தான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பாடத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் கண்டி இராஜ்ஜியத்தின் இறுதிக்கால வரலாற்றை ஆராய்ந்து ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க முயற்சி செய்து வருவதாகவும் நளாயினி தனது உதவியாளர் என்றும் அறிமுகப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஆமோதித்த அவர் தன்னால் ஏதும் ஆக வேண்டுமா? என்று வினவினார்.

"ஆம்" என்று கூறிய ராம்ஜீ, தான் கண்டி இராச்சியத்தின் இறுதிக்கால வரலாற்றை ஆராய்ச்சி செய்த போதும் குறிப்பாக எஹலப்பொல மகா திசாவை அவன் மனைவி குழந்தைகள் மற்றும் அவன் மைத்துனன் கெப்பட்டிபொல திசாவை ஆகியோரின் வாழ்வு தொடர்பில் தான் தனது ஆய்வு அமைந்திருப்பதாகக் கூறினான்.

பின்னர் தொல்பொருள் காட்சியகத்தில் எஹலப்பொலவின் கத்தி பற்றியும் தான் பார்த்த குறிப்புப் பற்றியும் கூறி அந்தக் கத்திக்கென்னவாயிற்று என்றும் வினவினான்.

ராம்ஜீ இவ்விதம் வினவியதும் அந்த மனிதர் சற்று அதிர்ச்சியடைந்தவர் போல் தோன்றினார். அவன் கூறும் விடயம் தன்னுடன் சம்பந்தப்படாதது போலவும் தனக்கு விளங்காதது போலவும் பாவனை செய்தார்.

இருந்த போதும் ராம்ஜீ விடவில்லை. அந்த கத்தி தொடர்பான சகல விபரங்களையும் கூறி அரும் பொருட்கள் தொடர்பான விபரப்பட்டியலில் பார்த்து அந்தக் கத்திக்கு என்னவாயிற்று என்று பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொண்டான்.

அதன் பின்பும் அது விடயத்தை மறுப்பது சந்தேகத்தை உண்டு பண்ணும் என்று கருதிய பராமரிப்பாளர், சில கனத்த விபரப் புத்தகங்களை எடுத்தார். அவற்றில் ஒவ்வொன்றாகப் புரட்டி இலக்கங்களை சரி பார்த்த பின் ஒரு புத்தகத்தை தேர்ந்தெடுத்தார். அதனைப் புரட்டி குறித்த இலக்கத்தைக் கொண்ட ஏட்டைத் தேடி "எஹலப்பொலவின் கத்தி" என்ற தலைப்பிலான குறிப்புக்களை வாசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவர் ஒன்றும் தெரியாதவர் போல் ”அந்த கத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளது” என்று கூறினார்.

“அது கண்டுபிடிக்கப்படவில்லையா?” என்று வினவினான் ராம்ஜீ.

“இந்த விடயம் பொலிஸுக்கு புகார் செய்யப்பட்டது. அவர்கள் விஜயபால பண்டார என்பவன் மீது சந்தேகம் கொண்டு அவனைத் தேடி வந்தனர். ஆனால் ஒருநாள் அவன் கண்டி வாவியில் பிணமாக மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டான்” என்று கூறினார் பராமரிப்பாளர்.

அதன் பின் தாம் தேடித்திரியும் கத்தியும், களவு போன கத்தியும் ஒரே மாதிரியானதுதானா என்பதனை அங்கிருந்த போட்டோ பிரதியொன்றின் மூலம் உறுதி செய்து கொண்ட ராம்ஜீயும் நளாயினியும் அங்கிருந்து வெளியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருகே வந்து விட்ட ஆபத்து

**கண்**டி அரும்பொருட் காட்சியகத்தில் பார்த்தவையும், கேட்டவையும் ராம்ஜீயினதும் நளாயினியினதும் சிந்தனையில் வியப் புக் குறிகளாக விரிந்தன. எனினும், அவர்கள் எஹலப்பொலவின் கத்தி தொடர்பில் விசாரித்து ஒரு பெரும் பொறியில் சிக்கிக் கொண்டனர் என்பதை அத்தருணத்தில் உணரவில்லை. அவர்கள் அங்கிருந்து வெளியேறியதும் திரைக்குப் பின்னால் பல காரியங்கள் விரைந்து நிகழலாயின.

இதுவரை தனது மனதில் பூகம்பமாய் வெடித்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்குழப்பங்களை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொண்டிருந்த அரும்பொருட் காட்சியக பராமரிப்பாளர் ராம்ஜீயும் நளாயினியும் அங்கிருந்து வெளியேறி விட்டமையை உறுதி செய்து கொண்ட பின்பு சட்டென்று பின்புறக்கதவைத் திறந்து கொண்டு அவரது அலுவலகத்துடன் ஒட்டியதாக அமைந்திருந்த அடுத்த அறைக்குச் சென்றார்.

இவரது வரவையே பரபரப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த அறையில் இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்த அந்தப் பெண் இவரை நோக்கி வேகமாக வந்தாள்.

தன் பொறுமையை இழந்திருந்த அந்தப் பெண் வேறு யாரு மல்ல, அவள் சித்ராம்பரிதான்.

அவள் பரபரப்புடன் கேட்டாள்,

"மாமா... சொல்லுங்கள், என்ன நடந்தது? அவர்கள் என்ன கேட்டார்கள்"

சித்ராம்பரியின் மாமா முறை உறவினரான நரசிங்க பண்டார கூறினார்.

"அவர்கள் காணாமல் போன எஹலப்பொலவின் கத்தியைப் பற்றி விசாரித்தார்கள். யார் அவர்கள்? பொலிஸ்காரர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமோ?"

"இல்லை... அவன் பொலிஸ்காரன் இல்லை. எனக்கு அவனை ஞாபகமிருக்கின்றது. கொழும்பிலும் அவன் ஒரு முறை என்னைத் தொடர்ந்து வந்தான். பின் பொலிஸ்காரர்களை என் மீது ஏவி விட்டவனும் அவன்தான்."

"இப்போது என்ன செய்யலாம்?" நரசிங்க பண்டாரவின் குரலில் பயம் தொனித்தது.

சித்ராம்பரி தனது பையில் இருந்து செல்போனை எடுத்து ஒரு நம்பரை சுழற்றினாள். பின் யாருடனோ பேசினாள். அவள் அவனிடம் கூறினாள்,

"சித்ரசேன, உடனடியாக வேலை ஒன்று செய்ய வேண்டும். இப்போது இங்கிருந்து ஒரு மனிதனும் அவனுடன் ஒரு பெண்ணும் வெளியேறினார்கள். ஆண், கபில நிறத்தில் காற்சட்டையும் மென் பச்சை நிறத்தில் டிசைன் போட்ட நீளக்கைச்சட்டையும் அணிந்திருக்கும் சராசரிக்கும் மேல் உயரமான வாட்டசாட்டமான மனிதன். அவனுடன் உள்ள பெண், பச்சை நிற கட்டைக் கவுண் அணிந்த சிவந்த அழகிய பெண். உடனே அவர்களைப் பின் தொடர்ந்து அவர்கள் யார்? எங்கு தங்கியிருக்கிறார்கள் என்ற விபரங்களை விசாரித்து விட்டு எனக்கு டெலிபோன் செய். தவற விட்டுவிடாதே" என்று கூறி விட்டு புறப்படுவதற்காக எழுந்திருந்தாள்.

அவள் முகத்தில் கவலையும் பீதியும் படர்ந்திருந்தது. "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பே சொன்னேன். இந்த நாடகத்தனமான விளையாட்டு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று. யாரும் கேட்டார்களா?" என்று கூறிவிட்டு அவள் வெளியே செல்லத் தயாரானாள்.

அவளது பீதியும், பயமும் நரசிங்க பண்டாரவையும் தொற்றிக் கொண்டது. அவரது இருதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது.

ரஞ்சித் நிமல ஸ்ரீ பண்டார ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்த வனாக கட்டிலில் மல்லாந்து படுத்து அந்த பழங்கால கட்டிடத்தின் உயர்ந்த கூரையில் இருந்து தொங்கியவாறு சுழன்று கொண்டிருந்த மின்விசிறியையே பார்த்துக்கொண்டிருந்தான்.

கண்டியில் எஞ்சி இருந்த மிகப் பழங்கால வளவ்வ என்று வழங்கப்படும் சிங்கள மேட்டுக்குடி மக்கள் வாழ்ந்திருந்த மாளிகைகளில் ஒன்றுதான் "மொனரவில' வளவு. (சிங்கள மேட்டுக்குடி நில உடமைக்காரர்களின் மாளிகை போன்ற வீடும் தோட்டமும் தமிழில் வளவு என்பது சிங்களத்தில் "வளவ்வ" என்று வழங்கப்படுகின்றது.)

அந்த மாளிகை சுமார் முன்னூறு வருட கால பழைமை வாய்ந்ததாக இருந்த போதும், பழைமை வெளித் தெரியாத அளவுக்கு மெருகூட்டப்பட்டிருந்தது. அந்த "வளவை" சுற்றி சுமார் ஐந்து ஏக்கர் நிலம் புதர்கள் மண்டி காடாகிக் கிடந்த போதும் வீட்டைச் சுற்றி மாத்திரம் அழகிய பூங்கா அமைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மாளிகை எஹலப்பொல திசாவை வாழ்ந்த மாளிகை என்று ரஞ்சித் நிமல ஸ்ரீ பண்டார கேள்விப்பட்டிருந்தான். இதனை கோணப்பு பண்டார அடிக்கடி ஞாபகப்படுத்துவது வழக்கம்.

ஒரு காலத்தில் மிகச்சுறுசுறுப்பாகவும் ராஜகம்பீரத்துடனும் காணப்பட்ட அந்த வளவு பாரிய பூதாகரமான பேய் மாளிகை போன்று இன்று உள்ளது. எனினும் இன்றைய உலகின் நவீன வசதிகள் அனைத்தும் அந்த மாளிகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

கோணப்பு கரலியத்த பண்டாரவின் இரகசிய அமைப்பின் தலைமையகமாகவே அந்த மாளிகை விளங்கியது. அந்த வீட்டுக்கும் இரகசிய அமைப்புக்கும் முகாமையாளனாக செயற்பட்டவன்தான் ரஞ்சித் நிமலஸ்ரீ பண்டார. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவனாக இருந்தவன் அவன்.

அக்கட்சியின் தலைவர் ரோகண விஜயவீரவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவனாக இருந்ததால் கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பாள னாக செயற்பட்டான்.

அக்காலத்தில் விஜேவீரவின் கொள்கைகளில் ஒன்றாக இருந்த இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிரான நடவடிக்கைக்கு மிகுந்த ஆதரவளித்தவன் என்ற வகையில் விமர்சிக்கப்பட்டவன். இலங்கையின் தேயிலைப் பெருந்தோட்டங்கள் அனைத்தையும் கைப்பற்றி அந்நிலங்களை சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கூறியதுடன், சகல இந்தியத் தோட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களையும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தான்.

1971 ஏப்ரல் கிளர்ச்சி தோல்வியடைந்த பின் ஐந்து வருடங்களை சிறையில் கழித்து விட்டு வந்த பின் 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற மலையக தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறையில் தீவிரமாகப் பங்குபற்றி கண்டியில் தமிழர்களுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தினான். பின் பொலிஸார் தேடியபோது தலைமறைவாகி இன்றுவரை கோணப்பு பண்டாரவின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றான்.

தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டிருந்த ரஞ்சித்தின் கவனத்தை அழைப்பு மணியின் ஓசை கவர்ந்தது. இவ்வேளையில் அங்கு யார் வரக்கூடும் என்று யோசித்தவாறே கதவைத்திறந்த ரஞ்சித் சித்ராம்பரியின் கலவரமான வருகையால் தானும் பதற்றம் அடைந்தான்.

புயலின் வேகத்துடன் உள்ளே நுழைந்த சித்ராம்பரி கைப்பையை அங்கிருந்த மேசை மீது வீசி விட்டு நாற்காலியில் பொத்தென்று அமர்ந்தாள். அவள் உடம்பு வேர்வையால் நனைந்திருந்தது.

"என்ன நடந்தது சித்ரா... ஏதும் பிரச்சினையா?" வினவினான் ரஞ்சித்.

"பிரச்சினை மட்டுமல்ல. ஆபத்து மிக அருகில் வந்துவிட்டது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படபடத்தாள் சித்ராம்பரி.

அவள் தொடர்ந்து கூறிய விடயங்கள் ரஞ்சித் நிமலஸ்ரீ பண்டாரவின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து விட்டது.

சித்ராம்பரி சொன்ன விடயங்களைக் கேட்டு ரஞ்சித் சிலையாய் சமைந்திருந்தான். ஆபத்து அருகில் வந்துவிட்டதனை அவனாலும் உணர முடிந்தது.

சித்ராம்பரி ஏற்கனவே தன்னை முதல் நாள் இரவு ஒரு மனிதன் தொடர்ந்து வந்தமை பற்றியும் அவன் முன்பு கொழும்பில் ரவி சித்ரவேலு நாயக்கரின் கொலை நடைபெற்ற இரவில் தன்னைத் தொடர்ந்து வந்தவன் என்றும் ரஞ்சித்திடம் தெரிவித்திருந்தாள்.

அதே மனிதன் இப்போது கொழும்பில் இருந்து தம்மை மோப்பம் பிடித்து கண்டிக்கும் வந்துவிட்டான். அத்துடன், அவன் கண்டி அரும்பொருள் காட்சியகத்துக்குச் சென்று அந்த கத்தியைப் பற்றியும் விசாரித்திருக்கின்றான் என்றால் அவனுக்கு கீரிப்பிள்ளை மற்றும் அதன் வரலாறு தொடர்பிலும் தெரிந்திருக்க வேண்டும்.

அத்துடன், இந்த உண்மைகள் அவனுக்கு மாத்திரமன்றி வேறு சிலருக்கும் தெரிந்திருக்கக் கூடும். சிலவேளை, பொலிஸாருக்கும் தெரிந்திருக்கலாம். அப்படியானால் இன்றோ, நாளையோ பொலி ஸார் அவர்களை சுற்றி வளைத்துவிட முடியும்.

இத்தகைய சிந்தனை அவர்கள் இருவரையும் பிரமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவர்களாக ஆக்கியது. அவர்கள் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கிப் போனார்கள்.

இது தொடர்பில் தமது இரகசிய அமைப்பின் தலைவனான கோணப்பு கரலியத்த பண்டாரவுக்கு அறிவிப்பதைத் தவிர அவர்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலாய்க்கும் காரிகை

தந்தப் பிடி போட்ட கலை வேலைப்பாடுகளுடன் கூடிய எஹலப்பொலவின் கத்தி, கீரிப்பிள்ளை போன்ற விடயங்கள் ரவி பெருஞ்சித்திரத் தேவனினதும் மேலும் நால்வரினதும் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளன. இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் கண்டியில்தான் இருக்கிறார்கள் என்பதும் யாரோ ஒருவனுக்கு தெரிந்துள்ளது. அவன் அவர்களைத் தேடிக்கொண்டு கண்டிக்கே வந்து விட்டான் என்ற விடயம் சித்ராம்பரிக்கும், ரஞ்சித் நிமலஸ்ரீக்கும் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது.

இருந்தாலும் அவர்கள் எந்தக் காரணத்துக்காகவும் கோணப்பு கரலியத்த பண்டாரவின் கருத்துக்கு எதிர்க்கருத்து கூற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு எதிராக அவர்கள் சிந்திக்கின்றார்கள் என்று தெரிந்தால் கூட அவர்களது உயிர் அவர்களுக்கு சொந்தமாக இருக்காது என்பது சித்ராம்பரிக்கும், ரஞ்சித்துக்கும் நன்கு தெரிந்த விடயம்.

மறுபுறத்தில் கோணப்பு பண்டாரவை எந்த சந்தர்ப்பத்திலும் யாரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அவன் எந்த வில்லாதி வில்லனையும் கணத்தில் மடக்கிப் போட்டு விடுவான். பொலிஸ், இராணுவம், மதத்தலைவர்கள் ஏன் ஜனாதிபதி வரைக்கும் கூட அவன் செல்வாக்கின் கரங்கள் நீண்டிருந்தன.

இத்தகைய சிந்தனையால் அவர்கள் சற்றே ஆறுதல் அடைந்தாலும் தம்மைப் பற்றிய உண்மைகளை யாரோ ஒருவன் கண்டுபிடித்துவிட்டான் என்பது அவர்களை ஜீரணிக்க விடாமல் தடுத்தது.

அப்போது சித்ராம்பரியின் செல்போன் கிணுகிணுத்தது. அவள் அதனை கைப்பையில் இருந்து எடுத்து 'ஹலோ' சொன்னாள்.

அவள் எதிர்பார்த்தபடி ராம்ஜீயையும், நளாயினியையும் கண்காணிக்க அவளால் அனுப்பப்பட்டிருந்த ஆள்தான் போன் பண்ணினான்.

"சொல்! என்ன நடந்தது?" சொற்கள் அவள் உதடுகளில் இருந்து அவசரமாக வெளிவந்தன.

அவன் கூறினான்.

"நீங்கள் குறிப்பிட்ட படி அவர்களைப் பின் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றேன். அவர்கள் "மவுண்டன் வியூ" ரெஸ்ட்டோரண்டுக்குச் சென்று உணவருந்தினார்கள். பின் கடைத்தெருவில் அங்கும் இங்கும் சுற்றினார்கள். சில பொருட்களை வாங்கினார்கள். மீண்டும் கண்டி வாவிக்கு சென்று மீன்களுக்கு பொரி போட்டார்கள்..."

அவள் இடைமறித்து உறுமினாள் "மடையா! அதையெல்லாம் யார் கேட்டது. அவர்கள் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தாயா?"

"இல்லை மேடம்... அவர்கள் திடுதிப்பென்று அருகில் பார்க் செய்யப்பட்டிருந்த காரில் ஏறிச்சென்று விட்டார்கள். அவர்கள் மலைப்பக்கமாகத்தான் போனார்களா". அவன் தயங்கித் தயங்கி கூறினான்.

"மடையா... மடையா... விசயத்தை கோட்டை விட்டு விட்டாயே!.... சரி கார் நம்பராவது தெரியுமா?"

"கார் நம்பர் தெரியும்... WP----GE 1435566"

அவள் டெலிபோனை மடித்து வைத்து விட்டு ரஞ்சித்தை நோக்கினாள். "மடையன் ஆட்களை நழுவவிட்டு விட்டான். ஆனால் கார் நம்பர் தெரியும்." அவள் கார் நம்பரைக்கூறி அந்தக் காரின் சொந்தக்காரனை கண்டுபிடிக்கும்படி கூறினாள்.

ரஞ்சித்துக்கும் மனப்பயம் ஏற்பட்டிருந்ததால் அவனும் உடனே செயற்பட்டான். WP----GEஎன்று இருப்பதால் அது மேல் மாகாண சபையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். அப்படியாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில்தான் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அவன் உடனே அவர்களின் கொழும்பு முகவரான சூரிய பண்டாரவின் தொலைபேசி எண்களைச் சுழற்றினான். கார் நம்பரைக் கூறி உடனடியாக அதன் சொந்தக்காரன் யார் என்று கண்டுபிடித்துச் சொல்லும்படி கூறினான்.

இன்னும் ஒரு மணி நேரத்தில் கண்டுபிடித்துச் சொல்வதாக சூரியபண்டார தெரிவித்தான்.

"இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்த மனிதன் யார் என்பது தெரிந்து விடும்' என்று சித்ராம்பரியைப் பார்த்துத் தெரிவித்த ரஞ்சித் அவன் இங்கே எங்கேயாவது ஹோட்டலில் அல்லது சுற்றுலா பயணிகளுக்கான பங்களாக்கள் ஒன்றில்தான் தங்கியிருக்க வேண்டும். அவன் நம்மைத்தேடி வருவதற்கு முன் நாம் அவனைத் தேடித் தீர்த்து விடுவது நல்லது" என்று தீர்மானமாகக் கூறினான்.

அவர்கள் இருவரும் சூரிய பண்டாரவின் தொலைபேசி அழைப்பு வரும் வரைக்கும் காத்திருந்தனர்.

**ராம்**ஜீயும் நளாயினியும் முக்கியமான ஒரு தகவல் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் அது பற்றி கலந்துரையாடியவாறு கண்டி வீதிகளில் அங்கும் இங்கும் சுற்றித் திரிந்தனர். மவுண்டன் வியூ ரெஸ்ட்டூரன்டுக்குச் சென்று திருப்தியாகச் சாப்பிட்டனர். அதன் பின் கண்டி வாவிக்குச் சென்று அங்கு சுதந்திரமாக துள்ளித்திரிந்த மீன்களுக்கு பொரி வாங்கிப் போட்டு ஆனந்தித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது ஒவ்வொரு அசைவையும் நடவடிக்கைகளையும் ஒரு பருத்த குள்ளமான மனிதன் விடாது அவதானித்து வருவதனை அவர்கள் உணரவில்லை.

இரவு ஏழு மணியாகி விட்டதனை உணர்ந்த ராம்ஜீ சிலவேளை ஜெய்சிங்கும், கிருஷ்ணசாமியும் ஏதும் தகவல்களை வைத்துக்கொண்டு காத்திருத்தல் கூடும் என்று கருதி வீட்டுக்குச் செல்லத் தீர்மானித்தனர். அவர்கள் உடனடியாக திடுதிப்பென்று தமது கார் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்துக்குச் சென்று காரில் ஏறி சரால் என்று வீட்டை நோக்கி சென்றனர்.

இந்தத் திடீர் திருப்பத்தால் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தவன் திகைத்துப் போய் அங்கேயே நின்று விட்டதனையும் அவர்கள் அறியவில்லை.

சித்ராம்பரியும் ரஞ்சித்தும் சூரியபண்டாரவின் தொலைபேசி அழைப்புக்காகக் காத்திருந்த அந்த ஒரு மணி நேரமும் ஒரு யுகம் போலத் தோன்றியது. ரஞ்சித் தமக்கு மிக அருகில் வந்துவிட்ட இந்த ஆபத்தில் இருந்து தப்புவதாயின் துப்பறியும் அந்த மனிதன் யார் என்பதனையும் அவன் எங்கே இருக்கிறான் என்பதனையும் கண்டுபிடித்து உடனடியாக அவனைத் தீர்த்துக்கட்டிவிடுவதே நல்லதென்று கூறினான்.

ஆனால் சித்ராம்பரி அவனைவிட வெகு புத்திசாலி என்பதனை அவள் அழுத்தி கூறிய சொற்கள் பறைசாற்றின.

அவள் கூறினாள்.

"ரஞ்சித் நீ நினைப்பது போல் இந்த ஆபத்தில் இருந்து தப்புவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு இலகுவானதல்ல. இந்த மனிதனை ஒழித்து விடுவதால் மட்டும் ஆபத்து நீங்கி விடாது என்றே கருதுகிறேன். இந்த மனிதன் என்னை பலமுறை தொடர்ந்து வந்துள்ளான். என்னைப் பற்றியும், நம்மைப் பற்றியும், நமது அமைப்பைப் பற்றியும் கட்டாயம் தெரிந்து வைத்திருக்கின்றான். நாம் யார் என்பதனையும் எந்த வரலாற்றுப் பின்னணியில் செயற்படுகின்றோம் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கின்றது."

இந்தத் தகவல்களை அவன் பலருக்கும் தெரிவித்திருக்கலாம். மற்றது அவன் பொலிஸாருடன் தொடர்புடையவனும் கூட, ஆதலால் வெறுமனே அவனைத் தீர்த்துக் கட்டிவிடுவதால் நாம் மேலும் ஆபத்தில் சிக்கிக்கொள்ளவே செய்வோம்" என்றும் அவள் கூறினாள்.

எனினும் அதனையெல்லாம் ரஞ்சித் ஏற்கத்தயாராக இல்லை. அவன் வாழ்ந்த, வளர்ந்த பின்னணி அப்படி. அவன் தன்னைவிட புத்திசாலியும் வீரம்மிக்கவனும் உலகில் வேறு யாரும் இருக்க முடியாது என்று நம்பினான். அத்துடன் கரலியத்த பண்டாரவின் செல்வாக்குக்கு முன்னர் பொலிஸாரால் நின்றுபிடிக்க முடியாது என்று பலமாக நம்பினான்.

அமைப்பின் இரகசிய நடவடிக்கைகளில் ஒன்றாக அந்த பங்களாவில் ஒன்றாக வசித்து வருவதாலும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தார்கள். இருந்தாலும் சித்ராம்பரி தன் இதயத்தால் அவனை காதலித்த அளவுக்கு ரஞ்சித் அவளை காதலிக்கவில்லை என்பது சித்ராம்பரிக்குத் தெரியும். பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களின் பாலியல் இச்சைக்கு வடிகால்களேயன்றி அவர்களால் வேறு பயன் இல்லை என்று கருதுபவன் ரஞ்சித். இதை அவன் வெளிப்படையாகவே சித்ராம்பரியிடம் தெரிவித்திருந்தான். இருந்தும் அவன் தோற்றத்தின் கவர்ச்சி, திடகாத்திரம், வீரம், ஆண்மை முதலான அம்சங்களால் சிக்குண்டு அவள் அவன் மேல் அளவற்ற காதல் கொண்டிருந்தாள்.

இப்போது ஏற்பட்டிருக்கும் குழப்பத்தில் சித்ராம்பரி ரஞ்சித்தையும் அழைத்துக்கொண்டு அமைப்பில் இருந்து இரகசியமாக எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு தப்பிச் சென்று விடவே விரும்பினாள். ஆனால் ரஞ்சித்தை அதற்கு இணங்கப் பண்ணுவதென்பது இலேசான காரியமல்ல. உண்மையில் கரலியத்த பண்டாரவின் நிழலில் இருப்பதே தனக்குப் பாதுகாப்பானது என்று ரஞ்சித் கருதினான். சித்ராம்பரி கூடுமானவரை அவன் மனதை மாற்றிப்பார்ப்பது என்று தீர்மானித்தாள். முடியாத பட்சத்தில் எங்கேயாவது தப்பி ஓடிவிடலாம் என்றும் திட்டம் போட்ட அவள் அதற்கு கொஞ்சம் பணத்தையும் திரட்டிக் கொள்ள வேண்டும் என்று கருதினாள்.

அப்போது அங்கிருந்த தொலைபேசி மணி ஓசை எழுப்பியது. அழைப்பு சூரிய பண்டாரவிடம் இருந்து இருக்கலாம் என்று கருதியவாறே ரிசீவரை எடுத்து ”ஹலோ” கூறிய ரஞ்சித் மறுபுறத்தில் சூரிய பண்டாரதான் பேசுகிறான் என்பதனை உறுதி செய்து கொண்ட பின் விடயத்தைக் கூறும்படி அவசரப்படுத்தினான்.

மறுபுறத்தில் சூரிய பண்டாரவின் கரகரப்பான குரல் ஒலித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அந்தக்கார் ராம்ஜீ உலகநாதன் என்பவருக்குச் சொந்தமானது. அவர் கொழும்பில் பிரபலமான வர்த்தகப் பிரமுகர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு அதிபதி. சொந்தமாகப் பல வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. கொலை செய்யப்பட்ட ரவி சித்திரவேலு நாயக்கன் மற்றும் திருமதி ரவி சித்திரவேலு நாயக்கன் ஆகியோரின் மிக நெருங்கிய நண்பன்”

இவ்வாறு சூரிய பண்டார தெரிவித்த தகவல்களை ரஞ்சித் சித்ராம்பரியிடம் தெரிவித்தான். அதன் பிரகாரம் ராம்ஜீ என்பவனையும் அவனுடன் இருக்கும் பெண்ணையும் கண்டுபிடித்து தீர்த்துக்கட்டிவிடலாம் என்று சித்ராம்பரிக்கு ஆறுதல் கூறினான் ரஞ்சித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மர்மம் நிறைந்த மாளிகை

**ராம்**ஜீயும் நளாயினியும் தாம் கொலைகாரனைப் பற்றி பல்வேறு தகவல்களையும் சேகரித்து விட்டதாக ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்த போதும் அவர்கள் தம்மையறியாமலேயே கொலைகாரனின் வலைக்குள் கொஞ்சம் கொஞ்சமாக சிக்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் தாம் கொஞ்சம் கொஞ்சமாக கொலை காரர்களை நெருங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிய போதும் கொலைகாரர்களும் அவர்களை மிகச் சமீபமாக நெருங்கி விட்டனர் என்பதனை அறிந்திருக்கவில்லை.

மறுபுறத்தில் ராம்ஜீ என்பவன் கண்டியில்தான் தங்கி இருக்கிறான் என்பதால் அவனை சுலபமாகக் கண்டுபிடித்து தீர்த்துக்கட்டி விடலாம் என்று ரஞ்சித் சித்ராம்பரியிடம் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்னதான் ஆறுதல் சொன்ன போதும் சித்ராம்பரியின் மனம் அமைதியடையவில்லை. அத்துடன், இப்போதைக்கு இந்த விடயத்தை தம்முள்ளேயே வைத்திருக்கவும் இருவரும் தீர்மானித்தனர்.

ராம்ஜீயும் நளாயினியும் வீட்டையடைந்த போது இரவு எட்டு மணியை அண்மித்திருந்தது. அவர்களது கார் முற்றத்தை அடைந்த மாத்திரத்திலேயே ஜெய்சிங் ஓடோடி வந்தான். அவனுடைய சுறுசுறுப்பில் இருந்தே அவனும் கிருஷ்ணசாமியும் சென்ற காரியம் வெற்றியடைந்திருக்கின்றது என்பதனை புரிந்து கொண்டான் ராம்ஜீ.

காரில் இருந்து இறங்கியவாறே ராம்ஜீ கேட்டான். "என்ன ஜெய்சிங் போன காரியம் என்னவாயிற்று"

"நீங்கள் கொடுத்திருந்த பணிப்புரைகளின் படியே அந்த விநோத மனிதனை நாங்கள் பின் தொடர்ந்தோம் சேர். அந்த மனிதன் ஐஸ்கிறீம் சாப்பிட்டதே ஒரு கண்காட்சியை நடத்தியது போல் இருந்தது. ஆனால், அதன் பின் அவன் எங்களை படாத பாடு படுத்தி விட்டான்"

"என்ன சொல்கிறாய்" என்று வினவிய ராம்ஜீ அவர்களை முற்றத்து நாற்காலிகளில் அமரச் செய்து விட்டு "எங்கே கிருஷ்ணசாமி" என்று கேட்டவாறே உள்ளே சென்றான். நேரே குளிர்சாதனப் பெட்டிக்குச் சென்று இரண்டு பியர் கேன்களை எடுத்துக் கொண்டு வந்து ஒன்றை ஜெய்சிங்கிடம் நீட்டியவாறே "சொல்' என்றான்.

"அந்த விநோத மனிதன் எங்கள் இருவரையும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைச்சலுக்கு உள்ளாக்கி விட்டான் சேர். அவன் நடக்கும் வேகத்துக்கு கிருஷ்ணசாமியால் நடக்கவே முடியவில்லை. நாங்கள் இருவரும் ஓட்டமும் நடையுமாகவே செல்ல வேண்டியிருந்தது. கிருஷ்ணசாமி மாச்சல் தாங்க முடியாமல் வந்ததுமே கட்டிலில் விழுந்து தூங்கிப் போய் விட்டார், பாவம்" என்று கூறி சற்று நிறுத்திய ஜெய்சிங், பியர் டின்னில் இருந்து நீண்ட மிடறு ஒன்றை விழுங்கிய பின் மீண்டும் கூறினான்.

"அந்த மனிதன் கண்டி வாவியைச் சுற்றிக் கொண்டு மலைக்கு அந்தப் புறமாகச் சென்றான் சேர். நாங்களும் விடவில்லை. பின்னேயே சென்றோம். பின்பு அவன் பிரதான பாதையில் இருந்து விலகி சற்றே குறுகிய பாதை ஒன்றில் நுழைந்தான். அந்தப் பாதை ஒரு பிரத்தியேக பாதை. அது நேராக வழிகாட்டிச் சென்று ஒரு பழங்கால மாளிகை வாயிலை அடைந்தது. அவன் அதில் இருந்த நுழைவாயிலுடன் ஒட்டியிருந்த சிறு கதவொன்றை திறந்து கொண்டு உள்ளே சென்று கதவை மூடி விட்டான்"

"அப்புறம் என்ன நடந்தது" ராம்ஜீ பியர் அருந்தியவாறே கேட்டான்.

"நாங்கள் இருவரும் சற்று பொறுத்திருந்தோம். ஆள் அரவம் சொட்டு கூட இல்லை. மெதுவாக இருட்ட ஆரம்பித்து விட்டது. நாங்கள் மாளிகையின் அருகில் சென்றோம். கருங்கல்லால் ஆன பத்தடி உயர மதில் சுவர் சுற்றிக் கட்டப்பட்டிருந்ததால் உள்ளே என்ன நடக்கின்றது என்பது ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் சுவரோரமாக சற்று தூரம் நடந்து சென்றோம்"

"அப்புறம்"

"அப்பிரதேசம் மலைப்பாங்கான சரிந்த பிரதேசமாக இருந்ததால் மாளிகையைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த சுவரும் ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கங்களுடன் காணப்பட்டது. சில மீற்றர்கள் சுற்றிச் சென்ற போது கருங்கல் சுவரில் அரச மரம் ஒன்று வளர்ந்திருந்ததால் சுவரில் வெடிப்பு ஏற்பட்டு ஒரு ஆள் நுழையக்கூடிய அளவு இடைவெளி காணப்பட்டது. அதனூடாகப் பார்த்த போது மாளிகையின் முன் புறத்தை தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது"

"மாளிகையின் தோற்றம் எப்படி இருந்தது" ராம்ஜீ இடையில் வினவினான்.

தான் பார்த்தவற்றை ஞாபகத்துக்குக் கொண்டு வந்த ஜெய்சிங் மீண்டும் கூறினான்.

"அந்த மாளிகை மிகப் பழங்காலத்து அரச மாளிகை போன்று காணப்பட்டது. கலை வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் காணப்பட்டன. மாளிகையின் சில பகுதிகள் காரைபெயர்ந்து சிதிலமடைந்திருந்தன. மாளிகையின் பக்க வாட்டில் நிலம் மிகச் சரிந்து சென்றதால் தூரத்தில் கண்டி வாவியும், தலதா மாளிகையின் கோபுரங்களும் கூட தெரிந்தன."

மாளிகை தொடர்பான ஜெய்சிங்கின் வர்ணனை ராம்ஜீயின் ஞாபகத்தை எங்கோ இட்டுச் சென்றது. சட்டென்று அவன் மூளையில் எங்கோ ஒரு நட்சத்திரப் பிரகாசம் தெரிந்தது. அவன் ஒன்றும் சொல்லாமல் திடீரென எழுந்து வீட்டுக்குள் ஓடினான்.

அவனது இந்தச் செய்கையால் நளாயினியும், ஜெய்சிங்கும் ஒருவரையொருவர் பார்த்து ஏதும் புரியாது விழித்தனர். உள்ளே சென்ற ராம்ஜீ தனது சூட்கேசை திறந்து ஹேமமாலினியின் டிரங்பெட்டியில் இருந்து எடுத்து வந்த புகைப்படமொன்றை மாத்திரம் கையில் எடுத்தான். அதனை ஒரு முறை நோட்டம் விட்ட ராம்ஜீ வெளியில் வந்து அதனை ஜெய்சிங்கிடம் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து பார்க்கும்படி பணித்தான். பின் அவன் பார்த்த மாளிகையும் படத்தில் காணப்படுகின்ற கட்டிடமும் ஒன்றுதானா என்று பார்க்கும்படி கூறினான்.

படத்தை உற்றுப்பார்த்த ஜெய்சிங்குக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. அவன் பார்த்த மாளிகையும், படத்தில் காணப்படுவதும் ஒன்று போலவே காணப்பட்டன. அவன் தான் பார்த்த மாளிகைதான் அது என்று கூறினான்.

ராம்ஜீ யுத்தத்தில் வீழ்த்த முடியாத ஒரு கோட்டையை வீழ்த்தி விட்டது போன்று சந்தோஷமடைந்தான். அன்றிரவே அந்த மாளிகையின் இரகசியங்களை தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்று தீர்மானித்து விட்டான். அன்று முழுதும் ஆங்காங்கே திரிந்து மிகக் களைத்திருந்த போதும் அந்தக் களைப்பெல்லாம் எங்கோ பறந்து போய் விட்டன.

நளாயினியை வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டு ஜெய்சிங்கை லேன்ட் ரோவரை எடுக்கும்படி கூறினான். அவர்கள் சற்றும் தாமதியாமல் அந்த மாளிகை இருந்த திக்கை நோக்கி லேன்ட் ரோவரை செலுத்திச் சென்றனர். நளாயினி வாயடைத்து அவர்கள் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ராம்ஜீயும், ஜெய்சிங்கும் அந்த மாளிகை இருக்கும் மலைப் பாங்கான பிரதேசத்தையடைந்த போது இரவு ஒன்பது மணியாகி யிருந்தது. எட்டாம் நாள் பிறைச்சந்திரன் மலை முகடுகளுக்கு மேல் பாதியாக சிரித்துக் கொண்டிருந்தான். தூரத்தே இருள் கவ்விய நீலமலைகள், பூதங்கள் உறங்குவதைப் போல உறங்கிக் கிடந்தன.

புதர்க்காடுகள், உயரமான மரங்கள், சில்லென்ற காற்று, ஜன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தடியற்ற அமைதியான சூழலில் இரவு நேரத்துக்கேயுரிய சத்தங்களும், ஓசைகளும் நிலைமையை பயங்கர அச்சம் தரும் சூழ்நிலையாக மாற்றிக்கொண்டிருந்தன. சற்று தூரத்தே கண்டி நகரத்தின் மின்னொளி வெளிச்சமும், சற்றே வாகனங்களின் இரைச்சலும் கேட்டபோதும் அவற்றால் எல்லாம் நிலவிய அந்தகாரத்தின் இறுக்கத்தினை நெகிழச் செய்ய முடியவில்லை.

மலைப்பாங்கான பிரதேசத்தை அடைந்ததும் ஜெய்சிங் லேண்ட் ரோவரை மிக மெதுவாகவே செலுத்தினான். கொழும்பில் நேரான தட்டையான வீதிகளுக்குப் பழக்கப்பட்டிருந்த ஜெய்சிங் கண்டியின் மலைப்பாங்கான மேடு, பள்ளங்களுடனான வீதிகளில் வாகனத்தைச் செலுத்த கொஞ்சம் சிரமப்பட்டான்.

அவர்கள் பிரதான பாதையில் இருந்து பிரிந்து மாளிகைக்குச் செல்லும் பாதையை அடைந்ததும் வாகனத்தின் இயந்திரத்தையும், ஹெட் லைட்டையும் அணைத்து விட்டனர். முன்னேயிருந்த பாதை சற்று பள்ளமாக இருந்ததால் லேண்ட் ரோலர் இயந்திர உதவியின்றி மெதுவாக சத்தமின்றி உருண்டு சென்றது. ஏதும் ஆபத்தான சந்தர்ப்பத்தில் தப்பிச் செல்வதற்கு வசதியாக ஜெய்சிங் வாகனத்தை வந்த வழி நோக்கி திருப்பியே நிறுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பேய் மாளிகை

ராம்ஜீயும் ஜெய்சிங்கும் அந்த பழங்கால மாளிகையின் விசாலமான நுழைவாயிலை அடைந்து அக்கட்டிடத்துக்குள் நுழையும் வழிவகைகளை ஆராய்ந்தனர். ஜெய்சிங் உள்ளே நுழையக்கூடிய அளவுக்கு சுவரில் காணப்பட்ட பிளவுபட்ட இடைவெளியைப் பற்றி ஞாபகப்படுத்தினான்.

தான் முன்பு பார்த்த மதிற்சுவரில் ஏற்பட்டிருந்த இடைவெளி தென்படுகின்றதா என்று தேடிச் சென்றான். ராம்ஜீ அவனைப் பின் தொடர்ந்து சென்றான்.

ஜெய்சிங் அந்த குறித்த இடத்தை அடைந்ததும் அந்த இடைவெளியை சுட்டிக்காட்டினான். பாதி நிலாவை இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்த மேகக்கூட்டம் ஒன்று மூடி மறைத்திருந்ததால் இருந்த கொஞ்ச வெளிச்சமும் மங்கிப்போயிருந்தது. இருவரும் மெதுவாக உடைந்த சுவர் மீது ஏறி கல்லிடுக்குகளுக்கிடையில் அமர்ந்து நிலைமையை அவதானித்தனர்.

ஜெய்சிங் தான் உள்ளே சென்று பார்த்து வரவா என்று கேட்டான். அவனை இடைமறித்த ராம்ஜீ, "அது ஆபத்தான காரியம் என்பதால் ஜெய்சிங்கை அங்கேயே காவல் காத்திருக்கும் படியும், கீழே எட்டடிக்கு மேல் குதிக்க வேண்டியிருந்தால் அவசரத்தில் தான் ஓடிவந்தால் தன்னை கைகொடுத்து தூக்கிவிடத் தயாராக இருக்கும்படியும்" கூறினான்.

பின் அவன் தொப்பென்று கீழே குதித்து இருளில் மெல்ல மெல்ல நகர்ந்து மாளிகையின் முகப்பு இருக்கும் திசை நோக்கி முன்னேறினான்.

அவன் புதர் மற்றும் பற்றைக் காட்டினூடாக சுமார் ஐம்பது மீற்றர்கள் சென்ற பின்பு தூரத்தே மாளிகையின் முகப்பு கலங்கலான மங்கிய இருள் கோலமாகத் தெரிந்தது. பாதிச் சந்திரனை மூடியிருந்த மேகக்கூட்டம் மெல்ல விலக ஆரம்பித்திருந்ததால் இன்னும் சில நிமிடங்களில் மாளிகையை ஓரளவு தெளிவாகப் பார்க்கக்கூடிய அளவுக்கு வெளிச்சம் கிடைக்கும் என்று கருதிய ராம்ஜீ சில கணங்கள் பொறுத்திருந்தான். பின் தன் கண்களை இருளுக்குப் பழக்கப்படுத்திக் கொண்டு மீண்டும் நகர்ந்து சென்றான்.

அவன் மாளிகையை அண்மித்தபோது அங்கே நன்கு பராமரிக்கப்பட்ட பூந்தோட்டமொன்று விசாலமாகக் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனை அவதானித்தான். அந்த பூந்தோட்டத்தை நேராக ஊடுருவிச் செல்வதால் மாளிகையின் ஜன்னலூடாகப் பார்க்கும் எவருக்கும் அவனது உருவத்தை அவதானிக்க முடியும். அவன் கூடுமானவரை மரஞ்செடிகளுக்கூடாக மறைந்து செல்வதனையே விரும்பினான்.

இப்படி அவன் மேலும் நூறு மீற்றர்கள் தூரம் வரை சென்றிருப்பான். அப்போது சடுதியான அசைவொன்றினை அவன் அவதானித்தான். விருட்டென்று தன்னை முடக்கிக்கொண்ட ராம்ஜீ செடிகொடிகளுக்கூடாக சிறிதும் அரவமின்றி நடப்பவற்றை அவதானித்தான்.

அவன் இருந்த இடத்தில் இருந்து சுமார் முப்பது மீற்றர்களுக்கப்பால் ஒரு மனிதனின் தலை தெரிந்தது. பின் அவன் மார்பு, இடுப்பு, கால்கள் என்று ஒவ்வொன்றாகத் தெரிந்தன. அவன் கீழே பள்ளத்தில் இருந்து படிகளில் மெல்ல ஏறி வந்திருக்க வேண்டும்.

அவன் கைகள் ஒரு T-56 ரக துப்பாக்கியை ஏந்திக் கொண்டிருந்தது. அவனருகே அவனின் இடுப்பளவு உயரத்துக்கு ஓநாயின் தோற்றத்துடன் கூடிய வேட்டை நாய் ஒன்றும் மெதுவாக நடந்து வந்தது. அதன் நாக்கு நீண்டு கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டிருந்தது. அதன் காதுகள் மேல் நோக்கி உயர்ந்து சுற்றுப்புறத்தில் எழக்கூடிய சிறிய ஒலிகளையும் கூர்ந்து செவிமடுத்துக் கொண்டிருந்தன.

அந்த மனிதனையும், நாயையும் பார்த்த மாத்திரத்திலேயே ராம்ஜீயின் நரம்புகளுக்குள் நன்கு கொதிக்கக் காய்ச்சிய ஈயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சியது போல் இருந்தது. அவனது மிகச்சிறிய அசைவும் உடனடியாக மரணத்தை கொண்டுவர கூடுமாதலால் அவன் சிலையென உறைந்து போய் இருந்தான். கண்களை இமைப்பது கூட அந்த நாயின் கவனத்தை கவர்ந்து விடும் என்பதால் அவன் கண்கள் இமைக்கவும் பயந்தான். எனினும் அந்த நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த தோலால் ஆன பட்டியும் அதில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலி அந்த மனிதனின் வலது கரத்தின் மணிக்கட்டுக்கருகில் பிணைக்கப்பட்டிருப்பதனையும் கண்ணுற்று சற்றே ஆறுதல் அடைந்தான்.

ராம்ஜீ அந்த மனிதனை நன்கு அவதானித்தான். அவன் வாட்டசாட்டமான உடல்வாகுடன் ஆணழகன் போன்று தோற்றம் கொண்டிருந்தான். முப்பத்தைந்தில் இருந்து நாற்பது வயது வரை மதிக்கலாம். உடலமைப்புக்கேற்ற உயரம். அவன் தீவிர போர்க்குணமுள்ளவன் என்பதனை அவனது ஒவ்வொரு அசைவும் வெளிப்படுத்தின.

நாயும் அந்த மனிதனும் சுமார் ஐந்து மீற்றர்களுக்கப்பால் அவனைக் கடந்து சென்றனர். அவர்கள் சற்றுத் தூரத்துக்கப்பால் மாளிகையின் இடது கோடியில் இருளில் மறையும் வரை ராம்ஜீ அசையாமல் சிலைபோல் சமைந்திருந்தான். அவன் மனம் தொடர்ந்து மாளிகை நோக்கி முன்னேறுவதா? இல்லை, திரும்பிச் சென்று விடுவதா? என்று சிந்தித்துக் குழம்பியது. எனினும் இவ்வளவு தூரம் வந்துவிட்டு மாளிகைக்குள் என்ன நடக்கின்றது என்று பார்க்காமல் திரும்பிச் செல்வது கோழைத்தனம் என்று நினைத்த ராம்ஜீ மனதைத் திடப்படுத்திக்கொண்டு மெல்ல மெல்ல நகர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில மீற்றர்கள் மாளிகையை நோக்கி முன்னேறினான்.

அவன் இம்முறை மிகக் கவனமுடன் மிக மெதுவாக அங்குலம் அங்குலமாகவே முன்னேறினான். மேலும் ஒரு இருபது மீற்றர்கள் முன்னேறியதும் அங்கிருந்த ஒரு மரத்தில் தன்னைச் சாய்த்துக்கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். மீண்டும் ஒரு முறை அந்த மாளிகையை நோட்டம் விட்டான். இப்போது மாளிகையின் வலதுபுறத் தோற்றம் நன்கு தெரிந்தது. நிலவொளி மேலும் பிரகாசமடைந்திருந்தது. அவை மாளிகையின் சுவர் மீதும் ஜன்னல்கள் மீதும் பட்டுத் தெறித்தன.

அப்பக்கத்தில் மாளிகையின் ஜன்னல்கள் எல்லாமே இருளில் மூழ்கிக் காணப்பட்டன. எனினும் அந்த மூடப்பட்ட ஜன்னல்களுக்கப்பால் இருளில் பதுங்கி இருக்கும் யாரும் தோட்டத்தை நோக்கி அவதானித்துக் கொண்டிருத்தல் கூடும் என்பதனை மறுப்பதற்கில்லை.

அவன் மனம் தானிருக்கும் இடத்தில் இருந்து மாளிகையின் வாயிற்புறம் வரை உள்ள தூரத்தினை ஆய்வு செய்தது. இன்னும் சுமார் நூறு மீற்றர்வரை கடந்து செல்ல வேண்டியிருந்தது. இந்தத் தூரத்தை கடக்கும்போது இன்னும் எத்தனை துப்பாக்கி மனிதர்களை சந்திக்க வேண்டுமோ என்று அவன் மனம் சஞ்சலப்பட்டது. துப்பாக்கி மனிதர்களை விட நாய்களுக்கே அவன் அதிகம் பயந்தான்.

முன்பு அவன் நாய்களுடன் மிக நட்புடன் பழகுவதுண்டு. எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூரமான நாயும் கூட அவனைக் கண்டதும் அடங்கிப்போய் வாலாட்டுவதுண்டு. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு ஒருநாள் ஒரு சம்பவம் நடந்தது. அவன் உடற் பயிற்சிக்காக அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்திருந்து பார்ண்ஸ் பிளேஸ் வீட்டில் இருந்து டொரிங்டன் விளையாட்டமைச்சு மைதானம் வரை ஓடுவதுண்டு. அப்படி ஓடியபோது ஒரு நாள் நான்கு நாய்கள் சந்தியில் நிற்பதைக் கண்டான். வழக்கம் போல் அவற்றை பொருட்படுத்தாத அவன் அவற்றை கடந்து செல்ல முற்பட்டான். அப்போது ஒரு நாய் மட்டும் அவன் பின்னாலேயே ஓடி வந்தது. அவன் ஓடுவதனை நிறுத்தி அந்த நாயை அவதானித்தான். அருகில் வந்த அந்த நாய் அவனை முகர்ந்து பார்த்தது. பின் என்ன நினைத்ததோ அவன் முழங்காலுக்கு சற்று மேல் தொடையில் லபக்கென்று ஒருபிடி பிடித்து விட்டது.

நாயை விரட்டிய ராம்ஜீ அதனைப் பொருட்படுத்தாமல் மைதானத்துக்கு சென்றான். அங்கு போய் பார்த்தபோது தான் இரத்தம் அதிகம் வடிந்திருந்தமை தெரிந்தது. அவன் நண்பர்கள் கடித்தது விசர் நாயாக இருந்தால் ஆபத்து என்று எச்சரித்தனர். பின் நண்பன் ஒருவனுடன் வைத்தியரிடம் சென்றான். அவர் காயத்துக்கு மருந்திட்டு ஊசி போட்டதுடன் கடித்த நாயை நாற்பத்தைந்து தினங்கள் அவதானிக்க வேண்டுமென்றும் அதற்குள் நாய் இறந்துவிட்டால் விசர்நாய்க்கடி வைத்தியம் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

அதன்பின் நாயைத் தேடியது, பின் நாற்பத்தைந்து நாட்கள் அதன் வீட்டுக்குப் போய் அது உயிருடன் இருக்கிறதா என்று பார்த்தது எல்லாம் விளையாட்டாகவும் வேடிக்கையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது தெரிந்தன. அந்த சம்பவத்தின் பின்னர்தான் அவனுக்கு நாய்களைக் கண்டால் அலர்ஜி ஏற்பட்டது.

நாய்களை பற்றிய சிந்தனை ராம்ஜீயிடம் மேலும் தயக்கத்தை உண்டு பண்ணியது. தான் மாளிகையை அடைவதாயின் நீண்ட வெட்டவெளியைத் தாண்ட வேண்டும். யாரதும் கண்ணில் படாமல் அந்தத் தூரத்தைக் கடப்பது சாத்தியமானதல்ல என்றும் தோன்றியது. உடனே அங்கிருந்து திரும்பிச் சென்று விடுவதென்றும், பின்னர் நாளையே அந்த வீடு யாருக்குச் சொந்தமானது என்று கண்டுபிடிக்க வேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்டான்.

அடுத்தகட்ட நடவடிக்கை யார் கண்ணிலும்படாமல் அங் கிருந்து தப்பிச் செல்வதாகும் என்று நினைத்த ராம்ஜீ அதற் கான வழிவகைகளை ஆராய்ந்தான். முதலில் தான் வந்த திசை யையும், ஜெய்சிங் எவ்விடத்தில் காத்திருக்கிறான் என்றும் கணக்குப்போட்டான். குத்துமதிப்பாகக் கணித்து மெதுவாக மரஞ் செடிகளுக்கூடாக பின்நோக்கி நகர்ந்தான். அவன் மெதுவாக அடிமேல் அடிவைத்து ஒரு மேடான இடத்தையடைந்தான். அங்கிருந்து தான் வந்த பாதை தெரிகிறதா என்று பார்த்தான்.

அப்போது அவன் மனம் திகீர் என்றது. கண்களுக்குள் யாரோ இரண்டு விரல்களைச் செலுத்தி பிடுங்கியது போலிருந்தது.

அவன் கண்களுக்கு எதிரில் சுமார் பதினைந்து மீற்றருக்கப்பால் அந்த வேட்டை நாய் மேட்டில் அமர்ந்திருந்தது. ராம்ஜீ ஆடாமல் அசையாமல் செடிகளுக்கு மத்தியில் மூச்சைப் பிடித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருந்தான். அவன் ஏற்படுத்தும் மிக மெல்லிய அசைவும், ஓசையும் கூட பெரிய ஆபத்தாய் அமைந்துவிடும் என்று உணர்ந் தான். நாய் மேட்டிலும், அவன் பள்ளத்திலும் இருந்ததால் அவ னது வாசம் நாய்க்கு பிடிபட்டிருக்க நியாயமில்லை. எனவே அந்த நாய் அங்கிருந்து செல்லும்வரை தன்னால் நகர முடியாது என்று நினைத்தான். இப்படி சில நிமிடங்களே கழிந்தாலும் அது ராம்ஜீக்கு சில யுகங்களாகத் தெரிந்தன.

அப்போது இருட்டில் இருந்து அந்த மனிதன் வந்தான். அதே வாட்டசாட்டமான மனிதன். அவன் கரங்கள் இப்போதும் T56 துப்பாக்கியொன்றை வைத்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுற்றி வளைத்த நாய்கள்

அந்த இரவின் அந்தகார சூழ்நிலையும், வேட்டைப் பசியுடன் கூடிய ராட்சஸ நாயின் தோற்றமும் எதிரே வந்து கொண்டிருந்த ஒரு நொடியில் கொலை செய்யத் தயங்காத கொடியவனின் தோற்றமும் ராம்ஜீயின் இதயத் துடிப்பை பன்மடங்கு அதிகரித்தன. ஆபத்து தானாக விலகும் வரை அவனால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. அவன் ஆடாமல் அசையாமல் என்ன நடக்கப் போகிறது என்பதை மௌனமாக அவதானித்துக்கொண்டிருந்தான்.

அந்த மனிதன் நாயருகில் வந்து அதன் முதுகை ஒரு கையால் மெதுவாகத் தடவினான். அவன் அருகாமையும் ஸ்பரிசமும் நாயை வளைந்து குலைந்து சிணுங்கச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனிதன் தன் கையில் கட்டியிருந்த சங்கிலியால் நாயின் கழுத்துப் பட்டியை பிணைத்தான். பின் செல்லமாகத் தட்டி நாயை தன்னுடன் அழைத்துச் சென்றான். ராம்ஜீக்கு மீண்டும் பெருங் கண்டத்தில் இருந்து மீண்டது போலிருந்தது. அவன் உடனடியாக அந்த அபாயத்தில் இருந்து தப்பியோடி விட வேண்டுமென்று தவித்தான்.

விருட்டென அங்கிருந்து பாய்ந்து தான் வந்த திசை நோக்கி ஓட முற்பட்டான். அந்த அவசரத்தில் நிலத்துடன் கொங்கிறீட் தளத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பியொன்றில் தடுக்கி வீழ்ந்தான். அவன் தடுக்கி விழுந்தது வெறுமனே கம்பியல்ல. அது இரகசியமாகப் பொருத்தப்பட்டிருந்த அபாய அறிவிப்பு மணியாகும். அவன் விழுந்த அதிர்ச்சியில் சற்று நேரம் அமைதியாக இருந்தான். சுற்றுப் புற சூழலும் மிக அமைதியாகவே இருந்ததால் வீட்டுக்குள் எங்கோ அபாய மணி தொடர்ந்து ஒலிப்பது மிக மெலிதாக ராம்ஜீயின் காதுகளில் கேட்டது. மேலும் தாமதித்தால் மாட்டிக் கொள்வது நிச்சயம் என்று நினைத்த ராம்ஜீ அவ்விடத்தில் இருந்து எழுந்து வெட்ட வெளியில் ஓட ஆரம்பித்தான்.

ஜெய்சிங் அவனுக்காக அவ்விடத்தில் காத்திருக்கிறான் என்று அவனால் நிதானிக்க முடியாமல் இருந்தது. எதிரில் தென்பட்ட திசை நோக்கி ஓடினான். அப்போது எதிர்த் திசையில் இருந்து இரண்டு பேர் ஓடி வருவது தெரிந்தது. அவர்கள் தனியாக வரவில்லை. அவர்களுடன் சேர்ந்து நான்கு வேட்டை நாய்களும் ஓடி வந்தன. இருவர் கரங்களிலும் இரண்டு T 56 துப்பாக்கிகள் பளபளத்தன.

ராம்ஜீக்கு வேறு மார்க்கங்கள் தெரியவில்லை. அவன் கண்மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் ஓடினான். நாய்கள் அவன் ஓடுவதைக் கவனித்து விட்டன. அவை பலமாகக் குரைத்துக் கொண்டே ஓடி வந்தன. ராம்ஜீ சற்று நிதானித்து கருங்கல் சுவர் தெரிகின்றதா என்று அந்த இருட்டில் தேடினான். அவன் எதிரில் அந்தகாரத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

அந்த நாய்கள் நான்கும் அவனை சுற்றி வளைத்து விட்டன. அவன் அசைந்தால் கூட அந்த நாய்கள் அவன் மீது பாய்ந்து கடித்துக் குதறி விடும் என்பதில் சந்தேகமில்லை. ராம்ஜீயின் உடம்பெங்கும் வியர்வை பெருக்கெடுத்து ஓடியது. அவன் நாடி நரம்புகள் அனைத்தும் ஒடுங்கிப் போய் விட இதயம் மட்டும் "படக் படக்" கென்று அடித்துக் கொள்வது அவன் காதுகளில் மிகப் பலமாக ஒலித்தது.

அதற்குள் அந்த இரண்டு மனிதர்களும் அருகே வந்து விட்டனர். அவர்கள் அருகில் வந்ததும் நாய்கள் மெதுவாக வாலை ஆட்டி சிணுங்கியதுடன் நிலத்தில் படுத்து அவர்களின் கட்டளையை எதிர்பார்த்தன. நான்கு வேட்டை நாய்களும் ஒரே மாதிரி இருந்தன. அவற்றின் நாக்குகள் கீழ் நோக்கி தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் உமிழ்நீர் சொட்டுச் சொட்டாய் வடிந்து கொண்டிருந்தது. நாய்கள் நான்கும் மிக வேகமாக மூச்சு விட்டுக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட "புஸ்... புஸ்" சத்தம் மட்டுமே அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது.

அந்த இரண்டு மனிதர்களும் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் ராம்ஜீயை மிக நெருங்கி வந்தனர். அவன் அங்கு இருப்பதனை எதிர்பார்த்து வந்தவர்கள் போல் அவர்களின் முகம் காணப்பட்டது. அவர்களில் ஒருவன் முன்பு ஐஸ்கிறீம் கடையில் சந்தித்த விநோத உடை மனிதன். மற்றவன் ரஞ்சித் நிமலஸ்ரீ பண்டார.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரும் ராம்ஜீயை இருபுறத்தும் நெருங்கினர். ராம்ஜீ செய்வதறியாது திகைத்துப் போய் சிலையாய் நின்றிருந்தான். அவன் தோற்பட்டைக்குள் கீழாக ஆளுக்கொருவர் அவனது ஒவ்வொரு கரத்தையும் பற்றிப் பிடித்த அந்த இருவரும் காயம்பட்ட ஒருவனை பரபரப்புடன் இழுத்துச் செல்வது போல் தரதரவென இழுத்துக் கொண்டு மாளிகை நோக்கி விரைந்தனர்.

நாய்கள் நான்கும் அவர்களைப் பின் தொடர்ந்தன.

ராம்ஜீ கண் விழித்த போது அவன் எங்கிருக்கிறான் என்பதனை அவனால் நிதானிக்க முடியவில்லை. அவன் எத்தனை மணி நேரம் உறக்கத்தில் இருந்திருக்கிறான் என்று சிந்தித்துப் பார்த்தான். தலைக்கு மேலிருந்து மாத்திரம் குவிவாக கீற்றுப் போல் பிரகாசமான வெளிச்சம் வீசிக்கொண்டிருந்தது. மற்றபடி சுற்றிவர இருள் சூழ்ந்திருந்தது.

அவன் உடம்பெங்கும் அடித்துப் போட்டது போல் களைப்பாகவும் பின் மண்டையில் வலியாகவும் இருந்தது. அவனால் அங்கும் இங்கும் அசைய முடியவில்லை. இரண்டு கரங்களும் தனித்தனியாக மணிக்கட்டுக் கருகில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு மற்றொரு முனை உயரத்தில் எங்கோ பிணைக்கப்பட்டிருந்தது.

அவன் மெதுவாகத் தன் நினைவுகளை மீட்டுப் பார்த்தான். அவனும் ஜெய்சிங்கும் அந்த பழங்காலத்து மாளிகையில் என்ன நடக்கின்றது என்பதனை அறிவதற்காகப் புறப்பட்டு வந்தது முதல் மாளிகையின் தோட்டத்தில் பிரவேசித்தது, பின் நாய்களுக்கு மத்தியில் மாட்டிக்கொண்டது, அந்த விநோத மனிதனும் மற்றொருவனும் தன்னை தரதரவென்று இழுத்து வந்தது என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாம் நினைவுக்கு வந்தன.

பின்னர் அவன் திமிறிக் கொண்டு எழுந்திருக்க முற்பட்ட போது அந்த விநோத உடை மனிதன் அவனை பின் மண்டையில் தாக்கியதும் நினைவுக்கு வந்தது. அதன் பின்னர் தான் அவன் நினைவிழந்திருக்க வேண்டும். அவன் எத்தனை மணி நேரம் அப்படி நினைவிழந்து தூக்கத்தில் இருந்திருக்கக் கூடும் என்பது தெரியவில்லை.

அவன் தன் கையில் இருந்த கடிகாரத்தைப் பார்க்க முற்பட்டான். கையை இலேசாகத் திருப்புவது கூட கடினமானதாக இருந்தது. மிகச் சிரமப்பட்டு கையை மெதுவாகத் திருப்பி மணியைப் பார்த்தான். கடிகாரம் எட்டு மணி என்று காட்டியது. ஆனால் இரவு எட்டு மணியா இல்லை காலை எட்டு மணியா என்பது தெரியவில்லை.

அவன் சிந்தித்துப் பார்த்தான். அவனும் ஜெய் சிங்கும் அந்த மாளிகையைப் பார்வையிடப் புறப்பட்ட போது நேரம் இரவு எட்டு மணியைத் தாண்டியிருந்தது. அப்படியாயின் இது காலை எட்டு மணியாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். சுமார் பத்து மணி நேரம் நினைவிழந்து தூங்கியிருந்திருக்கிறான்.

அவன் அங்கிருந்து தப்பும் மார்க்கங்கள் எதுவும் இருக்கின்றதா என்று ஆராய முற்பட்டான். ஏதும் சத்தங்கள் கேட்கின்றனவா? என்றும் காது கொடுத்து கேட்டான். அநேகமாக மயான அமைதியே நிலவியது. ஆனால் தலைக்கு மேல் எங்கோ வெகு தூரத்தில் மனிதர்கள் உலாவுவது போல் பிரமை ஏற்பட்டது. அவனது ஊகத்தின்படி அவன் தரைக்குக் கீழ் பல அடிகள் ஆழத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகையொன்றில் சிறை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனை உறுதி செய்வதுபோல் அவித்து அழுகிய புழுங்கல் நாற்றமும், நாய், பூனை, எலி என்பனவற்றின் எச்சங்கள் கலந்த வாடையும் வீசியது. அங்கிருந்து தப்புவது சுலபமான காரியமல்லவென்பது அவன் புத்திக்குப்பட்டது. மிகுந்த ராஜ தந்திரத்துடன் நடந்து கொள்வது நல்லதென்று யோசித்தான்.

அப்போது அவன் சிந்தனை ஜெய்சிங்கை நோக்கித் திரும்பியது. தன்னைக் காணாமல் அவன் என்ன செய்திருப்பான்? தானும் உள்ளே வந்து மாட்டிக் கொண்டிருப்பானா? அப்படி நடந்திருக்க நியாயமில்லை. அவன் எப்படியும் தப்பிச் சென்றிருப்பான். அவன் விஷயத்தை நளாயினியிடம் தெரிவித்திருந்தால் அவள் டி. எஸ். பி. சிங்கராயருக்குப் போன் பண்ணியிருப்பாள். அல்லது கண்டி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தால் பொலிஸார் எப்படியும் தேடி வந்து விடுவார்கள்.

இப்படி அவன் சிந்தித்தவாறு அவனைச் சுற்றிப் பார்க்க முற்பட்டான். ஆனால் மேலிருந்து வந்த குவிவான வெளிச்சம் அவனைச் சுற்றி வட்டமாக விழுந்ததே தவிர அதற்கப்பால் கும்மென்று இருட்டாக இருந்தது. அவன் கண்களுக்கு வேறெதுவுமே புலப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இக்காலத்திலும் அரசர்கள்...

ராம்ஜீ கரலியத்த பண்டார என்பவரின் சிறைக் கைதியாக வைக்கப்பட்டுள்ளான் என்பது அவனுக்கு பின்னர்தான் தெரிய வந்தது. எனினும் தான் என்ன விதமான இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளோம் என்பதும் சரியாகப் புலப்படவில்லை. ஆதலால் வெளியில் ஜெய்சிங், நளாயினி, டி.எஸ்.பி.சிங்கராயர் ஆகியோர்தான் அவனை தப்புவிக்க வேண்டும் என்று கருதினான். பின்னர் அவன் கரலியத்த பண்டார என்பவனை சந்தித்த போது அங்கிருந்து தப்பிப்பது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை. என்பதனை புரிந்துகொண்டான்.

கோணப்பு கரலியத்த பண்டார கண்டி மேட்டுக்குடி சிங்களவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் மிகுந்த செல்வாக்குள்ளவனாக திகழ்ந்தான். தானே கண்டி ராச்சியத்தின் உண்மையான வாரிசு என்றும், சிங்கள அரச பரம்பரையைச் சேர்ந்தவன் என்றும் சொல்லிக்கொண்டான். கண்டி தலதா மாளிகையுடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருந்ததுடன் வருடாந்தம் எஸல பெரகரவுக்கென பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டான். தலதா மாளிகையின் நிர்வாகியான தியவதன நிலமேயுடனும், கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த பீடங்களின் நாயக்க தேரர்களுடனும் மிக நெருங்கிய நட்புடையவனாக இருந்தான்.

ஆதலால் கண்டிப் பிரதேசத்து பாராளுமன்ற அங்கத்த வர்கள் மத்தியிலும், அமைச்சர்கள் மத்தியிலும் மிகுந்த செல் வாக்குடையவனாக இருந்தான். மத்திய மாகாண முதலமைச்சரும், ஏனைய சபை உறுப்பினர்களும் கூட அவனது மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர்.

இப்போது கண்டி எஸல பெரஹரா நெருங்கிக் கொண்டிருந்ததால் கண்டி நகரின் முக்கியஸ்தர்கள் பலரும் அவன் வீட்டுக்கு வந்து போன வண்ணம் இருந்தனர்.

**ராம்**ஜீ பிடிபட்ட அடுத்த நாள் காலை பத்து மணி இருக்கும். கோணப்பு கரலியத்த பண்டார அவனது பிரத்தியேக வாசஸ்தலத்தில் அமர்ந்திருந்தான். அதனை ஏன் பிரத்தியேக வாசஸ்தலம் என்று குறிப்பிட வேண்டும் என்றால் அதற்குக் காரணமிருந்தது. அவனது அந்த வாசஸ்தலம் ஒரு குட்டி அரச சபை போலவே இருந்தது. நடுவில் சிறிய மேடையும், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் சிம்மாசனம் போன்ற இருக்கையும் போடப்பட்டிருந்தன. கீழே இரண்டு புறமும் வரிசையாக மந்திரிப் பிரதானிகள் அமர்வதற்கு போடப்பட்டது போல் ஆசனங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சிம்மாசனத்தில் அரசன் வீற்றிருப்பதுபோல் கோணப்பு கரலியத்த பண்டார அமர்ந்திருந்தான். அவன் உடை கூட கண்டிய மன்னர் காலத்து உடைகளை ஒத்ததாக இருந்தது. அவன் இடுப்பில் ஒருபுறம் உடைவாளும், மறுபுறம் தந்தப்பிடியில் வேலைப்பாடுகளுடன் கூடிய அந்த எறியும் கத்தியும் செருகப்பட்டிருந்தது. சிம்மாசனத்துக்குப் பின்னால் இருந்த கொடிக்கம்பத்தில் கொடி ஒன்று பறக்க விடப்பட்டிருந்தது. சுற்றி வர கடுஞ்சிவப்புக் கரையும் நடுவில் செம்மஞ்சள் நிறமும் கொண்ட அக்கொடியில் புராதன காலத்து கீரிப்பிள்ளையின் படம் ஒன்று கம்பீரமாக வரையப்பட்டிருந்தது.

கீழே போடப்பட்டிருந்த ஆசனங்களுக்கருகே சித்ராம்பரியும், ரஞ்சித் நிமல ஶ்ரீ பண்டாரவும் மிகப் பவ்வியமாகக் கைகட்டி நின்றிருந்தனர். அவர்களும் அரண்மனை சேவகர்கள் போல் உடை தரித்திருந்தனர்.

அங்கே பெரும் அமைதி நிலவியது. அவர்கள் யாரினதோ வருகைக்காகக் காத்திருந்தனர். அப்போது திலக்க ஶ்ரீ பண்டார என்ற அந்த மொட்டைத்தலை விநோத மனிதன் ராம்ஜீயைத் தள்ளிக்கொண்டு அங்கு பிரவேசித்தான். அவன் அப்போதும் அந்த விநோத உடை போன்ற அரண்மனைக்கான ஆடைகளையே அணிந்திருந்தான்.

ராம்ஜீயால் அந்தக் காட்சியை நம்பமுடியவில்லை. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுலகில் இருக்கிறோமோ என்று கூட நினைத்தான். தாம் திடீரென பதினேழாம் நூற்றாண்டை வந்தடைந்து விட்டது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது. இப்போதும் கூட அரசர்கள் இருக்கின்றார்களா என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அவன் மேடையில் போடப்பட்டிருந்த சிம்மாசனத்தையும் அதில் அமர்ந்திருந்த அரசனையும் உற்றுப்பார்த்தான். அவன் கண்கள் அந்த மனிதனின் இடையில் செருகியிருந்த எறி கத்தியையும் பின்னால் கொடிக் கம்பத்தில் தொங்க விடப்பட்டிருந்த கொடியையும் அதில் கீறப்பட்டிருந்த கீரிப்பிள்ளையின் படத்தையும் பார்த்தன.

அதன் பின் அங்கு இருந்த ஏனையோரையும் நோட்டம் விட்டான். அவன் கண்ணில் அந்தப் பெண் தென்பட்டாள். அவளை அவனால் மறக்க முடியாது. அவளது கவர்ச்சிகரமான தோற்றமும் முகத்தில் காணப்பட்ட குங்குமப் பொட்டகல மச்சமும் எப்போதும் அவன் கண்களுக்குள் தோன்றிக்கொண்டே இருந்தன.

அவனுக்கு இப்போது ஒரு பயங்கரமான உண்மை பளிச்சிட்டது. அந்த மனிதர்கள் வெறுமனே அபாயகரமானவர்கள் அல்ல. அவர்கள் சித்த சுவாதீனமற்ற பைத்தியக்காரத்தனமான பயங்கரவாதிகள் என்பதும் புலனாயிற்று. வரலாற்றில் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு அநீதிக்காக இவ்வளவு காலத்துக்குப் பின்னர் பழி வாங்கத்துடிக்கும் இந்த மனிதன் யார் ?

கட்டாயம் இவன்தான் எகலப்பொல நிலமேயின் வழித்தோன்றலாக இருக்க வேண்டும். எகலப்பொலவின் மூத்தமகன் மூலம் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை பரம்பரையாக பாதுகாத்துக்கொண்டு வரப்பட்ட வாரிசாக இருக்க வேண்டும்.

அந்த மண்டபம் முழுவதிலும் பல்வேறு மனித உருவங்கள் தீட்டப்பெற்ற ஓவியங்கள் தொங்கவிடப்பட்டிருந்ததனை ராம்ஜீ அவதானித்தான். அவற்றிலும் பல அரசர் காலத்து வீரபுருஷர்க ளின் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன.

அவற்றில் ஒரு படம் அவனுக்குப் பரிச்சயமானதாக இருந் தது. அதுவேறு யாருமல்ல, எகலப்பொல மகா திஸாவைதான். அவன் குதிரை மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் காட்சியும், அந்த கீரிப்பிள்ளை உருவம் பொறித்த கொடியும், இடையில் செருகப்பட்டிருந்த தந்தப்பிடி கத்தியும் அவனுக்கு ஏற்கனவே அறிமுகமானவைகள்தான். ஏனைய உருவப்படங்களில் இருப்பவர் களும் எகலப்பொலவின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

இவ்விதம் சிந்தித்த ராம்ஜீயை கோணப்பு கரலியத்த பண்டாரவின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தினான் விநோத மனிதன்.

அந்த மண்டபத்தில் மயான அமைதி நிலவிக் கொண்டிருந்தது. கரலியத்த பண்டாரவே முதன் முதல் அமைதியைக் கலைத்தான். அவன் குரல் பிசிறுகள் எதுவுமின்றி கணீர் என்று ஒலித்தது.

“வாருங்கள் திருவாளர் ராம்ஜீ உலகநாதன் அவர்களே! ஆசனத்தில் அமருங்கள்’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அங்கே விஷேடமாகப் போடப்பட்டிருந்த ஆசனம் ஒன்றை சுட்டிக்காட்டினான்.

அவன் மேலும் கூறினான், "நாங்கள் வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை உபசரிப்பதில் பேர் போனவர்கள். ஆனால் விருந்தாளிகள், விருந்தாளிகள் என்ற எல்லைக்குள் இருக்கும் வரைதான் உபசாரமெல்லாம். விருந்தாளிகள் எதிரிகளானால் அவர்கள் மரணத்தை அவர்களே தேடிக் கொண்டவர்களாவர்..."

இம்முறை கரலியத்தவின் குரல் இடியென முழங்கியது.

ராம்ஜீ, இவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. இப்போது அவன் சிந்தனையெல்லாம் இந்தப் பைத்தியக்காரர்களிடம் இருந்து எப்படித் தப்பிச் செல்லலாம் என்பது பற்றியதாகத்தான் இருந்தது.

அவன் சிந்தனையைப் புரிந்துகொண்ட கரலியத்த பண்டார கூறினான், "ராம்ஜீ அவர்களே! உங்கள் சிந்தனை என்னவாக இருக்குமென்று புரிகின்றது. இங்கிருந்து தப்பிச்செல்ல முயல்வது உங்களுக்கு ஆரோக்கியமானதல்ல. அது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்" என்று கூறி விட்டு ஏளனமாகச் சிரித்தான்.

ராம்ஜீக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இப்போதைக்கு அவர்கள் சொல்வதைக் கேட்பதனைத் தவிர வேறு செய்வதற்கில்லை என்று தீர்மானித்த ராம்ஜீ மௌனமாக இருந்தான். ஆனால் மணிக்கூட்டை அவதானித்த ராம்ஜீ நேரம் பத்து மணியையும் தாண்டியிருந்ததால், "ஏன் ஜெய்சிங் இன்னமும் பொலிசாரை அழைத்துக்கொண்டு வரவில்லை" என்று நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் மட்டுமே அவன் இப்போது நம்பிக்கை கொண்டிருந்தான்.

இப்போது அவனுக்கென போடப்பட்டிருந்த ஆசனத்தில் வசதியாக அமர்ந்து கொண்டான்.

அவன் செய்கையை அவதானித்த கரலியத்த பண்டார மற்றுமொரு திடுக்கிடும் உண்மையைக் கூறினான்.

"என்ன ராம்ஜீ நிம்மதியாக அமர்ந்து விட்டீர்கள். உங்கள் உதவியாள் ஓடிச்சென்று பொலிஸாரை அழைத்து வருவான் என்று சந்தோஷப்படுகின்றீர்களா?". நீங்கள் புத்திசாலிதான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் என்னை மடையன் என்று நீங்கள் கருதியதுதான் தவறு. பொலிஸாரை உங்கள் உதவியாள் கூட்டி வருவான் என்று நீங்கள் எதிர்பார்த்தது போல் ஏன் நானும் எதிர்பார்த்திருக்கக்கூடாது. எனவே அவர்கள் இங்கு வந்தால் அவர்கள் எதனையும் கண்டுபிடிக்கக்கூடாது என்ற விதத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன். இந்த மாளிகை நிறைய மர்மங்களையும், இரகசியங்களையும் கொண்டுள்ளது. முன்பு கீர்த்திஶ்ரீ ராஜசிங்க மன்னன் காலத்தில் எகலப்பொல மகா திஸாவை வாழ்ந்த அதே மாளிகைதான் இது. ராஜசிங்க மன்னனின் சூழ்ச்சியை முன்னமே உணர்ந்திருந்த எகலப்பொல திஸாவை இந்த மாளிகையை பல மர்ம குகைகள், நிலத்தடி சுரங்கப் பாதைகள் முதலானவற்றுடனேயே அமைத்திருந்தார். அவற்றை நான் மேலும் நவீனப்படுத்தியுள்ளேன். இந்த மாளிகையில் இருந்து தலதா மாளிகைக்கும், கண்டி வாவிக்கும் கூட செல்லத்தக்கதான சுரங்கப்பாதைகள் உள்ளன" என்று நிறுத்தி.. அவன் மீண்டும் கூறினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவற்றை இலகுவில் யாராலும் தெரிந்து கொள்ள முடியாது. பொலிஸார் என்னை மீறி ஒன்றும் செய்யமாட்டார்கள். அவர்கள் எப்போதும் என் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள்” கரலியத்தவின் குரல் தீர்மானமாக ஒலித்தது.

அங்கிருந்த ஏனையோர் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக இருந்தனர்.

அப்போது திலக்க ஸ்ரீ பண்டார தட்டொன்றில் இலைக்கஞ்சியும், சிகரட் பக்கெட் ஒன்றும் கொண்டு வந்து ராம்ஜீயின் அருகில் இருந்த சிறு மேசையில் வைத்தான்.

“அருந்துங்கள் ராம்ஜீ. ... பச்சை இலைக்கஞ்சி. ஔசத பானம். பசியையும் களைப்பையும் போக்கவல்லது. எமது மூதாதையரின் பாரம்பரிய பானம். அருந்துங்கள்” என்று கூறினான் கரலியத்த பண்டார.




# மரணப்பொறியின் மத்தியில்

கோணப்பு கரலியத்த பண்டார என்பவன் தனது வரலாற்றுப் பின்னணியைக் கூறினான். அவன் கூறியதெல்லாம் நம்பக்கூடியதாக இருக்கவில்லை. எனினும் தன் கண்முன்னால் நடக்கும் அந்தக் காட்சியை ராம்ஜீயால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. அவன் வேறு வழியில்லாமல் தனக்கு வழங்கப்பட்ட இலைக்கஞ்சியை பருகி சிகரட்டையும் ஊதித்தீர்த்தான்.

ராம்ஜீ இருந்த மனோநிலை, பசி, களைப்பு என்பவற்றால் சோர்ந்திருந்ததால் அவனுக்கு அந்த பானமும், சிகரட்டும், தேவா மிர்தம்போல் இருந்தன. கஞ்சியை ஒரே மூச்சில் குடித்து விட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரட் ஒன்றை எடுத்துப்பற்ற வைத்தான். இப்போது அவனுக்கு கொஞ்சம் தெம்பு வந்திருந்தது.

"திரு ராம்ஜீ அவர்களே! இப்போது என்னைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள். என் பெயர் கோணப்பு கரலியத்த பண்டார. எகலப் பொல மகா திஸாவயின் குடும்பத்தில் எஞ்சியிருக்கும் ஒரே ஆண் வாரிசு நான்தான். எங்கள் பரம்பரையினர் கோணப்பு பண்டார என்ற விமலதர்மசூரிய மன்னன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பிற்காலத்து கண்டி ராச்சிய மன்னர்கள் மதுரை வடுக அரச வம்சத்தில் இருந்து பெண்களை அழைத்து வந்து திருமணம் செய்து கொண்டதால் இலங்கையின் இறுதி அரச பரம்பரையிலும் சிங்கள வம்சம் அற்றுப் போனது. கண்டியின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்க என்ற பெயரில் அரசாட்சி செய்த கண்ணுசாமி என்ற தமிழ் வடுக நாயக்க மன்னன். இவன் பிலிமத்தலாவ திசாவை, மொல்லி கொடதிஸாவை ஆகியோரின் சூழ்ச்சியுடன் கண்டியின் உண்மையான சிங்கள அரச பரம்பரை வாரிசான எகலப்பொல குடும்பத்தினரை மிகக்கொடூரமாகக் கொன்றழித்தான்.

அன்று எனது கொள்ளுப்பாட்டி எகலப்பொல குமாரிஹாமி தனது மூன்று குழந்தைகளையும் கொலை வாளுக்குப் பறிகொடுத்த பின் செய்த சபதம் இன்று இரகசியமாக எமது கடந்த பன்னிரண்டு பரம்பரையினரால் பேணப்பட்டு வருகின்றது. அதன்படி ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் ஆண் வாரிசுகள் எங்கிருந்தாலும் அவர்கள் அனைவரையும் தேடிக்கண்டுபிடித்து ஒழித்துக்கட்டியாக வேண்டும். ஏற்கனவே ஐந்து பேர்களைத் தீர்த்துக் கட்டியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. இன்னும் மூன்று பேர் பாக்கியுள்ளனர். அவர்களையும் தீர்த்து விட்டால் எனது கொள்ளுப்பாட்டியின் சபதம் நிறைவேறி விடும். அதுவே எகலப் பொலமகா திஸாவையின் ஆசையும் கூட.

எகலப்பொல மகா திஸாவையின் வாரிசுகளான மத்தும பண்டாரவும் லொக்கு பண்டாரவும் கொலை செய்யப்பட்ட பின்பு வேறு வாரிசு இல்லாத நிலையிலும் அரசுப்பதவி கிடைக்காததாலும் நொந்துபோன அவர் எதிர்காலத்தில் ஆங்கில அரசைத் தோற்கடித்து கண்டியில் சிங்கள அரசவம்சத்து ஆட்சியைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காகவே மறுமணம் செய்து கொண்டு அதன் மூலம் ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தார். ஆனாலும் பல்வேறு காரணங்களால் எனக்கு முந்திய அந்த ஆண் வாரிசுகளான என் தந்தையாலும், பாட்டனாராலும் அவர்களுக்கு முந்தியோர்களாலும் அந்த ஆசைகளை நிறைவேற்ற முடியவில்லை. இப்போது எனது கடமையில் முக்கால்வாசி முடிந்து விட்டது. இன்னும் கால்வாசியையும் முடித்து விடும் திடம் எனக்குள்ளது. எனது வழியில் யார் குறுக்கிட்டாலும் அவர்களது உயிர் அவர்களுக்கு சொந்தமாக இருக்காது"

இவ்வாறு கூறி முடித்தான் கோணப்பு கரலியத்த பண்டார. அவன் முகத்தில் இரத்தக் கொதிப்பு தெரிந்தது. அவன் சிவந்த கண்களும் தடித்த உதடுகளும் மெதுவாகத் துடித்துக் கொண்டிருந்தன.

அவன் பேச்சைக்கேட்டு மிகுந்த யோசனையில் ஆழ்ந்த ராம்ஜீ தான் இதுவரை புலனாய்வு செய்த விடயங்கள் சரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தாலும் தான் கொலைகார பைத்தியக்காரன் ஒருவனிடம் சிக்கிக் கொண்டதை எண்ணி தன்னையே நொந்து கொண்டான்.

ஜெய்சிங் மிகப் பரபரப்புடன் ஓடி வந்த போது நுவரவில்லா பங்களாவில் ஒருவரும் உறங்கவில்லை என்பதற்கு அடையாளமாக எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. நளாயினியும் கிருஷ்ணசாமியும் போனவர்களை இன்னமும் காணவில்லையே என சிந்தித்தபடி ஒவ்வொரு திசையில் முகத்தை வைத்தபடி வராந்தாவில் அமர்ந்திருந்தனர்.

தூரத்தில் லேண்ட் ரோவரை நிறுத்தி விட்டு ஜெய்சிங் மாத்திரம் தனியாக ஓடி வருவதனைக்கண்டு நளாயினி அதிர்ச்சியடைந்தாள். அவள் இதயம் திக்கென அடித்துக் கொண்டது. ஏன் ஜெய்சிங் மாத்திரம் வருகிறான் என்ற கேள்வி அவள் மனதில் பீதியுடன் எழுந்தது. ராம்ஜீ ஏதும் ஆபத்தில் சிக்கிக் கொண்டானோ என்று பயந்தாள்.

ராம்ஜீயின் நண்பன் ரவி சித்திரவேலு நாயக்கரின் கொலையைத் தொடர்ந்து கொலையில் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ராம்ஜீ மிகத் தீவிரமாய் ஈடுபட்ட போது தெரிந்தோ தெரியாமலோ நளாயினியும் அதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாள்.

அதன் பின் இந்தக் குற்றப்புலனாய்வில் அவள் செய்த சில கண்டுபிடிப்புக்கள் ராம்ஜீக்கும் நளாயினிக்கும் மிக நெருங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

ராம்ஜீக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற நினைப்பே அவளுக்கு பேரதிர்ச்சியை அளித்தது.

அவளும் பரபரப்புடன் எழுந்திருந்து என்ன நடந்தது ஜெய்சிங் என்று கூவியபடியே முற்றத்திற்கு ஓடினாள்.

நளாயினியும் கிருஷ்ணசாமியும் அருகில் வந்ததும் "ராம்ஜீ சேரைக் காணவில்லை" என்று மூச்சு வாங்கக் கூறினான். ஜெய்சிங் நடந்ததை விவரமாகக் கூறும்படி நளாயினி பணித்தாள்.

ஜெய்சிங் நடந்ததை அப்படியே கூறினான்.

"நானும் ராம்ஜீ சேரும் லேண்ட்ரோவரை எடுத்துக்கொண்டு அந்த பழங்கால மாளிகை இருந்த பகுதியை ஆராய்ந்தோம். பின்னர் மாளிகையைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதில் சுவரில் காணப்பட்ட வெடிப்பினூடாக ராம்ஜீ உள்ளே சென்றார். கொஞ்ச நேரம் சென்றதும் தோட்டத்தில் நாய்கள் குரைக்கும் சத்தமும் ஆட்கள் அங்கும் இங்கும் ஓடும் சத்தமும் கேட்டது. ஒரு நாய் நான் இருந்த பக்கமாக வந்து என் மீதும் சீறிப்பாய்ந்தது. நான் உடனே அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சற்று தூரம் சென்று காத்திருந்தேன். மிக இருட்டாக இருந்ததால் வேறு எதனையும் பார்க்க முடியவில்லை"

அவன் சற்றே நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

"சிறிது நேரம் சென்றதும் நான் மீண்டும் பழைய இடத்திற்குச் சென்று மதில் மீது ஏறிப் பார்த்தேன். ராம்ஜீ சேரைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சில நாய்களுடன் துப்பாக்கிகளுடனும் நான் இருந்த திசை நோக்கி சிலர் விரைந்து வருவது நிழலுருவங்களாகத் தெரிந்தன. நான் உடனே லேண்ட்ரோவரை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வந்து விட்டேன். சிலவேளை அவர்கள் நான் தப்பிச் சென்றதை பார்த்திருக்கக்கூடும்”

அவன் மூச்சி வாங்கக் கூறினான்.

“நானும் அவர்களிடம் சிக்கி விடாமல் இருப்பதற்காகவும் நாம் வெளியில் இருந்தால் ராம்ஜீ சேருக்கு உதவக்கூடியதாக இருக்கும் என்பதாலேயும்தான் நான் அங்கிருந்து வெளியேறினேன்”. இவ்வாறு பரபரப்புடன் கூறிய ஜெய்சிங் நாம் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்து அந்த பங்களாவுக்கு போவது நல்லது என்று கூறிமுடித்தான்.

அவன் கூறியதைக்கேட்டு சற்று நேரம் சிந்தித்தாள் நளாயினி பின் அவள் திடமாகக் கூறினாள்.

“நாம் தலைகீழாக நின்றாவது ராம்ஜீயைக் மீட்டாக வேண்டும். ஆனால் நாம் மேற்கொண்டிருக்கும் பணி மிக ஆபத்தானது என்பதால் மிக்க கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும். கீரிப்பிள்ளையின் இடத்தில் இருப்பவன் யாராக இருந்தாலும் மிகுந்த அரசியல் செல்வாக்கும் சமூகத்தில் உயர் அந்தஸ்த்து, பொலிசாரின் மீது செல்வாக்கு, பாதாள உலகத்துடன் தொடர்பு என்பவற்றையும் கொண்டவனாக இருப்பான். ஆதலால் கண்டிப் பொலிஸார் எவ்வளவு தூரம் நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்பது சந்தேகத்துக்குரியதாகும்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சற்று யோசித்தாள்.

நாம் உடனடியாக இந்த விடயத்தை டி. எஸ். பி. சிங்க ராயகருக்கு அறிவித்து அவர் வாயிலாகவே கண்டி பொலிசாரை அணுக வேண்டும்.

இவ்வாறு கூறிய நளாயினி டி.எஸ்.பி. சிங்கராயருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தாள். பல முறை முயற்சித்த பின்பே சிங்கராயருடன் தொடர்பு கிடைத்தது.
நளாயினி அவரிடம் சுருக்கமாக விடயத்தைக் கூறினாள். செய்தியைக் கேட்டுக்கொண்ட டி.எஸ்.பி. தான் கண்டிப் பொலிசாருடன் தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறி என்ன செய்யலாம் என்பதை அறிந்த பின்பு மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொள்வதாக கூறினார்.

அதன்பின் நளாயினியும் ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் செய்வ தறியாது மிகக் கவலையுடன் டி.எஸ்.பி. யிடம் இருந்து அழைப்பு வரும் வரை காத்திருந்தனர்.

சுமார் பதினொரு மணிக்கு டி.எஸ்.பி. யிடம் இருந்து அழைப்பு வந்தது. அவர் கண்டி பொலிசாருடன் தொடர்பு கொண்டதாகவும் தலைமைப் பொலிஸ் அதிகாரி கடமையில் இல்லாததால் உடனடியாக அந்த வீட்டுக்குச் சென்று சோதனை செய்வது சாத்தியமில்லை என்றும் கூறினார். காரணம் ராம்ஜீ காணாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் மொனரவில வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அந்த மாளிகை கோணப்பு கரலியத்த பண்டாரவுக்கு சொந்தமானதென்றும் அவன் கண்டியின் முதல் தர தனவந்தன் என்றும் மிகுந்த அரசியல் செல்வாக்கு உள்ளவன் என்றும் இந்த நடு இரவில் அவன் வீட்டுக்குச் சென்று தொல்லை கொடுப்பது பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் காலையில்தான் அங்கு போகக்கூடியதாக இருக்கும் என்று கூறினார்.

தான் கொழும்பில் இருந்து பொலிஸ் அதிகாரி ஒருவரை அனுப்புவதாகவும் காலை எட்டு மணிக்கெல்லாம் பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்று காரியங்களைக் கவனிக்கும்படியும் கூறினார்.

அந்த மூவரும் அன்று இரவு முழுவதும் உறங்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்டாரவின் பயங்கரத்திட்டம்

ராம்ஜீயை கொலைகாரர்கள் சிறைபிடித்துக் கொண்டனர் என்ற செய்தி ஜெய்சிங்கை விட நளாயினிக்கே பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ராம்ஜீ இல்லாமல் இனி தனக்கு வாழ்வில்லை என்ற அளவுக்கு அவள் மனதில் ராம்ஜீ குடிகொண்டு விட்டான். எனவே அவளுக்கு அடுத்துவரும் சில தினங்கள் மிகுந்த சவாலாக இருக்கப்போகின்றது.

அவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் பொலிஸ் அதிகாரியை சம்மதிக்க வைத்து புறப்பட்டபோது அடுத்த நாள் காலை பதினொரு மணியாகி விட்டது. எனினும் நளாயினியையோ அல்லது ஜெய்சிங்கையோ தங்களுடன் அழைத்துச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் சென்றனர்.

ஆனால் நளாயினியும், ஜெய்சிங்கும், கிருஷ்ணசாமியும் யாரிடமும் சொல்லாமல் லேண்ட்ரோவரை எடுத்துக் கொண்டு பொலிஸாரின் பின்னாலேயே சென்றனர். கொழும்பில் இருந்து டி. எஸ். பி. சிங்கராயரால் அனுப்பப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரி நளாயினிக்கு ஆறுதல் அளித்தார். எல்லா விடயங்களையும் தான் கவனித்துக் கொள்வதாக உறுதியளித்தார். தேடுதலுக்கான ஆணைப்பத்திரத்தையும் அவர் கொழும்பில் இருந்தே கொண்டு வந்திருந்தார்.

நளாயினியும், ஜெய்சிங்கும், கிருஷ்ணசாமியும் மாளிகைக்கு வெளியிலேயே நின்று கொள்ள பொலிஸ் குழுவினர் மட்டும் உள்ளே சென்றனர்.

பொலிஸ் குழுவினர் வரும் விடயம் கோணப்பு பண்டாரவுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. அவர்கள் கொழும்பில் இருந்து வந்த கட்டளையின் பேரிலேயே இக்காரியத்தில் ஈடுபட நேர்ந்தது என தெரிவித்திருந்தனர்.

அவர்கள் மொனரவில மாளிகையை அடைந்தபோது கோணப்பு பண்டார முன் மண்டபத்திலேயே இருந்த போதும், அவர்கள் வந்த விடயம் தனக்கு சம்பந்தப்பட்டதல்லவென்பதைப் போல வாளாவிருந்தான். தான் அதை விட மிக முக்கியமான வேலையில் ஈடுபட்டிருப்பதைப்போல் காட்டிக்கொண்டான்.

மாளிகையின் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்த சிற்றூழியர்களை தவிர வேறு யாரும் கண்ணில் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் குழுவினரை வழிநடத்திச் சென்ற சார்ஜண்ட் மிகப்பவ்வியமாக கோணப்பு பண்டாரவை அணுகி தாம் வந்திருக்கும் விடயம் தொடர்பில் தெரிவித்த போது தான் அதனை ஆட்சேபிக்கவில்லை என்றும் அதன் விளைவை அவர்கள் பின்னர் சந்திக்கவேண்டி வரும் என்றும் மாத்திரம் தெரிவித்தான்.

பொலிஸ் குழுவினர் வேண்டா வெறுப்பாகவே அந்த மாளிகையை சோதனை செய்தனர் என்பது அவர்களது நடவடிக்கைகளில் இருந்து தெரிந்தது. கொழும்பில் இருந்து வந்திருந்த அதிகாரி மாத்திரம் அங்கும் இங்கும் ஓடிச் சென்று சுறுசுறுப்பாக தேடுதலில் ஈடுபட்டார்.

அவர்கள் நிலத்தடி அறைகள் பற்றியோ இரகசிய வழிகள் பற்றியோ கொஞ்சமும் சந்தேகிக்கவில்லை. சித்ராம்பரி, ரஞ்சித் நிமலசிரி, திலக்க பண்டார முதலானோர் எங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

அவர்கள் சுமார் முக்கால் மணி நேரம் தேடியும் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. குறைந்த பட்சம் அந்த நாய்களைக் கூடக் காணவில்லை.

பொலிஸ் குழுவினர் அந்த மாளிகையில் இருந்து ஒன்றையும் கண்டுபிடிக்காமலேயே வெளியில் வந்தமை நளாயினிக்கும், ஜெய்சிங்குக்கும், கிருஷ்ணசாமிக்கும் பெரும் ஏமாற்றமாக இருந்தது. எனினும் அவர்களால் அப்போதைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கொழும்பில் இருந்து வந்திருந்த பொலிஸ் அதிகாரி நடந்த விடயத்தை சிங்கராயருக்குத் தெரிவிப்பதாகக் கூறி விடை பெற்றுச்சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸார் சென்ற பின்பு கோணப்புகரலியத்த பண்டார தனது உதவியாளர்கள் சகலரையும் தனது அரசவை மண்டபத்தில் வந்து கூடுமாறு பணிப்புரை விடுத்தான்.

அவனது கட்டளையின் பேரில் சித்ராம்பரி, ரஞ்சித் நிமல சிரி பண்டார, திலக்க ஸ்ரீ பண்டார முதலானோர் அங்கு வந்து கூடியிருந்தனர். கோணப்பு கரலியத்த பண்டார சிம்மாசனத்திலும், ஏனையோர் அவரவர்களுக்குரிய ஆசனங்களிலும் அமர்ந்திருந்தனர்.

கோணப்பு கரலியத்த பண்டார மிகக்கோபமுடன் காணப்பட்டான். அவன் ரஞ்சித்தை நோக்கி ராம்ஜீயைப் பற்றிய எல்லா தகவல்களையும் திரட்டியாகி விட்டதா என்று உறுமினான். கோணப்புபண்டார இவ்வளவு கோபமாக இருந்ததை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. தன் வீட்டை பொலிஸார் வந்து சோதனை இடும் அளவுக்கு சம்பவங்கள் இடம்பெற்று விட்டதை அவர்கள் அனுமதித்து விட்டமை தொடர்பில் அவன் பொறுமை இழந்திருந்தான்.

சித்ராம்பரி கொஞ்சம் பணத்தைத் திரட்டிக் கொண்டு யாரும் கண் காணாத இடத்துக்கு ஓடி விட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தாள். இப்போது பொலிசாரின் வருகை அவளை மேலும் பீதியடைய வைத்திருந்தது. ரஞ்சித்துக்கோ எங்கும் ஓடி விட முடியாது என்பது நன்கு விளங்கியது. தான் ஓடினால் கூட உலகின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து தீர்த்துக் கட்டி விடும் வல்லமை கோணப்புவுக்கு உண்டு என்பது அவனுக்குத் தெரியும். அத்துடன் பொலிசாரின் கண்களிலிருந்தும் அவன் தப்ப முடியாது. அவன் ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு பேசினான்.

"தலைவரே! ராம்ஜீயின் முழு விபரமும் பெற்றாகி விட்டது. கொழும்பில் அவன் வீடு, வியாபாரம் சொத்து மதிப்பு மற்றும் கண்டியில் அவர்கள் தங்கியிருக்கும் வீடு, வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பன எல்லாமே நமக்குத் தெரியும். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் அனைவரையும் முற்றாக ஒழித்துக் கட்டி விடலாம்". ராம்ஜீயால் தான் இத்தனை தொல்லையும் என்பதால் அவனையும், அவனைச் சார்ந்தவர்களையும் தீர்த்துக் கட்டி விட வேண்டும் என்பதில் ரஞ்சித் தீர்மானமாக இருந்தான்.

ஆனால் அவன் பேச்சைக் கேட்டு கோணப்பு பண்டார மேலும் கோபம் கொண்டான். அவன் குரல் இடியென இறங்கியது.

"முட்டாள்.. வடி கட்டிய முட்டாள்... இதற்குத்தானா இத்தனை பேரை கொலை செய்தும், மிரட்டியும், கொள்ளையடித்தும் நான் எனது சாம்ராஜியத்தைக் கட்டி வளர்த்தேன். ராம்ஜீ சுமார் 500 மில்லியன் கோடி ரூபாவுக்கு சொந்தக்காரன். அந்தப் பணம் அவ்வளவும் நம் கைக்கு வந்த பின்னர் தான் அவனுக்கு மரணம். அவனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். அத்துடன் அவனைச் சார்ந்தவர்களையும் அவர்கள் இருக்குமிடத்தையும் நன்கு அவதானித்துக் கொள்" என்று உறுதியாகக் கூறினான் கோணப்பு பண்டார.

பின்னர் ஏனையவர்களை அனுப்பி விட்டு திலக்கஸ்ரீ பண்டாரவை அழைத்து ராம்ஜீயை அழைத்து வருமாறு பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சில நிமிடங்களில் ராம்ஜீ அங்கு அழைத்து வரப்பட்டான். அவன் அந்த மண்டபத்தில் நுழைந்ததும் அவன் வரவை எதிர்பார்த்திருந்த கோணப்பு அவனை ஆசனத்தில் அமரச் சொல்லி விட்டு திலக்கஸ்ரீயை வெளியேறுமாறு பணித்தான்.

அதன் பின் ராம்ஜீயை நோக்கி கூறினான்.

"திருவாளர் ராம்ஜீ...இங்கே எல்லாம் சௌகரியமாக இருக்கும் என்று கருதுகிறேன். நீங்கள் விரும்பினால் தொடர்ந்து எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் இங்கே தங்கியிருக்கலாம். ஆனால் உங்களுக்கு பிடிக்கவில்லையென்றால் சொல்லுங்கள் நாளையே நீங்கள் விடுதலை பெற்றுச் சென்று விடலாம்."

அவன் கூறியதன் அர்த்தம் ராம்ஜீக்குப் புரியவில்லை. அவன் ஏன் அப்படிச் சொல்கிறான் என்று ராம்ஜீ யோசித்தான். ஏதோ ஒரு திட்டத்துடனேயே அப்படிப் பேசுகிறான் என்பது மட்டும் புரிந்தது.

"மிஸ்டர் ராம்ஜீ... நான் இந்தச் சமூகத்தின் உயர் அந்தஸ்திலுள்ள ஒரு மனிதன். எந்தக் குற்றத்துக்காகவும், யாரும் ஒரு சுண்டு விரலைக் கூட என்னை நோக்கி நீட்ட முடியாது. ஆனால் நீ மிகப் பெரிய புத்திசாலி. எனக்கும் எகலப்பொல குடும்பத்துக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்த முதல் ஆள் நீதான். சிலவேளை இந்தத் தொடர்பை நீ பொலிஸிடம் தெரிவித்திருக்கக் கூடும். ஆனால் பொலிசால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. நான் நேரடியாக எந்தக் குற்றத்துடனும் சம்பந்தப்படவில்லை. அதற்கான ஆதாரங்கள் யாரிடமும் இருக்க முடியாது. ஏனென்றால் சாட்சிகளை நான் ஒரு போதும் விட்டு வைத்ததில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணப்பு பண்டார ஆரம்பத்தில் தன்னை மரியாதையாகவும் பின்னர் அவன் கோபம் கிளறப்பட மரியாதை குறைந்து எகத்தாளமாக "நீ", "நான்" என்றும் அழைக்கத் தொடங்கியதையும் ராம்ஜீ கவனித்தான். தன்னை இன்னுங் கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறான் என்றால் அதற்கு ஏதும் பெரிய திட்டம் ஒன்றை அவன் வைத்திருப்பான் என்று ராம்ஜீ சிந்தித்தான். அவன் மௌனமாக கோணப்புவின் பேச்சை அவதானித்தான்.

"நீ இங்கிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமாயின் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. நீ எனக்கும், எனது இயக்கத்துக்கும் செய்திருக்கும் சேதத்துக்கு ஈடாக நூறு கோடி ரூபா நட்ட ஈடு செலுத்த வேண்டும். உனக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும். இதற்கு பின்னரும் பொலிஸ் தலையீடு இருக்கக்கூடாது. இன்று காலை உன் உதவியாள் பொலிஸ்காரர்களை இங்கு அழைத்து வந்திருந்தான். ஆனால் அவர்களால் இங்கு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களால் இனிமேலும் எதனையும் கண்டுபிடிக்க முடியாது என்பதனை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்".

ராம்ஜீ கோணப்புவின் பேச்சை தொடர்ந்து அவதானித்து வந்ததில் இருந்து ஒரு விடயம் மிகத் தெளிவாக புரிந்தது. அங்கிருந்து உயிருடன் தப்பிச் செல்வது இலகுவான காரியம் அல்ல. அத்துடன் தான் ஒருவனுக்கு மட்டுமே அவனது எல்லா ரகசியங்களும் தெரிந்துள்ளதால் தன்னை எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் சுதந்திரமாக வெளியில் செல்ல அனுமதிக்க மாட்டான். ஆதலினால் கோணப்புவின் திட்டத்தை அறிந்து அதன் மூலமே அவனை வெற்றி கொள்ள வேண்டும் என்று சிந்தித்தான் ராம்ஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் அவன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சில கேள்விகளை கோணப்பு பண்டாரவிடம் கேட்டான்.

"நான் பணம் கொடுக்கா விட்டால் உன்னால் என்ன செய்ய முடியும்?"

அதைக்கேட்டு மிகப் பலமாக பைத்தியக்காரன் போல் நகைத்தான் கோணப்பு. நீண்ட நகைப்புக்குப் பின் சினிமாவில் வரும் வில்லனின் முகம் சடுதியாக மாறுவது போல் அவன் முகம் கோணலாகவும் கொடூரமாகவும் மாறியது.

அவன் எகத்தாளமாக கூறினான்.... "ராம்ஜீ.... நீ புத்திசாலி... இதுவரை நீ கண்டுபிடித்ததில் இருந்து எனது குணத்தையும் வல்லமையையும் புரிந்து கொண்டிருப்பாய் என்று கருதுகிறேன். அதேபோல் நீ பணக்காரன்.... சொன்ன சொல் தவறாத கனவான் என்பதும் எனக்குத்தெரியும். இருந்தாலும் அதனையும் மீறி நீ சம்மதிக்கா விட்டால்.... மயிலே மயிலே ... இறகு போடு என்று கேட்ட பின்பும் மயில் இறகு போடாவிட்டால் அந்த மயிலிடம் இருந்து எப்படி இறகு பிடுங்குவது என்றும் எனக்குத் தெரியும்" என்று கூறி விட்டு மீண்டும் அகோரமாக சிரித்தான் கோணப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலக்கம் கொண்ட காரிகை

கோணப்பு பண்டார என்பவன் ஒரு குரூரமான மணம் படைத்த சித்த சுவாதீனமற்றவன்போல் நடந்து கொள்வதாக ராம்ஜீக்குத் தோன்றியது. இவனது பிடியில் இருந்து தப்புவது யானை விழுங்கிய கரும்பை அதன் வயிற்றில் இருந்து மீட்டெடுக்கும் செயலுக்கு ஒப்பானது என்று ராம்ஜீ நினைத்தான்.

எனினும் கோணப்பு பண்டாரவின் அகோரச் சிரிப்பு ராம்ஜீயை எந்த விதத்திலும் கலவரப்படுபடுத்தவில்லை. அவன் மிக நிதானமாகவே இருந்தான். அவன் மீண்டுமொரு கேள்வியெழுப்பினான்.

"சரி நான் பணத்தைக் கொடுத்த பின்பும் நீ என்னை அனுப்புவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு?"

கோணப்பு தனது சிரிப்பை நிறுத்திவிட்டு ராம்ஜீயை அதிசயமான மனிதனைப் பார்ப்பதுபோல பார்த்தான். இதுவரை இவ்விதம் தன்னிடம் கேள்வி கேட்கும் மனிதனை அவன் சந்தித்தது கிடையாது. உடனே அவனைக் கொன்று புதைத்துவிட வேண்டும். போல் அவனுள் கொலை வெறி எழுந்தது. ஆனால் அவனிடம் கோடிக்கணக்கான சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன என்ற நினைப்பு அவன் ஆத்திரத்தை அடக்கியது. அத்தனை சொத்தையும் கவர்ந்து விட வேண்டும் என்று உள்ளூர கருவிக் கொண்டான்.

"ராம்ஜீ..... நான் ஒரு சத்திரியன் என்பதை மறந்து விட்டு பேசுகிறாய். சத்திரியன் பொய் சொல்ல மாட்டான், நீ எந்த அளவுக்கு கனவானோ அதை விட ஒருபடி மேலானவன் நான். இந்த விடயத்தில் என் வார்த்தையை நீ நம்பித்தான் ஆக வேண்டும்" அவன் பேச்சை நிறுத்திவிட்டு சற்று நேரம் ராம்ஜீயை உற்று நோக்கினான். பின் மீண்டும் தொடர்ந்தான்.

"பணத்தைப் பெற்றுக் கொண்டு உன்னை நான் விடுவிக்கிறேன் என்று கூறினேன் அல்லவா? ஆனால் என்ன நம்பிக்கையில் நான் உன்னை விடுவிப்பது. நீ வெளியே சென்று மீண்டும் பொலிஸாரிடம் என்னை காட்டிக் கொடுக்கமாட்டாய் என்பது என்ன நிச்சயம். உன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். உன் கதையை யாரும் நம்பமாட்டார்கள்.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இப்படி ஒரு கதையை நீ கூறினால் உன்னைத்தான் பைத்தியக்காரன் என்று கூறி யாரும் நகைப்பார்கள். ஆனால் நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். வெளியில் சென்ற பின்பு மீண்டும் என் விவகாரத்தில் தலையிடுவதில்லை என்று.... நான் உன்னை நம்புகிறேன். அதை போல் நீயும் என்னை நம்பத்தான் வேண்டும்"

அவன் அப்பட்டமாக புளுகுகிறான் என்பது ராம்ஜீக்கு நன்கு விளங்கியது. ஆனால் பணம் கொடுக்க சம்மதிக்காவிட்டால் அவன் தன்னை கொடூரமாக சித்திரவதை செய்யவும் தயங்கமாட்டான் என்பதனை ராம்ஜீ நன்கறிவான். எதற்கும் இந்தப் பணம் கொடுக்கும் விடயத்தை சற்று தாமதப்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அவனது சிந்தனைக்கு மத்தியில் கோணப்பு மீண்டும் கூறினான். "நான் கேட்கும் இந்தப் பணத்தை நீ எப்படிப் பெறுவாய் என்பது எனக்கு அவசியமற்ற விடயம். ஆனால் உன்னால் சில நாட்களுக்குள் அவற்றை புரட்ட முடியும் என்பது எனக்குத் தெரியும். இது விடயத்தில் தீர்மானிக்க உனக்கு ஒரு நாள் அவகாசம் வழங்கப்படும்" என்று கூறிய கோணப்பு மேசையில் இருந்த பெல்லை அழுத்தினான். உடனேயே கதவுக்கு வெளியில் இருந்த திலக்கஶ்ரீ பண்டார உள்ளே நுழைந்து சிரம்தாழ்த்தி வணங்கி நின்றான். அவனிடம் ராம்ஜீயை அழைத்துச் செல்லுமாறு பணித்தான் கோணப்பு.

அடுத்த நாள் காலை சுமார் ஒன்பது மணியளவில் ரஞ்சித் நிமலசிறி சித்ராம்பரியின் அறைக்குள் நுழைந்தபோது அவள் குளித்து முழுகிவிட்டு சாவகாசமாக தலைவாரிக் கொண்டிருந்தாள். மஞ்சள் சிவப்பு நீலம் ஆகிய நிறங்கள் கலந்து வழமைக்கு மாறாக வர்ணம் பூசப்பட்டிருந்த அந்த அறையின் அலங்காரம் கூட அங்கு வாழ்ந்தோரின் மன நிலையைப் பிரதிபலித்தது. அந்த அறை பூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் இருந்து இருபத்தைந்தடிக்கு கீழ் உள்ளது என்று கூட யாராலும் ஊகிக்க முடியாது.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக இடம்பெற்று வரும் சம்பவங்களால் மன நிலை பாதிக்கப்பட்டிருந்த சித்ராம்பரியால் முதல் நாள் இரவு நன்றாக உறங்க முடியவில்லை. அதனால் அவள் கண்களை சுற்றி இலேசாக கறுப்பு வளையங்கள் தோன்றி இருந்தமை கண்டு அவள் மனக்கிலேசம் கொண்டாள். அவள் மனதில் பீதி கலந்த பல்வேறு சிந்தனைகள் தோன்றவாரம்பித்தன.

கொழும்பில் தன்னை பின் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த ராம்ஜீ இப்போதுதான் இருக்கும் இடத்துக்கே தேடி வந்து விட்டது. தொடர்பில் அவள் மிக அச்சம் கொண்டிருந்தாள். அடுத்து அவனைத் தேடி ஒரு பெரிய பொலிஸ் படை வந்து அவர்கள் அனைவரையும் கைது செய்துவிடும் என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றித்தோன்றி அச்சுறுத்தியது. கோணப்பு பண்டாரவால் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை அவளிடம் படிப்படியாக மறைந்து வந்தது. அவள் தனது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி தீவிரமாக சிந்திக்க வாரம்பித்தாள்.

அப்போதுதான் எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் அறைக்குள் திடுதிப்பென நுழைந்தான் ரஞ்சித் நிமலஸ்ரீ. அவளும் அவனைக் கண்டதும் மேலும் பரபரப்படைந்தாள். அவள் மனதில் தோன்றிய கலவரம் முகத்திலும் தெரிந்தது.

"என்ன.... என்ன ரஞ்சித் ஏதும் பிரச்சினையா?" என்று கலவரம் கலந்த குரலில் கேட்டாள். அவளது கலவரமும் பரபரப்பும் ரஞ்சித்துக்கு எரிச்சலையே வரவழைத்தது. அவள் பீதியும் அச்சமும்கொண்டிருக்கிறாள் என்ற விடயம் கோணப்புவுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தால் அது அவர்கள் இருவருக்கும் நல்ல தல்ல என்று அவனுக்குத் தெரியும்.

கோணப்பு கரலியத்த பண்டார பெண்கள் மீது மிகுந்த வெறுப்பு கொண்டிருந்தான். பெண்கள் ஆண்களின் அடிமைகளாக இருந்து அவர்களின் உடற்பசிக்கு அவ்வப்போது தீனி போடுபவர்களாக மட்டுமே இருக்க வேண்டுமே தவிர வேறெதற்கும் அவர்களை பயன்படுத்த முடியாது என்று அவன் நினைத்தான். அவர்கள் பலவீனமானவர்கள் என்றும் விரைவில் அச்சம், பீதி போன்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாகி தம் போன்றவர்களை காட்டிக் கொடுத்துவிடுவார்கள் என்றும் கருதினான்.

தற்போது சித்ராம்பரி இவ்விதம் கலவரப்பட்டுள்ளாள் என்று தெரிந்தால் கோணப்பு அவளை கொஞ்சமும் கருணை காட்டாமல் தீர்த்துவிடுவான் என்பதும் நன்கறிந்த விடயம். ரஞ்சித் அவளின் காதலன் என்றபடியால் ஆபத்து தனக்கும் சேர்த்துத்தான் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது என்பதும் ரஞ்சித்துக்கு தெரியும்.

இவ்விதம் சிந்தித்த ரஞ்சித் அதனை வெளிக்காட்டாமல் "சித்ரா... ஒன்றுக்கும் கவலைப்படாதே! எல்லாம் நமக்குச் சாதகமாகவே நடக்கும்" என்று கூறி அவளை ஆசுவாசப்படுத்தினான். பின் தொடர்ந்து கூறினான். "ராம்ஜீ என்ற அந்த மனிதன் பணம் கொடுக்க சம்மதித்துவிட்டான். முதற்கட்டமாக பத்துக் கோடி ரூபா பெறத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அவன் தனது செயலாளருக்கு கடிதம் எழுதியிருக்கிறான். அதனை எடுத்துச்சென்று அவர்கள் தங்கியிருக்கும் மாளிகையில் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு உன்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் அக் கடிதத்தினை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நீ கிளம்ப வேண்டும்'' இதைக் கேட்டதும் சித்ராம்பரி அதிர்ச்சிக்குள்ளானாள். அவளது முகம் நன்றாகவே வெளுத்துப் போய்விட்டது.

அவள் படபடப்புடன் வினாவினாள். "ஏன் நான் போக வேண்டம். நீயோ அல்லது வேறு யாருமோ ஏன் போகக்கூடாது'' அவளது குரலிலும் நடுக்கம் தெரிந்தது.

"சித்ராம்பரி.... இது தலைவர் தீர்மானித்த விடயம். இதில் பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை'' ரஞ்சித் அவளைத் திடப்படுத்தினான்.

"அவர்கள் என்னைத் பிடித்து பொலிஸில் ஒப்படைத்து விட்டால்...?'' அவள் குரல் அழுகையாக மாறிக் கொண்டிருந்தது.

"சித்ரா... இது மிக இலகுவான விடயம். ராம்ஜீ நமது பிடியில் இருக்கும்வரை அவனது ஆட்கள் நம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள். பொலிஸுக்கும் போகமாட்டார்கள்'' ரஞ்சித்தின் குரல் எரிச்சலுடன் ஒலித்தது. "இல்லை...... என்னை விட்டு விடுங்கள்.... நான் போக மாட்டேன்.... என்னை இதில் சம்பந்தப்படுத்த வேண்டாம்'' அவள் குழரினாள்.

ரஞ்சித்துக்கு எரிச்சலுடன் கோபமும் சேர்ந்தே வந்தது. சரேலென்று அவள் தலைமுடியை தனது இடக்கரத்தால் பற்றிப் பிடித்து அவளை நிமிர்த்தி தன் முகத்துக்கு நேரே கொண்டு வந்தான். சிறிது நேரம் அவள் கண்களை உற்றுப் பார்த்தான். அவற்றில் கலக்கத்தைக் கவனித்தான். பின் தனது வலது கரத்தால் ஓங்கி பளாரென ஒரு அறை கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திடீர் மாற்றத்தால் சித்ராம்பரி தன் கன்னத்தைத் தடவியவாறே ரஞ்சித்தை பரிதாபமாகப் பார்த்தாள். ரஞ்சித் அவளை இரண்டு தோற்பட்டைகளிலும் பலமாக உலுக்கினான். பின்பு அவன் கடுமையான குரலில் கூறினான்.

"சித்ரா நீ பிரச்சினைக்குள் சிக்கியிருக்கிறாய் என்பது உனக்குப் புரியவில்லை. தலைவருக்கு உன் மீது திருப்தியில்லை. மாலினியின் கொலைக்குப் பின்னர் உன் நடவடிக்கைகள் மீது தலைவர் சந்தேகப்படுகிறார். நீ மீண்டும் அவரது நம்பிக்கையைப் பெற வேண்டுமாயின் இந்த காரியத்தைச் செய்யத்தான் வேண்டும். அல்லது ஆபத்தான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்"

ரஞ்சித்தின் இந்த வார்த்தைகள் சித்ராம்பரியை நெருப்பென சுட்டன. அவள் உயிரற்றவள் போல் தொப்பென அருகில் இருந்த கட்டிலில் உட்கார்ந்து எங்கோ வெறித்துப் பார்த்தாள். நீண்ட கணங்களுக்கு அவள் அப்படியே இருந்தாள். ரஞ்சித்தே மீண்டும் மௌனத்தைக் கலைத்தான்.

"சித்ரா! நீ நினைக்கிறபடி ஒன்றும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. இது தலைவர் உனக்கு வைக்கும் ஒருபரீட்சை. இதனை மாத்திரம் நீ மிகச் சரியாக செய்து முடித்துவிட்டால் தலைவரின் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்துவிடும். மற்ற விடயங்களை நான் கவனித்துக் கொள்கின்றேன்"

அவள் ஒன்றும் பேசவில்லை.

ரஞ்சித் உறையில் இடப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இதில் ராம்ஜீ அவன் செயலாளருக்கு எழுதிய கடிதம் உள்ளது. நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரவில்லா மாளிகைக்கு சென்று அங்கே நளாயினி என்பவளிடம் இக் கடிதத்தை ஒப்படைத்துவிடு. ராம்ஜீ தங்களிடம் பத்திரமாக இருக்கிறான் என்று சொல். கண்ணும் காதும் வைத்தாற்போல் மிக ரகசியமாக ஒரு பத்து கோடி ரூபாவுக்கு ஏற்பாடு செய்யச் சொல். பொலிஸார் தலையிட்டால் ராம்ஜீ உயிருடன் திரும்பமாட்டான் என்றும் சொல்”

அவள் அவனிடம் இருந்து மௌனமாகவே அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டாள்.

“உனக்கு இன்னும் இரண்டு மணி நேரம் அவகாசம் இருக்கிறது” என்று கூறிய ரஞ்சித் அவள் தோளில் மெதுவாக இரண்டு தட்டுதட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கட்சி மாறும் மச்சக்காரி

சித்ராம்பரியின் கலவரம் ரஞ்சித் நிமலசிரிக்கு கவலை தந்தது. அவளது குழறுபடியான எந்த செயலும் தன்னையும் பாதிக்கும் என அவன் கருதினான். அதனால் அவளது நடத்தைகளை இரகசியமாகக் கண்காணிக்கத் திட்டமிட்டான்.

ரஞ்சித் அங்கிருந்து சென்றதும் சித்ராம்பரி நீண்ட நேரம் சிந்தித்தாள். தான் கொழும்பு சென்றது முதல் இடம்பெற்ற சம்பவங்கள் எல்லாமே தொடராக நினைவுக்கு வந்தன. ரவி பெருஞ் சித்திர நாயக்கனின் கொலைக்கு முன்னர் இடம்பெற்ற நான்கு கொலைகளில் அவள் நேரடியாக சம்பந்தப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அவள் மனச்சாட்சிக்கு அதிகம் பயப்படவில்லை. அநேகமாக அவளது அழகையும், கவர்ச்சியையும் பயன்படுத்தி நைட்கிளப்புகளுக்கு வரும் தனவந்தர்களை தனியான இடங்களுக்கு அழைத்துச்சென்று மிரட்டிப் பணம் பறிப்பதிலேயே கோணப்புவும் ரஞ்சித்தும் அவளை ஈடுபடுத்தினர்.

ஆனால் ரவியின் கொலையைத் தொடர்ந்து சந்திரரத்தன, அதன் பின் ஹேமமாலினி கொலை என்பனவற்றில் அவளை சம்பந்தப்படுத்த சாட்சிகள் உள்ளன. ஏற்கனவே அவை தொடர்பில் அவள் மீது சந்தேகம் கொண்டு ராம்ஜீ விசாரித்திருக்கிறான். அவன் அவற்றை பொலிஸிடம் தெரிவித்திருக்கவும் கூடும். இத்தகைய நிலையில் கோணப்புவின் அமைப்பில் இருந்து எப்படியாவது தப்பிச் சென்று விட வேண்டும் என்று அவள் சிந்தித்தாள். ரஞ்சித்தை இதற்கு இணங்கச் செய்ய முடியும் என்று அவள் நம்பவில்லை. அப்படி என்றால் தனியாகவென்றாலும் வெளியேற வேண்டும்.

அதற்கு நிறையப் பணமும் ஒளிந்திருக்க இடமும் வேண்டும். அதனைப் பெற்றுக்கொள்ள ராம்ஜீயைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உள்ளூரத் திட்டமிட்டுக் கொண்டாள். ராம்ஜீயிடம் நிறைய பணம் குவிந்து கிடக்கின்றது. அவனிடமும் இது தொடர்பில் பேச வேண்டுமென நினைத்துக் கொண்டாள்.

ராம்ஜீயின் செயலாளரான நளாயினியிடம் கடிதத்தை ஒப்படைப்ப தற்காக சித்ராம்பரி ”நுவரவில்லா’ மாளிகையை நெருங்கிய போது பி.ப.2.30 மணியிருக்கும். உச்சி வெயிலின் உக்கிரத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் குறைந்திருக்கவில்லை. பிரதான நுழைவாயிலுக்கு சற்று தொலைவிலேயே காரை நிறுத்தி விட்டு அவள் மரஞ் செடி கொடிகள் நிறைந்திருந்த அந்த பங்களா நோக்கி கூடுமான வரையில் தன் வருகையை அறிவிக்காமலும், தன்னை யாரும் தூ ரத்தில் இருந்து பார்த்துவிடாத வகையிலும் மரங்களுக்கிடையே மறைந்து மறைந்து மெதுமெதுவாகவே முன்னேறிச் சென்றாள்.

எனினும் அவள் வருகையை எதிர்பார்த்து அந்த பங்களாவுக்கு சற்று அருகாமையில் புதர்களுக்கு நடுவில் ஒரு மனிதன் துப்பாக்கியும் கையுமாக வழி மேல் விழி வைத்து எதிர்பார்த்திருந்தமையை அவள் அறியமாட்டாள். அவன் பெயர் சப்புமால் குமார என்ற சண்டி சுனில்.

கடந்த பொதுத் தேர்தலின்போது அரசியல்வாதி ஒருவருக்கு அடியாளாக செயற்பட்ட பாதாள உலகத்தைச் சேர்ந்தவன்தான் இவன். கண்டி உடத்தலவின்ன பிரதேசத்தில் பத்து முஸ்லிம்கள் படுகொலைக்கு காரணமாக இருந்தான் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவன். பொதுத் தேர்தல் முடிந்த கையுடன் தலைமறைவாகிவிட்ட இவனை அவசரத்துக்கு தேவைப்படுவான் என்பதற்காக அடைக்கலம் கொடுத்து வைத்திருந்தான் கோணப்பு பண்டார.

சித்ராம்பரிக்கு ஏதும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதில் இருந்து பாதுகாப்பதற்காகவும், அவளது நடவடிக்கைகளை அவளுக்குத் தெரியாமலேயே வேவு பார்ப்பதற்காகவும் அவன் அனுப்பப்பட்டிருக்கிறான் என்ற விடயம் சித்ராம்பரிக்கும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ராம்பரி "நுவரவில்லா" வளவின் நுழைவாயிலைத் தாண்டி உள்ளே சென்றதும் சுமார் இருபத்தைந்தடி தள்ளி அவளைப்பின் தொடர்ந்தான் சண்டி சுனில்.

இவர்கள் இருவரும் அந்த பங்களாவில் நுழையும் போது நாளாயினி, ஜெய்சிங், கிருஷ்ணசாமி ஆகியோர் வராந்தாவில் கூடி ராம்ஜீயை தேடுவது தொடர்பில் மந்திராலோசனை நடத்திக்கொண்டிருந்தனர்.

முன் கதவுக்கருகில் வந்த சித்ராம்பரி சற்றே நிதானித்து உள்ளே என்ன நடக்கின்றது என்று காது கொடுத்து கேட்டாள். இப்போது அவள் கையில் நவீன ரக கைத்துப்பாக்கி ஒன்று வெள்ளி நிறத்தில் மின்னிப் பளிச்சிட்டது.

அங்கே சில விநாடிகளே தாமதித்த அவள் உள்ளே ஒரு பெண் குரலும், இரண்டு ஆண் குரலும் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்ததனை வைத்து மூன்று பேர் இருப்பதனை ஊகித்தாள். அவர்களுக்கு திடீர் அதிர்ச்சியை உண்டு பண்ணும் விதத்தில் முன் கதவின் கைப்பிடியை சத்தம் கேட்காத விதத்தில் மெல்ல ஒரு கையால் திருகித் திறந்தாள். பின் கதவு படீரென உட்சுவரில் சென்று மோதும் விதத்தில் ஓர் உதைவிட்டாள். அங்கிருந்தவர்கள் சற்றும் எதிர்பாராத விதத்தில் கையில் துப்பாக்கியுடன் அவர்கள் முன்னிலையில் தோன்றினாள்.

இந்தக் கலவரத்தால் அதிர்ச்சியடைந்த அந்த மூன்று பேரும் பேச்சை நிறுத்திவிட்டு சிலையென சமைந்திருந்தனர்.

சித்ராம்பரி அம் மூவரையும் சில நொடிகள் தன் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மாறி மாறி உருட்டி நோட்டம் விட்டாள். நளாயினியாலும், கிருஷ்ண சாமியாலும் தனக்கு எதிர்ப்பு வராது என்று உணர்ந்து கொண்ட அவள் ஜெய்சிங்கின் நெற்றிக்கு நேராக தனது துப்பாக்கியை நீட்டிக் கொண்டு "யாரும் அசையக் கூடாது" என்று கட்டளையிட்டாள். தான் யாருக்கும் தீங்கு விளைவிக்கப் போவதில்லையென்றும் தான் சொல்லப் போவதை கவனமாக அவதானிக்கும்படியும் கடுமையான குரலில் கூறினாள்.

அம்மூவரும் அதிர்ச்சியால் செய்வதறியாது இருந்த போதும் அவர்கள் மூளை விரைந்து செயலாற்றத் தொடங்கியது. அவள் ராம்ஜீ பற்றி தகவல் ஏதும் தெரிவிக்கக்கூடும் என்று நளாயினி எண்ணினாள்.

அவள் சற்றே ஏமாந்திருக்கும் சமயத்தில் அவளை மடக்கிப் பிடித்துவிட வேண்டுமென்று ஜெய்சிங் நினைத்தான்.

அவள் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் எந்தப் பக்கம் ஓடித் தப்புவதென்று கிருஷ்ணசாமி நோட்டம் விட்டார்.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாத, சித்ராம்பரி தான் வந்த விடயத்தை விளக்கத் தொடங்கினாள்.

"ராம்ஜீ எங்களிடம் மிகப் பாதுகாப்பாக இருக்கிறார்.... ஆனால் அவரை உயிருடன் மீட்க வேண்டுமானால் பத்து கோடி ரூபாவை பணமாக செலுத்த வேண்டும். பணத்தை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் விளக்கமாக எழுதி கடிதம் ஒன்று தந்திருக்கிறார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ராம்பரி ஜெய்சிங்கின் முகம் நோக்கி நீட்டப்பட்டிருந்த துப்பாக்கியை எடுக்காமலேயே மற்ற கையால் கைப்பையைத் திறந்து உறையில் போடப்பட்டிருந்த கடிதமொன்றை எடுத்து நளாயினியின் பக்கம் வீசினாள். அது சென்று அவளது காலடியில் வீழ்ந்தது.

அவள் அதை எடுத்து பிரித்து வாசித்தாள். ராம்ஜீயின் கையெழுத்து அவளுக்கு நன்கு பரிச்சயமானதால் அக்கடிதத்தை ராம்ஜீதான் எழுதியுள்ளான் என்பதில் அவளுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

அக்கடிதம் ராம்ஜீயின் பெயரில் இருந்த சுமார் பத்துக் கோடி ரூபாவுக்கான பல பெரிய பொதுக் கம்பனிகளின் பங்குப் பத்திரங்களை விற்பது தொடர்பிலும் பெறப்படும் பணத்தை ஹொங்கொங் அன்ட் சங்காய் வங்கியில் இருக்கும் ராம்ஜீயின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடுதல் தொடர்பிலும் அறிவுறுத்தல்களும், அதிகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

“சரி.... இந்த பணம் வங்கியில் இடப்பட்டதும் என்ன நடக்கும்” நளாயினி கேட்டாள்.

“அந்தத் தொகைக்கு சமமான சில காசோலைகளை ராம்ஜீ எங்களுக்கு வழங்குவார். அக்காசோலைகள் அனைத்தும் எங்கள் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட பின்னர் ராம்ஜீ விடுதலை செய்யப்படுவார்”.

“பணம் அனைத்தும் கொடுத்த பின்னரும் ராம்ஜீ விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது" சித்ராம்பரியை இடைமறித்து ஜெய்சிங் கேட்டான்.

"அதைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது. உடனடியாக பணத்தை பெற ஏற்பாடு செய்யவும். இது தொடர்பில் பொலிஸுக்கோ, வேறு யாருக்குமோ தகவல் தெரியக்கூடாது. அப்படி ஏதும் செய்தால் ராம்ஜீயின் கதை முடிந்து விடும்".

சித்ராம்பரியின் இந்தப் பதிலால் ஜெய்சிங் கலவரம் அடைந்தாலும் நளாயினி சிந்தித்தாள். ராம்ஜீ ஏதும் திட்டத்துடன் தான் இதற்கு இணங்கி இருக்க வேண்டும். இதனை நிறைவேற்ற பல நாட்கள் பிடிக்கும். அதற்குள் ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிய நளாயினி தான் அதற்கு இணங்குவதாகத் தெரிவித்தாள்.

இங்கு நடந்தேறிய இந்த நாடகத்தை முன் கதவுக்கப்பால் இருந்து அசையாமல் அவதானித்துக் கொண்டிருந்தான் சண்டி சுனில் என்ற சப்புமால்குமார. ஏதும் வித்தியாசமாக நடந்தால் தனது துப்பாக்கியைப் பயன்படுத்தவும் அவன் தயாராக இருந்தான். சித்ராம்பரி நிலைமையை திறமையாக கையாண்டது தொடர்பில் அவன் திருப்தியடைந்தான்.

அடுத்து சித்ராம்பரி வெளியே வரக் கூடுமானதால் அவள் கண்ணில்பட்டு விடும் முன்பே தான் அந்த இடத்தில் இருந்து வெளியேறி விட வேண்டுமென்று தனக்கிடப் பட்டிருந்த கட்டளையை நினைவு கூர்ந்தான்.

அவன் அங்கிருந்து திரும்பிச் செல்ல முற்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ராம்பரியின் குரல் மீண்டும் கேட்டது. அவள் உதடுகளில் இருந்து வந்த வார்த்தைகள் சண்டி சுனிலின் காதுகளில் சுரீர் என்று உரைத்தன. அவன் தன் தலையில் இடி விழுந்தது போல் அதிர்ச்சியடைந்தான்.

அவள் அப்படி என்ன கூறினாள்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திட்டம் போடுகிறாள் தில்லானா மோகனாங்கி

**சண்**டி சுனில் என்பவன் என்னதான் முரடனாக இருந்தாலும் எஜமான் விசுவாசம் உள்ளவன். நம்பிக்கை துரோகம் அவனுக்குப் பிடிக்காது. இப்போது இந்த சித்ராம்பரியின் செயல் தேசத் துரோகச் செயலுக்கு ஒப்பானது என்று நினைத்தான்.

சித்ராம்பரி பேசுவதை அவன் தொடர்ந்து கவனித்தான்.

"இதுவரை நான் தெரிவித்தவைகள் உங்களிடம் கூறும்படி எனக்குப் பணிக்கப்பட்டவைகள். நான் இனிமேல் கூறப் போவதையும் கவனமாகக் கேளுங்கள். நீங்கள் நினைக்கின்றபடி பணம் கொடுத்து விட்டால் ராம்ஜீ திரும்பி வந்து விடுவார் என்று கனவு காணாதீர்கள். அவர் இப்போதும், எப்போதும் மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவாறு சிங்கத்தின் பொறியில் சிக்கிவிட்டார்"

சித்ராம்பரி சற்றே நிறுத்தினாள். நளாயினியும் ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் இத் தீடீர் திருப்பத்தால் குழப்பமடைந்தனர். வெளியே காத்திருந்த சண்டி சுனில் மீண்டும் ஒரு நாடகத்தை காண்பதற்கு தயாரானான்.

சித்ராம்பரி மீண்டும் ஆரம்பித்தாள்.

"ஆனால் நான் தெரிவிக்கும் ஆலோசனையின் படி புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் ராம்ஜீயை மீட்க முடியும் ராம்ஜீயிடம் இருக்கும் சகல சொத்துக்களையும் பறித்துக் கொண்டு அவரை கொலை செய்து விட அவர்கள் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் எனக்கு ரூபா ஒரு கோடி பணமாக கொடுப்பதற்கு நீங்கள் ஒத்துக் கொண்டால் நான் ராம்ஜீயை மீட்பதற்கு உங்களுக்கு உதவி செய்கிறேன்."

"இவள் பேச்சை நம்ப வேண்டாம் மிஸ். இவள் மகா பயங்கரமானவள் இவள்தான் ரவியைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தவள். இவளை எனக்குத் தெரியும்" ஜெய்சிங் நளாயினியைப் பார்த்துக் கூறினான்.

ஜெய்சிங் பொரளை பாபா பிளேசில் பார்த்த அதே பெண்தான் இவள். என்பது அவனுக்கு இப்போது ஞாபகத்திற்கு வந்தது. சித்ராம்பரியும் தன்னை அவன் அடையாளம் கண்டுவிட்டான் என்பதில் கலவரம் அடைந்தாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அவள் கூறினாள் என்னை நம்புவதும் நம்பாமல் விடுவதும் உங்கள் விருப்பம். ஆனால் ராம்ஜீ மிக ஆபத்தில் இருக்கிறார். எனக்கு மட்டும் தான் அவர் இருக்கும் இடம் தெரியும். உங்களாலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸாராலோ அவரை ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது. நான் அந்த அமைப்பில் இருந்து வெளியேறி எங்காவது தலைமறைவாகி போய்விடத் தீர்மானித்து விட்டேன். அதற்கு எனக்கு பணம் வேண்டும் அந்தப் பணத்தைத்தான் உங்களிடம் கேட்கிறேன். அப்புறம் உங்கள் இஸ்டம்" அவள் தீர்மானத்துடனேயே கூறுவதாக நாளாயினிக்குப்பட்டது.

நளாயினிக்கு அவள் உண்மையாகவேதான் அவ்வாறு கூறுகிறாள் என்பது தோன்றியது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப்பார்க்கலாம் என்று கருதினாள். தான் அவளை நம்புவதாகவும் பணம் பெறுவதற்க நான்கு அல்லது ஐந்து நாட்கள் பிடிக்கலாம் என்றும் அவள் சித்ராம்பரியிடம் தெரிவித்தாள்.

"ராம்ஜீ அந்த வீட்டில்தானே இன்னமும் சிறைவைக்கப்பட்டிருக் கிறார்" ஜெய்சிங் சித்ராம்பரியிடம் கேட்டான்.

"ஆம், ஆனால் அவரை பார்ப்பதோ சந்திப்பதோ இலகுவான காரியமல்ல. அவர் அந்த வீட்டுக்கு அடியில் உள்ள சுரங்கக் குகையொன்றில் வைக்கப்பட்டிருக்கிறார். அந்தக் குகைகள் கண்டிவாவியுடன் இணைக்கப்பட்டுள்ளன. குகை வாயில்கள் மின்சாரக் கதவுகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஒரு பொத்தானை அழுத்தி அக்கதவுகளை திறக்க முடியும். அப்படி செய்தால் சில நிமிடங்களில் குகைகள் நீரில் மூழ்கி போய்விடும். யாரும் உயிருடன் தப்பிவிட முடியாது."

சித்ராம்பரி சொல்லிவிட்டு சற்று நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள்.

"அதனைதவிர உள்ளே நிலக் கீழ் அறைகள் எங்கும் எச்சரிக்கை மணிகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஆங்காங்கே காவல் நாய்கள் வேறு. எந்த ஒரு தவறான அசைவும் யாரையும் காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவிடும். அடுத்த நிமிடம் அவர்கள் உயிர் அவர்களுக்கு சொந்தமாக இருக்காது."

சித்ராம்பரி கூறி முடித்தாள். அவள் சொன்ன விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்த ஏனைய மூவருக்கும் பெரும் கவலையளிப்பனவாக இருந்தன. ராம்ஜீயை மீட்பது அத்தனை இலகுவான காரியமாகத் தோன்றவில்லை. உண்மையில் பொலிஸாரை வரவழைப்பது ராம்ஜீயின் உயிருக்கு ஆபத்தானது என்பதனை உணர்ந்தார்கள். இதனை இரகசிய திட்டம் ஒன்றாலேயே முறியடிக்கவேண்டும் என்று நினைத்தார்கள்.

நொடி மௌனத்தின் பின் ஜெய்சிங் மீண்டும் கேள்விகேட்டான். "அப்படியானால் எப்படி ராம்ஜீயை வெளியில் கொண்டுவருவது."

அதற்கு நான் திட்டம் ஒன்று தயாரித்துக் கொண்டு வருகிறேன் எனக்கு ஒரு நாள் அவகாசம் வேண்டும். அந்த பங்களாவினதும் சுரங்கப் பாதைகளினதும் வரைபடம் ஒன்றை நான் உங்களுக்குத் தருகிறேன் அதைப்பார்த்தால் அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை நன்கு புரிந்து கொள்ளலாம். நான் இது தொடர்பில் ராம்ஜீயிடமும் சந்தித்துப் பேச வேண்டும்.

அவள் சற்று நிறுத்தி மீண்டும் கூறினாள்.

"எனது திட்டத்தை வெற்றி பெறச் செய்ய உங்கள் ஒப்புதல் வேண்டும். குறிப்பாக ஒரு விடயம். இது தொடர்பில் உங்கள் இணக்கத்தைத் தெரிவித்து ராம்ஜீக்கு செய்தி ஒன்றும் வேண்டும்.

நளாயினிக்கு அப்போதைக்கு அவள் கோரிக்கைக்கு இணங்குவதுதான் சரியென்று பட்டது. அவள் ஒரு சிறுதுண்டுக் கடிதத்தில் சித்ராம்பரி சந்தித்துப் பேசியதைத் தெரிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பெழுதிக் கொடுத்தாள்.

அடுத்த நாள் இரவு ஒரு பூரணமான திட்டத்துடன் தான் வருவதாக கூறிப் புறப்படத் தயாரானாள் சித்ராம்பரி.

இவ்வளவு நேரம் அந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சண்டி சுனில் அதற்கு மேலும் அவ்விடத்தில் இருப்பது விவேகமானது அல்ல என்று கருதினான். இயக்கத்துக்கு எதிராக அவள் புரியப் போகும் துரோகத்தை தான் தெரிந்து கொண்ட விடயம் அவளுக்குத் தெரியவந்தால் அவள் உடனே அங்கேயே வைத்து தனக்கு சமாதி கட்டி விடுவாள் என்பது அவன் மரமண்டைக்கு சட்டென்று புரிந்தது. அவன் சரேலென அவள் கண்ணில்பட்டுவிடாதபடி அங்கிருந்து கிளம்பினான்.

எனினும் வெளியில் ஏற்பட்ட அசைவை சித்ராம்பரி உணரத் தவறவில்லை. அவள் மூளையில் மின்னல் கீற்றொன்று பளிச்சிட்டது. அவள் நொடியில் ஆபத்தை உணர்ந்து கொண்டாள். தன்னை வேவுபார்க்க கோணப்பு பண்டார யாரையோ அனுப்பி இருக்கிறான் என்பதையும் உணர்ந்து கொண்டாள். தான் எதிர் கொண்டிருக்கும். பாரிய ஆபத்தால் கதி கலங்கிப் போன அவள் அதில் இருந்து தப்ப எதனையும் செய்யத் துணிந்து விட்டாள். அவள் மின்னலென துப்பாக்கியை நீட்டியபடி வெளியில் பாய்ந்தாள்.

ராம்ஜீ அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்திப்பதில் தீவிரமாக இருந்தான். யாருடையதும் உதவியில்லாமல் அங்கிருந்து தப்பிச் செல்வது சாத்தியமில்லை. அன்று காலை அவன் கோணப்பு பண்டாரவை சந்தித்து விட்டு வந்தான். பின் அவனை அழைத்து வந்த வினோத மனிதன் திலக்க ஸ்ரீ பண்டார அவனை குறித்த தூரம் வரை மின்சார லிப்ட்டில் அழைத்து வந்தான். அவர்கள் லிப்ட்டில் இருந்து வெளிவந்த போது அது ஒரு அறையாக இருக்கவில்லை அது ஒரு சுரங்கப் பாதையுடன் கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகையாகவே இருந்தது. முற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது.

திலக்க ஸ்ரீ அங்கிருந்த மின் விளக்கைப் போட்டான். மின் விளக்கு மிகக் குறைந்த ஒளியையே தந்தது. அந்தக் குகையில் அண்மைக் காலத்தில் யாரும் வசித்ததற்கான அடையாளங்கள் இருக்கவில்லை. வெளிச்சத்தைக் கண்டதும் எலிகள் அங்கும் இங்கும் ஓடின. திலக்கஸ்ரீ அங்கே வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு மாட்டும் விலங்கை எடுத்து ராம்ஜீயின் கரங்களை பின்னால் மடித்து விலங்கு மாட்டினான். பின் கதவை பூட்டிவிட்டு சென்றுவிட்டான்.

அதன் பின் அன்று முழுவதும் ராம்ஜீக்கு உரிய நேரத்தில் உணவு, தேநீர், சிகரட் என்பவை குறையின்றி வழங்கப்பட்டன. இதற்கு பொறுப்பாக திலக்க ஸ்ரீ நியமிக்கப்பட்டிருந்தான். அன்றிரவு நரகத்தில் இருப்பது போன்ற உணர்வை ராம்ஜீ அனுபவித்தான். கிடைத்த பாயிலும் தலையணையிலும் உறங்கினாலும் சற்றே கண்ணயர்ந்தபோது எலிகள் அவன் கால் விரல்களை பற்களால் விராண்டிய போதெல்லாம் திடுக்கிட்டு எழுந்திருந்தான். பின் ஒரு சிகரட்டை பற்றவைப்பான். இப்படியாக பொழுது கழிந்தது. அவனுக்கு எப்போ விடிந்ததென்று தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுக்கமான இரும்பு பொறி

**ராம்**ஜீ தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்த பழங்கால மாளிகை பல்வேறு மர்மங்கள், மாயங்கள் என்பனவற்றை தன்னகத்தே கொண்டிருந்தது. அதில் இருந்து தப்ப வேண்டுமாயின் தாமும் கடுமையான தந்திரங்களையும் உபாயங்களையும் கையாள வேண்டும் என்று ராம்ஜீக்குத் தோன்றியது. அதற்கு வெளியில் இருந்து யாருடையதும் உதவியை பெற முடியுமா என்பது சந்தேகமாக இருந்தது. அவன் எப்படியோ அன்றைய இரவை எதிர்கொண்டு சமாளித்தான்.

திலக்க ஶ்ரீ காலையில், காலையாகாரம் கொடுக்க வந்த போதுதான் விடிந்து விட்டதே அவனுக்குத் தெரியும். தான் காலைக்கடன்களை முடிக்க குளியல் அறைக்குப் போக வேண்டுமென்று கேட்டபோது திலக்க ஶ்ரீ முறைத்தான். பின் வெளியில் இருந்த இன்டகொம் டெலிபோனில் பேசினான். அதனைத் தொடர்ந்து தன் சட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் இருந்து சாவி ஒன்றை எடுத்து ராம்ஜீயின் விலங்கை திறந்து அவன் கைகளை விடுவித்தான்.

இப்போது அவன் கைகளில் துப்பாக்கி ஒன்று பளிச்சிட்டது. பின் ராம்ஜீயை நோக்கி தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டால் அது உயிராபத்தில் முடியும் என்று எச்சரித்து ராம்ஜீயின் பின்னாலிருந்து அவனை குளியலறை நோக்கி நடத்திச்சென்றான்.

குளியலறைக்குள் நுழைந்து கதவைத் சாத்திக் கொண்ட ராம்ஜீ அவ்வறையில் இருந்து வெளியேறும் வேறு மார்க்கங்கள் இருக்கின்றதா என ஆராய்ந்தான். அவனுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. அந்த குளியல் அறையில் ஒரு கதவைத் தவிர மற்ற எல்லா பக்கமும் சுவரே காணப்பட்டது. கெட்டியான கொங்கீறீட் சுவர். தப்பிச் செல்ல மார்க்கமில்லை. ராம்ஜீ வேறு வழியின்றி தன் காலைக் கடன்களை முடித்து முகம் கைகால் அலம்பிக் கொண்டு வெளியில் வந்தான்.

அங்கே தயாராய் காத்திருந்த திலக்க ஸ்ரீ மீண்டும் ராம்ஜீயை அழைத்துச் சென்று அந்தக் குகையில் அடைத்து விட்டான். ஆனால் இம் முறை ராம்ஜீயின் கரங்களில் அவன் விலங்கு மாட்டவில்லை.

அதன் பின் நீண்ட நேரம் கழித்து ரஞ்சித் நிமல் ஸ்ரீ வந்தான். இயக்கத்துக்கு பத்துக் கோடி ரூபா செலுத்துவது தொடர்பில் நுவரவில்லாவில் தங்கியிருக்கும் ராம்ஜீயின் செயலாளர் நளாயினிக்கு அறிவுறுத்தல் அடங்கிய கடிதம் வேண்டும் என்று கோணப்பு பண்டார பணித்துள்ளார் என்று கூறினான்.

ராம்ஜீ அதற்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை. பங்குச் சந்தையில் அவனுக்கிருக்கும் பல நிறுவனங்களின் பங்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து கோடி ரூபாவுக்கான பங்குகளை விற்றுவிடுமாறும் அதனை தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்து விடும் படியும் நளாயினிக்கு கடிதம் எழுதி அதனை ரஞ்சித்திடம் கொடுத்தான். அதனை பெற்றுக் கொண்ட ரஞ்சித் இதுவரை சுதந்திரமாக இருந்த ராம்ஜீயின் கரங்களுக்கு மீண்டும் விலங்கு மாட்டி விட்டுச் சென்றான். அதன் பின் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தான் ராம்ஜீ.

கோணப்பு பண்டார கேட்ட பத்து கோடி ரூபாவை தான் கொடுக்க சம்மதித்தது போல் காட்டிக் கொண்டாலும் அதனை கொடுக்கும் நோக்கம் ராம்ஜீக்குக் கிடையாது. கோணப்பு வெறும் பத்துக் கோடி ரூபாவை பெற்றுக் கொண்டு திருப்தியுறும் நபர் அல்ல என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். தனது சொத்து முழுவதும் பறிப்பது மட்டுமல்லாமல் இறுதியில் தன்னையும் கொன்று விடுவான் என்பதும் அவனுக்குப் புரியாததல்ல. ஆதலால் இப் பொறியில் இருந்து தப்பிப்பதற்கு அவனுக்கு திட்டம் தீட்டுவதற்கு அவகாசம் தேவைப்பட்டது.

அவனை அங்கிருந்து மீட்பதற்கு நளாயினியும் ஜெய்சிங்கும் கடுமையாக முயற்சிப்பார்கள் என்பது அவனுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் அவர்கள் அழைத்து வந்த பொலிஸார் இங்கு ஒன்றுமே கண்டுபிடிக்காதது தொடர்பில் அவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள். எனினும் தான் நளாயினிக்கு எழுதிக் கொடுத்த கடிதம் அவர்கள் கையில் கிடைத்ததும் தான் உயிருடன் இருப்பதை அவர்கள் உறுதி செய்து கொள்வார்கள் என்று நினைத்தான் ராம்ஜீ. இவ்விடயத்தை டி.எஸ்.பி.சிங்கராயருக்கு அறிவித்து அவர் பொலிஸ் படையுடன் வருவதை கோணப்பு அறிந்தால் விடயம் ஆபத்தாகி விடும் என்று பயந்தான் ராம்ஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து தப்புவதற்கு முதல் நடவடிக்கையாக தனது கரங்களுக்குப் போடப்பட்டிருக்கும் விலங்கின் பூட்டை திறக்க ஒரு வழிதேவை. ஒரு கம்பித் துண்டு இருந்தால் போதுமானது அவன் மெதுவாக ஒரு 'பின்' அல்லது கம்பித்துண்டு கிடைக்கிறதா என்று துழாவத் தொடங்கினான்.

அப்போது கதவைத் திறந்து கொண்டு யாரோ வரும் அரவம் கேட்டது. அது யாராக இருக்குமென சிந்தித்தான் ராம்ஜீ. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வருவது சித்ராம்பரி. அவள் ஏன் என்னைச் சந்திக்க வருகிறாள். ராம்ஜீ மனதில் பல எண்ணங்கள் பிறந்தன.

சித்ராம்பரி முன்பு பார்த்த சித்ராம்பரியாக இருக்கவில்லை. அவளுக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி வெளிறிப் போயிருக்கிறாள்? அவள் முகத்தில் மரண பயம் ஒட்டிக் கொண்டிருந்தது. கண்கள் சுருங்கிப் போய் சுற்றிவர கரு வட்டங்கள் படர்ந்திருந்தன. சில நாட்களாகவே அவள் தூக்கமில்லாமல் இருந்திருக்க வேண்டும்.

"மிஸ்டர் ராம்ஜீ...! நான் இன்று உங்கள் செயலாளரைச் சந்தித்தேன். அவளுடன் பேசினேன்." அவள் மூச்சு வாங்கியவாறே பேசினாள். "உங்களை தப்பிக்க வைக்க உதவுவதாகக் கூறியுள்ளேன். அதற்கு எனக்கு ஒரு கோடி ரூபா கொடுப்பதற்கு உறுதியளிக்க வேண்டும். உங்கள் செயலாளர் இந்த ஏற்பாட்டுக்கு சம்மதித்துள்ளார். என்னுடைய உதவியில்லாமல் ஒரு போதும் நீங்கள் இங்கிருந்து தப்பிக்க முடியாது..."

"அது பெரிய தொகை உடனடியாக புரட்ட முடியாமலிருக்கும் ஏன், உனக்கு என்ன நடந்தது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பல தவறுகளை செய்து விட்டேன். இனிமேலும் இவர்களுடன் இருக்கப் பிடிக்கவில்லை. எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு ஓடிப்போய் விட வேண்டும் என்பது எனது திட்டம். அதற்கு நிறைய பணம் தேவை."

அவள் பேசுவதை சற்றே நிறுத்தி ஒரு மிக நீண்ட பெரு மூச்சு விட்டாள்.

"என் உதவியின்றி நீங்கள் இங்கிருந்து தப்ப முடியாது. ராம்ஜீ அவர்கள் உங்களை உயிருடன் விடப்போவதில்லை. உங்களிடம் உள்ள எல்லா சொத்தையும் பிடுங்கத் திட்டமிட்டுள்ளார்கள். அதன் பின் உங்கள் உயிரும் பறிக்கப்பட்டு விடும்" அவள் தொடர்ந்து கூறினாள். "ஆதலால் நீங்கள் என்னை நம்ப வேண்டும். நீங்கள் தப்பித்ததும் பணம் கொடுத்தால் போதும். என்ன சொல்கிறீர்கள்..?"

ராம்ஜீக்கு அவள் சொல்வது உண்மைதான் என்று புரிந்தது. அவன் அவளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்தான்.

படு பாதகமான கொலைகாரி என்று தான் நினைத்திருந்த சித்ராம்பரி இந்த அளவுக்கு மாறிப் போய்விடுவாள் என்று ராம்ஜீ கனவிலும் கருதவில்லை. எனினும் அவள் கூறியவற்றில் சற்று உண்மையுள்ளது என்பதனை நிலைமைகள் சுட்டிக் காட்டின. அவளுக்குதான் அந்த மாளிகையின் மர்மங்கள் எல்லாம் தெரியும். எனவே அவளை பயன்படுத்திக் கொள்வதெனத் தீர்மானித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சில நிமிட யோசனைக்குப் பின்னர் கூறினான்.

“சரி உன்னை நான் நம்புகிறேன். ஆனால் தப்பிச் சென்ற பிறகுதான் பணம் கிடைக்கும். அதற்கு நான் உறுதியளிக்கிறேன்” என்று கூறிய ராம்ஜீ இங்கிருந்து எவ்வாறு தப்புவது என்று அவளிடம் கேட்டான்.

அவள் கூறினாள். “அதற்கொரு திட்டம் வைத்திருக்கிறேன். இந்த அரண்மனை பல இரகசிய அறைகளையும் பல நிலக் கீழ் சுரங்கங்களையும் கொண்டிருக்கிறது. எல்லாக் கதவுகளும் மின்சாரத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. சுரங்கப்பாதை அனைத்தும் கண்டிவாவியுடன் இணைக்கப்பட்டுள்ளன. வாவியைத் தொடுக்கும் கதவுகள் திறக்கப்பட்டால் சுரங்கப்பாதைகள் அனைத்தும் நீரால் நிறைந்து விடும். ஒரு பாதை தலதா மாளிகையுடனும் மற்றொரு பாதை கட்டுக்கலை விநாயகர் ஆலயத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்டிவாவியை இணைக்கும் சுரங்கப்பாதைகள்

ராம்ஜீ அவள் கூறியவற்றை பயத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவள் மேலும் கூறினாள்,

“இங்கே பாதுகாப்பு கட்டுப்பாட்டறை ஒன்று உள்ளது. எல்லாப் பாதைகளும் கெமராக் கண்களால் கண்காணிக்கப்படுகின்றன. ஆங்காங்கே நாய்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தப்பிச் செல்வதற்கு முன் பாதுகாப்பு அறைக்கு பொறுப்பாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோத மனிதன் திலக்கசிறி பண்டாரவை மடக்க வேண்டும். தப்பிக்கும் முயற்சியை இரவில் மேற்கொள்வது தான் நல்லது."

அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ராம்ஜீ அங்கிருந்து தப்புவது அவ்வளவு சுலபமில்லை என நினைத்தான். அந்த விநோத மனிதனை மடக்குவது கூடுமான காரியமா?

அவன் தீவிரமாக சிந்தித்தான். பின் கூறினான்.

"எனக்கு துப்பாக்கி ஒன்றும் டோச் ஒன்றும் தேவைப்படும்."

"நான் எற்பாடு செய்ய முயற்சிக்கிறேன். துப்பாக்கி ஒன்றை எடுத்து வருவது இலகுவான காரியமல்ல. நான் என்னுடையதைத் தான் தர வேண்டியிருக்கும்."

"இந்த கைவிலங்கை கழட்ட என்ன செய்வது? உன்னிடம் கம்பி அல்லது பின் இருந்தால் கொடு."

சித்ராம்பரி தன் செம்பட்டைத் தலையைக் கோதி உள்ளே செருகப்பட்டிருந்த தலைப் பின் ஒன்றை உருவியெடுத்துக் கொடுத்தாள்.

பின் அவள் எழுந்திருந்தாள். தான் அவனை மீண்டும் சந்திப்பதாகக் கூறிவிட்டு தனக்கு சேர வேண்டிய பணத்தைப் பற்றி ஞாபகப்படுத்தினாள். தான் வெளியில் வந்தவுடன் பணத்தை தருவதாக கூறினான் ராம்ஜீ. அவள் கோணப்புவிடம் இருந்து தப்பினாலும் பொலிஸாரிடம் இருந்து தப்ப முடியாது என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் விருட்டென சென்று விட்டாள். கதவும் மூடிக் கொண்டது. ராம்ஜீ அடுத்து என்ன செய்வது என்று சிந்தித்தான். முதலில் கைவிலங்கை கழற்ற வேண்டும். அவன் தலைப்பின்னுடன் தன் முயற்சியை ஆரம்பித்தான்.

அரை மணி நேர முயற்சியின் பின் பூட்டு கழன்று கொண்டது. முதல் முயற்சியில் வெற்றி. ராம்ஜீ நீண்ட பெருமூச்சொன்றை வெளிவிட்டு சற்றே நிம்மதியடைந்தான். அதிர்ஷ்டம் தன் பக்கமிருக்கிறது என்று நினைத்தான். இல்லாவிட்டால் சித்ராம்பரி உதவிக்கு வருவாளா?

அவனுக்கு இப்போது சிகரட் ஒன்றை பற்ற வைக்க வேண்டும் போல் தோன்றியது. எஞ்சியிருந்ததில் ஒன்றை எடுத்து பற்ற வைத்து நீண்ட இழுப்பு ஒன்றை இழுத்தான்.

நுவரவில்லா வளவில் இருந்து சித்ராம்பரி வெளியில் துப்பாக்கியுடன் பாய்ந்து வந்து பார்த்த போது அங்கு யாரும் இல்லை. சண்டி சுனில் மின்னலென மறைந்து விட்டிருந்தான். தான் ராம்ஜீயின் செயலாளருடன் பேசிய விடயங்களை யாரோ ஒட்டுக் கேட்டிருக்கக்கூடும் என்று சித்ராம்பரி சந்தேகித்தாள். எனினும் அவளுக்கு தனது சந்தேகத்தை உறுதி செய்ய முடியவில்லை.

விரைந்து வெளியேறிய சண்டி சுனில் சித்ராம்பரி தொடர்பாக தான் தெரிந்து கொண்ட விடயத்தை உடனே தலைவரிடம் தெரிவித்து விட வேண்டுமென்று நினைத்தான். அப்படி செய்தால் தனக்கு தலைவரிடம் நற்பெயர் கிடைக்கும் என்றும் அவன் கருதினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அப்படிச் செய்தால் அவன் ரஞ்சித் நிமல்ஸ்ரீயிடம் இருந்து தப்ப முடியாது என்பதையும் உணர்ந்தான். ஏனென்றால் சித்ராம்பரி ரஞ்சித்தின் காதலி என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். இந்த இக்கட்டான நிலையில் இருந்து விடுபடுவது எப்படி என்று அவனுக்கு விளங்கவில்லை. எனினும் முதலில் ரஞ்சித்தைச் சந்தித்து அவனின் காதலி இயக்கத்தைக் காட்டிக் கொடுக்க துணிந்துவிட்டாள் என்பதை அவனுக்குத் தெரிவிப்பது நல்லதென்று கருதினான் .

கடந்த நாற்பத்தெட்டு மணி நேரமாக ராம்ஜீயிடமிருந்து எந்த தகவலும் வராததையிட்டு டி.எஸ்.பி. சிங்கராயருக்கு கவலையாக இருந்தது. கொழும்பிலிருந்து ராம்ஜீயைத் தேடுவதற்காக சென்றிருந்த பொலிஸ் அதிகாரி அன்று மாலை தான் அவரை சந்தித்து கண்டியில் என்ன நடந்தது என்பதனை விபரமாகக் கூறியிருந்தார். அவர் தெரிவித்த விபரங்களில் இருந்து கோணப்பு பண்டாரவின் செல்வாக்கைத் தெரிந்து கொண்ட டி.எஸ். பி, ராம்ஜீ மிகுந்த ஆபத்திலிருப்பதையும் உணர்ந்தார்.

உடனடியாகவே நளாயினி தங்கியிருக்கும் நுவரவில்லா பங்களாவிற்கு தொடர்பு கொண்ட டி.எஸ்.பி, அவளிடம் சகல விபரங்களையும் தெரிந்து கொண்டார். நளாயினி அவரிடம் கோணப்பு பண்டார கப்பம் கேட்ட விடயத்தையும் பின்னர் சித்ராம்பரி வந்து தான் உதவுவதாகவும் தனக்கு பணம் வேண்டுமென்று கேட்ட விடயத்தையும் கூறினாள். ஆனால் இந்த விடயம் பொலிஸுக்குத் தெரிந்து விட்டது என்பது கோணப்பு பண்டாரவுக்கு தெரியக் கூடாது என்றும் அப்படி அவன் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டால் அது பெரும் விபரீதத்தை ஏற்படுத்தும் என்றும் நளாயினி டி.எஸ்.பி.யிடம் வலியுறுத்திக் கூறினாள்.

விசயத்தை நன்கு புரிந்து கொண்ட டி.எஸ்.பி. சிங்கராயர் தாம் ஐந்து பேரடங்கிய இரகசிய கமாண்டோ படைப் பிரிவிவொன்றை அனுப்புவதாகவும் அவர்களுக்கு வேறு தகவல் ஒன்றும் தெரியாதென்றும் நெருக்கடி நிலை தோன்றினால் அவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் நளாயினிக்கு அறிவுறுத்தினார். பின் அவர்களைத் தொடர்பு கொள்ள இரகசிய செல்லிடத் தொலைபேசி இலக்கம் ஒன்றையும் கொடுத்தார். ஏதேனும் அவசரத் தேவையாயின் தன்னைத் தொடர்பு கொள்ளுமாறும் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

ராம்ஜீயை காப்பாற்றாமல் கோணப்பு பண்டராவை பிடிப்பது சாத்தியமில்லை. கோணப்புவை பிடிப்பதும் ராம்ஜீ தப்புவதும் ஒரு சேர நிகழ வேண்டும். ஆதலால் இரண்டு தரப்பினர் மத்தியிலும் ஒரு தொடர்பு வேண்டுமென நளாயினியும் ஜெய்சிங்கும் திட்டமிட்டனர்.

அன்றிரவு எப்படியாவது அங்கிருந்து தப்பி விட வேண்டுமென்று முடிவு செய்தான் ராம்ஜீ. எனினும் தனது திட்டத்திற்கு சித்ராம்பரியின் உதவி கட்டாயம் தேவைப்படும். வரைபடமும், துப்பாக்கியும் டோர்ச்சும் இல்லாது தப்புவதென்பது குதிரைக் கொம்பாகவே முடியும். உறுதியளித்தபடி சித்ராம்பரி அவற்றைக் கொண்டு வருவாளா?

சித்ராம்பரி இப்போதிருக்கின்ற நிலையில் அவனது உதவியும் அவளுக்குக் கட்டாயம் தேவைப்படும். அதில் சந்தேகமில்லை. எனவே அவள் வந்து தான் ஆக வேண்டும். தீவிரமாக நம்பிக்கை கொண்டான் ராம்ஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அன்றிரவு தப்பியே ஆக வேண்டுமென்பதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. அதாவது தான் காணாமல் போய் இப்போது 48 மணி நேரம் கடந்து போயிருந்தது. எனவே கட்டாயம் டி. எஸ். பி. சிங்கராயர் தன்னைத் தேட முற்பட்டிருப்பார். தனது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பெடுத்து அதில் இருந்து பதில் வராவிட்டால் அவருக்கு சந்தேகம் வரும். உடனே நளாயினியை விசாரிப்பார். நளாயினி விடயத்தைத் தெரிவித்து விட்டால் பொலிஸ் மூலம் நடவடிக்கை எடுக்க முனைவார். அந்த விடயம் கோணப்பு பண்டாரவுக்குத் தெரிந்தால் தான் இங்கே நிலத்துக்கு கீழ் நீரில் மூழ்கி சமாதியாக வேண்டியதுதான். இந்த எண்ணத்தால் அவன் மேனி சிலிர்த்தது.

தான் அங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டுமாயின் முதலில் அந்த விநோத மனிதனை சமாளிக்க வேண்டும். அதன் பின் ரஞ்சித் நிமல் ஸ்ரீ. வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பது தெரியாது. இவர்களையும் கோணப்பு பண்டாரவையும் தவிர இன்னொருவனும் இருக்கிறான். இவர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்வது புத்திசாலித்தனமல்ல. தனித்தனியாகவே கவனிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தப்பிக்கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது

தப்பிக்க இரண்டு மார்க்கங்கள் தான் இருக்கின்றன. ஒன்று பிரதான பாதைக்கூடாக நேர் வழியில் செல்வது. அப்படிச் செல்லும் போது முன்சொன்ன அனைவரையும் ஒரு சேரவோ தனித்தனியாகவோ எதிர்கொள்ள வேண்டி வரும். அந்த யோசனையும் ஆபத்துக்கள் நிறைந்தது தான்.

மற்றையது ஏதாவது சுரங்க பாதையொன்றைப் பயன்படுத்துவது. சித்ராம்பரியின் கூற்றுப்படி மூன்றோ அதற்கு மேற்பட்ட சுரங்கப் பாதைகளோ நிலத்துக்குக் கீழ் இருக்கலாம். சுரங்கப் பாதைகள் இரண்டில் ஒன்று கண்டி தலதா மாளிகையை அடைகின்றது. மற்றது கட்டுக்கலை பிள்ளையார் கோயிலை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவை கண்டி வாவியினை இணைக்கின்றன. அண்மையில் கூட அத்தகைய சுரங்கமொன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருந்தது.

முன்பு ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னன் காலத்தில் அவன் நிறைய பகைவர்களை தன்னை சுற்றிவரக் கொண்டிருந்ததால் வெளியில் சுதந்திரமாகச் செல்ல முடியாதிருந்ததென்றும் அவனும் அவன் மனைவி ரெங்கம்மாளும் தலதா மாளிகைக்கும் கட்டுக்கலை பிள்ளையார் கோயிலுக்கும் வணங்கச் சென்ற போது அவர்கள் சுரங்கப் பாதைகளையே பயன்படுத்தினர் என்றும் அவன் வாய் மொழிக் கதைகள் மூலம் கேள்விப்பட்டிருக்கிறான். அப்போதெல்லாம் அது பொய்யாக இருக்குமென்று நினைத்தான். இப்போது எஹலப்பொல மாளிகையில் சுரங்க பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதை அறிந்த போது அந்த பழைய கதைகளை நம்ப வேண்டியிருந்தது.

தன் எண்ணங்களை பழைய கதைகளில் இருந்து மீட்டுக் கொண்ட ராம்ஜீ மீண்டும் தான் தப்பும் வழிபற்றி யோசித்தான்.

வாவியை இணைக்கும் சுரங்கப் பாதைகளூடாகத் தப்புவது தற்கொலைக்கு சமமானதாகும். எந்நேரமும் வாவியின் கதவுகள் திறந்து விடப்பட்டு வாவி நீர் உள் வரலாம். ஆதலால் சுரங்கப்பாதை மூலம் தப்பிச் செல்வதாயின் ஒன்று தலதா மாளிகைக்குச் செல்லும் சுரங்கப்பாதையை அல்லது கட்டுக்கலை பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் சுரங்கப் பாதையூடாகவே தப்பிச் செல்ல வேண்டும். ஆனால் இவை எத்தகைய ஆபத்துக்களை கொண்டிருக்கும் என்பது யாருக்கு தெரியும்?

மற்றொரு விடயமும் அவனுக்கு திகைப்பாக இருந்தது. கண்டி வாவியில் இருந்து அந்த மாளிகைக்கு சுரங்கப்பாதை மூலம் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டுமாயின் அம்மாளிகை வாவியை விட சற்றே தாழ்ந்த பிரதேசத்தில் இருக்க வேண்டும். ஆனால் அன்று அவனும் ஜெய்சிங்கும் அந்த பங்களாவை நோக்கி லேன்ட் ரோவரில் வந்தபோது மலைப்பாங்கான பகுதிக்கு வந்தார்கள். அப்படியானால் வாவிக்கும் அந்த பங்காளாவுக்கும் நடுவில் ஒரு மலைப்பகுதி இருக்க வேண்டும். அந்த மலையை ஊடறுத்தே சுரங்கம் செல்கிறது. சுரங்கப் பாதைகளின் தூரம் மூன்று நான்கு கிலோ மீற்றர் வரையில் இருக்கும். ஓடிச் சென்றால் கூட மறுபுறத்தை அடைய சுமார் இரண்டு மணி நேரம் பிடிக்கும். இவ்வாறு யோசித்த ராம்ஜீ சித்ராம்பரி வரும் வரைக்கும் காத்திருப்பதெனத் தீர்மானித்தான். அவள் கொண்டு வருவதாக கூறிய வரைபடமும் துப்பாக்கியும் டோர்ச்சும்தான் தப்புவதற்கு மிக முக்கிய கருவிகள் என்பதை அவன் உணர்ந்தான்.

சப்புமால் குமார என்ற சண்டி சுனில் மொனரவில மாளிகையை அண்மித்த போது அவன் மனம் மிகக் குழம்பிப் போயிருந்தது. இந்த இயக்கத்தில் தொடர்ந்தும் வெறுமனே ஒரு அடியாளாக இருப்பதை அவன் விரும்பவில்லை. ரஞ்சித் நிமல ஸ்ரீ போல் தனக்கும் சில அதிகாரங்கள் கிடைத்தால் நல்லதென்று நினைத்தான். இப்போது அதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சித்ராம்பரி ராம்ஜீயின் செயலாளர் நளாயினியிடம் பேரம் பேசிய விடயத்தை தலைவரிடம் தெரிவித்தால் போதுமானது. தனக்கு சன்மானம் கிடைக்குமென்பது உறுதி. ஆனால் ரஞ்சித் நிமல்ஸ்ரீ இது தொடர்பில் என்ன செய்வான் என்பதை நினைத்து அவன் பயந்தான்.

அவன் அப்படி நினைத்ததில் தப்பில்லை. மொனரவில பங்களாவுக்குச் செல்லும் அந்த மலைப்பாங்கான வளைவில் ரஞ்சித் நிமல ஸ்ரீ சண்டி சுனிலின் வரவுக்காக காத்திருந்தான். சண்டி சுனிலின் கார் மொனரவில பங்களாவுக்கு சுமார் அரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ மீற்றர் தொலைவில் வந்து கொண்டிருந்த போது அக்காரை வழிமறித்தான் ரஞ்சித் நிமல ஸ்ரீ. பின் அவனை தன்னுடன் வருமாறும் ஒரு வேலையிருக்கிறதென்றும் அழைத்தான்.

ராம்ஜீயை சிறைப்பிடித்ததில் இருந்து கோணப்புவின் இயக்கத்துக்குள் பல பாரதூரமான செயல்கள் இடம்பெற்றன. சித்ராம்பரியின் கலக்கம், ரஞ்சித் நிமலசிரியின் ஏமாற்றம், சண்டி சுனிலின் நடத்தைகள் என்பன சாடை மாடையாக கோணப்புவுக்குத் தெரிந்தன. இடையில் ஏற்பட்ட பிளவுகளை சண்டி சுனில் தன் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தத் தீர்மானித்தான். எனினும் அவனால் ரஞ்சித் நிமல சிரியை மீற முடியுமா?

இப்போது ரஞ்சித் நிமலசிரி தன் எதிரில் திடீரென தோன்றியது.....

சண்டி சுனிலுக்கு பயமாகவும் சங்கடமாகவும் இருந்தது. இதற்கு முன்பு இப்படி வழியில் இடைமறித்து தனக்கு அவன் கட்டளையிட்டது கிடையாது. எனினும் அவன் கட்டளையை மறுக்க முடியாது என்பது அவனுக்கு விளங்கியது. அப்போதைக்கு ரஞ்சித்திடமிருந்து விலகிச் செல்வது நல்லதென்று அவன் மன துக்குப்பட்டது.

அவன் கூறினான்.

"அவசரமாக தன்னைச் சந்திக்குமாறு தலைவர் அழைத்திருக் கிறார்" என்றான்

அதற்கு முன் மற்றுமொரு அவசர காரியம் இருக்கின்றதென்றும் அதற்குப் பத்து நிமிடங்களே ஆகும் என்றும் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டுத் தன்னுடன் வருமாறும் அழைத்தான் ரஞ்சித்.
சண்டி சுனிலுக்கு வேறு வழியிருக்கவில்லை. தனது காரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரமாக ஒதுக்கி நிறுத்திவிட்டு ரஞ்சித்தின் காரின் முன் கதவை திறந்துகொண்டு அமர்ந்தான் சுனில். ரஞ்சித் காரை மெதுவாகவே ஓட்டிச் சென்றான். கார் மலையடிவாரத்தைத் தாண்டி வாவியின் இடதுபுறக் கரையோரமாக அம்பிட்டியவுக்குச் செல்லும் பாதை நோக்கிச் சென்றது. வாவியின் மற்றொரு கோடிக்குச் சென்று மரங்களடர்ந்த மனித நடமாட்டமற்ற இடமொன்றைத் தேர்ந்தெடுத்து காரை வாவியோரமாகவே நிறுத்தினான். மாலை நேரமாகியிருந்ததால் அவ்விடம் சற்று இருளடைந்து காணப்பட்டது.

ஸ்ரீவிக்ரம ராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தின் முறையான வாரிசு இல்லை. இவன் முன்னைய அரசனின் பட்டத்து ராணியின் சகோதரன் ஆவான். முன்னைய மன்னனுக்கு ஆண் வாரிசு இல்லாத படியால் இவனுக்கு அதிர்ஸ்டம் ஏற்பட்டது. அப்போது மகா அதிகாரமாக பதவியில் இருந்த பிலிமத்தலாவ என்பவன் வயதில் குறைந்த இவனை மன்னனாக்கி விட்டால் தானே அவனை ஆட்டுவித்து அரசாட்சி செய்யலாம் என்று நினைத்தான். அதற்கும் மேலாக சமயம் பார்த்து மன்னனைக் கொன்றுவிட்டு தானே அரசாட்சியை கைப்பற்றிக் கொள்ளலாம் என்றும் கனவு கண்டான். என்றாலும் அவன் எண்ணம் பலிக்கவில்லை.

கண்டி இராச்சியத்தின் உயர் ஆட்சி நிர்வாக அதிகாரிகளாக இருந்த நிலமேக்களும் திசாவைகளும் தமக்கிடையிலேயே போட்டியும் பொறாமையும் மிக்கவர்களாக இருந்தனர். இவர்களில் பலர் பிலிமத்தலாவைக்கு எதிரானவர்கள். இத்தகையவர்கள் அவ்வப் போது பிலிமத்தலாவை மன்னனுக்கு எதிராக செய்யும் காரியங்களை மன்னனிடம் கண்ணும் காதும் வைத்து மிகைப்படுத்தி கூறி வைத்தனர். மன்னன் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ வேண்டியிருந்தது. இதனால் அவன் தனது சொந்த இடமான இந்தியாவின் தென் மாநிலத்தில் இருந்த மதுரையில் இருந்து தனக்குத் தேவையான பிரத்தியேக உதவியாளர்களான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்காவலர்கள், சமையற்காரர்கள், குதிரைக்காரர்கள், பரிவாரங்கள், பணிப்பெண்கள், பிரத்தியேக பாதுகாப்பு படையினர் போன்றவர்களை தருவித்துக் கொண்டான். அவர்களுக்கு உயர் சம்பளமும் பதவிகளும் வழங்கப்பட்டன. இதனால் உள்ளூரில் அத்தகைய பதவிகளில் இருந்தவர்கள் தொழில்களை இழந்தனர். அவர்களும் மன்னனின் அரசாட்சி கவிழ்க்கப்பட வேண்டும் என்று கருதினர்.

ஆனால் சுதாகரித்துக் கொண்ட மன்னன் பிலிமத்தலாவை மீது ராஜத் துரோக குற்றம் காட்டி அவனை சிரச் சேதம் செய்து கொல்லச் செய்தான். அவன் ஆதரவாளர்களுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது. இதனால் அவசரத்துக்கு ஒளிந்து கொள்ளவும் ஓடித்தப்பவும் பதுங்கு குழிகளும் சுரங்கப்பாதைகளும் அரண்மனையெங்கும் அமைக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரகம் எப்படி இருக்கும்

ரஞ்சித் நிமலஸ்ரீ கண்டி சுனிலை வழிமறித்து அவனை மறைவான இடமொன்றுக்கு அழைத்தமை அவனில் மரண பயத்தை உண்டு பண்ணியது. அவன் மனதில் பலவித சந்தேகங்கள் எழுந்தன.

சித்ராம்பரிக்கு விசயம் தெரிந்து அவனிடம் சொல்லியிருப் பாளோ? எதற்கும் சமயோசிதமாக நடந்து கொள்ள வேண்டும். அவன் தன் இடுப்பைத் தடவி துப்பாக்கியை தொட்டு சரிபார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான்.

"சுனில் .. நீ.. நுவரவில்லா பங்களாவில் சித்ராம்பரி ராம்ஜீயின் செயலாளருடன் பேசியதைக் கேட்டாயா?" ரஞ்சித்தின் வாயிலிருந்து ஒவ்வொரு சொல்லாக வெளிவந்த போது சுனிலுக்கு சுரீர் என்று தைத்தது.

"இல்லை... அவள் வீட்டுக்குள் போவதையும் பின் சிறிது நேரத்தில் திரும்பி வருவதையும் பார்த்தேன். அவ்வளவுதான்" சுனில் அப்பட்டமான பொய்யைச் சொன்னான். அவன் பொய் சொல்கிறான் என்பது ரஞ்சித்துக்கும் புரிந்தது.

வழக்கமாக இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை ஒரு வேலைக்கு அனுப்பும் போது அவருக்குத் தெரியாமல் வேறொருவரையும் அனுப்புவது வழக்கம். அப்படி அனுப்புபவர்கள் முன்னயவருக்குத் தெரியாமல் அவரைப் பின் தொடர்ந்து ஒவ்வொரு அசைவையும் அவதானித்து தலைவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது ஒரு விதி முறையாகப் பின் பற்றப்படுகிறது.

ரஞ்சித் இப்போது சற்றும் கடுமையாகவே கேட்டான். நீ ஏன் நம் இயக்கத்தின் விதி முறையைப் புறக்கணித்தாய். சித்ராம்பரியைப் பின் பற்றி செல்வது மட்டுமன்றி அவளுக்கு அந்த வீட்டில் ஏதும் ஆபத்து ஏற்படுமாயின் அதில் இருந்து அவளை காப்பாற்றுவதும் உனது கடமையல்லவா?"

"நான் எனது கடமையில் இருந்து தவறவில்லை" சுனிலும் கடுமையாகவே கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்படியானால் அங்கு என்ன நடந்ததென்று சொல்”

“அதனை தலைவரிடம் மட்டுமே சொல்வேன்” இதன் பின் ரஞ்சித்தால் பொறுமை காக்க முடியவில்லை. கண் இமைக்கும் நேரத்தில் அவன் கைகளில் துப்பாக்கி பளிச்சிட்டது. அவன் சுனிலின் நெற்றிக்கு எதிரே துப்பாக்கியை நீட்டி கைகளை மேலே தூக்குமாறு உறுமினான். அதற்கு அடிபணியாமல் விட்டால் என்ன நடக்கும் என சுனிலுக்குத் தெரியும். அவன் ரஞ்சித்தின் கட்டளைக்கு பணிந்தான்.

அவன் கைகளை மேலே தூக்கியதுமே சரேலென்று அவன் இடுப்புப் பகுதியில் இருந்து துப்பாக்கியை உருவிக் கொண்டான் ரஞ்சித்.

“நீ உண்மையைச் சொல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்”

ரஞ்சித் நிமல்ஸ்ரீ பற்றி சுனிலுக்கு நன்கு தெரியும். படுபாதகக் கொலைகாரன். அவன் பாதையில் குறுக்கிடும் எவரையும் விட்டு வைக்க மாட்டான். அவனிடம் உண்மையைச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

“சொல்... நுவரவில்லா பங்களாவில் என்ன நடந்தது?”

“வேறென்ன நடந்தது என நினைக்கிறாய். சித்ராம்பரி நமது இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டாள். ஒரு கோடி ரூபா கொடுத்தால் ராம்ஜீயைத் தப்புவிப்பதாக ராம்ஜீயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளரிடம் உறுதியளித்ததை என் காதால் நான் கேட்டேன்.”

அப்படியானால் அவன் சந்தேகப்பட்டது சரி. சித்ராம்பரி தான் நினைத்ததை நிறைவேற்றிவிட்டாள். ஆனால் இந்த விடயம் கோணப்பு பண்டாரவுக்குத் தெரிந்தால் அது தான் சித்ராம்பரியின் இறுதி நிமிடமாக இருக்கும்.

அவன் சித்ராம்பரிக்கும் தனக்குமிடையிலான உறவை நினைத்துப் பார்த்தான். அவ்வளவு இலகுவாக அவளை அவன் விட்டுக் கொடுத்துவிட முடியுமா? அவன் மனம் போராடியது. இயக்கம் இழக்க வேண்டியதாயின் அது சண்டி சுனிலேயன்றி சித்ராம்பரியை அல்ல. சித்ராம்பரியிடம் விளங்கப்படுத்தி அவள் செய்யவிருக்கும் காரியத்தை தடுத்து விடலாம். இந்த விடயம் கோணப்புவுக்குத் தெரியாமலிருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். சண்டி சுனில் அதற்குமேல் உயிருடன் இருப்பது நல்லதல்ல.

அவ்விடத்தில் வைத்து அவனை துப்பாக்கியால் சுடுவது அருகிலிருக்கும் யாரதும் கவனத்தை கவர்வதாக இருக்கும். அவன் தனது துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு சுனிலின் துப்பாக்கியை அதன் குழாய்வழியாகப் பிடித்துக் கொண்டு அவனருகில் சென்றான். பின் “இந்தா உன் துப்பாக்கி” என்று சுனிலை நோக்கி துப்பாக்கியை நீட்டினான்.

அவனின் இச்செயலால் குழம்பிப்போனான் சுனில். தன்னை கொல்வதற்குப் பதில் அவன் ஏன் தனது துப்பாக்கியை தன்னிடமே தருகிறான் என விழித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிந்தனை முற்றுப் பெறுவதற்கு முன்பே அவன் முன் மண்டையில் துப்பாக்கியின் பின் பகுதி பலமாகத் தாக்கியது. அவன் பொறிகள் கலங்கின மண்டைக்குள் ஆயிரம் நட்சத்திரங்கள் மின்னலடித்தன. அவனை மயக்கம் ஆட்கொண்டது. முதுகுக்குப்பின் உதைத்து அடுத்தகணம் அவனை அப்படியே வாவிக்குள் தள்ளிவிட்டான் ரஞ்சித். அவன் துப்பாக்கியையும் வாவிக்குள் வீசிவிட்டு தனது காரை நோக்கி நடந்தான்.

சுனில் தனது மரணம் இத்தனை விரைவில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கவில்லை. அவன் பாதி நினைவும் பாதி மயக்கமுமாக இருந்தான். தலை நீருக்குள் கீழ் நோக்கியும் கால்கள் மேல் நோக்கியுமிருந்தன. இதற்கு முன் தான் விளைவித்த பல மரணங் கள் நினைவுக்கு வந்தன. அவற்றுக்கான தண்டனையாக இது இருக்குமோ எனவும் இப்போது நினைத்தான். அவன் கத்த நினைத்தாலும் வாய்திறபடவில்லை. வாயைத்திறந்தால் தண்ணீர் மூச்சுக் குழாய்க்குள் போய் விடும். மரணங்களிலேயே கொடூரமான மரணம் தான் நீரில் மூழ்கிச் சாவது. அதனை தான் அனுபவிக்க வேண்டி வரும் என்று நினைத்திருக்கவில்லை.

மரணம் கிட்ட நெருங்கும்போது நாம் பிரக்ஞையுடன் இருப் பது இவ்வளவு கொடுமையானதாக இருக்குமென அவன் எண்ணியதில்லை. அவன் மூளை தப்பிச் செல்ல நினைத்தாலும் நரம்பும் தசை நார்களும் ஒத்துழைக்கவில்லை.

அவன் தன் வாழ்க்கையை நினைத்துப்பார்த்தான். தான் சமூ கத்தை வெறுத்தது. மனிதர்களைப் பழிவாங்கியது. பச்சை இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தச் சிந்த கொலை செய்தது. பிறர் மரண பயத்தால் துடிக்கும் போது சந்தோசப்பட்டது. எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன.

அதற்குமேல் அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. என்ன தடுத்தும் நீர் பலாத்காரமாக மூச்சுக் குழாய்க்குள் புகுந்தது. உடம்பு எங்கும் ஆயிரம் ஊசிகள் புகுந்து துளைத்துத் துழாவியது போல் ஒரு உணர்வு. இது தான் நரகமோ? அவன் நரகத்துக்குள் தள்ளப்பட்டு விட்டான்.

சுமார் மூன்று வருடத்துக்கு முன்பு இப்படித்தான் விஜயபால வீதிய பண்டார என்பவன் கண்டி வாவியில் மூழ்கி பிணமாகக் கிடப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர். ஆனால் அவன் ஏன் கொல்லப்பட்டான் என்பது இதுவரை யாருக்கும் தெரியாது.

சண்டி சுனிலும் அடுத்த நாள் அந்த பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவான்.

சித்ராம்பரி தனது அறையில் கடும் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். கடந்த இரண்டு நாட்களும் அவள் வாழ்வில் இரண்டு யுகங்களாகக் கழிந்தன. எப்போதோ வாழ்ந்திருந்த எஹலப்பொல நிலமேயின் வாரிசு என்று கூறிக் கொள்ளும் இந்த கோணப்பு கரலியத்த பண்டார என்ற பைத்தியக்காரனிடம் இருந்து தப்பமுடியுமா? அதுவும் ரஞ்சித்துக்குத் தெரியாமல் தப்ப முடியுமா? ரஞ்சித்தின் மேல் தான் பைத்தியக் காரத்தனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் கொண்டிருந்தாலும் அவன் தன்னை அந்த அளவுக்குக் காதலிக்கவில்லை என்று நினைத்த அவள் மனம் நொந்து போனது.

ஆனால் இன்று அவளிருக்கும் இக்கட்டான நிலையில் ரஞ்சித் ஒருவனால் தான் அவளைக் காப்பாற்ற முடியும். அவள் தான் எடுத்த தீர்மானத்தை ரஞ்சித்திடம் கூறி அவனை எப்படியாவது சம்மதிக்கச் செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்தாள்.

இன்று எப்படியும் அவன் வந்ததும் விசயத்தை பக்குவமாக எடுத்துக்கூறி அவனை சம்மதிக்க வைத்துவிட வேண்டும் என நினைத்தாள்.

என்னதான் இருந்தாலும் அவளது பாலியல் சில்மிசங்களில் இருந்து ரஞ்சித்தால் ஒரு போதும் தப்பமுடிவதில்லை. இன்றிரவு தனது எல்லா சாகசங்களையும் பயன்படுத்தி அவனை தன் வயப்படுத்தி விடவேண்டும். முழு அளவில் தன்னை அவனுக்கு விருந்தாக்கி விட்டால் அவன் அதில் மூழ்கிப் போவது நிச்சயம்.

அவனுக்கு தான் வைக்கும் விருந்தில் அவன் மூழ்கித் திளைத்திருக்கும் போது விசயத்தைக் கூறினால் அவனால் மறுக்க முடியாது. அவள் சற்றே நிம்மதியடைந்தாள்.

இன்றிரவு ராம்ஜீயை தப்பிக்கச் செய்து விட்டால் நாளையே அவனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டுவிடலாம். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் விரைவில் ரஞ்சித்துடன் இங்கிருந்து தப்பிச் சென்று மலேசியாவுக்கோ சிங்கப்பூருக்கோ ஓடிப்போய் விடலாம் என்று சிந்தித்தாள் சித்ராம்பரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தப்பிப்பதற்கான திட்டம்

சித்ராம்பரி இப்போது அங்கிருந்து எப்படி தப்பிப்பது என்று தீவிரமாக சிந்தித்தாள். முதலில் ராம்ஜீயை தப்புவிக்க வேண்டும். அவன் தப்பிச்சென்றால்தான் பணத்தை பெற முடியும். பணம் இல்லா விட்டால் எதிர்கால வாழ்க்கை இல்லை. இவ்வித சிந்தனையில் தூண்டப்பட்ட சித்ராம்பரி இந்த பழங்கால கட்டிடத்தின் சுரங்கப்பாதைகளையும் இரகசிய நுழைவாயில்களையும் காட்டும் வரைபடமொன்றைத் தேட முற்பட்டாள். அத்தகைய வரைபட மொன்று அவளது அலுமாரியில் முன்பிருந்ததாக அவளுக்கு நினைவிருந்தது. அவள் பொருட்களை எல்லாம் வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துப்போட்டு முழு அலுமாரியையும் துழாவினாள்.

இறுதியில் சுருட்டப்பட்ட காகிதக்குழாய் போல் மூளையில் இருந்த அந்த பழுப்பு நிற வரைபடத்தை கண்டு பிடித்தாள். ஒரு ஐந்து பட்டரி டோர்ச்சையும் தனது வெள்ளிப்பிடி போட்ட துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள் ராம்ஜீயைச் சந்திக்க. ராம்ஜீயும் சித்ராம்பரி தன்னைச் சந்திக்க எந்த சந்தர்ப்பத்திலும் வரக்கூடும் என்று எதிர்பார்த்துக்காத்திருந்தான். விநோத மனிதன் என்ற திலக்க ஸ்ரீபண்டார சுமார் எட்டு மணி அளவில் தான் தனக்கு இரவு உணவு கொண்டு வருவான். அதற்குள் சித்ராம்பரி வந்து விடுவாளாயின் நன்றாக இருக்கும். இப்போது மணி ஏழு ஆகிறது. சித்ராம்பரி வரத் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ராம்ஜீக்கு ஒவ்வொரு யுகமாக தெரிந்தது. சித்ராம்பரி வந்த உடன் அந்த மின்சாரத்தில் இயங்கும் கதவை எப்படி திறப்பதென்றும் வழி கண்டு பிடித்துக்கொள்ள வேண்டும். பூட்டும் பொறி முறையைத்தெரிந்து கொண்டால் திறப்பதற்கும் வழி பிறக்கும்.

அவன் சிந்தனை முற்றிலும் தாம் எப்படித்தப்புவது என்ற திட்டத்தில் மூழ்கியிருந்தபோதுதான் அந்த அந்தகார நிசப்தத்தை கலைத்துக்கொண்டு யாரோ நடந்து வரும் மெல்லிய காலடிச்சத்தம் கேட்டது. தரையில் உருக்குத்தகடு பதிக்கப்பட்டிருந்ததால் அந்த காலடிச்சத்தம் தெளிவாகவே கேட்டது. அது சித்ராம்பரியின் குதியுயர் செருப்பின் “டொக் டொக்” ஒலிதான்.

ஆம்! கதவை திறந்து கொண்டு வந்தது சித்ராம்பரிதான். அவள் முகம் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் வெளிறிப் போயிருந்தது. கண்களில் மரண பயம் தெரிந்தது. அவள் மனம் மரணப் பொறியில் சிக்கிக்கொண்ட எலியின் மனதைப்போல தவிக்கின்றதென்பதை ராம்ஜீ புரிந்து கொண்டான். அவள் ராம்ஜீயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி மிகப்பரிதாபகரமாக பார்த்தாள். ஏதோ ராம்ஜீதான் அவளை சிறைப்படுத்தியிருப்பது போலும் அவன் தான் தன்னை விடுவிக்க வேண்டும் என்பது போலும் அவள் பாவனையிருந்தது.

அவள் ராம்ஜீயைப் பார்த்து மிகவும் உடைந்த குரலில் கூறினாள். "ராம்ஜீ இதில் வரைபடம், துப்பாக்கி, டோர்ச் என்பன உள்ளன. நான் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றி விட்டேன். நீங்கள் தப்பிச் சென்றதும் நாளை நண்பகல் பன்னிரண்டு மணிக்குள் எனக்கு வாக்களித்த ஒரு கோடி ரூபாய் பணத்தை தயார்படுத்தி உங்கள் வீட்டுக்கேட்டின் உட்புறம் வைத்து விடுங்கள். நான் வந்தால் தாமதிக்காமல் எடுத்துச்செல்லும்படி இருக்க வேண்டும். என்னை நீங்கள் பொலிஸில் பிடித்துக்கொடுக்கமாட்டீர்கள் என பரிபூரணமாக நம்புகிறேன். உங்கள் உயிரைக் காப்பாற்றிய நன்றிக்கடனை மறக்கமாட்டீர்கள் என்பதும் எனக்கு தெரியும். சிலவேளை நான் பன்னிரண்டு மணிக்குள் வராவிட்டால் நீங்கள் பொலிசாருடன் வந்து இந்த பங்களாவில் இருந்து என்னைக்காப்பாற்ற வேண்டும்."

அவளது அந்த உருக்கமான பேச்சை கேட்ட ராம்ஜீக்கும் கவலையாகத்தான் இருந்தது. அவள் என்னதான் கொலைகாரியாக இருந்தாலும் தனக்கு செய்த உதவிக்கு கைமாறாக அவளையும் தன்னுடன் அழைத்துச்சென்றால் என்ன என்று ராம்ஜீ ஒரு கணம் யோசித்தான். தன் யோசனையை அவளிடமும் தெரிவித்தான். "சித்ராம்பரி நீயும் என்னுடன் தப்பி வந்து விடுவதில் என்ன பிரச்சினை?"

"அது முடியாது" கோணப்பு என் மீது சந்தேகம் கொண்டு விட்டான். அவன் எப்போதும் என்னை அவதானித்துக்கொண்டிருக்கிறான். நான் நீண்ட நேரம் அவன் கவனிப்பில் இருந்து விடுபட்டிருக்க முடியாது. அதனை விட பேராபத்து ரஞ்சித் நிமால் ஸ்ரீ. அவன் என்னைப்பிரிந்து செல்ல அனுமதிக்க மாட்டான். அவன் எப்படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிறிது நேரத்தில் என்னை சந்திக்க வருவான். அவனை ஏமாற்றுகின்றேன் எனத்தெரிந்தால் அவன் மிகப்பயங்கரமானவனாகி விடுவான். முதலில் நீங்கள் தப்பிச்செல்லுங்கள். நான் நாளை அவனையும் சம்மதிக்க செய்து அழைத்துச்செல்லலாம் என்றுதான் நினைக்கிறேன்.”

ராம்ஜீக்கும் அவள் சொல்வது நியாயமாகப்பட்டது.

“சரி நீங்கள் எப்படியாவது தப்பிச்சென்று விடுங்கள். ஏற்பாடு செய்தபடி நடந்து கொள்ளுங்கள்.”

ராம்ஜீ சரியென உறுதியளித்தான்.

அவள் செல்வதற்கு முன் கதவை யாருடைய உதவியும் இல்லாமல் திறப்பதற்கான பொறி முறையைக் கண்டுபிடித்து விட வேண்டுமென்று கருதி அது பற்றி ஆராய்ந்தான். அதைப் புரிந்துகொண்ட சித்ராம்பரி அதற்குத்தேவையில்லை என்றும் எல்லா சுரங்கப்பாதைகளுமே அவ்விடத்தில் இருந்து தான் பிரிகிறதென்றும் ராம்ஜீ செய்யவேண்டியதெல்லாம் வரைபடத்தைக்கொண்டு எந்தப் பாதையை தெரிவு செய்ய வேண்டும் என்பது மட்டும்தான் என்றும் கூறினாள்.

அதன்பின் அவள் விடைபெற்றுச் சென்றாள்.

ராம்ஜீ திலக்க ஶ்ரீ பண்டார வரும்வரை காத்திருந்தான்.

**சண்**டி சுனில் இன்னும் வந்து சேரவில்லை என்பதை அறிந்து கோணப்பு அவனைத்தேட இன்னும் அரை மணி நேரமாவது பிடிக்கும். அதற்குள் சித்ராம்பரியை சந்தித்து விட வேண்டும் என்று நினைத்தான் ரஞ்சித். அவன் ஒரு நிமிடமும் தாமதிக்காது சித்ராம்பரியை பார்க்கச்சென்றான். அவள் அவளது அறையில் கட்டிலில் மல்லாந்து படுத்து கடுமையான யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ரஞ்சித் நடந்து விட்ட சம்பவம் தொடர்பில் மிகப் பதற்றமாக காணப்பட்டான். அத்துடன் அவன் மிகக்கோபத்துடனும் இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் புயலென அங்கு வந்தவிதம் அவன் தோற்றம் அவனது பதற்றம் என்பன சித்ராம்பரியை அச்சம் கொள்ள வைத்தன. அவன் அவளது திட்டத்தை தெரிந்து கொண்டு விட்டானோ என சந்தேகம் கொள்ள வைத்தது. எனினும் அவள் எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. வழமை போல் இருப்பதாகவே காட்டிக்கொண்டாள்.

"சித்ரா, நீ உன் மனதில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய் உனக்கு உன் உயிர்மேல் ஆசையில்லையா?"

"நீ எதைப்பற்றி கூறுகிறாய் ரஞ்சித்?"

"நீ நுவரவில்லா பங்களாவில் ராம்ஜீயின் செயலாளரை சந்தித்து ராம்ஜீயை தப்பிக்கச்செய்ய பேரம் பேசியதை சண்டி சுனில் ஒட்டுக்கேட்டு விட்டான். அவன் அந்த விடயத்தை தலைவருக்கு தெரிவித்தால் உன் கதி....."

"நீ என்ன சொல்கிறாய்?" கதி கலங்கிப்போய் கேட்டாள் சித்ராம்பரி. அப்படியானால் அவள் சந்தேகப்பட்டது சரி. தன்னை யாரோ பின்தொடர்கிறார்கள் என்று முன்பே அவள் உணர்ந்திருந்தாலும் அப்போது அவளுக்கு அதனை உறுதி செய்ய முடியாதிருந்தது. இப்போது என்ன செய்வது? அவள் கலவரமடைந்தாள். சண்டி சுனில் அந்த விடயத்தை கோணப்புவிடம் தெரிவித்தால் அவள் கதி அதோ கதிதான்.

"நீ செய்திருக்கும் காரியம் தலைவருக்கு தெரிந்தால் உனக்கு மட்டுமல்ல எனது சமாதியும் தயாராக இருக்குமென்று ஏன் உனக்கு புரியாமல் போய்விட்டது..?" ரஞ்சித் அவள் தோள்களை பிடித்து அசுரத்தனமாக உலுக்கினான்.

சித்ராம்பரி சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவன் கழுத்தை வளைத்து அவன் தோள்களில் சாய்ந்து கொண்டாள். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காரியத்தை எனக்காக மட்டுமல்ல நம் இருவருக்காகவும் தான் செய்தேன். ராம்ஜீ ஒரு கோடி ரூபா கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறான். நாளை நண்பகல் பன்னிரெண்டு மணிக்குள் காசு கிடைத்து விடும் அதனை எடுத்துக்கொண்டு எங்காவது ஓடிவிடலாம்.

அவள் பேச்சைக்கேட்டு மேலும் கோபமடைந்தான் ரஞ்சித்... "பைத்தியக்காரியைப்போல் உழராதே. அந்தப்பணத்தை பெறு வதற்கு நீயும் நானும் உயிருடன் இருக்க வேண்டும். இதன் பிறகும் இந்த வீட்டை விட்டு வெளியேற முடியும் என்று கருதுகிறாயா?"

அதெல்லாம் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நீ அந்த சுனில் இந்த விசயத்தை தலைவரிடம் கூறி விடாமல் மட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும். செய்வாயா?...

"அவன் இப்போது உயிருடன் இல்லை. அவன் கணக்கை தீர்த்து விட்டேன். அவன் இப்போது கண்டி வாவியில் மிதந்துகொண்டிருப்பான். உன் காரியத்தால் நீ என்னையும் இக்கட்டான நிலைக்கு தள்ளிவிட்டாய் என்பதை ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்?"

"அப்படியானால் என்னை நீ கைவிடவில்லை. நன்றி ரஞ்சித் நன்றி... நாம் உடனடியாக இங்கிருந்து தப்பிச் செல்வது பற்றி சிந்திக்க வேண்டும். நீ என்ன சொல்கிறாய்.." என்று ஆறுதலுடன் வினாவினாள் சித்ராம்பரி.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோணப்பு பண்டாரவின் கொதிப்பு

சித்ராம்பரியின் கிறுக்குத்தனத்தால் சண்டி சுனிலை ரஞ்சித் கொன்று விட்டான். அது அவன் தன் காதலியை காப்பாற்றுவதற்கு செய்த உபாயம். அதன் காரணமாக ரஞ்சித்தும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டான். எனவே இருவரும் சேர்ந்து தப்பிக்கலாம் என்று சித்ராம்பரி கேட்டபோது அவனால் அதற்கு சம்மதிப்பதை தவிர வேறு வழியிருக்கவில்லை.

"நானும் அதுபற்றித்தான் யோசிக்கிறேன். உன்னிடம் எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் இருக்கிறது" ரஞ்சித் கேட்டான். கையில் ஐம்பதாயிரம் இருக்கிறது.....வங்கியில் சேமிப்பில் பத்து லட்சம் இருக்கிறது.

"அப்படியானால் பணத்தையும் சில துணிமணிகளையும் எடுத்துக்கொண்டு புறப்படு. நாம் இன்னும் அரைமணி நேரத்துக்குள் புறப்பட்டு விட வேண்டும். சுனில் காணாமல் போன விடயம் தெரிய வரும்போது நாம் இங்கிருக்கக் கூடாது."

அவர்கள் இருவரும் தப்பிச்செல்ல தயாராகினர்.

ஆனால் அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் கோணப்பு கரலியத்த பண்டார இரகசிய ஒலிபெருக்கி வாயிலாகவும் ஒலிப்பதிவு நாடா மூலமும் கேட்டுக்கொண்டிருக்கின்றான் என்பதை அவர்களால் ஊகிக்க முடியவில்லை. அவர்களால் அங்கிருந்து தப்ப முடியாது என்பதை தெரிந்தும் தெரியாதவர்களாக இருந்தனர்.

**டி.எஸ்.**பி. சிங்கராயர் தனது அலுவலகத்தில் கடும் யோசனையில் இருந்தார். இந்த விடயத்தில் பொலிஸ்காரனல்லாத ராம்ஜீயை தான் ஈடுபடுத்தியது தவறோ என்று நினைத்தார். ஆனால் ராம்ஜீ எல்லா பொலிஸ்காரனை விடவும் மிகுந்த புத்திசாலியும் துணிவும் வீரமும் மிக்கவன் என்பதாலும் எந்த இக்கட்டான நிலைமையில் இருந்தும் தப்பித்து விடக்கூடியவன் என்பதாலும் அவன் ஆற்றலை குறைத்து மதிப்பிட்டு விட முடியாதென்றும் சிந்தித்த டி.எஸ்.பி. அவன் எப்படியும் தப்பித்து வந்து விடுவான் என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டார்.

அவன் ஆபத்திலிருக்கும் போது அவனுக்கு உதவ வேண்டியது தனது தலையாய கடமை என்பதை உணர்ந்து அவர் பொலிஸ் கொமாண்டோ பிரிவில் இருந்து தனது நம்பிக்கைக்குரிய ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரை அழைத்து அவர்களில் இருந்து ஒருவரை தெரிந்தெடுத்து தலைவனாக நியமித்து உடனடியாக கண்டிக்கு செல்லுமாறு பணித்திருந்தார். பொதுவாக பொலிஸ் கொமாண்டோப் பிரிவு தற்போது நாட்டில் நிலவும் பயங்கரவாத நிலைமையைக் கருதி பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட்டு வந்தது. இவர்கள் நாடெங்கும் தமக்கென தனியான பொலிஸ் பிரிவையமைத்து செயற்பட்டு வந்தனர். கண்டி தலதா மாளிகை குண்டுத்தாக்குதலின் பின்னர் கண்டியில் இத்தகைய பொலிஸ் கொமாண்டோப் பிரிவினர் மிகத்தீவிரமாக செயற்பட்டு வந்தனர்.

கொழும்பில் இருந்து ராம்ஜீக்கு உதவுவதற்கென செல்லும் குழுவினர் கண்டி கொமாண்டோப் பிரிவு அலுவலகத்தில் நிலை கொள்வதென்றும் அவர்கள் நளாயினி என்பவருக்கு உதவ வேண்டுமென்றும் அவரிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்தால் அதன் பிரகாரம் நடந்து கொள்ளுமாறும் அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் இரகசியம் பேண வேண்டுமென்றும் அவர்களின் வரவின் நோக்கம் யாருக்கும் தெரியக்கூடாதென்றும் பணிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கொழும்பில் இருந்து சக்தி வாய்ந்த மோட்டர் சைக்கிள்களில் புறப்பட்டதால் சுமார் ஒன்றரை மணித்தியாலத்தில் கண்டியை அடைந்துவிட முடியும் என்றும் எதிர்பார்க்கின்றனர். அவர்களில் நால்வர் சரமாரியாக தாக்குவதற்கு வசதியாக T-56 ரக துப்பாக்கியும் ஒருவர் மாத்திரம் தூரத்தில் இருந்து குறி பார்த்து சுடுவதற்கென AK 47 ரக துப்பாக்கியும் வைத்திருந்தார். இடுப்பில் கைக்குண்டுகள் அடங்கிய பெல்ட் காணப்பட்டது. அவர்களது செயல்திறன் எந்தவொரு கட்டளையிடப்பட்ட பணியையும் கச்சிதமாக முடித்து விடும் வல்லமையை கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ராம்பரி வந்து விட்டு சென்ற மாத்திரத்திலேயே செயலில் இறங்கினான் ராம்ஜீ. வினோத மனிதன் அவனுக்கு சாப்பாடு எடுத்துவர இன்னும் 15 நிமிடங்களே இருந்தன. அதற்குள் வரைபடத்தில் இருந்து தப்பித்துச் செல்லும் சுரங்க வழி எதுவென தீர்மானித்து விடவேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டான் ராம்ஜீ. அந்த சுரங்க அறையில் நாற்பது வாட் மின்சார பல்பே போடப்பட்டிருந்ததால் மிக மங்கலான ஒளியே காணப்பட்டது. வரைபடம் சிறிய எழுத்துக்களாலும் மெல்லிய கோடுகளாலும் வரையப்பட்டிருந்தது. அவனால் குறைந்த வெளிச்சத்தில் தெளிவாக பார்க்க முடியவில்லை. எனவே அவன் டோர்ச் லைட்டைப் பயன்படுத்த தீர்மானித்தான்.

வரைபடத்தில் ஐந்து சுரங்கப்பாதைகள் பற்றிய விபரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் அவன் சிறை வைக்கப்பட்டிருந்த சுரங்க அறையில் இருந்து சுமார் 50 யாருக்கப்பால் ஆரம்பமாகின்றன. அவை ஒன்று முதல் ஐந்து வரையிலான இலக்கங்களால் குறிக்கப்பட்டிருந்தன. இரண்டு மூன்று நான்கு ஆகிய இலக்கங்களால் குறிக்கப்பட்டிருந்த சுரங்கப்பாதைகள் மூன்றும் கண்டி வாவியுடன் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றை விடுத்து ஏனைய இரண்டு சுரங்கப்பாதைகளையும் ஆராய்ந்தான் ராம்ஜீ. அவை இரண்டும் ஒன்று மற்றும் ஐந்து என்று இலக்கமிடப்பட்டிருந்தன.

அந்த இரண்டு சுரங்கப்பாதைகளில் ஒன்று என இலக்கமிடப்பட்ட சுரங்கப்பாதை தலதா மாளிகை என்று அடையாளமிடப்பட்டிருந்த கட்டிடத்துடனும் ஐந்து என அடையாளமிடப்பட்டிருந்த சுரங் கப்பாதை கட்டுக்கலை பிள்ளையார் கோயில் என்றும் அடை யாளமிடப்பட்டிருந்த கட்டிடத்துடனும் இணைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கலை பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் சுரங்கப்பா தையை ஆராய்ந்தான் ராம்ஜீ. அது வளைந்தும் நெளிந்தும் மேலேறியும் கீழிறங்கியும் சென்றது. அவ் வரைபடத்தின் அளவுத்திட்டத்தின்படி மனக்கணக்கு போட்டுப்பார்த்தான் ராம்ஜீ. சுரங்கத்தின் தூரம் சுமார் மூன்று கிலோ மீற்றர் இருக்கலாம்.

அப்போது யாரோ நடந்து வரும் காலடி சத்தம் கேட்டது. மிக உறுதியான காலடிகள் அளந்து எடுத்து வைப்பதுபோல் சீரான இடைவெளியில் அவை அந்த சுரங்கப்பாதையை நோக்கி வந்தன.

கோணப்பு கரலியத்த பண்டார எமகாதகனை விடப்பயங்கர மானவன். சித்ராம்பரி எப்போது இயக்கத்தில் இருந்து ஓடி விடத்தீர்மானித்தாளோ அப்போதே அவள் மீது அவன் சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டான். அதனை உறுதி செய்து கொள்ளவே அவன் அவளைத்தேர்ந்தெடுத்து நுவரவில்லா பங்களாவுக்கு அனுப்பி வைத்தான். கூடவே அவளைக்கண்காணிக்க அவளுக்கு தெரியாமல் சண்டி சுனிலையும் போகச்சொல்லி அவளது ஒவ்வொரு அசைவையும் வேவு பார்க்குமாறு பணித்தான்.

அது மாத்திரமன்றி சித்ராம்பரி மனம் மாறினால் அது ரஞ்சித்தையும் பாதிக்கும் என்பதையும் கோணப்பு அறிவான்.

அவள் எப்படியும் அவன் மனதை தன் பக்கம் திருப்பி விடுவாள். அவள் மீது ரஞ்சித் பெரிதும் மோகம் கொண்டிருக்கும் விடயம் கோணப்புவுக்கு தெரியாததல்ல.

சித்ராம்பரி கொழும்பில் இருந்து திரும்பி வந்ததில் இருந்து மிகவும் குழம்பிப் போயிருப்பதும் கோணப்புவுக்கு தெரியும். எனவே அவன் சித்ராம்பரியினதும் ரஞ்சித்தினதும் நடவடிக்கைகளை கூர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்க தீர்மானித்திருந்தான். ரஞ்சித் எங்கே என்று விசாரித்த போதெல்லாம் அவன் சித்ராம்பரியின் அறையில் இருப்பதாகவே பதில் கிடைத்ததால் கோணப்பு மேலும் எரிச்சலடைந்தான். அவன் அவர்கள் இருவரும் என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக்கேட்க நுண்ணிய ஒலிவாங்கி ஒன்றை அவர்களின் அறையிலும் பேச்சை பதிவு செய்து பின்னர் கேட்கும் விதத்தில் டேப் ரெக்கோடரை தனது கட்டுப்பாட்டறையிலும் பொருத்தி வைத்தான்.

சுனிலை வரச்சொல்லி நீண்ட நேரமாகியும் அவன் வராததால் சந்தேகம் கொண்ட கோணப்பு பங்களாவின் கட்டுப்பாட்டு அறைக்குள் சென்றான். அவ்வறையில் இருந்து பங்களாவின் சகல நிலக்கீழ் அறைகளையும் சுரங்க வாயில்களையும் கண்காணிப்பு செய்ய முடியும். அதற்கேற்ற விதத்தில் நுண் தொலைக்காட்சி வீடியோ கமெராக்களும் கணினித்திரைகளும் பொருத்தப்பட்டிருந்தன.

கட்டுப்பாட்டு அறைக்குச் சென்ற கோணப்பு முதல் வேலையாக சித்ராம்பரியின் அறையில் பேசுவதை ஒட்டுக்கேட்கப் பொருத்தப்பட்டிருந்த டேப் ரெக்கோடரை ஓடச் செய்தான். டேப் ரெக்கோடரில் சித்ராம்பரியும் ரஞ்சித்தும் இறுதியாக பேசிய உரையாடல்கள் தெளிவாக பதிவாகியிருந்தன. அவற்றைக் கேட்க கேட்க கோணப்புவின் காதுகளுக்குள் பழுக்க காய்ச்சிய இரும்புக் கம்பியை செருகியதுபோல் அவன் எம்பிக்குதித்தான்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சரியான விடையை தெரிவு செய்தல்

சித்ராம்பரியும், ரஞ்சித்தும் அந்த பழைய மர்ம மாளிகையை எவ்வளவு தான் அறிந்து வைத்திருந்தாலும் அவர்கள் அறியாத மேலும் பல ரகசியங்கள் அங்கு புதைந்திருந்தன. அவர்கள் தப்பிப்பதற்கென தீட்டிய திட்டத்தை கோணப்பு அப்பட்டமாக தெரிந்துக் கொண்டுவிட்டான் என்பதை அவர்கள் அறியாத அப்பாவிகளாக இருந்தனர்.

கோணப்பு உடனே விநோத மனிதன் திலக்கஸ்ரீ பண்டாரவை உள்ளக தொலைபேசி வாயிலாக அழைத்தான். சித்ராம்பரியும் ரஞ்சித்தும் எங்கே இருக்கிறார்கள் என்று உடனே பார்த்துச் சொல்லும்படி பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உடனேயே சித்ராம்பரியின் அறைக்கு தொடர்பு கொண்டான். சித்ராம்பரி டெலிபோனை எடுத்தாள். அங்கு ரஞ்சித் இருக்கின்றானா என்று திலக்க கேட்டான்.

சித்ராம்பரி ரஞ்சித் அங்கு தான் இருக்கின்றான் என்று கூறி அவனிடம் பேச வேண்டுமா என்று கேட்டாள். ஆனால் மறுமுனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

மறுபுறத்தில் சுரங்க அறைக்குள் ராம்ஜீ மிகுந்த பதற்றத்துடன் இருந்தான் மணி எட்டாக இன்னும் சில நிமிடங்களே இருந்தன. அத்தறுவாயில் தான் யாரோ வரும் உறுதியான காலடிச் சத்தம் கேட்டது. ராம்ஜீ உஷாரானான். தன் கைவிலங்கு கழற்றப்பட்டிருப்பதை விநோத மனிதன் அறியக்கூடாது என்பதால் அவற்றை மீண்டும் மாட்டிக் கொண்டான். ராம்ஜீயால் இப்போது அந்த கை விலங்கை ஒரு நொடியில் கழற்ற முடியும். அவ்வாறு அவன் பழக்கிக் கொண்டிருந்தான்.

விநோத மனிதன் கதவைத்திறந்து சாப்பாட்டுத் தட்டையும் தண்ணீரையும் வைத்துவிட்டு ராம்ஜீயின் கைகளைப் பிணைத்திருந்த விலங்கையும் கழற்றி விட்டான். பின் அவன் சாப்பிட்டு முடியும் வரை காத்திருந்தான் அவன் முகம் கல்போல் இறுகிப் போயிருந்தது. இவன் மௌனமாகவே இருந்தான். ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

ராம்ஜீ சாப்பிட்டு முடித்ததும் அவன் கைகளுக்கு மீண்டும் விலங்கிட்டு பிணைத்தான். பின் ஒன்றும் பேசாமல் கதவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திவிட்டுத் திரும்பிப் போய் விட்டான். ராம்ஜீ ஒரு கணமும் தாமதிக்கவில்லை. தன் கைவிலங்குகளைக் கழற்றிக் கொண்டான். பின் துப்பாக்கியையும் டோர்ச், வரைபடம் முதலியவற்றையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அடுத்த சில மணி நேரங்கள் அவன் வாழ்வில் மறக்க முடியாத சில மனப் பதிவுகளை ஏற்படுத்தப் போகின்றன என்பது அவனுக்கு அப்போது தெரியாது.

அவன் சுரங்க அறையை விட்டு வெளியேறி இருட்டான சுரங்கத்துக்குள் நுழைந்தான். அந்தப் பகுதியில் நீண்ட நாட்களாக யாரும் நடமாடியதற்கான அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை. ஒவ்வொரு காலடியும் தடிப்பாகப் பிடித்திருந்த புழுதிப் படலத்தில் ஆழமாய் பதிந்தது. அவன் நூலாம் படைகளை உடைத்துக் கொண்டு சென்றான். சிலவேளை கோணப்பு தான் தப்பிச் சென்றதை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்குள் அவன் கைகளுக்கு எட்டாத நீண்ட தூரத்துக்கு சென்றாக வேண்டும். அவன் மனம் "ஓடு ஓடு" என எச்சரித்தது.

அவன் சுமார் ஐம்பது யார் தூரத்தை அடைந்த போது ஒரு சிறு வராந்தா போன்ற கூடம் காணப்பட்டது. எதிரே பலமான தட்டையாக வடிவமைக்கப்பட்ட சுவர் ஒன்றும் காணப்பட்டது. அச்சுவற்றில் ஐந்து நுழைவாயில்கள் காணப்பட்டன. அவைதான் சுரங்க பாதைகளின் வாயில்கள். இதில் எந்த வாயில் கட்டுக்களை விநாயகர் ஆலயத்துக்குச் செல்வதற்கு வழிகாட்டக் கூடியது. அவன் ஒரு கணம் குழம்பிப் போனான்.

பின் சற்று நிதானமாக யோசித்தான். தான் முன் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகள் எழுதிய போது சரியான பெட்டியைத் தேர்ந்தெடுத்து உரிய பெட்டியில் அடையாளம் இடுக என்று கேள்வி கேட்கப்படுவது ஞாபகத்திற்கு வந்தது. அத்தகைய கேள்விகளுக்கு விடை தெரியாத போது முதலில் பிழையான பதில்கள் எவை என அறிந்து அவற்றைக் கிழித்துக் கொண்டுவர வேண்டும். எஞ்சியிருப்பது தான் சரியான விடையாக இருக்கும் என்று அவனது ஆசிரியர் கூறியதும் நினைவுக்கு வந்தது.

அந்த வழிமுறையைப் பின்பற்றுவது என்று தீர்மானித்தான். படித்தது பயன்படுகிதே என்பதால் அந்த இக்கட்டான தருணத்திலும் மகிழ்ச்சியாக இருந்தது.

நடுவில் இருக்கும் மூன்று சுரங்கப் பாதைகள் வாவியை இணைப்பவை. எனவே அவை தவறான சுரங்கப் பாதைகள். எஞ்சி இருக்கும் இரண்டு சுரங்கப் பாதையில் எது கட்டுக்கலைக்கு செல்வது. அதனையே அவன் கண்டுப்பிடிக்க வேண்டும். அவன் வரைபடத்தை எடுத்தான்.

வரைபடமொன்றை சரியாக புரிந்துக் கொள்ள வேண்டுமாயின் முதலில் வடக்குத் திசை எது என்று கண்டுபிடிக்க வேண்டும். வரைபடத்தில் திசைக் காட்டும் குறியீட்டினை ஆராய்ந்தான் ராம்ஜீ. வடக்கு திசை எப்போதும் மேல் நோக்கியதாகவே இருக்கும். படத்தைத் தூக்கிப் பிடித்து வலது கோடியில் ஐந்தாவதாக இருக்கும். சுரங்கப் பாதையே தான் செல்ல வேண்டிய சுரங்கப்பாதை எனத் தீர்மானித்தான். அது நினைத்ததைவிட சற்று விசாலமானதாகவே இருந்தது. அத்தகைய பாதை ஒன்றை நிலத்துக்கு கீழ் அமைக்க அதிக பொருட் செலவும் ஆள்பலமும் காலமும் பிடித்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அந்த அவசர நேரத்திலும் எதற்காக அந்த சுரங்கப் பாதையை அமைத்திருக்க வேண்டுமென்று யோசித்தான்.

கீர்த்தி ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் ஆட்சியின் இறுதிக்காலம் பல்வேறு சூழ்ச்சிகள், சதித் திட்டங்கள், பழிவாங்கல்கள், கொடுமைகள், கொலைகள் நிறைந்ததாக இருந்தது. அன்றைய அரசின் உயர் மட்ட அதிகாரிகளான மகா திசாவை நிலமே, கோராள மொஹட்டால என்போர் மிகப் பீதியுடனேயே வாழ்ந்து வந்தனர். விடிந்ததும் யார் கழுத்துக்கு கத்தி வரும் என்று தெரியாமல் இருந்தது இவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கோள் சொல்லி அரசனிடம் நல்ல பெயர் பெற முனைந்தனர். ஒவ்வொருவரும் கோபமும் பொறாமையும் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு நாளும் ஒரு புதியவர் பதவியில் அமர்த்தப்பட்டார் யாருடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லாமல் இருந்தது.

அரசனும் பயத்துடனும் சந்தேகத்துடனும் வாழ்ந்திருந்தான். தன்னைச் சுற்றியிருப்போர் ஏதும் சதி செய்து தன்னைக் கவிழ்த்து விடக்கூடும் என்று பயந்திருந்தான். அதற்கேற்றால் போல் பிலிமத்தலாவை என்ற மகாதிசாவை ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டு அரசை காட்டிக் கொடுக்க சதி செய்கிறான் என்றெல்லாம் செய்திகள் பரவியிருந்தன. அதனைக் கேள்விப்பட்ட அரசன் அவன் தலையை சிரச்சேதம் செய்ய அறிவித்தான்.

அதன் பின் அவனுக்கு சாதகமாக இருந்த பலரதும் தலைகள் சீவப்பட்டன.


அரச அதிகாரிகள் பதுங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் அரச சேவையை விட்டே ஓடி ஒழிந்தனர். எஹலப்பொல அதிகாரம் மகா திஸாவையாக நியமிக்கப்பட்ட போது அவன் மிக இளமையானவனாக இருந்தான். அவனுக்கு மேல் பல மூத்த திஸாவைகள் இருக்கும் போது அவனை ஏன் மன்னன் மகா திஸாவையாக நியமித்தான் என நினைத்துப் பலரும் புலம்பினர். அவர்கள் அப்படி புலம்பித் துடிக்க வேண்டுமென்பதே மன்னனின் விருப்பமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏஹலப் பொலவின் வரலாறும் மரணமும்

**மன்**னனுக்கு எதிராக சதி செய்த மகாதிஸாவை பிலிமத்த லாவையை மன்னன் சிரச்சேதம் செய்ததால் பல திசாவைகள் உள்ளுக்குள் மனம் மகிழ்ந்தனர். ஆனால் அடுத்த கட்டமாக வயதில் மிக இளைய திசாவையான எகலப்பொலவை மகாதிஸாவைப் பதவிக்கு நியமித்ததால் மனதுக்குள் குமைய ஆரம்பித்தனர். மன்னன் ஏன் அப்படிச் செய்தான் என்பதும் விளங்கவில்லை. அவர்கள் மத்தியில் உட்பகையை வளரவிடுவதே தனக்கு பாதுகாப்பானது என மன்னன் நினைத்ததை அவர்கள் விளங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முயற்சிக்கவில்லை.

எஹலபொலவுக்கும் தன்னை ஏன் மன்னன் மகாதிஸாவையாக நியமித்தான் என்பது பிரச்சினையாக தான் இருந்தது. தன்னை விட மூத்தவர்கள் பலர் இருக்க தன்னை நியமித்ததால் ஏனைய பல உயர் அதிகாரிகளும் கோபமும் கொதிப்பும் அடைந்திருந்தனர்.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ள எஹலப்பொல பற்றி அறிதல் அவசியம்.

எஹலப்பொல மகா நிலமே 1773ஆம் ஆண்டு பிறந்து 1829 ஆம் ஆண்டு வரை வாழ்ந்திருந்தான். 1798ஆம் ஆண்டிலிருந்து 1815ஆம் ஆண்டு வரை மகா அதிகாரம், மகா நிலமே அல்லது மகா திசாவை பதவி வகித்தான்.

மாத்தளை மாவட்டத்தில் எஹலப்பொல என்ற கிராமத்தில் பிறந்த இவன் இரண்டாம் இராஜசிங்கன், இரண்டாம் விமலதர்மசூரியன், நரேந்திரசிங்கன் ஆகியோரின் காலத்தில் இருந்தே பல்வேறு பதவிகளை வகித்து வந்தான். இவனின் மூதாதையர் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவனது தந்தையான எஹலப்பொலவும் ஏழுகோரளை பிரதேசத்தின் திசாவையாக பதவி வகித்தவரே. தாயார் முன்பு மகாநிலமை பதவி வகித்தவரான பிலிமத்தலாவையின் (பின்னர் மன்னனால் தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் சிரச்சேதம் செய்யப்பட்டவர். விக்ரமராஜசிங்க மன்னனை பதவியில் அமர்த்தியவரும் இவரே) வழிவந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் பிலிமத்தலாவையின் மருமகனான எஹலப் பொல குடாகல யட்டவத்த புத்தமத தத்துவத்தில் நன்கு புலமை பெற்றிருந்தான். பின் ராஜசிங்க மன்னனின் அரசவையில் சேவக னாகப் பதவி பெற்றான்.

அவன் படிப்படியாக அரசனின் நம்பிக்கையைப் பெற்று திறைச்சேரிப் பொறுப்பாளர், பள்ளேவாகல பொறுப்பதிகாரி, அரசவைச் செயலாளர் ஆகியபதவிகளிலும் அமர்த்தப்பட்டான். விக்ரம ராஜசிங்கன் காலத்தில் 1803 ஆம் ஆண்டு ஏழுகோரளை திசாபதியாக நியமிக்கப்பட்டான்.

1808 ஆம் ஆண்டு மீகஸ்தென்ன அதிகாரத்தின் மரணத்தின் பின் அவரது பிரதேசமான உடுகம்பஹா அதிகாரமாக பதவிபெற்றான். பின் 1812ஆம் ஆண்டு பிலிமத்தலாவ மகா அதிகாரம் மன்னனால் சிரச்சேதம் செய்விக்கப்பட்ட பின்பு அப்பதவிக்கு எஹலப்பொல நியமிக்கப்பட்டான். அதன் பின் அவன் ‘எஹலப்பொல செனவிரத்ன சேனாநாயக்க சந்திரதிலக்க விஜேசுந்தர திசாநாயக்க அமரக்கோன் வாஹல பண்டித முதியான்சே’ என்ற பெயரில் பிரபலமானான்.

எனினும் பிலிமத்தலாவையைப் போலவே கண்டி ராச்சியத்தை தன்வசப்படுத்த ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டான். கண்டி மக்களை மன்னனுக்கெதிராகத் தூண்டிவிட்டான். காலத்துக்குக் காலம் மறைந்து வாழ வேண்டிய தேவையும் தலைமறைவாக நடமாட வேண்டிய தேவையும் பலரை தன் மாளிகையில் மறைத்து வைத்திருக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி ராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டு 1815 ஆம் ஆண்டு கண்டி ஒப்பந்தம் செய்யப்பட்டபோது அதில் முதல் கையெழுத்திட்டவன் எஹலப்பொலவாகும். எனினும் ஆங்கிலேயர் அவனை நன்கு பயன்படுத்திக்கொண்டு பின் கறியில் இருந்து கறிவேப்பிலையை தூக்கி எரிந்துவிடுவது போல் வீசிவிட்டனர். அதன்பின் எஹலப்பொல வேறு எந்தப் பதவியையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

1817 - 1818ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆங்கிலேயருக்கெதிரான கலகத்தில் கலகக்காரர்களுக்கு உதவினான் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு மொறீசியஸ் தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு சிறை வைக்கப்பட்டான். அங்கு வைத்து அவன்1827 ஆம் ஆண்டு வாந்திபேதி நோய் ஏற்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் மரணமானான்.

இவ்வித வரலாற்று பின்னணியில் இருந்து கதைக்கு வருவோம்.

ராம்ஜீயைத் தப்புவிப்பது தொடர்பில் திட்டத்துடன் வருவதாகச் சொன்ன சித்ராம்பரியிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லாததால் நாளாயினியும் ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் கவலையடைந்தனர்.

டி.எஸ்.பி. சிங்கராயர் கொடுத்த இரகசிய இலக்கத்துடன் தொடர்புகொள்வதா இல்லையா என்பதில் ஒரு தீர்மானத்துக்கு வர முடியாமலிருந்தது. எனினும் அன்று இரவு 8 மணிவரை சித்ராம்பரி தொடர்புகொள்கிறாளா என்று பொறுத்திருப்பதென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி அவளிடமிருந்து எந்தத் தகவலும் வராவிட்டால் அந்த இரகசிய இலக்கத்துடன் தொடர்புகொண்டு உதவி பெறுவதென்றும் தீர்மானித்திருந்தனர்.

அதன் பிரகாரம் இப்போது அந்த இரகசிய இலக்கத்துடன் தொடர்பு கொண்டார்கள். நளாயினியே முதலில் பேசினாள். அத்தொலைபேசியின் மறுமுனையில் இருந்து இந்த தொலைபேசி அழைப்பிற்கே காத்திருந்ததுபோல் பதில் வந்தது.

“இங்கே Code - C -5 பேசுகிறோம். உங்கள் கட்டளைக்காகவே காத்திருக்கிறோம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிவித்தால் மட்டும் போதுமானது”

நளாயினி விசயத்தை சுருக்கமாக விளங்கப்படுத்தினாள். மௌனரவிலா மாளிகை, அதற்குப் போவதற்கான வழி, கோணப்பு பண்டார, விநோத மனிதன், சித்ராம்பரி, ரஞ்சித் என்பவர்களது விபரம், அந்த அரண்மனையில் நிலத்தடியில் அமைக்கப்பட்டுள்ள இரகசிய அறைகள், சுரங்கப் பாதைகள், கீழே நிலத்தடி அறையொன்றில் ராம்ஜீ சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றமை. அவனை பாதுகாப்புடன் மீட்டுவரல் தொடர்பில் அவர்களுக்கு விபரங்களைத் தெரிவித்தாள். பின்னர் தமது தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் கூறி இந்த நடவடிக்கை மிக இரகசியமாக இருக்க வேண்டுமென்றும், கண்டிப் பொலிசுக்குத் தெரியக் கூடாதென்றும் யாரும் எதிர்பார்க்கா வண்ணம் சடுதியாக உள்ளே நுழைய வேண்டுமென்றும் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் கேட்டுக்கொண்ட Code C-5 குழுவினர் பயப்பட வேண்டாமென்றும், வெடி குண்டுகளைப் பயன்படுத்தவும், யாரையும் சுடவும் தமக்கு உத்தரவு உள்ளதென்றும் தெரிவித்தனர். இன்னும் அரைமணி நேரத்தில் விளைவு என்னவென்று தெரியும் என்றும் கூறினர்.

ராம்ஜீ பிடிப்பட்ட கணத்தில் இருந்தே கோணப்பு பண்டார கலவரப்பட்டான். இத்தனை விரைவில் தனது இருப்பிடத்துக்கே ஒருவன் தேடிக் கொண்டுவந்து விடுவான் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

ஜனாதிபதி, அமைச்சர்கள், பொலிஸ் மற்றும் சகல மட்டங்களிலும் தனக்கு செல்வாக்கிருந்தும் தன் வீட்டுக்கு பொலிஸ் வந்தமை அவனுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. இதற்கெல்லாம் காரணம் சித்ராம்பரிதான். அவளின் கவனக் குறைவுதான் என்று அவன் சந்தேகப்பட்டது இப்போது ஊர்ஜிதமாகிவிட்டது. அவள் ராம்ஜீயுடன் சேர்ந்து தன் இயக்கத்தை காட்டிக் கொடுப்பாள் என்று அவன் கனவிலும் நினைத்ததில்லை.

அவன் ரஞ்சித்தை பெரிதும் நம்பியிருந்தாலும் அவன் சித்ராம்பரி மீது கொண்டிருக்கும் காதலால் அவள் பக்கம் சாய்ந்துவிடுவான் என்பது கோணப்புவுக்குத் தெரியும். அவர்களின் உரையாடல்களை ஒட்டுக்கேட்டதன் மூலம் அவர்கள் இருவரினதும் திட்டத்தைத் தெரிந்துக் கொண்டான். இனிமேலும் அவர்களை உயிருடன் விட்டுவைத்தால் தனக்கு ஆபத்து என்பதும் அவனுக்கு விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதோ ஒரு நாள் இத்தகைய நிலைமை உருவாகும் என்று எதிர்பார்த்த கோணப்பு கொழும்பு ரொஸ்மீட் பிளேஸில் ஒரு ஆடம்பர பங்களாவை வாங்கி வைத்திருந்தான். எனவே கண்டி மொனரவிலா மாளிகையின் இரகசியங்களையும் அதில் வாழ்ந்தவர்களையும் இங்கேயே புதைத்துவிட்டு கொழும்புக்குச் சென்று சூரியபண்டாரவின் உதவியுடன் கொழும்பில் தன் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என்று தீர்மானித்தான். மொனரவிலா மாளிகையைப் போலவே அந்த பங்களாவிலும் இரகசிய அறைகளும் பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இப்போது அங்கே அந்த பங்களாவில் இருக்கின்ற அனைவரையும் உயிருடன் சமாதி வைத்து விடுவதே அவனது எண்ணம். ராம்ஜீ, சித்ராம்பரி, ரஞ்சித் ஆகியோருடன் திலக்கஸ்ரீ என்ற விநோத மனிதனும் இனி அவசியமில்லை என நினைத்தான்.


அவன் விநோத மனிதனை அழைத்தான். தன் அலுவலக அறையில் இருக்கும் பெரிய பிரயாணப் பெட்டியை தன்காரில் கொண்டுபோய் வைக்குமாறு பணித்தான் ஏற்கனவே அங்கிருந்த பணம், தங்கம் மற்றும் விலைமதிப்புள்ள பொருட்கள் சகலதையும் எடுத்து பெரும் பிரயாணப்பையில் போட்டு தயார்படுத்தி வைத்திருந்தான் கோணப்பு. அவற்றை காரில் வைத்துவிட்டு வந்த விநோத மனிதனிடம் கீழே சுரங்க அறைக்குப் போய் ராம்ஜீயை அழைத்துவரும்படியும் சித்ராம்பரியையும் ரஞ்சித்தையும் வரும்படி அறிவிக்குமாறும் பணித்தான். அவனின் உள்நோக்கத்தை அறியாத விநோத மனிதன் ராம்ஜீயை அடைத்து வைத்திருந்த சுரங்க அறை நோக்கிச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குள் குரூரமாகச் சிரித்துக் கொண்ட கோணப்பு மின்சாரக் கட்டுப் பாட்டு அறைக்குச் சென்றான் அங்கிருந்த மின் பொத்தான்களை அழுத்தி சகல இரகசிய அறைகளையும் மூடினான். கண்டி வாவியில் இருந்து நீரைக் கொண்டுவரும் இரும்பு வாயில்களைத் திறந்து விட்டான். இன்னும் ஐந்து நிமிடங்களில் அம்மாளிகையின் கீழ் பகுதி முற்றாக நீரில் மூழ்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிர் கொல்லும் விலாங்கு மீன்கள்

**தன**து இரகசிய இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் சித்ராம் பரியின் திட்டம் கோணப்புவை பெருங்கோபம் கொள்ளத் தூண்டி யது. அவன் அந்த இரகசிய மாளிகையில் இருந்த சகலரையும் ராம்ஜீ உள்ளடங்களாக நீருக்குள் சமாதி கட்டத்தீர்மானித்தான். எனினும் அதற்குள் ராம்ஜீ பாதுகாப்பான தொலைவுக்குத் தப்பிப் போயிருந்தான்.

ராம்ஜீ சுரங்கப்பாதைக்குள் நுழைந்து பத்துப்பதினைந்து நிமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்கள் கடந்திருந்தன. எனினும் அவனால் வெகுதூரம் முன்னேற முடியவில்லை. நூற்றாண்டு காலமாக அங்கு மனித நடமாட்டம் இல்லாதிருந்ததால் சிலந்திவலை அடர்த்தியாகக் காணப்பட்டது. எலிகள், பெருச்சாலிகள் அங்கும் இங்கும் ஓடிய வண்ணமிருந்தன. பாம்புகளும் இருக்கக்கூடும் என யோசித்தான் ராம்ஜீ. ஆனால் அதனூடாகச் செல்வதைத்தவிர வேறு மார்க்கம் அவனுக்கில்லை.

சில இடங்களில் மேலே ஏறிச்செல்ல படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஏறியும் பின் இறங்கியும் செல்ல வேண்டியிருந்தது. சிலவேளை தான் சுரங்க அறையில் இல்லாததை அறிந்தால் கோணப்பு தன்னைத்தேட ஆள் அனுப்பக்கூடும் என்று கருதியதால் அவன் ஓட்டமும் நடையுமாகவே சென்றான்.

உள்ளே ஒருவித புழுக்கமும் புழுதி மக்கியதாலும் அதில் எலிகளின் சிறுநீர் கலந்ததாலும் ஏற்பட்ட நெடிசகிக்க முடியாததாக இருந்தது. காற்றின் அசைவின்மையால் துர்நாற்றம் நாசிக்குள் மிக ஊடுறுவித்துளைத்தது. அவன் உடலெங்கும் வேர்வை ஆறாய் பெருக்கெடுத்தோடியது. அதற்குள் நீண்ட நேரம் இருந்தால் தொண்டை வரண்டே செத்துவிடுவான் போல் தோன்றியது. அத்தகைய நினைப்பு வந்ததும் மீண்டும் ஓடத் தொடங்கினான் ராம்ஜீ.

ஓரிடத்தில் சுரங்கத்தின் கூரை இடிந்து வீழ்ந்திருந்தது. அவ்விடத்தால் தண்ணீரும் கசிந்துக் கொண்டிருந்தது. எனினும் முற்றிலும் பாதை மூடப்பட்டிருக்கவில்லை. நிலத்திலும் நீர் நிறைந்து முழங்கால் அளவுக்குக் காணப்பட்டது. அவ்விடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த சிரமப்பட்டே கடக்க வேண்டியிருக்கும் என்றே நினைத்தான் ராம்ஜீ. மேலே கண்டி வாவியில் இருந்தே நீர் கசிகிறது என்று புரிந்து கொண்டான். அந்தச் சுரங்கம் இன்னும் நீண்ட நாட்களுக்குத் தாக்குப்பிடிக்காது. அச்சுரங்கவாயிலாகச் செல்லும் கடைசி மனிதன் தானாகத்தான் இருக்குமென கருதினான்.

அவன் குவிந்துகிடந்த மண், கல் மேட்டில் ஏறி அடுத்த பகுதிக்குத் தாவிக்குதித்தான். மண் இறுக்கமடையாமல் சேறாக இருந்ததால் அவன் கால்கள் இரண்டும் முழங்கால் அளவுக்கு சேற்றில் புதைந்தன. சேற்றில் புதைந்த கால்களை இழுத்தெடுத்து ஒவ்வொரு அடியாக நகர பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. யானைகள் சேற்றில் மாட்டிக் கொண்டால் அவற்றின் கால்களை சேற்றில் இருந்து எடுக்க முடியாமல் அவ்விடத்திலேயே புதைந்துக் கிடக்குமாம். பின் உணவு நீர் இல்லாமல் இறந்துபோய்விடுமாம். இவ்வாறு முன்பு எங்கோ படித்தது ஞாபகத்துக்கு வந்தது. தானும் அப்படித்தான் புதைந்து கிடக்க நேரிடுமோ?...

தான் அந்த சுரங்கத்தில் இருக்கும் விடயம் சித்ராம்பரிக்கு மாத்திரம் தான் தெரியும். அவள் வந்து காப்பற்றக் கூடுமா நாளைக்குப் பணத்தை தேடி நுவரவில்லா பங்களாவுக்கு வருவாள். அப்போது தான் இல்லாவிட்டால் தன்னைத்தேடக்கூடும். ஆனால் அதுவரை கோணப்பு பண்டார தன்னை விட்டுவைப்பானா?

அவன் யானையின் நிலையை நினைத்துக்கொண்டான். தன் கால்கள் மேலும் நிலத்துக்குள் புதையா வண்ணம் அடுத்த காலுக்கு அதிகமான விசையைக் கொடுக்காமல் மாற்றிக் காலை மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தெடுத்தான். பின் மிக மெதுவாக அடுத்த காலை எடுத்தான். இப்படி பத்தடி தூரம் வரை மண் குவியலில் இருந்து இறங்கிச் செல்ல வேண்டியிருந்தது. இறுதியில் மிகப் பிரயத்தனப்பட்டு அந்த சேற்றுக்குவியலைக் கடந்தான். இன்னும் எத்தனை தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்? அவனுக்கு மேலும் வியர்த்தது...

ராம்ஜீயையும் சித்ராம்பரி மற்றும் ரஞ்சித் நிமல்ஸ்ரீ ஆகியோரையும் அழைத்து வருவதற்காக மின்சார லிப்டில் கீழிறங்கிச் சென்றான் விநோத மனிதன். முதல் இருபது அடிகளை லிப்டிலும் அடுத்த பத்தடிகளை இரும்புப் படிகளிலும் இறங்கிச் சென்றான்.

அந்த நிலக்கீழ் அறைகள் சதுரமாக நிலத்தைக்குடைந்து அமைக்கப்பட்டிருந்தன. நாற்புறமும் நான்கு அறைகள் இருந்தன. நடுவில் சதுரமான வெற்றிடம் காணப்பட்டது. இரண்டு தட்டுக்களைக் கொண்டிருந்தது. மேல் தட்டிலேயே சித்ராம்பரியின் அறையும் ரஞ்சித்தின் அறையும் எதிரும் புதிருமாக இருந்தன. ஆனால் அநேகமான நேரங்களில் அவர்கள் இருவரும் சித்ராம்பரியின் அறையிலேயே இருப்பார்கள்.

அவர்களது அறைகளில் இருந்து வெளியே வந்தால் வெளியே வராந்தாவும் அதனை அடுத்து இரும்புக் கம்பிகளால் சுற்றிவரத்தக்கதாக சதுரமான பெல்கனியும் அமைக்கப்பட்டிருந்தன. பெல்கனியில் இருந்து பார்த்தால் கீழ்த்தட்டும் அங்கு போவோர் வருவோரும் சதுரமான வெற்றிடமும் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோத மனிதனின் ஆஜானுபாகுவான உயர்ந்த தடித்த உருவம் இரும்புப்படிகளில் இறங்கிச் செல்லும் சத்தம் தட்.. தட்.. என பெரிதாகக் கேட்டது. அத்துடன் தடித்த இரும்பு ஆணிகள் பதித்த பூட்சும் அணிந்திருந்ததால் அவனது காலடிச்சத்தங்கள் பெரிதாக எதிரொலித்தன.

இந்த சத்தம் சித்ராம்பரிக்கும் ரஞ்சித்துக்கும் கூட கேட்டது. இந்த நேரத்தில் விநோத மனிதன் ஏன் சுரங்க அறைக்குச் செல்கிறான் என சித்ராம்பரி நினைத்தாள். அவள் தனது மணிக்கூட்டைப் பார்த்தாள் மணி 8.30 ராம்ஜீ இந்நேரம் தப்பிச் சென்றிருப்பான். அவன் தப்பி சென்ற விடயம் விநோத மனிதனுக்குத் தெரிந்தால் அவன் கோணப்புவுக்குச் சொல்வான் அதன் பின்...

சித்ராம்பரி பதற்றமடைந்தாள். அவள் உடனேயே அறையைத்திறந்து கொண்டு வெளியே வந்தாள். அவளைத் தொடர்ந்து ரஞ்சித்தும் ஓடி வந்தான்.

விநோத மனிதன் ராம்ஜீ இருந்த சுரங்க அறையின் கதவைத் திறந்ததுதான் தாமதம். உள்ளிருந்து பேரிரைச்சலுடன் மடை திறந்த வெள்ளம் போல் சடுதியாக அடித்துக் கொண்டு வந்தது நீர். விநோத மனிதன் அதிர்ச்சியடைந்தாலும் மீண்டும் கதவைப் பூட்டப்பார்த்தான். ஆனால் நீரின் அசுரபலத்துக்குமுன் அவனால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

நீர் அவனையும் சேர்த்து அடித்துத்தள்ளியது. அறைகளுக்கு முன்னால் இருந்து வெற்று வெளியிலும் அறைகளிலும் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக நிறையத் தொடங்கியது.

வீழ்ந்த விநோத மனிதன் எழுந்திருந்தான். அவன் கழுத்தளவிற்கு ஏற்கனவே நீர் நிறைந்து விட்டது. அது அங்குலம் அங்குலமாக உயரத் தொடங்கியது. விநோத மனிதனால் என்ன நடந்தது என்று உடனடியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. தண்ணீர் எப்படி வந்தது என்று சிந்தித்தான்.

நிலக்கீழ் அறைகள் கண்டி வாவியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன என கேள்விப்பட்டிருக்கின்றான். ஆனால் இன்று அது உண்மை எனத் தெரிந்து கொண்டான். அந்த நினைப்பு அவன் உடம்பெங்கும் மின்சாரத்தைப் பாய்ச்சியது போல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கோணப்பு செய்திருக்கும் சதியை உடனடியாகப் புரிந்து கொண்டான் விநோத மனிதன். மேலிருக்கும் கோணப்பு பண்டாரவின் அறையில் இருந்து முக்கியமான பொருட்களை எல்லாம் அவனது காரில் எடுத்து வைக்குமாறு பணித்தமையும். ஒரு பெரிய பிரயாணப்பெட்டியை வாகனத்தில் ஏற்றச் சொன்னதையும் நினைத்துப் பார்த்தான்.

கோணப்பு பண்டார தனக்கும் சித்ராம்பரி, ரஞ்சித் ஆகியோருக்கு அங்கேயே சமாதி கட்டிவிட்டு தான் மட்டும் தப்பித்துப்போக திட்டமிட்டிருக்கிறான். மூளை கடுமையாக யோசித்தது. அங்கிருந்து தான் தப்புவது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு நினைப்பு அவனை பெரும் அச்சத்தில் ஆழ்த்தியது. முன்பு அரசர்கள் காலத்தில் அந்த சுரங்க அறையில் அரசியல் கைதிகளை அடைத்துவைத்திருந்தார்கள். அங்கு வைத்து அவர்களை பெரும் சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள். பின்னர் அவர்களைத் தீர்த்துக் கட்ட வேண்டுமாயின் கண்டி வாவித் தண்ணீரைத் திறந்து விடுவார்கள்.

கண்டி வாவி நீர் சுரங்கப் பாதையூடாக பாய்ந்துவரும். பல கிலோ மீற்றர்கள் தூரமுடைய அச்சுரங்கப்பாதைகளில் பல நீர் நிலைகள் காணப்பட்டன. அவற்றில் கூரிய பற்களைக் கொண்டிருக்கும் இராட்சத விலாங்கு மீன்கள் வாழ்ந்திருந்தன.

அவை பல்கிப்பெருகியபோது அவைக்குப் போதுமான உணவு சுரங்கத்துக்குள் கிடைக்காது. எனவே அவை தம்மினத்தையே கொன்று தின்று வந்தன. இதனால் பெரிய இராட்சத விலாங்கு மீன்கள் உருவாகியிருந்தன.

இவ்விதம் விலாங்கு மீன்கள் 35 அடி நீளம் வரை வளர்ச்சியடைந்திருந்தன. இவற்றின் பற்கள் கொடிய ஆட்கொல்லி சுறா மீனின் பற்களை விட பலம் வாய்ந்தவையாக இருந்தன.

சுரங்கத்துக்குள் வாவி நீர் பாய்ந்து வரும்போது இந்த விலாங்கு மீன்களும் சேர்ந்து நீருடன் அடித்துக் கொண்டு வரப்படுகின்றன. அவை சுரங்க அறைகளில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் கைதி களை மிகுந்த பசிவெறியில் கடித்துக் கிழித்துக்குத்திக்குதறிச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுவிடும். இத்தகைய சம்பவங்கள் தொடர்பான கதைகளை விநோத மனிதன் என்ற திலக்க ஸ்ரீ பண்டார கேள்விப்பட்டிருக்கின்றான். இதனை நினைத்ததும் தண்ணீருக்கடியிலும் அவனுக்கு வியர்த்தது.

தன் கால்களுக்கடியில் ஏதோ நெளிந்தோடும் உணர்வுகள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இப்படியும் ஒரு மரணம்

**சக**லரையும் சமாதி கட்டும் கோணப்புவின் சதித்திட்டம் காலங்கடந்த பின்பே விநோத மனிதனுக்குப் புரிந்தது. தனக்கு இத்தகைய கதி வந்துசேரும் என்று கனவிலும் அவன் கருதியிருக்கவில்லை. அவனை மரணம் மிக வேகமாக நெருங்கி வந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உணர்வால் துள்ளிக் குதித்தான் விநோத மனிதன். அவன் தப்பும் மார்க்கத்தைத் தேடினான். மேலேறிச் செல்லும் இரும்புப் படிகள் காணப்பட்ட வாயிலைத் தேடினான். அந்தக் கதவும் மூடபட்டிருந்தது. ஆயுதங்கள் இன்றி அதனைத் திறக்க முடியாது. அவன் மேலே நோக்கினான். மேலே சித்ராம்பரியும் ரஞ்சித்தும் இருந்த இரும்புகிராதி அடித்த பெல்கனி பத்து அடிகளுக்கு மேல் இருந்தது. அதில் இருந்து சித்ராம்பரியும் ரஞ்சித்தும் செய்வதறியாது கீழே நோக்கினர். விநோத மனிதனுக்கு என்ன நடக்கின்றதென அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

மேலே இரும்புக் கிராதியை பாய்ந்து பற்றுவதானால் நான்கு அடி எம்பிக் குதிக்க வேண்டும். விநோத மனிதன் ஆறு அடி உயரம் இருந்தான். அவன் கால்கள் இன்னும் தரையில் பட்டுக்கொண்டிருந்தன. அவன் தலை மட்டுமே நீருக்கு மேல் இருந்தது.

சித்ராம்பரியும் ரஞ்சித்தும் பார்த்துக் கொண்டிருக்கும்போது விநோத மனிதனிடம் இருந்து ஒரு பெரிய அலறல் சத்தம் கேட்டது. அவன் தலை நீருக்குள் காணாமல் போனது. நீருக்குள் பெரும் பூகம்பம் ஏற்பட்டது போல் தண்ணீர் வெடித்து நாலா பக்கமும் சிதறியது. நீர்த்திவலைகள் உயர எழுந்து சித்ராம்பரி மற்றும் ரஞ்சித்தின் முகங்கள் வரை விசிறியடித்தன.

விநோத மனிதன் தலை மீண்டும் நீருக்குள் மேல் வந்த போது அவன் முகத்திலும் மரணபயம் பிரதிபலித்தது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கைகளையும் உயரே தூக்கி தன்னைக் காப்பாற்றும் படி பரிதாபமாக சைகை செய்தான். அடுத்தக் கணத்தில் அவன் மீண்டும் நீருக்குள் காணாமல் போனான். நீருக்குள் பாரிய சலசலப்பு எழுந்தது. பருத்த நீண்ட பாம்புகள் சுருண்டு வளைந்து நெளிந்து திரிவது போல் தோற்றங்கள் தெரிந்தன. சில சமயம் நீர் கொதித்து நுரை எழுவது போல் தோன்றியது.

அடுத்த முறை விநோத மனிதனின் தலையும் கைகளும் வெளியில் வந்த போது அவன் முகத்தில் உயிர் இருப்பதாக தெரியவில்லை. அவன் இரத்தம் முழுவதையும் யாரோ உறிஞ்சி குடித்து விட்டனரோ என்பது போல் அவன் முகம் வெளிறிக் காணப்பட்டது. அவன் கைகளை உயர்த்தியபோது கைகளில் பல இடங்களில் மாங்காய் வடிவில் சதை கடித்து எடுக்கப்பட்டிருந்தது.

சித்ராம்பரிக்கும் ரஞ்சித்திற்கும் என்ன செய்வதென்று விளங் கவில்லை. நீர் மட்டம் அங்குலம் அங்குலமாக அதிகரித்துக் கொண்டிருந்தது. சுமார் எட்டடி வரை அதிகரித்திருக்க வேண்டும். அப்போது மிகப் பெரிய மரண ஓலம் விநோத மனிதனி டம் இருந்து கிளம்பி வந்தது. அவன் தலையும் கைகளும் நீருக்குள்ளிருந்து மேலே எழும்பி வந்தன. அவன் மற்றுமொரு ஓலத்துடன் மேலே சித்ராம்பரியும் ரஞ்சித்தும் இருந்த இரும்புக் கம்பியைப் பற்றிப் பிடித்தான். அவன் கம்பியை பற்றிப் பிடித்த படியே மீண்டும் ஒரு அலறல் அலறினான் அத்துடன் அவன் தலை தொங்கிப்போய்விட்டது.

சித்ராம்பரியும் ரஞ்சித்தும் மிகப் பீதியுடன் விநோத மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கைகளையும் ஆளுக்கொருவராய் பிடித்துத் தூக்கினர். அவன் உடல் சிறிது சிறிதாக நீரில் இருந்து வெளியில் வந்தது. நீருக்குள் இப்போது மேலும் சல சலப்பு அதிகரித்தது சித்ராம்பரியும் ரஞ்சித்தும் அவன் உடலை மேலே இழுக்க மிகப் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. கீழிருந்து யாரோ மிகப் பலம் வாய்ந்தவர்கள் அவனை இறுக்கிப் பிடித்திருப்பது போல் இருந்தது.

அவர்கள் மிகக் கஷ்டப்பட்டு அவன் உடம்பை மேலிழுத்தனர். அடுத்த கணம் சித்ராம்பரியிடம் இருந்து மிகப் பெரிய அலறல் ஒன்று வெளிப்பட்டது. விநோத மனிதனின் இடுப்புக்கு கீழ் சதையொன்றுமே இருக்கவில்லை. அவன் கால்கள் வெறும் எழும்புக் கூடாக மட்டுமே இருந்தன. இத்தகைய பயங்கரத்தை சித்ராம்பரியும் ரஞ்சித்தும் தம் வாழ்நாளில் பார்த்ததில்லை.

சித்ராம்பரி தன் அலறலுடன் தான் பிடித்திருந்த விநோத மனிதனின் கையை விட்டுவிட்டாள் அவளைத் தொடர்ந்து ரஞ்சித்தும் கரத்தை நழுவவிட்டான். விநோத மனிதனின் உடல் மீண்டும் நீருக்குள் சத்தத்துடன் விழுந்தது. அதனைத் தொடர்ந்து நீருக்கடியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. பலர் உள்ளே ஒருவரை ஒருவர் அடித்து உதைத்து யுத்தம் செய்வது போல் நீர் தளும்பியது.

நீரின் மேற்பரப்பு முற்றிலும் சிவப்பு நிறமாக மாறியது. நீண்ட சப்பட்டையான கூரிய முகங்கொண்ட இராட்சத விலாங்கு மீன் ஒன்று நீருக்கு மேல் எட்டிப் பார்த்தது. அதன் கண்களிலும் கொலைவெறி. அது வாயைத் திறந்த போது அதன் கூறிய பற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்த கண்ணாடித் துண்டு போல் பளிச்சிட்டன. அதனைத் தொடர்ந்து மேலும் சில இராட்சத விலாங்கு மீன்கள் தலையைத் தூக்கிப் பார்த்தன. அவற்றின் பார்வை தமது அடுத்த இரை எங்கிருக்கிறது என்று தேடுவதைப் போல் இருந்தது.

அவை சித்ராம்பரிக்கும் ரஞ்சித்துக்கும் இரண்டடித் தூரத்திலேயே இருந்தன. ஒரு எட்டுப் பாய்ந்தால் கூட அவர்களையும் பிடித்து இழுத்துக் கொண்டு நீருக்குள் போய்விட முடியும்.

சித்ராம்பரி மிகப் பெரிய அலறல் ஒன்றை வெளியேற்றிவிட்டு தன் அறையை நோக்கி ஓடினாள். அவளைத் தொடர்ந்து ரஞ்சித்தும் அவள் பின்னாள் ஓடினான். இன்னும் சிறிது நேரத்தில் விநோத மனிதனுக்கு ஏற்பட்ட அதே கதியே தமக்கும் ஏற்படப் போகிறது என்று நினைத்தபோது இந்த உலகமே உடைந்து சிதறிவிட வேண்டும் போல் தோன்றியது.

நீர் மட்டம் மெது மெதுவாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தப்பிக்கும் மார்க்கங்கள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. அங்கு காணப்பட்ட மின்னொளி மட்டுமே சற்று ஆறுதலளிப்பதாக இருந்தது. அதுவும் எந்த நேரத்திலும் போய்விடும்? அதன் பின்னர் என்ன நடக்கும். மரணம் மிக நெருங்கிக் கொண்டிருந்தது.

மரண பயத்தைப்பற்றி அனுபவித்தறிந்திராத ரஞ்சித் அது எவ்வளவு கொடுமையானது என்பதைப் புரிந்து கொண்டான். அவன் சித்திரவதை செய்து கொலை செய்த பலரதும் முகங்கள் ஞாபகத்துக்கு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக சண்டி சுனிலை கொலை செய்த அவன் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது இறுதிக் கணங்களில் அவன் கண்கள் தன்னைக் காப்பாற்றும் படி கெஞ்சியதை நினைத்துப் பார்த்தான். இப்போது தனக்கும் அதே நிலை ஏற்பட்டிருக்கிறது. தங்களை காப்பாற்றும்படி கெஞ்சுவதற்குக் கூட அங்கு யாரும் இல்லை.

இப்போது நீர் பெல்கனி இரும்புக் கிராதிகளையும் தாண்டி வராந்தவில் நிறையத் தொடங்கியது. இன்னும் சில விநாடிகளில் வராந்தா மூடப்பட்டுவிடும். அந்த கொடூரமான இராட்சத விலாங்கு மீன்கள் வந்துவிடும். இதுவரை அவன் கண்ணால் பார்த்த மரணங்களில் விநோத மனிதனின் மரணமே மிக் கொடூரமானது என்று கருதினான். அத்தகைய மரணமா தனக்கும் சித்ராம்பரிக்கும் ஏற்பட வேண்டும். இது என்ன பயங்கரம். அவன் கோணப்பு பண்டாரவை சபித்தான். அவனால் மட்டும் தப்பித்துவிட முடியுமா?

அந்த நிலக்கீழ் அறைகள் அனைத்தும் நீர் நிறைய இன்னும் அரை மணி நேரம் பிடிக்கும். அவ்வளவுதான் அவர்களின் ஆயுள். அவன் ஓடிச் சென்று வராந்தாவையும் மேல் அறைகளையும் மூடிப்பிரிக்கும் இரும்புக் கதவை தன் வெற்றுக் கரங்களால் தட்டினான்.

மின்சாரக் கதவு செயற்படாவிட்டால் ஏறிச் செல்ல இரும்பு ஏணி ஒன்றிருந்தது அதில் ஏறிச் சென்று அதன் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த தகட்டைத் திறக்கலாம் என்றும் பார்த்தான். அதுவும் மூடிப் பூட்டப்பட்டிருந்தது. எல்லாமே மிக்க கனதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு உருக்கு கலந்தமைக்கப்பட்ட உறுதியான தகடுகள் இத்தகைய சந்தர்ப்பத்தில் யாரும் உடைத்துக் கொண்டு தப்பித்துவிடக் கூடாது என்பதற்காகவே அமைக்கப்பட்டவை அவை. ரஞ்சித்தால் மாத்திரம் அவற்றை உடைத்துவிட முடியுமா?

அவன் பொறியில் அகப்பட்ட எலியைப்போல் அங்கும் இங்கும் ஓடி சுற்றிச் சுற்றி வந்தான். அப்போது சில இராட்சத விலாங்கு மீன்கள் நீர் மட்டத்திற்கு மேல் எட்டிப் பார்த்தன. அவற்றின் நீண்ட வாய்கள் ஆவெனத் திறந்திருந்தன. இரண்டுப் பக்கமும் கூரிய பற்கள் ஈட்டி போல் நீட்டிக் கொண்டிருந்தன.

மரணம் மிக அருகில் வந்துவிட்டது. என்றாலும் இந்த விலாங்கு மீன்களிடம் கடிபட்டு கொடூரமாக மரணிக்க அவன் விரும்பவில்லை. அவன் சித்ராம்பரியைத் தேடினான் அவள் அறைக்குள் போயிருந்தாள். அவனும் அறையை நோக்கிச் சென்றான்.

அவள் கட்டிலில் மிக சோகமாக வீழ்ந்து கிடந்தாள். ரஞ்சித் அவளருகில் சென்றதும் அவள் எழுந்து அவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள். எல்லாமே தனது மடத்தனம் என்று அழுது புலம்பினாள்.

ரஞ்சித் அவளை விடுவித்து அறைக் கதவை சென்று சாத்தினான் அவை இரும்புக் கதவுகள் என்றாலும் தண்ணீரில் இருந்து அக்கதவுகள் அவர்களைக் காப்பாற்றாது. ஆனால் அந்த விலாங்கு மீன்களுக்கு உள்ளே வர முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்மட்டம் இப்போது அறைக்குள்ளும் கொஞ்சம் கொஞ்சமாக உயர ஆரம்பித்தது அவர்கள் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி கட்டிலுக்கு மேல் எழுந்து நின்றனர். அப்போது அவர்களுக்கு ஆறுதலாக இருந்த மின்சார விளக்கும் அணைந்து போய்விட்டது. அந்தகாரம் அவர்கள் அறையில் மட்டுமல்ல அவர்கள் வாழ்விலும் சூழ்ந்தது.

இன்னும் சில நிமிடங்களில் அந்த அறையில் நீர் முற்றாக நிறைந்து விடும். சுவாசம் அவர்களுக்கு அந்நியமாகிவிடும். காற்று புகவேண்டிய சுவாசக்குழாயில் நீர் புகுந்து அவர்கள் பிராணனை அப்புறப்படுத்திவிடும். அதன் பின் இந்த உலகம் அவர்களுக்குச் சொந்தமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோணப்புவால் தப்ப முடியுமா?

**கோண**ப்பு என்ற சித்த சுவாதீனமற்ற சமூக விரோதி தன்னுடன் இவ்வளவு காலம் ஒன்றாக வேலை பார்த்த அனைவரையும் எந்தவித ஈவு இரக்கமும் இல்லாமல் மொனரவில மாளிகையின் அடியில் அமைக்கப்பட்டிருந்த சுரங்க அறைகளில் சமாதி கட்டி விட்டான்.

இது இப்படி இருக்க..

Code C - 5 குழுவினர் மொனரவில மாளிகை வாயிலை அடைந்த போது இரவு 8.45 மணி. நளாயினி தெரிவித்த குறிப்புக்களின் படி கண்டி வாவியின் இடது புறம் உயர்ந்த மலைப்பாங்கான அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் சக்தி வாய்ந்த ஐந்து மோட்டார் சைக்கிள்களில் அவர்கள் வந்திறங்கினர். அப்பிரதேசம் சந்தடி ஏதுமற்று அமைதியாக இருந்ததால் மோட்டார் சைக்கிள்களின் உறுமல்கள் இயற்கைக்கு மாறாக எதிரொலித்தன.

நாட்டில் நிலவிய யுத்த சூழ் நிலையால் இரவு எட்டு மணி யாகியவுடனேயே ஊரடங்கி விடுகின்றது. வீதியில் நடந்து செல்வோர் கூட ஒருவித அச்சத்துடன் தான் நடமாடினர். அண்மையில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரின் கண்டி வாசஸ்தலத்துக்கருகில் கண்டெடுக்கப்பட்ட கிளேமோர் குண்டு காரணமாக மக்கள் மத்தியில் மேலும் பீதி அதிகரித்திருந்தது. தூரத்தே தலதா மாளிகை கட்டிடம் மாத்திரம் ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. தலதா எஸல பெரகரா நெருங்கிக் கொண்டிருந் ததால் தலதா மாளிகையைச் சுற்றி மாத்திரம் சன நடமாட்டம் அதிகமாக இருந்தது. C - 5 குழுவினருக்கு இவை ஒன்றும் பொருட்டல்ல. அவர்கள் மொனரவில மாளிகையின் இராட்சத வாயிற் கதவுகளுக்கு அருகில் வந்திறங்கி எவ்வாறு வாயிலைத் திறந்து கொண்டு உள்ளே நுழையலாம் என்று அப் பழங்கால பெருங்கதவை ஆராய்ந்தனர்.

அப்போது உள்ளே ஒரு காரின் புறப்படும் உறுமல் கேட்டது. அவர்கள் வாயிற்கதவு திறக்கும் வரை காத்திருந்தனர். வாயிற்கதவுகள் மின்சாரத்தால் தூர இருந்து கட்டுப்படுத்தப்பட்டதால் கார் கதவருகில் வருவதற்கும் கதவு திறப்பதற்கும் நேரஞ்சரியாக இருந்தது. அந்த பீ. எம். டப்ளியூ சொகுசு காருக்குள் சாரதி ஆசனத்தில் ஒரு ஆள் அமர்ந்திருந்தான். அவனுக்கு நடுத்தர வயதுக்கு மேல் இருக்கும். நளாயினியின் விவரணையின் படி அவன் ராம்ஜீயாக இருக்க முடியாது.

Code C - 5 குழுவினர் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் படி C-4 மற்றும் C-5 ஆகிய இருவரும் அந்தக் காரை பின் தொடர்வதென்றும் முடியாத பட்சத்தில் அழித்துவிடுவதென்றும் குழுத்தலைவன் C-1 தலைக்கவசத்துடன் இணைக்கப்பட்டிருந்த தொலைதொடர்பு கருவி மூலம் பணிப்புரை வழங்கினான். அதன் படி இரண்டு மோட்டார் சைக்கிள்களும் காரைப் பின் தொடர்ந்தன. ஏனைய மூன்று மோட்டார் சைக்கிள்களும் மாளிகை நோக்கி விரைந்தன.

பி.எம். டப்ளியூ காரில் சென்ற கோணப்பு பண்டார மோட்டார் சைக்கிள் படையை எதிர்பார்க்கவில்லை. அவன் அதிர்ச்சியும் பதற்றமும் அடைந்தான். அவன் கார் சென்ற வேகம் அவன் பதற்றத்தைப் பிரதிபலித்தது. தன்னைப் பின் தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வருவதை அவதானித்த கோணப்பு மேலும் காரின் வேகத்தை அதிகரித்தான். என்றாலும் அந்த மலைப்பாங்கான பாதையில் அதிகமான திருப்பங்கள் காணப்பட்டதால் ஒரு மட்டத்துக்கு மேல் வேகத்தை அதிகரிக்க முடியவில்லை.

மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் நிபுணத்துவமிக்க C-5 குழுவினர் எந்த கரடுமுரடான பாதையிலும் சைக்கிள்களை விரைந்து செலுத்தப் பழகியிருந்தனர். அவர்களது ஒரே குறி அந்தக் காருக்கு முன்னால் சென்று அக்காரை நிறுத்தி உள்ளே இருப்பவனைப் பிடிப்பதாகும். C-4 தருணம் பார்த்து தன் சைக்கிளை விரைந்து காருக்கு முன் செலுத்தினான்.

கோணப்புவின் மனநிலை மிகக் கொடூரமானதாக இருந்தது. அவன் தன் வாழ்நாளில் எத்தனை கொலைகளை செய்திருக்கிறான். கொலை செய்யும் போது கொலையுண்டவர்கள் படும் வேதனை அவனுக்கு எவ்வளவு இதமானதாக இருந்திருக்கின்றது. அவனுக்கு மனிதர்களை கொல்வதென்றால் மூட்டைப்பூச்சியை நசுக்குவது போல் இருக்கும். அவன் ஒரு போதும் மரண பயம் எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்பதை உணர்ந்ததில்லை.

இப்போது தன்னை யாரோ இருவர் துரத்துகிறார்கள் என்ற எண்ணம் அவனுக்கு பெருங்கோபத்தை உண்டுபண்ணியது. இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் பய உணர்வு எட்டிப்பார்த்தது. தன்னை துரத்தும் அந்த இருவரையும் விட்டு வைக்கக் கூடாது என்று நினைத்தான். அவன் தனது காரை ஓடித்துத்திருப்பி தன்னை முந்திச் செல்ல முயலும் மோட்டார் சைக்கிளை இடித்து அந்த செங்குத்தான மலைச்சாரலில் உருட்டி விட முயற்சித்தான்.

ஆனால், அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல் மோட்டார் சைக்கிள் முன்னால் சீறிச்சென்றது. சைக்கிளை காருக்கு முன்னால் நிறுத்தி வழிமறித்தால் தன்னை மோதிச் செல்லவும் தயங்கமாட்டான் அந்த காரில் இருப்பவன் என்பதைப் புரிந்து கொண்டான் C-4. இப்போது முன்னாலும் பின்னாலும் மோட்டார் சைக்கிள்கள் செல்ல நடுவில் கார் சென்றது.

காருக்குப் பின்னால் வருபவனை விட காருக்கு முன்னால் செல்பவனை சுடுவது இலகு என நினைத்த கோணப்பு அருகில் சீட்டில் தயாராக வைத்திந்த துப்பாக்கியை இடது கையால் எடுத்து ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டி சுடுவதற்கு வசதியாக வலது கைக்கு மாற்றிக் கொண்டான்.

கோணப்புவின் வலது கை துப்பாக்கியுடன் வெளியே நீள்வதை அவதானித்த C-5 அதனை உடனே C-4 வுக்கு உடனே அறிவித்தான். இத்தகைய எச்சரிக்கையை விடுப்பதற்கு அவர்கள் வார்த்தைகளை விட சில ஒலிகளையே பயன்படுத்தினர். அந்த எச்சரிக்கை ஒலியை செவிமடுத்த மாத்திரத்திலேயே C-4 செயற்பட்டான். அவன் வளைவொன்றில் வேகமாக திருப்பி மறையவும் கோணப்பு சுடவும் நேரம் சரியாக இருந்தது. துப்பாக்கிக்குண்டு C- 4 வை தாண்டிக் கொண்டு அப்பால் சென்றது.

காருக்கு முன்னே செல்வது ஆபத்து என்ற படியால் காரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே செல்லவிடத் தீர்மானித்தான் C-4. முன்னிருந்த வளைவில் அவன் கோணப்பு கண்களில் படாமல் மறைந்து கொண்டான். கார் சென்றவுடன் C-5 உடன் இணைந்து கொண்டான். கார் இப்போது முன்னரை விட வேகமாக செல்ல ஆரம்பித்தது. C-4, C-5 ஆகியோர் அக்காரை சுமார் 15 அடி இடைவெளியில் பின் தொடர்ந்தனர்.

C-1, C-2, C-3 ஆகியோர் மொனரவில மாளிகை வாயிலை அடைந்த போது வாயிற்கதவுகள் அகலத்திறந்து காணப்பட்டன. மனிதர்கள் எவரும் அங்கிருப்பதாகத் தெரியவில்லை சில வேட்டை நாய்கள் மட்டும் குரைத்துக் கொண்டு ஓடி வந்தன. C-5 குழுவினர் நாய்களை அடக்குவதற்கும் பயிற்சி பெற்றிருந்தனர். C-1 தன் பெருவிரலையும் நடுவிரலையும் சேர்த்து சொடுக்கி ஒரு சத்தத்தை எழுப்பினான் நாய்கள் அனைத்தும் முணங்கிக் கொண்டு படுத்துவிட்டன.

மூவரும் புயலென மாளிகைக்குள் நுழைந்தனர். அநேகமாக எல்லா அறைகளும் திறந்தே கிடந்தன. எங்கு தேடியும் இரகசிய அறைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் வேறு வழியின்றி நளாயினியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர்.

நளாயினி முன்பு சித்ராம்பரி கூறியவற்றை நினைவு கூர்ந்தாள். இரகசிய அறைகள், நிலக்கீழ் சுரங்கப் பாதைகள் அவற்றின் கதவுகள் மின்சாரத்தில் இயக்கப்படுகின்றன. கண்டி வாவி, தலதா மாளிகை, கட்டுக்களை பிள்ளையார் கோவில் என்பவற்றை இணைக்கும் சுரங்கப்பாதைகள் என்பன தொடர்பாக சித்ராம்பரி குறிப்பிட்டவை நினைவுக்கு வந்தன.

நளாயினி அந்த மாளிகையில் இருக்கக்கூடிய ஒரு மின்சாரக் கட்டுப்பாட்டறையை கண்டு பிடிக்குமாறும் அதில் காணப்படுகின்ற கட்டுப்பாட்டு பொத்தான்களையும் பாதுகாப்பு வீடியோ கருவிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் கணினித் திரைகளையும் பரிசீலிக்குமாறும் கூறினாள். தானும் ஜெய்சிங்கும் விரைவில் அங்கு புறப்பட்டு வருவதாகவும் கூறினாள்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் மாளிகையை பரிசோதிப்பதில் இறங்கினர் C- 5 குழுவினர். அவர்கள் மின்சாரக் கட்டுப்பாட்டு அறை எங்கே இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதில் தீவிரமாக இறங்கினர்.

அந்த முயற்சிக்கு முன் மண்டபத்துக்குப் பின்னால் ஒரு பெரிய அறை இருப்பதை அறிந்தனர். ஆனால் அதனுள் செல்ல எங்கேயும் கதவு இருக்கவில்லை. அவர்கள் சுவர்களை நன்கு பரிசீலித்தனர். ஒரு பக்கச் சுவரில் ஒரு பழங்கால ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. அந்த ஓவியத்துக்குப் பின்னால் அடிக்கடி பலர் கை வைத்ததால் அழுக்கடைந்திருப்பதை C- 1 பார்த்தான். C- 1 அங்கே தடவிப் பார்த்ததில் ஒரு பொத்தான் தட்டுப்பட்டது. அதனை அழுத்தினான்.

உடனே சுவர் விரிந்து கதவொன்று திறந்தது. C- 5 குழுவினர் உள்ளே நுழைந்தனர். அங்கே முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட மின்சார கட்டுப்பாட்டறை ஒன்று காணப்பட்டது. கணினித்திரைகள் பல கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவப்பு கண்களுடன் ஒரு ஜந்து

**நளா**யினியின் அறிவுத்தல்களின் படி C-5 குழுவினர் ஒருவாறு கோணப்பு பண்டாரவால் மிக மறைவாக அமைக்கப்பட்டிருந்த இரகசிய கணினி கட்டுப்பாட்டு அறைகளை கண்டுப்பிடித்தனர். அந்த அறை இன்றைய சகல கணினி மூலம் இயங்கும் தொழில்நுட்பங்களையும் கொண்டிருந்தது.

மிக நுணுக்கமுடன் வடிவமைக்கப்பட்ட ராக்கைகளில் பலவித வர்ண மின் குமிழ்கள் பற்றிப் பற்றி எரிந்து கொண்டிருந்தன. ஒரு புறத்தில் ஒலி வாங்கிகள், மைக்ரோ போன்கள், அம்பிலிப்பயர்கள் வரிசையாகப் பொருத்தப்பட்டிருந்தன. அது ஒரு சிறிய விமான நிலைய கட்டுப்பாட்டறை போலவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C- 1 அங்கிருந்த இலக்கமிடப்பட்ட பல மின் சுவிட்ச் பொத்தான்களை வரிசையாக அழுத்தினான். அவற்றின் கிளிக் கிளிக் சத்தத்துடன் எங்கோ கதவுகள் திறப்பதும் மூடுவதையும் உணர முடிந்தது. அத்துடன் புதிதாக பல கணினித் திரைகள் உயிர் வந்து பளிச்சிட்டன. அவை பல அறைகளின் உள்வெளித் தோற்றங்களை படம்பிடித்துக் காட்டின.

அந்தக் கணினித் திரைகள் சில நீர் நிரம்பியிருந்த அறைகளின் தோற்றத்தையும் ஒரு பாரிய சதுரமான நீச்சல் தடாகம் போன்றிருந்த வெளிப்பரப்பையும் காட்டின. அந்த வெளிப்பரப்பைச் சூழ இருந்த நான்கு அறைகளில் மூன்று அறைகள் வெற்றாக இருந்தன.

நான்காவது அறையில் இருவர் ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்த வண்ணம் மிதந்து கொண்டிருந்தனர். அவர்கள் உயிருடன் இருக்கச் சாத்தியமில்லை.

நீச்சல் தடாகம் போல் இருந்த வெளிப் பரப்பில் நிகழ்ந்த காட்சிகள் அவர்களுக்கு பெரும் ஆச்சரியத்தைத் தந்தன. அவ்வளவு பெரிய நீளமான பாம்பு போன்ற மீன்களை C- 5 குழுவினர் தம் வாழ்நாளிலேயே பார்த்திருக்கவில்லை. இராட்சத விலாங்கு மீன்கள். அவை தம் நீண்ட கோரப் பற்கள் நிறைந்த வாயைத் திறந்து ஒரு மனிதனைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தன. பிடிக்கப்பட்ட ஒரு மானை நூற்றுக்கணக்கான ஓநாய்கள் சண்டையிட்டுப் பங்கு போடுவது போல் இருந்தது அக்காட்சி. என்ன கொடூரம் இது. எதற்கும் கலங்காத C- 1 கூட தனது முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான்.

C- 5 குழுவினரின் செய்தி கிடைத்த மாத்திரத்தில் நுவரவில்லா பங்களாவில் பதற்றம் தோன்றியது. நளாயினியும் ஜெய்சிங்கும் புறப்படத் தயாராகினர். ஜெய்சிங் ஓடிச் சென்று லேண்ட்ரோவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிபென்டர் வாகனத்தை தயார் செய்தான்.

நளாயினி கிருஷ்ணசாமியிடம் பங்களாவைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு ஓடிச்சென்று டிபென்டரில் ஏறிக் கொண்டாள். டிபென்டர் வாகனம் இருட்டைக் கிழித்துக் கொண்டு வீறிட்டுப் புறப்பட்டுச் சென்றது.

ராம்ஜீக்கு என்னவாயிற்று என்றறிவதில் நளாயினியும் ஜெய்சிங்கும் மிகுந்த பதற்றம் கொண்டிருந்தனர். அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாதுதென்பதற்காக எல்லா தெய்வங்களிடமும் வேண்டிக் கொண்டனர். அவர்கள் எவ்வளவு விரைவாக மொனரவில மாளிகைக்குச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக சென்றனர்.

ஜெய்சிங் ஏற்கனவே அந்தப் பாதைக்குப் பழக்கப்பட்டவனாதலால் அவனுக்கு அந்தமலைப் பாங்கான பாதையில் வாகனம் ஓட்டுவது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை. அவர்களின் எண்ணங்கள் பலமாக பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்ததால் இருவரும் பேசிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் மௌனமாகவே சிந்தித்துக் கொண்டிருந்தனர். இந்தக் கொஞ்ச நாட்களில் எவ்வளவு வேகமாக சம்பவங்கள் ஓடிச் சென்று விட்டன.

நளாயினி ராம்ஜீயுடன் நீண்ட நாள் பழகியிருந்தாலும் இந்த அண்மைக் காலத்து நெருக்கம் அவளை முற்றிலும் புதுப் பெண்ணாக மாற்றியிருந்தது. அவள் முன்னெப்போதையும் விட தன்னை அலங்கரிப்பதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருந்தாள். அன்றொரு நாள் ராம்ஜீ தானாகவே தேர்ந்தெடுத்து வாங்கித் தந்த சேலையையும் ரவிக்கையும் அவளை எப்போதும் வண்ணக் கனவுகளை நோக்கி அழைத்துச் சென்றன. அவள் ராம்ஜீயின் மனதில் இடம்பிடிக்க இந்த கோணப்பு விவகாரத்தில் தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டாள். ஆனால் இப்போது ராம்ஜீ மிக ஆபத்தில் இருக்கிறான் என்பது அவள் இதயத்தில் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டது போல் இருந்தது.

அவர்கள் அந்த ஏற்றமான மலைப் பாதையின் கணிசமான தூரத்தைக் கடந்து மாளிகையை அண்மித்திருந்தார்கள். பாதை வளைந்து வளைந்து தலைக்கு மேல் சென்றது. அப்போது அவர்களுக்கு மேலிருந்த வளைவு பக்கமிருந்து வாகனங்கள் விரைந்து வரும் சத்தமும் லைட்களின் வெளிச்சமும் தெரிந்தன. அந்தக் குறுகிய பாதையில் எதிரில் வரும் வாகனங்களுக்கு சடுதியாக வழிவிடுவது கடினம். அதனை உணர்ந்த ஜெய்சிங் எதிரில் இருந்த வளைவில் அகலமான வெளியில் தன் டிபெண்டரை நிறுத்தி அந்த வாகனங்கள் செல்லும் வரை காத்திருந்தான்.

சில நொடிகளில் மிக வேகமாக ஒரு பி. எம். டபிள்யூ. கார் அவர்களை இடித்து விடுவது போன்று பாதையைப் பிய்த்துக் கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் அதே வேகத்தில் உறுமிக் கொண்டு சென்றன. மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் இராணுவ கொமாண்டோ பாணி சீருடையில் இருந்தனர். அவர்கள் மோட்டார் சைக்கிளை ஒருகையில் ஓட்டிச்சென்றதுடன் ஒரு கையில் T 56 துப்பாக்கி வைத்திருந்தனர். அவர்கள் C-5 குழுவினராக இருக்க வேண்டும் என நளாயினி அனுமானித்தாள். அப்படியானால் காரில் சென்றவன் நிச்சயம் ராம்ஜீ இல்லை. ஜெய்சிங் தனது டிபெண்டரை முன்னரை விட அதிக வேகத்தில் மாளிகையை நோக்கிச் செலுத்தினான்.

C - 4, C - 5 ஆகிய இருவரும் இனி மேலும் அந்தக் காரில் செல்பவனை தப்ப அனுமதிப்பதில்லை எனத் தீர்மானித்தனர். காரின் பின் டயர்களை சுடுவதென்றும் தீர்மானித்தனர். அதற்கான சரியான தருணத்தைப் பார்த்தனர்.

அவர்கள் சுடுவதற்கு மிகச் சரியான தருணம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்தபோது கோணப்புவின் கார் சரியாக கண்டி வாவிக்கு மேலிருந்த செங்குத்தான மலை உச்சியில் அமைந்த திருப்பத்துக்கு அண்மையில் வந்திருந்தது.

முதலில் C-4 இரண்டு டயர்களிலும் படும்படி சுட்டான் T-56 ரக துப்பாக்கி ஒரு நொடியில் பல தோட்டாக்களை சரமாரியாக பொழியவல்லது. அண்மைக்காலத்தில் T-56 ரக துப்பாக்கியால் ஆயுத பாணிகள் திடீரென மோட்டார் சைக்கிள், ஆட்டோ மற்றும் வாகனங்களில் சரமாரியாக குண்டு மழை பொழிந்து அரசியல் தலைவர்களை கொலை செய்யும் போக்கு அதிகரித்திருந்தது. பாதாள உலக கோஷ்டியினரிடையே T-56 துப்பாக்கிகள் தாராளமாக புளங்கின.

C-4 வின் பல தோட்டாக்கள் கோணப்புவின் காரின் இரண்டு டயர்களையும் துழைத்தன. சில தோட்டாக்கள் காரின் பின் கண்ணாடியில் பட்டுத் தெரித்தன. அக்காரில் தோட்டாக்கள் துளைக்காத கண்ணாடிகள் பெருத்தப்பட்டிருந்தன என்பதனை அவை காட்டிக் கொடுத்தன.

டயர்கள் இரண்டிலும் காற்று இல்லாமல் போக கார் கட்டுப்பாட்டை இழந்தது. கோணப்புவால் அடுத்த வளைவில் ஒடித்துக் காரை திருப்ப முடியவில்லை. கார் நேராக பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது. இரண்டு மூன்று தடவை கற்பாறைகளில் மோதி உருண்டு புரண்டு செங்குத்தாக வாவிக்குள் வீழ்ந்தது.

ராம்ஜீ மிகச் சிரமப்பட்டு சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்திருந்தான். இன்னும் எவ்வளவு தூரம் கடந்து செல்லவேண்டியிருக்கும் என்பது தொடர்பில் அவனுக்குப் புரியாமல் இருந்தது. படிக்கட்டுகளில் ஏறி பின் இறங்கி வலது புறமாகத் திரும்பி பின் இடது புறமாகத் திரும்பி இப்படி அழைக்கழிந்ததில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நன்றாக களைத்துப் போயிருந்தான். தான் உயிருடன் மீள முடியுமா? என்பதில் நம்பிக்கை குறைந்திருந்தது.

இந்த விடயத்தில் நளாயினியும் ஜெய்சிங்கும் ஒன்றும் செய்ய முடியாதென்பது ராம்ஜீக்கு நன்றாகவே விளங்கியது. ஆனால் நளாயினி டி.எஸ்.பி. சிங்கராயருக்கு விசயத்தைத் தெரிவித்திருந்தால் அவர் ஏதும் ஏற்பாடு செய்திருக்கக்கூடும். குறைந்தப் பட்சம் அந்த மொனரவில மாளிகையையாவது சுற்றிவளைத்திருக்க வேண்டும்.

அவன் சிந்தித்தவாறே சுரங்கப் பாதைக்குள் முன்னேறிச் சென்றபோது சுரங்கம் ஒரு குறுகலான வளைவை அடைந்தது. அவனது டோர்ச் லைட்டின் வட்டமான ஒளியில் இரண்டு சிவப்பு பவள வில்லைகள் பளிச்செசென ஒளிவிட்டு மிளிர்ந்தன. ராம்ஜீ சற்றே அசையவும் அவையும் இடது புறமாகவும் வலது புறமாகவும் அசைந்தன. அவை ஒரு மிருகத்தின் கண்சிமிட்டல்கள் போல் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூன்று மரணங்களின் கோரங்கள்

சற்று எட்ட கும்மிருட்டில் டோர்ச் வெளிச்சத்தில் பளிச் சிடும் அந்த இரண்டு கண்களும் என்ன வகையான மிருகத் துக்குச் சொந்தமானவை என அவனால் அனுமானிக்க முடிய வில்லை. ஆனால் அந்த கண்களின் பார்வையில் கொடூரம் காணப்பட்டமையினை அவனால் உணர முடிந்தது. அவற்றில் கொலைவெறி அப்பட்டமாக வெளிப்பட்டது. அந்த மிருகம் எந்தக் கணத்திலும் தன் மீது பாய்ந்து தாக்கக்கூடும் என்று அவன் உணர்வுகள் அவனை எச்சரிக்கை செய்தன.

ராம்ஜீயின் உடல் வியர்வையால் நனைந்திருந்தது. அது ஏதோ ஒரு வகை மிருகம் என்று நினைத்தான். அவன் டோர்ச்சை இடது கைக்கு மாற்றி வலது கையில் துப்பாக்கியை நீட்டிப்பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். டோர்ச் வெளிச்சத்தை நாலா புறமும் செலுத்தி அந்த மிருகத்தின் தோற்றத்தை ஆராய்ந்தான்.

அந்த ஜந்துவின் சுற்று வட்டாரத்தில் சிறிது அசைவு தெரிந்தது. அதன் உடல் கன்னங்கரேல் என்று இருந்ததால் இன்னமும் அதன் உருவத்தை சரியாக அனுமானிக்க முடியாமல் இருந்தது. டோர்ச் வெளிச்சத்தைத் தவிர வேறு எந்த வெளிச்சமும் அங்கில்லை. பயமும் புழுக்கமும் குறைந்த காற்றும் அவன் உள்ளுணர்வு தப்புவதற்கு வேறு மார்க்கமில்லை, உன்னை திடப்படுத்திக்கொள் என்று எச்சரித்தது. அவன் மனதில் சற்றே தெம்பு வந்தது.

அவன் மனதில் தன் சிறு வயது அனுபவங்கள் நினைவுக்கு வந்தன. சிறு வயதில் அவன் மிகுந்த சுட்டிப் பையனாக இருந்தான். அவர்களுக்கு நுவரெலியாவுக்கு அருகாமையில் கந்தப்பளையில் ஒரு தேயிலைத்தோட்டம் சொந்தமாக இருந்தது. அவன் பிறந்து வளர்ந்ததெல்லாம் அங்குதான். அவன் தாயும் தந்தையும் என்ன தடுத்தும் அவன் தோட்டத்துப் பிள்ளைகளுடன்தான் சென்று விளையாடுவான். தோட்டத்துப் பிள்ளைகளுக்கு கிளித்தட்டு, கிட்டிப்புல், பிள்ளையார் பந்து, ஓடிப்பிடித்து விளையாடுதல் முதலான விளையாட்டுக்களே தெரியும். ஆற்றில் தெப்பம் விடுதல் அவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டாக இருந்தது.

ஒரு சமயம் அவ்விதம் அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது அருகே இருந்த கொழுந்து மலையில் இருந்து ஒரு பெரிய அலறல் கேட்டது. ஐயோ.. பாம்பு.. பாம்பு... காப்பாற்றுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றுங்கள்.. என்ற அலறல்.

கொழுந்து மலையில் தேயிலைக் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண் அலற மலையே ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. சிலர் அங்கிருந்து ஓடத் தலைப்பட்டனர். இந்தச் சத்தம் கேட்டு ராம்ஜீயும் நண்பர்களும் கொழுந்து மலையை நோக்கி ஓடினர்.

அங்கே பொட்டலாக இருந்த ஒரு இடத்தில் வட்டமாக சிலர் கூடியிருந்தனர். ராம்ஜீயும் நண்பர்களும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நுழைந்து எட்டிப் பார்த்தனர். அங்கே ஒரு பெரிய நீண்ட பாம்பு ஒரு தவளையை வாயில் வைத்து விழுங்கிக் கொண்டிருந்தது. பலரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை.

ராம்ஜீயும் ஒருசில நிமிடங்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு என்ன நினைத்தானோ தெரியாது. திடீரென முன்னால் சென்று பாம்பின் வாலைப்பிடித்து தலைக்கு மேல் தூக்கி நிலத்தில் பல முறை அடித்தான். பாம்பு அவ் விடத்திலேயே செத்துப் போய் விட்டது.

அதன் பின் பலரும் பல கதைகள் கட்டி விட்டனர். அது கரு நாகம் என்றும் கட்டாயம் அதன் ஜோடி வந்து பழிவாங்கும் என்றும் கூறினர். முன்பு அப்படி பாம்பைக் கொன்றவன் ஏழு நாட்களில் பாம்பு தீண்டி இறந்து விட்டான் என்றும் கூறினர்.

ராம்ஜீயின் அம்மாவும் அவன் தந்தையும் இந்த செயலை அறிந்து பதறிப்போய் விட்டனர். அதன் பின் அவர்கள் ராம்ஜீயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துக்குப் போக அனுமதிக்கவில்லை. கொழும்பில் பெரிய பாடசாலையில் தங்கும் விடுதியில் சேர்த்து விட்டனர். ராம்ஜீயின் வாழ்வில் இத்தகைய பல மறக்க முடியாத சம்பவங்கள் பொதிந்து கிடந்தன.

ராம்ஜீ இயல்பாகவே ஒரு வறட்டு தைரியசாலியாக இருந்தான். பயத்தை உதறித்தள்ளினான். அவன் அந்த ஜந்து என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்தான். அது ஒரு மிகப்பெரிய மலைப்பாம்பு. சுருண்டு வளைந்து பின்னிப்பிணைந்து ஒரு குவியலாக இருந்தது. தன் உடம்புக்கு மேல் தலையைத் தூக்கி தன் இலக்கை குறிபார்த்தது.

**நளா**யினியும் ஜெய்சிங்கும் மொனரவிலா மாளிகையை அடைந்து C - 5 குழுவினரைத் தேடிக் கண்டுப்பிடிக்க சிரமமிருக்கவில்லை. அக்குழுவின் தலைவன் C-1, C-3 என்பவனை அழைத்து வந்து வாயிலில் நிறுத்தியிருந்தான். நளாயினியும் ஜெய்சிங்கும் மொனரவில மாளிகையில் கோணப்புவின் மின்சார கட்டுப்பாட்டு அறையில் நுழைந்த போது C - 1, C-2 ஆகியோர் அவ்வறையில் இருந்த தொடர்பு சாதன உபகரணங்களை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

C - 1, நிலக்கீழ் அறைகளை இரகசியமாக படம் பிடித்துக்காட்டும் கணனித்திரைகளை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவன் நளாயினையையும் ஜெய்சிங்கையும் C - 3 அழைத்து வருவதை அறிந்து அவர்களை வரவேற்றான். பின் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்துக்கொண்டிருக்கும் கணினித்திரையை நோக்கி அழைத்தான். அவர்களும் அங்கு விரைந்து கணினித்திரையை அவதானித்தனர். அத்தகைய அதிர்ச்சி தரும் கொடூர காட்சியை நளாயினியும் ஜெய்சிங்கும் தம் வாழ்நாளில் பார்த்ததில்லை. அத்தகைய செயல்களை செய்பவர்கள் எத்தகைய கொடூர மனம் படைத்தவர்களாக இருப்பார்கள் என்று நளாயினி நினைத்தாள்.

அந்த அறைகள் கைதிகளை சிறை வைப்பதற்கும் பின் அறைகளை நீரில் ஆழ்த்தி அங்கிருப்பவர்களை கொலை செய்வதற்குமே ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பதை நளாயினி புரிந்து கொண்டாள். இவ்விதம் கொடுமை இழைப்பவர்கள் தாங்களும் அத்தகைய கொடூரத்திற்கே இரையாகிறார்கள் என்பதை மரணத்தின் மிக இறுதிக்கட்டத்திலேயே அவர்கள் உணர்கிறார்கள்.

நளாயினியும் ஜெய்சிங்கும் கணினித்திரைகளை உன்னிப்பாக நோக்கினர். ஒரு அறையில் ஒரு ஆணினதும் பெண்ணினதும் உடல்கள் கட்டிப்பிடித்தவாறு மிதந்துகொண்டிருந்தன. பாரிய மீன் தொட்டியில் மீன்கள் மிதப்பது போல் அக்காட்சி இருந்தது. அந்தப் பெண்ணின் உடல் ஒளிப்பதிவு கமராவின் கண்களுக்கு நேராக வந்த பொழுது நளாயினி கமராவின் லென்சில் சூம் பண்ணி அந்தப் பெண்ணின் முகத்தை பெரிதாக்கினாள்.

அந்த முகத்தை அவர்களுக்கு நன்கு அடையாளம் தெரிந்தது. அது அன்று நுவரவிலா பங்களாவுக்கு வந்து ராம்ஜீயை மீட்டுத்தருவதாக பேரம் பேசிய சித்ராம்பரிதான். அவளுக்கு இக்கதி நேர்ந்திருந்தால் ராம்ஜீக்கு என்னவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நினைப்பால் நளாயினியின் அடிவயிற்றில் இருந்து பந்து போன்ற ஒரு பொருள் மெதுவாக மேலே வந்து அவள் தொண்டையை அடைப்பது போல் இருந்தது.

அவர்கள் அந்த ஆணின் முகத்தை பரிசோதித்தார்கள். அது ராம்ஜீ இல்லை என்று நிச்சயித்துக் கொண்டார்கள்.

அடுத்த கணினித்திரை தான் மிகக்கொடூரமான காட்சியை ஒளிபரப்பிக்கொண்டிருந்தது. நீண்ட பெரும் பாம்புகள் போன்ற அந்த இராட்ச ஜந்துக்கள் ஒரு மனிதனை கடித்து குதறி பிய்த்து தின்று கொண்டிருந்தன. அந்த மனிதனின் இறந்து போன உடலில் இடுப்புக்குக் கீழ் பிய்க்கப்பட்டு வேறு பல மீன்கள் தின்று கொண்டிருந்தன.

நளாயினி அவசர அவசரமாக ஒளிப்பதிவு கமராக்களை சரி செய்து சூம் பண்ணி அந்த மனிதனின் முகத்தை ஆராய்ந்தாள்.

அந்த மனிதனின் முகம் இன்னும் அடையாளம் காணும் நிலையிலேயே இருந்தது. வினோத மனிதனின் ஆபிரிக்க கறுப்பின மனிதர்களை ஒத்த தோற்றமும் அவன் வித்தியாசமான தலைமுடியும் அது ராம்ஜீ அல்லவென உடனேயே காட்டிக்கொடுத்தன.

அங்கே காணப்பட்ட நான்கு இரகசிய அறைகளிலும் வேறு எந்த மனித பிரசன்னத்தையும் காணவில்லை. அப்படியானால் ராம்ஜீ எங்கே? வேறு சுரங்க அறைகள் இருக்கக்கூடுமா? அல்லது சுரங்கப்பாதை வழியாக தப்பியிருக்கக்கூடுமா? நளாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக சுரங்கப்பாதைகளுக்கு நீர் கொண்டு வரும் கதவுகளை மூடும் சுவிட்ச் பொத்தான்கள் எங்கிருக்கின்றன எனத் தேடினாள்.

சுவிட்ச் பலகையில் ஓரிடத்தில் சுரங்கப்பாதைகள் 1, 2, 3, 4, 5 என ஐந்து பொத்தான்கள் இருந்தன. அவற்றில் 2, 3, 4 என இலக்கமிடப்பட்டிருந்த பொத்தான்கள் On செய்யப்பட்டும் 1, 5 ஆகிய இரண்டும் Off என்ற நிலையிலும் இருந்தன. நளாயினி On நிலையில் இருந்த 3 சுவிட்ச்களையும் ஆராய்ந்தாள்.

அவற்றுக்கடியில் Water Drain என்ற சொற்கள் இருந்தன. அவையே வாவியில் இருந்து நீர் கொண்டு வரும் சுரங்கப்பாதைகளை கட்டுப்படுத்துவன என்று நிச்சயித்துக்கொண்ட நளாயினி அவற்றை Off செய்தாள். பின் நீர்மட்டத்தை அவதானித்தாள்.

சில நிமிடங்களில் நீர் மட்டம் குறையவாரம்பித்தது. நளாயினி ஏனைய இரண்டு பொத்தான்களை ஆராய்ந்தாள். ராம்ஜீ தப்பிப்போயிருந்தால் அந்த இரண்டு சுரங்கப்பாதைகளில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். எனினும் மறு முனையில் கதவு திறக்கப்படாதிருந்தால் அவனால் வெளியில் வர முடியாது. வலுவான ஆயுதங்கள் இருந்தாலன்றி கதவை உடைத்துத் திறக்க முடியாது. அதே சமயம் இரண்டு சுரங்கப்பாதைகளில் எந்த சுரங்கப்பாதையில் ராம்ஜீ போயிருக்கக்கூடும் என்பதையும் அனுமானிக்க முடியவில்லை.

அவன் தலதா மாளிகையை நோக்கி செல்லும் சுரங்கப்பாதையில் அல்லது கட்டுக்கலை விநாயகர் ஆலயத்தை நோக்கிச் செல்லும்

சுரங்கப்பாதையில் சென்றிருக்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளாயினி சில நொடிகள் சிந்தித்த பின் இரண்டு சுரங்கப்பாதைகளின் வாயில் கதவுகளை திறக்கும் பொத்தான்களையும் அழுத்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணம் ஒன்று நடக்க வேண்டுமென்றால்...

**காண**ப்பட்ட ஐந்து சுரங்கப் பாதைகளில் மூன்று சுரங்கப்பாதைகளின் மூலம் ராம்ஜீ சென்றிருக்க முடியாது என்பதை தெளிவாக அனுமானிக்க முடிந்தது. மற்ற இரண்டு சுரங்கப்பாதைகளில் ஒன்றிலேயே அவன் சென்றிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளாயினி ஒரு முடிவுக்கு வந்தாள்.

இப்போது நிலக்கீழ் அறைகளில் மேலும் நீர் மட்டம் குறைந்திருந்தது. நளாயினி விரைவில் செயற்பட்டாள். C - 5 குழுவினருடன் ராம்ஜீயின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்தாள். ராம்ஜீ சுரங்கப்பாதைகளில் இரண்டில் ஒன்றைப் பாவித்து தப்பிச் சென்றிருக்க வேண்டுமென்றும் நீர் மட்டம் குறைந்ததும் நாமும் சுரங்க வழிக்குள் செல்லலாம் என்றும் அவர்களுக்கு விளக்கினாள்.

சுரங்க வழிக்குள் இலகுவாகச் செல்லக்கூடிய வகையில் உதவுவதற்கான டோர்ச், ஒக்ஸிஜன், சிலிண்டர், கயிறுகள் நெம்புகோல் போன்றவற்றை அங்கிருந்தால் தேடிப் பார்த்து எடுத்துக்கொள்ளும்படியும் பணித்தாள்.அவர்களின் நடவடிக்கைக்கு ஜெயசிங் உதவி செய்தான்.

C - 4 சுட்டதில் கோணப்புவின் கார் கட்டுப்பாட்டை இழந்து மலையுச்சியில் இருந்து உருண்டு புரண்டு நேரே வாவிக்குள் விழுந்தது.விழுந்த இடம் அவ்வளவு ஆழமானதாக இல்லை. எனவே உள்ளிருப்பவன் தப்பிக்கக்கூடிய சாத்தியம் இருந்தது. எனினும் மோட்டார் சைக்கிளில் அவ்விடத்தை அடைய மலையைச் சுற்றிக் கொண்டே செல்ல வேண்டும். அதற்கு சுமார் பத்து பதினைந்து நிமிடங்கள் பிடிக்கும். C - 4 , C - 5 ஆகிய இருவரும் விரைந்தனர். ஆனால் அவர்கள் போட்ட கணக்கு தவறு. நீருக்குள் விழுந்த கோணப்பு பண்டார விரைந்து செயற்பட்டான்.அவன் காரின் கதவுகளை திறந்து வெளியேற முற்பட்டான்.கார் உருண்டு பிரண்டு அடிபட்டதில் கை கால்கள் பிசகிவிட்டன. நெஞ்சிலும் அடிப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரின் கதவுகள் நசுங்கி இறுகிப்போய் விட்டன. கார் கதவுகளை எத்தனை தள்ளித் திறந்தும் அவை திறபடுவதாய் இல்லை. கோணப்புவுக்கு முதல் தடவையாய் மரண பயம் ஏற்பட்டது. உடலெங்கும் வியர்த்தது. காருக்குள் ஒட்சிசன் குறைந்து மூச்சு முட்டுவது போல் இருந்தது. காருக்கடியில் நீர் உட்புகுந்து காலை நனைத்தது. நீர் மட்டம் மெல்ல உயரத்தொடங்கியது. ஆங்காங்கே காரில் ஏற்பட்டிருந்த துவாரங்கள் வாயிலாக அமுக்கத்தினால் காருக்குள் நீர் பீச்சியடித்தது.

அதன் பிரகாரம் கோணப்புவின் மரணம் மூன்று விதங்களில் ஏற்பட கூடும்.காருக்குள் ஒட்சிசன் குறைவதால் சுவாசிக்க முடியாமல் ஏற்படும் மரணம். மற்றையது அப்படியே தப்பியிருந்தாலும் சுவாசப் பைகளுள் நீர் நிறைவதால் மூச்சி திணறி ஏற்படும் மரணம். மூன்றாவது இவை இரண்டிலும் தப்பியிருந்தாலும் C -4 , C 5 ஆகிய இருவரினதும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணிப்பது.

அவன் கால்களுக்கடியில் நீர் வரத் தொடங்கியதும் கால்களைத் தூக்கி கதவை பலமாக உதைத்தான். பலமுறை உதைத்தும் பலனில்லை.காலில் காயம் பட்டு இரத்தம் வந்ததுதான் மிச்சம். அவன் தன் தலையால் கதவின் கண்ணாடியை பலமாக முட்டினான். குண்டு துளைக்காத அக்கண்ணாடிகள் அசையக்கூட மறுத்தன. அவனது தவிப்பு இரு தலைக் கொள்ளி எறும்பின் நிலையாக இருந்தது.அவன் ஒரு பொறியில் அகப்பட்ட காட்டு மிருகத்தைப் போல் கலவரமடைந்தான்.

கார் கண்ணாடிகளுக்கூடாக வாவியின் நீர் தெரிந்தது. மேலிருந்து கொஞ்சமாக வெளிச்சம் ஊடுருவியிருந்தது.மற்றப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் இருட்டு. தன் கால்களுக்கடியில் மேலும் நீர் மட்டம் அதிகரித்திருந்தது.சீட்டுக் கடியில் ஏதும் ஆயுதங்கள் கிடைக்குமா என்று தடவிப்பார்த்தான் கோணப்பு. சீட்டில் வைத்திருந்த துப்பாக்கியைக் காணவில்லை. அவனுக்கு சாவதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. கார் கண்ணாடியை கீழே இறக்கும் பொறிமுறையும் வேலை செய்யவில்லை. காலால் உதைப்பதையும் தலையால் முட்டுவதையும் தவிர அவனால் வேறொன்றையும் செய்ய முடியவில்லை.அவன் இறுதி முயற்சியாக சீட்டுக்கூடாக நழுவி காரின் பின் பகுதிக்குச் சென்றான். பின் கதவுகளையாவது திறக்கலாமா என்று பார்த்தான்.அவையும் முன் கதவுகளைப் போலவே இறுகிப் போயிருந்தன. ஒருவரது மரணம் நிச்சயமாகிவிட்டது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால் எத்தனை தடவை முயற்சித்தாலும் பலனிருக்காது என்று அவன் பலரையும் கொலை செய்த போது நினைத்திருக்கின்றான்.

இப்போது அவன் விடயத்திலும் அது உண்மையாகிப் போய்விடுமோ என்று அச்சமாக இருந்தது. அவனுக்கு பயத்திலேயே மூச்சி நின்றுவிடும் போல இருந்தது. அவன் கழுத்தளவுக்கு நீர் உள்ளே வந்து விட்டது.இன்னும் சில நிமிடங்களே அவன் இவ்வுலகத்தில் வாழ முடியும். அவன் இதுவரை கடவுளை வணங்கியது கிடையாது. இப்போது எல்லாக் கடவுளையும் தன்னைக் காப்பாற்றும் படி அழைத்தான்.

இவ்வுலகில் அவன் வாழ்வு முடிவுக்கு வந்தது. அவன் மூக்கிலும் வாயிலும் நீர் நிறைந்தது. நுழையும் நீரைக்குடிப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த கொஞ்ச நஞ்ச காற்றும் சுவாசக் குழாயிலிருந்து குமிழ்களாக வெளியேறின. மண்டையில் ஆயிரம் சம்மட்டிகளால் ஓங்கி அடித்தது போல இருந்தது. அவன் நரம்பு நாளங்கள் அனைத்தும் வீங்கிப்புடைத்து வெடித்து விடும்போல இருந்தது. அவன் திமிறல்கள் மெல்ல அடங்கின. அவன் உயிரற்ற உடல் காருக்குள்ளேயே மிதந்தது. எஹலப்பொல மகா திஸாவையின் வாரிசென்று கூறிக்கொண்ட மனநோய் பிடித்த ஒரு கொடூர கொலைக்காரன் மறைந்தொழிந்து போனான்.

**நளா**யினி விரைந்து செயற்பட்டாள்.அவள் உடனே டி.எஸ்.பி சிங்கராயரை தொலைபேசியில் அழைத்து விசயம் மிக அபாயகரமான கட்டத்தை அடைந்து விட்டதை விளக்கினாள்.உடனடியாக கண்டி பொலிஸுக்கு அறிவித்து மொனரவில மாளிகையை சோதனை செய்ய கட்டளையிடும்படி கேட்டுக்கொண்டாள்.

நளாயினியும் ஜெய்சிங்கும் C -5 குழுவினரும் இணைந்து சுரங்கப் பாதைக்குள் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். மொனரவில மாளிகையில் சுமார் ஆறு மாத காலத்துக்கு வெளி யுலகத்துக்குள் செல்லாமல் உள்ளேயே நூறு பேர்கள் வரை ஆடம்பரமாக வாழ்வதற்கான மிக சொகுசான மாளிகையாக அது இருந்தது.

அதேபோல் நெருக்கடி நிலைமைகள், விபத்து, தாக்குதல் முதலியவற்றை சமாளிக்க முதலுதவி, தீயணைப்புக் கருவிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள். முதலானவையும் குவிக்கப்பட்டிருந்தன. நளாயினியும் ஜெயசிங்கும் C -5 குழுவினருடன் இணைந்து முதலுதவி பொருட்கள், டோர்ச்லைட், ஒக்ஸிஜன் மற்றும் மீட்புப் பணிக்கு தேவையான சகலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களையும் எடுத்துக்கொண்டு சுரங்கப்பாதைக்குள் செல்லப் புறப்பட்டனர்.

முன்பு சித்ராம்பரி அந்த மாளிகையில் இரகசிய நிலக்கீழ் அறைகள், சுரங்கப்பாதைகள் தொடர்பாக தெரிவித்த தகவல்களை நளாயினி ஞாபகப்படுத்திக் கொண்டாள். அதன்படி அவளே முதலில் சுரங்க அறையை அடைந்தாள். எனவே சுரங்க அறை வாயிலையும் நிலக்கீழ் அறைகளையும் அவற்றுக்குச் செல்லும் நுழைவாயில்கள், லிப்ட் முதலானவற்றினை இயக்கும் மின்சார பொத்தான்களை போட்டாள்.

அவர்கள் நிலக்கீழ் அறைகளை நோக்கி செல்ல முற்பட்டபோது அந்த ராட்சத விலங்குகளை என்ன செய்வதென்று யோசித்தார்கள். அத்தகைய மீன்கள் எத்தனை இருக்கின்றன என்பதை அறியமுடியாமல் இருந்தது. அவர்கள் மீண்டும் கணினித் திரைகளை பரீட்சித்தனர். இப்போது நீர் முற்றிலும் வடிந்து விட்டிருந்தது.

சித்ராம்பரியினதும் ரஞ்சித்தினதும் உடல்கள் நிலத்தில் கிடந்தன. வராந்தா போன்றிருந்த இடத்தில் விநோத மனிதனின் சில எலும்புகள் மட்டுமே எஞ்சிக் கிடந்தன.ராட்சத மீன்களை எங்கும் காணமுடியவில்லை.மீன்கள் எங்கு போய்விட்டன.அப்போதுதான் அவர்களுக்கு ஒரு விடயம் விளங்கியது.விலாங்கு மீன்கள் பாம்புகள் போல் காணப்பட்டாலும் அவை மீன்கள் என்பதால் நீரின்றி அவற்றால் வாழ முடியாது.அவை நீர் வடிந்து சென்ற போது நீருடன் சேர்ந்து பின்வாங்கி சுரங்கங்களுக்குள்ளேயே போய் விட்டன.நீர் வந்தால் மட்டுமே அவை மீண்டும் வர சாத்தியமுள்ளன.எனினும் அவர்கள் அனைவரும் எச்சரிக்கையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் துப்பாக்கிகளை தயாராக வைத்துக்கொண்டனர்.

நளாயினி வழிகாட்ட C-5 குழுவினரே முன் சென்றனர். கண்டி பொலிசார் அம்மாளிகைக்கு வந்தால் அவர்களுக்கு விளங்கப்படுத்த C- 5 குழுவினரில் ஒருவரை அங்கே காவலுக்கு நிறுத்தி வைத்தனர்.அவர்கள் மின்சார லிப்டில் கிழே சென்ற போது கொஞ்சம் பதற்றமாகவே இருந்தது. அவர்கள் சுரங்க அறையையும் உள்ளே சுரங்கப்பாதை இருக்கும் பிரதேசத்தையும் ஆராந்தனர்.

அவர்கள் ஐந்து சுரங்கப் பாதை உள்ள வாயில்களை அடைந்தது போது அவற்றைக் கவனமாகப் பரீட்சித்து அவற்றில் எந்தப் பாதையில் ராம்ஜீ சென்றிருக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது.முதலில் நீர் வரத்தக்கதான மூன்று சுரங்கப்பாதைகளை அறிந்து அவற்றை புறக்கணித்தனர்.மீதமிருந்த இரண்டு சுரங்கப்பாதையில் எதில் ராம்ஜீ சென்றிருக்கக்கூடும் என்பதை அவர்கள் பரிசீலித்தபோது ராம்ஜீ கட்டுக்களை விநாயகர் ஆலயத்தை நோக்கி செல்லும் சுரங்கப்பாதையிலேயே சென்றுள்ளார் என்பதை தீர்மானிப்பது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை.

ஏனெனில் நூற்றாண்டு காலமாக அந்த சுரங்கப்பாதையில் மனித காலடி பட்டிருக்கவில்லை.இப்போது முதன் முதலாக ராம்ஜீயின் காலடிகள் சுரங்கத்தின் தரையில் படிந்திருந்த புழுதியில் மிக ஆழமாகப் பதிந்திருந்தன. அவை ராம்ஜீயின் காலடிகள் என்பதில் நளாயினிக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. காரணம் ராம்ஜீ யின் பூட்ஸ் காலடிகள் நளாயினிக்கு நன்கு பரீட்சயமானவைகள். அத்துடன் அதனை ஜெய்சிங்கும் உறுதி செய்தான்.

அச்சமயத்தில் நளாயினி ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ எவ்வளவு தூரம் போயிருக்கக்கூடும் என்பதே அது. அவள் தனது கடிகாரத்தை நோக்கினாள்.அப்போது நேரம் இரவு 9.15. C- 5 குழுவினர் அங்கு வந்த நேரம், அங்கிருந்து ஒருவன் பி.எம். டபிள்யூ காரில் தப்பிச் சென்ற நேரம், எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்த போது இரவு 8.00 மணிக்கும் 8.30 மணிக்கும் இடையில் தான் ராம்ஜீ தப்பித்திருக்க வேண்டும். எனவே அவன் சுமார் 2 கி.மீ தூரம் போயிருக்கலாம் என்று கணிப்பிட்டார்கள்.

நளாயினி ஒரு முடிவுக்கு வந்தாள்.ராம்ஜீ சுரங்கப்பாதையில் இன்னும் ஒரு கி.மீ அல்லது அதற்கு சற்று அதிகமான துரத்தையே கடக்க வேண்டியிருக்கும்.ஆதலால் அவர்கள் கட்டுக்கலை விநாயகர் கோயிலுக்குச் சென்று மறுமுனையில் இருந்து ராம்ஜீயைத் தேடுவது எனத் தீர்மானித்தனர்.

அவர்கள் பரபரப்பாக செயற்பட்டனர். C- 3 என்பவனை அம்மாளிகையில் நிறுத்திவிட்டு C-1, C-2 ஆகியோர் மோட்டார் சைக்கிள்களிலும் நளாயினியும் ஜெய்சிங்கும் டிபென்டரிலும் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொள்ளிவாய்ப் பிசாசு

ராம்ஜீ தன்னைக் குறிவைத்து பாய்ந்து விழுங்கத் தயாராகும் அந்த பாரிய ஜந்துவை உற்றுப்பார்த்தான். அவன் கையில் துப்பாக்கியை உறுதியாக பற்றியிருந்தான். அவனது சிந்தனை அந்த பாம்பை எவ்விடத்தில் சுடுவது என்பதைப் பற்றியதாக இருந்தது.

அந்தக் கைத்துப்பாக்கியில் ஆறு தோட்டாக்களே இருந்தன. இன்னும் அந்த சுரங்கப்பாதைக்குள் எத்தனை ஆபத்துக்களை சந்திக்க வேண்டியிருக்கும் என்று தெரியாது. ஆதலால் தோட் டாக்களை விரயஞ் செய்தல் கூடாது என்று சிந்தித்தான் ராம்ஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஜந்துவை நடுத்தலையில் சுடுவதென்று தீர்மானித்து குறிப்பார்த்தான். அந்தப் பாம்பு தலையைத் தூக்கிப் பாய எத்தனித்த அதே சமயத்தில் ராம்ஜீயின் துப்பாக்கியில் இருந்து பாய்ந்த குண்டு பாம்பின் தலையில் கீழ்பகுதியில் பட்டு தலைக்குள் ஊடுறுவி தலையின் மேற்புறத்தில் வெளியேறி சுரங்கத்தின் கூரையில் சென்று மோதிப் பதிந்தது.

ராம்ஜீ இரண்டாம் முறையும் சுட்டான். அத்தனை பெரிய பாம்பை ஓரே தோட்டாவில் சாகடிக்க முடியாது என்று நினைத்தான். இரண்டாம் தோட்டாவும் முதல் தோட்டாவைப் போலவே தலையின் கீழ் பகுதியில் பட்டு பின் உள் நுழைந்து பிடறியில் வெளியேறியது.

பாம்பின் தலையில் முன்புறமும் பின்புறமுமிருந்தும் இரத்தம் பீறியடித்தது. பாம்பின் இராட்சத உருவம் சுருளான உருக்குக் கம்பியை சுழற்றியடித்தது போல் துள்ளி அதிர்ந்தது. இப்படி சில முறை அதிர்ந்த பின் அதன் துடிப்பு ஓய்ந்து அடங்கியது.

அந்த பாம்பு செத்த பின்பும் அதனை தாண்டிச் செல்வது கடினமான காரியமாகவே இருந்தது. ராம்ஜீ புராணத்தில் வரும் கார்க் கோடகன் என்ற பாம்பைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். அந்தப் பாம்பு கொன்ற பின்பும் உயிர் பெற்று வருமாம். ஆனால் இந்தப் பாம்பு அப்படி உயிர் பெற்றுவரவில்லை. இருந்தும் அவன் எவ்வளவு பெரிய தைரியசாலியாக இருந்தும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே அவ்விடத்தைக் கடக்க வேண்டியிருந்தது.

அவன் சிறிது தூரம் நடந்தபின் ஒரு திட்டின் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து சிறிது நேரம் உட்கார்ந்து சற்றே ஓய்வெடுத்துக் கொண்டான். அவன் கைகால்களில் மூட்டுக்கள் வலியெடுக்க ஆரம்பித்தன. அதற்கு காரணம் தான் தொடர்ச்சியான மன அழுத்தத்துக்குட்பட்டிருந்தமையாக இருக்கலாம் என்று கருதினான்.

அவன் மனதில் நளாயினியின் நினைவுகள் தோன்றின. அவன் வாழ்வில் அவ்வப்போது சில பெண்கள் குறுக்கிட்டு அவன் மனதைக் குழப்பியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். பாடசாலைக் காலத்தில் செல்வமணியும் பின் அவன் அத்தை மகள் புவனாவும் பல்கலைக்கழகத்தில் ராஜலட்சுமியும் அவன் மனதைப் பாடாய்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாருமே அவன் வாழ்வில் இணையவில்லை. அவர்கள் பல நாள் உறக்கமற்ற இரவுகளை அவனுக்கு பரிசாகத் தந்திருக்கிறார்கள்.

அதன்பின் பல பெண்களை அவன் சந்தித்திருந்த போதும் யாரும் அவன் மனதுக்குள் வந்து குடியேறவில்லை. இப்போது நளாயினியின் நினைவுகள் ஏனோ அவன் மனதில் இனிக்க ஆரம்பித்திருந்தது. கணினி டைப்பிஸ்ட்டாக வந்து பின் தனது பிரத்தியேக செயலாளராக உயர்வடையும் வரை அவள் அழகை ரசித்திருக்கிறானே தவிர அதற்குமேல் அவன் அவள் மீது ஆர்வம் செலுத்தவில்லை. அவள் அழகை விட அவளது புத்திசாலித்தனமே அவளை அவன் விரும்பியமைக்குக் காரணம்.

பல சமயங்களில் பல விடயங்களில் அவன் தீர்மானங்கள் எடுக்க முடியாமல் சங்கடப்பட்ட போது அவள் மிகத்துல்லியமாக மிக விரைவில் தீர்மானம் மேற்கொள்வாள். அதற்கு அவள் கூறும் நியாயங்கள் அவனுக்கு மிகத் திருப்தியாக இருக்கும். இப்போது தான் உயிர் பிழைப்பது நிச்சயமற்ற நிலையிலும் நாளாயினியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நினைப்பதில் அவன் மனது நிம்மதியைத் தேடியது. அவள் நினைப்பால் அவனுக்கு புதுத் தெம்பு வந்தது. அவன் எப்படியும் தப்பித்தேயாக வேண்டும்.

அவன் டோர்ச்சையும் துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டான். சுரங்கப் பாதையின் வரைபடம் இடுப்பில் செருகப்பட்டிருந்தது. தான் எவ்வளவு தூரத்தை கடந்திருக்கிறோம் என்பதையும் இன்னும் எவ்வளவு தூரத்தைக் கடக்க வேண்டியிருக்கிறது என்பதையும் ஆராயத் தீர்மானித்தான்.

வரைபடத்தை விரித்து குறித்த சுரங்கப்பாதையைக் காட்டும் கோடுகளை ஆராய்ந்தான். அவன் நடந்து வந்த பாதையில் சந்தித்த நெளிவு சுளிவு வரைவுகளை கவனமாக கவனித்தான். அதன்பின் படத்தின் தூர அளவுத் திட்டத்தையும் பரிசீலித்து தான். அதன்படி 2 1/2 கி. மீ தூரத்தைக் கடந்திருக்கலாம் என்றும் இன்னும் 1/2 கி.மீ மட்டுமே கடக்க வேண்டியிருக்குமென்றும் முடிவுக்கு வந்தான். தான் கடக்க வேண்டிய பெரும் பகுதியைக் கடந்துவிட்டதால் சற்று ஆறுதல் அடைந்தான்.

அவன் தனது முயற்சியைத் தொடர்ந்தான். சுரங்கப்பாதை இப்போது சற்று வளைந்து கீழிறங்கிச் சென்றது. ராம்ஜீயும் மெதுவாக கவனமுடன் ஒவ்வொரு படியாக கீழிறங்கிச் சென்றான். படிகள் கீழே ஒரு தளத்தை நோக்கி இட்டுச் சொன்றன.

ராம்ஜீ அந்தத் தளத்தை நோக்கிய கடைசிப் படிகளில் கால் வைத்தபோது ஏதோ ஒன்று கண்ணுக்குப் புலனாகாத தடுப்புச் சுவரில் முட்டியதுபோல் உணர்ந்து திடுக்கிட்டான். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அப்படி தடுப்புச்சுவர் ஏதும் இருக்கவில்லை. அவன் கைகளால் துளாவிப்பார்த்தான் ஆனால், அவ்விடத்தில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. சதுப்பு நிலத்தில் வரக்கூடியவாடை போல் நெடியொன்றும் மூக்குக்கு தட்டுப்பட்டது.

அடுத்தகணம் அவன் நெஞ்சில் சடுதியான வலி ஒன்றை உணர்ந்தான். ஏக காலத்தில் அவன் கை, கால் மூட்டுக்களில் உள்ளுணர்வுகள் பின்வாங்கு என எச்சரித்தன. அவன் விரைந்து இரண்டு மூன்று அடிகள் பின் வாங்கினான் எனினும் அவன் முழங்கால் அதற்கு மேல் ஒத்துழைக்கவில்லை. அடுத்த இரண்டு மூன்று படிகளை தவழ்ந்தே ஏறிச் சென்றான்.

ஆனால், இன்னும் அவனுடைய மூச்சு இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. அவன் சில நிமிடங்கள் செறுமியவாறே இருந்தான். முற்றாக அவன் மூச்சு சம நிலைக்குவர சுமார் ஐந்து நிமிடங்கள் பிடித்தன. அவ்விடத்தில் என்ன நடந்திருக்குமென அவன் யோசிக்க முயற்சித்தான்.

நிலக்கீழ் சுரங்கங்களில் நச்சு வாயுக்கள் நிறைந்திருக்குமென கேள்விப் பட்டிருக்கிறான். இவ்வித சுரங்கங்களுக்குள் சென்றவர்கள் நச்சுவாயுவை சுவாசித்ததால் இறந்தும் போயிருக்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே கீழே படிந்திருக்கக் கூடிய நச்சுவாயு கார்பன் டையொக்சைட்டாக இருக்கலாம். அல்லது மீதேன் வாயுவாக இருக்கலாம். இந்த வாயு எந்த அளவுக்கு அடர்த்தியாக படர்ந்திருக்கிறது என்று தெரியவில்லை. இந்த வாயுக்களை பரீட்சிக்க என்ன வழியென்று யோசித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ மீண்டும் அவன் தன் பாடசாலை நாட்களை நினைவுக்குக் கொண்டு வந்தான். அவன் பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருமுறை இத்தகைய வாயுக்கள் பற்றி விளக்கமளித்தது ஞாபகத்துக்கு வந்தது. இரவில் புளிய மரத்தடியில் படுக்கலாகாது என அவர் கூறினார். காரணம் புளிய மரம் இரவில் மிக அதிகமாக கார்பன் டையொக்சைட்டை ஈர்த்து பகலில் ஒட்சிசனை வெளிவிடுகின்றது. ஆதலால் புளிய மரத்தடியில் படுத்தால் யாரும் மூச்சுத்திணறி இறந்துவிடுவார்கள். அதனால் தான் புளியமரத்தடியில் பேய் இருக்கிறது என்று நம்பியிருக்கிறார்கள்.

அதேபோல் சதுப்பு நிலப்பகுதியில் மீதேன் என்ற எரிவாயு உற்பத்தியாகின்றது. இது செறிவாக ஆங்காங்கே உருவாக்கும்போது இரவில் தீப்பற்றிக்கொண்டால் ஒரு ஆள் உயரத்துக்கு தீப் பற்றி எரிவதுடன் காற்றிலும் அசைந்தாடுமாம். இதனைப் பார்த்தவர்கள் கொள்ளிவாய் பிசாசு என்று பதறியிருக்கிறார்கள். இவற்றை பரீட்சிப்பதாயின் இலகுவான ஒரு வழியிருக்கிறது. ஒரு தீக்குச்சியை குறித்த இடத்தில் பற்றவைத்துப் பிடித்தால் அது 'பூம்' என்ற சத்தத்துடன் பிரகாசமாக பற்றி எரிந்தால் அது மீத்தேன் வாயு என்றும் அல்லது தீக்குச்சி அணைந்துவிட்டால் அவ்விடத்தில் கார்பன் டையொக்சைட் இருக்கிறது என்றும் அறியலாம்.

இந்த ஞாபகம் வந்ததும் ராம்ஜீ தன் சட்டைப் பையில் இருந்து சிகரெட் பற்ற வைக்கும் லைட்டரை எடுத்தான். எனினும் மீத்தேன் வாயு மிக அடர்த்தியாக இருந்தால் அவ்விதம் பற்ற வைப்பது ஆபத்தானதாகும். ஆனால் அங்கு காற்றின் அசைவு அவனை நோக்கிக் காணப்படாமலும் எதிர் திசையிலும் இருந்ததால் அதனைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று கருதினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் லைட்டரை எடுத்துக் கொண்டு மீண்டும் ஒவ்வொரு படியாக இறங்கினான். சமதளமாகக் காணப்பட்ட இடத்துக்கு மூன்று படிகள் இருக்கும் இடத்துக்கு வந்தான். முன்பு தன் மூச்சு திணறிய இடத்துக்கருகில் இருந்து லைட்டரைப் பற்ற வைத்தான்.

என்ன ஆச்சரியம். அங்கு ஒரு பெரும் மாயாஜாலமே இடம் பெற்றது. 'பூம் பூம்' என்று பல சத்தங்கள் பதத்துப் போன பட்டாசு வெடிப்பது போல் எழுந்தன. அச்சத்தத்துடன் அச்சுரங்கத்துள் நூ ற்றுக்கணக்கான தீச்சுவாலைகள் நீலம், செம்மஞ்சள் நிறங்கள் வந்து ஆங்காங்கே அசைந்தாடத் தொடங்கின.

ஒரு விதத்தில் அச்சஞ் தருவதாகவும் மறுபுறம் அற்புத அதிசயமாகவும் அவை தோன்றின. இத்தகைய காட்சியை வேறெங்கும் பார்த்தல் கூடுமா? அது ராம்ஜீ மாத்திரமே பார்த்த அபூர்வ காட்சியாக இருந்தது. அந்த அழகிய காட்சி சுமார் ஆறு ஏழு நிமிடங்களே நீடித்தது. அங்கு தேங்கிக் கிடந்த மீத்தேன் வாயு அனைத்தும் தீர்ந்ததும் தீச் சுவாலைகளும் ஒவ்வொன்றாய் அனைந்து மீண்டும் இருள் சூழ்ந்தது.

ராம்ஜீ மறுபடியும் டோர்ச்சை பற்ற வைத்துக் கொண்டு தன் பிரயாணத்தைத் தொடரவாரம்பித்தான். மீத்தேன் வாயுவால் இனி ஆபத்தில்லை. அவை அனைத்தும் எரிந்து தீர்ந்துவிட்டன. எனினும் அந்தப் படிகளில் இறங்கி சமதளத்தைக் கடந்து மீண்டும் படிகளில் ஏறி அப்பிரதேசத்தைக் கடக்கும் வரை அவன் மனதில் அச்சம் அகலாமலே இருந்தது.

**நளா**யினி ஜெய்சிங் மற்றும் C - 5 குழுவினர் பத்து நிமிடத்திலேயே கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோவிலை அடைந்துவிட்டனர். அந்த நேரத்தில் கோயிலில் கொஞ்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் இருந்தது. C - 5 குழுவினர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு சுரங்கப்பாதையின் வாயில் எங்கே இருக்கும் என்று தேடவாரம்பித்துவிட்டனர்.

கோயிலில் இருந்த கூட்டத்தினர் ஏதோ பயங்கரவாத செயலுடன் சம்பந்தப்பட்டதாகத்தான் அங்கு தேடுதல் நடத்தப்படுகின்றது என கதை பரவிவிட்டதால் இருந்த கொஞ்ச நஞ்ச கூட்டத்தினரும் நழுவத் தொடங்கிவிட்டனர்.

சுரங்கப் பாதைவாயில் எப்படியும் வெளிப் பிரகாரத்திலேயே இருக்க வேண்டும் என ஊகித்தாள் நளாயினி. அதன்படி ஒதுக்குப்புறமாகவும் மறைவாகவும் இருந்த சுவர்களை பரிசீலிக்கும் படி பணிப்புரை வழங்கினாள். அவள் எண்ணியது பொய்க்கவில்லை. அவர்கள் சுமார் பத்துநிமிட தேடுதலின் பின் அதனை கண்டு பிடித்தனர். வாயில் கதவு எதிர்பார்த்தபடி திறந்தே இருந்தது. படிகள் கீழ்நோக்கி இறங்கிச் சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராம்ஜீ... மீண்டும் கண்டுபிடிப்பு

**நளா**யினி தெரிவித்த விபரங்களை வைத்து டி. எஸ். பி சிங்கராயர் விசயத்தை பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்து அவர் மூலமாக கண்டி டி. எஸ். பி க்கு பணிப்புரை வழங்கினார். அதன்படி உயர் மட்ட பொலிஸ் பிரிவொன்று கோணப்பு பண்டாரவின் மொனரவில மாளிகையை சுற்றி வளைக்க அனுப்பப்பட்டது. சுமார் அரை மணி நேரத்திலேயே மொனரவில மாளிகையில் ஐம்பது பொலிஸார் வந்து குவிந்தனர். ஏற்கனவே நளாயினி, ஜெய்சிங் C - 5 குழுவினரின் முயற்சியால் மொனரவில மாளிகையின் ரகசிய கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டிருந்ததால் மாளிகையை சோதனையிடுவது அவ்வளவு சிரமமானதாக இருக்கவில்லை. நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்து கண்டி டி.எஸ். பி தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக அந்த சோதனை நடவடிக்கையில் கலந்து கொண்டார். கண்டி பொலிஸ் நிலையத்தின் வாயிலாக தகவல் அறிந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஒரு மாபெரும் மர்மக்கதையை அம்பலபடுத்தப்படப் போகின்றன என்பது சிலருக்கு மட்டும் தெரிந்திருந்தது.

Code C - 5 குழுவைச் சேர்ந்த C - 4, C - 5 ஆகிய இருவரும் கோணப்பு பண்டாரவின் கார் வாவியில் விழுந்த இடத்தை அடைய சரியாக பதினொரு நிமிடங்கள் பிடித்தன. கோணப்புவால் கார் கதவை திறக்கக் கூடுமானதாக இருந்திருந்தால் அவன் தப்பியிருக்கக் கூடுமென்றும், அல்லது அவன் இறந்து போயிருக்க வேண்டும் என்றும் அவர்கள் ஊகித்தனர். C - 4, C - 5 ஆகியோர் அவர்கள் வாவியில் குறித்த இடத்தில் கார் மூழ்கியிருக்கக் கூடும் என்று ஊகித்த இடத்துக்கருகில் தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தினர்.

நீருக்குள் செல்ல தம்மைத் தயார்படுத்திக் கொண்ட பின் இருவரும் நீருக்குள் குதித்தனர் அவர்கள் நீருக்குள் சுழியோடவும் பயிற்சி பெற்றிருந்ததால் அது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை. அவர்கள் நெற்றியில் டோச் லைட்கள் பொருத்தப்பட்டிருந்தன. நீருக்குள் சில நிமிடங்கள் செலவிட்ட பின் கோணப்புவின் காரைக் கண்டு பிடித்தனர்.

காருக்குள் இருந்து கோணப்புவை இழுத்தெடுக்க பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. பல நிமிட பிரயத்தனத்துக்குப் பின்னர் அவர்கள் ஒருவாறு அவனை வெளியில் எடுத்து நீருக்கு மேல் கொண்டு வந்தனர். அவனுக்கு முதலுதவி அளிக்க நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை பரிசீலனை செய்த போது அவன் ஆவி பிரிந்து போய்விட்டதனை அவர்கள் தெரிந்து கொண்டனர்.

அவர்கள் மெதுவாக கோணப்புவின் உடலை கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தனர். வீதியருகில் இருந்த புல் தரையில் அவன் உடலைக் கிடத்தி விட்டு தமது குழுவின் தலைவனுடன் தொடர்பு கொண்டனர்.

ராம்ஜீ மேலும் பத்து நிமிடங்களை தள்ளாடித் தள்ளாடியே கடந்தான். தான் தப்பிப்பதற்கு சுரங்கப்பாதையைத் தேர்ந்தெடுத்தமை தவறோ என்று நினைத்தான். வரவர எலிகளின் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டு வருவதை அவதானித்தான். எனவே சுரங்கப் பாதை வாயில் சற்றுத் தூரத்துக்கப்பாலேயே இருக்கவேண்டுமென்றும் அனுமானித்தான். மனிதர்கள் வாழுகின்ற பிரதேசத்திலேயே எலிகளும் வாழும் என்பது ஞாபகத்திற்கு வந்தது. எனினும் அந்த சிறிது தூரத்தைத் தானும் தன்னால் கடந்து செல்ல தெம்பு இருக்குமா என்பது சந்தேகமாக இருந்தது. நாக்கும் தொண்டையும் வறண்டு போய் தண்ணீர் தண்ணீர் என்று தவித்தன.

டோர்ச் லைட்டை சுரங்கப்பாதையின் கூரையை நோக்கிப் பாய்ச்சினான். எங்காவது நீர்த்துளிகள் கசிகின்றனவா என ஆராய்ந்தான். சுரங்கப் பாதை வாவிக்கடியில் வெட்டப்பட்டிருப்பதால் எங்காவது நீர் கசிவு இருக்கத்தான் செய்யும். அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. சில நிமிடங்கள் இவ்வாறு சென்ற பின் ஓரிடத்தில் கூரையில் இருந்து பளிங்குப் படிவுகள் கூர் கூராகத் தொங்கிக் கொண்டிருந்ததை அவதானித்தான். நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக நீர்கசிவு ஏற்பட்டிருந்தாலும் அக்கசிவின்போது சுண்ணாம்பு மற்றும் இரசாயன பதார்த்தங்களின் தாக்கத்தால் அவ்வித படிவுகள் கீழ்நோக்கித் தொங்குவதை அண்மையில் கூட டி.வி இல் டிஸ்கவரி செனலில் காட்டியதை நினைவு கூர்ந்தான் ராம்ஜீ.

அவ்விதம் கசிந்து கொண்டிருக்கும் நீர் அனைத்து மாசுகளும் நீங்கி சுத்தமானதாகவே இருக்கும் என்பதும் அவன் அறிவுக்கெட்டியது. எனவே ராம்ஜீக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. சொட்டும் அந்நீரை மெல்ல மெல்ல உறிஞ்சிப் பருகினான். அந்நீர் தேவாமிர்தமென இனித்தது. அவ்வித சுவைக்குக் காரணம் அவனுக்கிருந்த அபரிமித தாகமன்றி வேறொன்றுமில்லை என்பதை அப்போதைக்கு அவனால் சிந்திக்க முடியவில்லை. அவன் உடம்பெங்கும் நரம்பு நாளங்களில் பிராணன் மெல்லப் புகுந்தது. முழங்கால் முட்டிகள், வளைவுகள், நெளிவுகள் தளர்ந்து வற்றிப் போயிருந்த வேர்வை மீண்டும் துளிர்த்தது. அவன் மேனியெங்கும் வியர்வை வடிந்தபோது அது அவனுக்கு அசௌகரியத்தைத் தருவதற்குப் பதில் ஆனந்தத்தையே தந்ததால் அதனை அவன் துடைத்தெறிய முற்படவில்லை.

அவன் இன்னும் சிறிது நீரை உறஞ்சிப் பருகினான் துரத்தில் இருந்து அவன் செயலை அவதானிப்போருக்கு அவன் மிகச் சிறுப்பிள்ளை போல் நடந்து கொள்கிறான் என்று தான் தோன்றும். அவன் நீரை அருந்திய பின் சில்லென்று இருந்த அந்த நீரை கையால் பிடித்து முகத்திலும் உடம்பிலும் தெளித்துக் கொண்டான். இப்போது புதிய வேகத்துடன் தனது பயணத்தைத் தொடர முடியுமென நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உள்ளமும் உடலும் தெளிவு பெற்றிருந்ததால் அவன் மனது இதுவரை நடந்ததை எண்ணிப் பார்த்தது. கோணப்பு பண்டார என்ன செய்திருப்பான்? சித்ராம்பரிக்கு என்ன நடந்திருக்கும்? நாளாயினியும் ஜெய்சிங்கும் என்ன நடவடிக்கைகள் எடுத்திருப்பார்கள்? டி.எஸ்.பி. சிங்கராயரால் ஏன் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது? இப்படி அவன் மனதில் பல கேள்விகள் எழுந்தன.

ஆரம்பத்தில் தாம் நினைத்தபடி கோணப்பு பண்டார என்பவன் வரலாற்று மனிதனான எஹலப்பொலவின் வாரிசாக இருக்கக் கூடுமா என்ற சந்தேகமும் எழுந்தது. அவன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் வாரிசுகளை பழி வாங்குவதற்குப் பதில் மக்களை பீதியடையச் செய்து கப்பம் வாங்கிப் பணம் பறிப்பதையே நோக்கமாக கொண்டிருக்கின்றான். அவன் போன்றவர்கள் சமூகத்தில் சுதந்திரமாக உலாவுவது ஆரோக்கியமானதல்ல என்றும் அவன் நினைத்தான்.

எனினும் தான் கொடுத்த தகவலின் பிரகாரம் எப்படியும் அவர்கள் மொனரவில மாளிகையைச் சுற்றி வளைத்திருப்பார்கள். அநேகமாக கோணப்புவும் அவன் கூட்டத்தினரும் இந்நேரம் பொலிஸிடம் பிடிபட்டிருப்பார்கள். நளாயினி எப்படியும் தன்னைத் தேடிக் கண்டுபிடித்து விடுவாள் என்றும் அவன் நம்பிக்கை கொண்டான். அவன் மனது ஓரளவு ஆறுதல் அடைந்தது.

சுரங்கம் இப்போது குறுகல் அடைந்து வளைந்து வளைந்து மேல் நோக்கிச் செல்லத் தொடங்கியது. விரைவில் சுரங்க வாயில் வந்துவிடும் என்று கருதினான் ராம்ஜீ. அப்போது ம்ம்ம்... என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீங்காரம் மெதுவாக அவன் காதுகளுக்குக் கேட்டது. அவன் நகர்வதை நிறுத்திமேலும் கூர்ந்து கவனித்தான். ம்ம்ம்... என்ற ரீங்காரத்தின் தொனி மேலும் அதிகரித்தது. அது என்னவாக இருக்கும்? அவன் சுரங்கத்தின் கூரை மீது டோர்ச் வெளிச்சத்தை செலுத்தினான் கூரையில் எண்ணற்ற குளவிகள், குண்டு குண்டான குளவிகள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவை கலவரமடைந்து அவனை நோக்கி பறந்து வந்தன.

'ம்ம்ம்..' என்ற குளவிகளின் ரீங்காரம் ராம்ஜீயின் காதுகளைத் துளைத்தது. அவனுக்கு என்ன செய்வதென்று யோசிக்க நேரம் இருக்கவில்லை. சீகிரியா குன்றின் மீது ஏறிச் சென்று "அப்சராஸ்" கன்னிகளை ரசித்த மாணவ, மாணவிகளை குளவிகள் கொட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அண்மையில் பத்திரிகையில் படித்தது சட்டென்று அவன் ஞாபகத்திற்கு வந்தது. அவன் கையில் இருந்த துப்பாக்கியையும் டோர்ச்லைட்டையும் கீழேபோட்டு விட்டு குப்புறப்படுத்தான்.

கூடுமானவரை அணிந்திருந்த சேர்டை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு இரண்டு கைகளையும் உடம்புக்குள் வைத்து மறைத்துக் கொண்டான்.

குளவிகள் அவனைச் சூழ்ந்து ரீங்காரமிட்டன. அவன் தலைக்கு ஒரு அடிக்கு மேல் வட்டமாக சுழலவாரம்பித்தன 'கதண்டு' என அழைக்கப்படுகின்ற அத்தகைய குளவிகள் ஏழு கொட்டினால் ஒரு நாகப் பாம்பின் விஷத்திற்கு சமனானது என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். அவனது காதிலும் கழுத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு குளவிகள் வந்தமர்ந்தன. அவை ஊசி போடுவது போல் தமது கொடுக்குகளை அவன் தசைகளில் செலுத்தின. அவன் நினைவுகள் மெல்ல மெல்ல அவனைவிட்டு விலகின. அவனை பெரும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

**நாளா**யினி மற்றும் ஜெய்சிங் மற்றும் C - 5 குழுவினரும் ராம்ஜீ வீழ்ந்துக் கிடந்த இடத்தை வந்தடைந்த போது ராம்ஜீ மயக்கமடைந்திருந்தான். இன்னமும் பல குளவிகள் மேலே சுற்றிக் கொண்டிருந்தன. அவர்கள் பூச்சி நாசினிகளை விசிறி குளவிகளை விரட்டினர். பின் ராம்ஜீக்கு முகத்தில் ஒட்சிசன் கவசத்தைப் பொருத்தி C - 5 குழுவினர் விரைந்து தூக்கிச் சென்றனர். நாளாயினி தனது கைத்தொலைப்பேசி மூலம் டி.எஸ்.பி சிங்கராயருக்கு விஷயத்தை தெரியப்படுத்தி அம்புலன்ஸ் மற்றும் ஏனைய மீட்புப் பணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தாள்.

ராம்ஜீயை அவர்கள் மீட்ட போது அவனது இதயத்துடிப்பு சீராகவே இருந்தது. ராம்ஜீயின் சமயோசித நடவடிக்கையால் ஒரு சில குளவிகளே அவனைக் கொட்டியிருந்தன. ராம்ஜீயைக் கண்டுப்பிடித்து மீட்டதில் அனைவரையும் விட அதிகமாக பெரு மகிழ்ச்சியடைந்தவள் நாளாயினிதான். அவள் உடனடியாக கிருஷ்ணாசாமியை தொலைபேசியில் அழைத்து விஷயத்தைக் கூறி கண்டி பெரியாஸ்பத்திரிக்கு வந்துவிடும்படி கூறினாள்.

நளாயினி நீண்ட நாட்களாகவே ராம்ஜீயின்பால் காதலுணர்வால் ஈர்க்கப்பட்டிருந்தாலும் அவளது பெண்மையின் இயல்பான நாணம் காரணமாக அதனை வெளிப்படுத்த துணியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்ஜீ அவளின் எஜமானனாக இருந்ததும் அதற்கு ஒரு காரணம். ஆனால் இந்த கண்டி பிரயாணம் அவர்கள் மத்தியில் இருந்த இடைவெளியை மிகக் குறைத்துவிட்டது. ராம்ஜீ மயக்கத்தில் வீழ்ந்துகிடந்தபோது அவள் மிகப் பதற்றம் கொண்டாள். அவனுக்கு என்னவோ நடந்து விட்டதென பயந்தாள். பின்னர் அவன் கைகளைப்பிடித்து அவனது இதயத்துடிப்பை உணர்ந்தபோது தான் அவளது இதயமும் இயங்கவாரம்பித்தது.

அவன் உயிருடன் இருக்கிறான் என்று அறிந்தபோது அந்தக் கணங்கள் அவளை எங்கோ வானத்தில் இட்டுச் சென்று பரவசத்தில் ஆழ்த்தின. அவள் தன் கண்களில் துளிர்ந்த கண்ணீர்த் திவலைகளை யாருக்கும் தெரியாமல் துடைத்தெறிந்ததை ஜெய்சிங் கவனித்தாலும் அவனால் அவள் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவளைப் போலவே ஜெய்சிங்கும் ராம்ஜீ மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் அதேபோல் அன்பும் பாசமும் கொண்டிருந்தான். ராம்ஜீ கூட ஜெய்சிங்கை ஒரு பணியாளனாக நடத்தியது கிடையாது. அவர்கள் நல்ல நண்பர்களாக இருந்தனர். இப்போது ராம்ஜீ மீளக்கிடைத்துவிட்டமை நாளாயினியைப் போலவே ஜெய்சிங்குக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காதல் கதையொன்றின் தோற்றம்

ஜெய்சிங், நளாயினி மற்றும் C - 5 குழுவினர் ராம்ஜீயை மீட்டெடுத்தமை உண்மையில் மிகப் பெரிய சாகஸ செயலாகவே கருதப்பட வேண்டும். ஜெய்சிங்க்கும் அவன் வாழ்நாளில் இத்தகைய சாதனையை செய்ய முடிந்தமை தொடர்பில் பிரமிப்பாக இருந்தது. அவன் ராம்ஜீயின் மனதில் உள்ளதையும் நளாயினி என்ன நினைக்கிறாள் என்பதையும் நன்கு புரிந்து வைத்திருந்தான்.

சில தினங்களுக்கு முன் ராம்ஜீ மொனரவில மாளிகையில் அகப்பட்டுக்கொண்ட செய்தியை அறிந்ததில் இருந்து நளாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிக்கும் தவிப்பை ஜெய்சிங் நன்கு அறிந்து வைத்திருந்தான். கண்டிப் பிரயாணத்துக்கு முதல் நாள் ராம்ஜீ நளாயினிக்கு சாரியும் ரவிக்கையும் வாங்கி பரிசளித்தமையை ஜெய்சிங் சாதாரண நிகழ்வாக கருதியிருக்கவில்லை. ராம்ஜீ அப்படி சாதாரணமாக செய்பவனுமல்ல. எனவே ஜெய்சிங் அதனை நளாயினி மீதான அவனது காதலுணர்வின் வெளிப்பாடாகவே கருதியிருந்தாலும் அவர்கள் அது பற்றி ஒருபோதும் கதைத்துக் கொள்ளவில்லை.

இப்போது ராம்ஜீயை உயிருடன் மீட்டாகி விட்டது. அவர்கள் சுரங்கப் பாதையிலிருந்து ராம்ஜீயை மீட்டு கட்டுக்கலை விநாயகர் ஆலயத்தில் இருந்து வெளிக்கொணர்ந்தபோது அங்கு பொலிஸ்படையொன்றும் அம்புலன்ஸும் காத்திருந்தன. நளாயினியும் ஜெய்சிங்கும் அம்புலன்ஸ் வண்டியிலேயே ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். ராம்ஜீக்கு திடீர் விபத்து சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவனுக்கு விஷம் முறிக்கும் ஊசி மருந்துகள் வழங்கப்பட்டதுடன் உடல் நிலை பலவீனமாக இருந்ததால் சேலைனும் ஏற்றப்பட்டது. அடுத்த நாள் காலை அவன் உடல் நிலை சரியாகிவிடுமென்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். அன்றிரவு நளாயினியும் ஜெய்சிங்கும் அங்கிருக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் இருந்த அந்த வார்டுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

எல்லோரும் அடுத்த நாள் விடியலுக்காக காத்திருந்தனர். வைத்தியசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் ஊடகவியலாளர்கள் பரபரப்பாக செய்தி சேகரித்துக் கொண்டிருந்தனர். நளாயினி, ஜெய்சிங், கிருஷ்ணசாமி ஆகியோரும் பத்திரிகையாளர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி, வானொலி நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். மறுபுறத்தில் பொலிஸாரும் கேள்வி கேட்டதால் அவர்களுக்கு பதில் அளித்து களைத்துப் போய்விட்டார்கள். நேரம் விடியலை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் அதிகாலையிலேயே டி.எஸ்.பி. சிங்கராயர் கண்டிப் பிரதேசத்துக்குப் பொறுப்பான டி.எஸ்.பி. குணதிலக்க, C - 5 குழுவினர் மற்றும் முதல் நாள் மொனரவில மாளிகையில் அதிரடித்தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸ் குழுவினர் முதலானோர் ஆஸ்பத்திரியில் கூடிவிட்டனர்.

ஏற்கனவே பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி முதலான இலத்திரனியல் ஊடகங்களிலும் இச் செய்தி வெளிப்படுத் தப்பட்டு விட்டதால் ஆஸ்பத்திரிக்கு வெளியில் பெருந்திரளான மக்களும் கூடியிருந்தனர். முதல் நாள் இரவே கண்டி வாவியிலும் மொனரவில பங்களாவிலும் இருந்து மீட்கப்பட்ட கோணப்பு பண்டார, சித்ராம்பரி, ரஞ்சித் நிமலஶ்ரீ, சண்டி சுனில் ஆகியோரின் சடலங்கள் மற்றும் விநோத மனிதன் என்றழைக்கப்பட்ட திலக்கஶ்ரீ பண்டாரவின் உடலின் சில பாகங்கள் என்பன மரண விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

ராம்ஜீ அன்று நடுநிசியைத் தாண்டிய பின்னரே கண் விழித்தான். நளாயினி, ஜெய்சிங், கிருஷ்ணசாமி, டி.எஸ்.பி. சிங்கராயர் ஆகியோர் ராம்ஜீ கண்விழிக்கும் வரை அவனருகில் காத்திருந்தனர். ராம்ஜீயை தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து சாதாரண சிகிச்சை வார்டுக்கு மாற்றியிருந்தனர். ராம்ஜீ நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான நிலையை அடைய அவன் கண் விழித்து சுமார் ஒரு மணித்தியாலம் சென்றது.

அவன் ஒரு நாளிரவில் ஜெய்சிங்குடன் மொனரவில பங்களாவுக்குச் சென்று கோணப்புவிடம் மாட்டிக் கொண்டதில் இருந்து சித்ராம்பரியின் உதவியுடன் சுரங்கப்பாதை வழியாக தப்பி வந்த கதையை மிக விவரமாக கூறினான். பொலிஸார் அதனை வாக்குமூலமாக குறித்துக் கொண்டனர். அவன் தான் குளவிகளால் கொட்டப்பட்டு மயக்கமடைந்தது வரை ஒரு மர்மக் கதையைச் சொல்வது போல் கூறிவிட்டு நிறுத்தினான்.

தாம் மொனரவில மாளிகையைக் கைப்பற்றிய விதத்தையும், அவனை சுரங்கப் பாதையில் இருந்து எவ்வாறு மீட்டோமென்பதையும் சித்ராம்பரி, ரஞ்சித் நிமலசிரி, விநோத மனிதன் ஆகியோர் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும் நளாயினி ராம்ஜீயிடம் விவரமாகக் கூறினான்.

கோணப்பு பண்டார தப்பியோடியது, தாம் துரத்தியதும் அவன் தம்மை துப்பாக்கியால் சுட முயற்சித்தது, அவனது கார் விபத்துக்குள்ளாகி வாவிக்குள் விழுந்து, அவன் முடிவை அவனே தேடிக் கொண்டது முதலான விபரங்களை C - 5 குழுவினரைச் சேர்ந்த C-4, C-5 ஆகியோர் தெரிவித்தனர். இவர்களே மொனரவில பங்களாவில் இருந்து கோணப்பு தப்பியோடியபோது அவனைப் பின் தொடர்ந்தவர்கள்.

இவ்வாறு அவர்கள் ஒவ்வொருவரும் தெரிவித்த விபரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையாகத் தொகுத்து அறிக்கையொன்றைத் தயாரித்துக் கொண்டார் டி.எஸ்.பி. சிங்கராயர். அதன்பின் இக்கூட்டத்துடன் தொடர்புடைய வேறு யாரும் தப்பியிருக்கின்றனரா என ஆராயும்படி C-5 குழுவினருக்குப் பொறுப்பை ஒப்படைத்தார்.

ராம்ஜீ, நளாயினி, ஜெய்சிங், கிருஷ்ணசாமி ஆகியோர் அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி நுவரவிலா பங்களாவிற்கு சென்றுவிடுவதென்று தீர்மானித்தனர். அவர்கள் அனைவருக்கும் தொடர்ந்து பத்து நாட்களுக்கு கட்டிலில் படுத்து நிம்மதியாக நித்திரை செய்ய வேண்டும் போல் களைப்பாக இருந்தது. அவர்கள் டி.எஸ்.பி. சிங்கராயரையும் தம்முடன் வந்து ஒருநாள் தங்கும்படி அழைத்தனர். எனினும் அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. கோணப்பு பண்டாரவின் விவகாரம் இன்னும் முடியவில்லை என்றும் கொழும்பில் சில வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதென்றும் கூறி தான் கொழும்புக்கு உடனே புறப்படுவதாக கூறினார் டி.எஸ். பி. அதற்கு மேல் அவர்கள் அவரை வற்புறுத்தவில்லை. இருட்டுவதற்கு சில மணி நேரங்கள் இருக்கும்போது அவர்கள் நால்வரும் நுவரவில்லா பங்களாவுக்கு வந்து சேர்ந்தனர்.

என்னதான் வீர சாகஸங்கள் புரிந்து களைத்துப் போயிருந்தாலும் ராம்ஜீக்கும் நளாயினிக்கும் அன்றிரவும் நித்திரை வரவில்லை. அவர்களின் நிலையைப் புரிந்து கொண்ட ஜெய்சிங்கும் கிருஷ்ணசாமியும் அவர்கள் இருவரையும் தனிமையில் இருக்க விட்டுவிட்டு அப்பால் விலகிச் சென்று விட்டனர்.

நளாயினி தன் ஓர விழிகளால் ராம்ஜீயைப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் விழிகளில் கட்டுக்கடங்காத காதல் ததும்பி வழிந்தது. அவனோ அவளை அப்படியே தூக்கி சாப்பிட்டுவிட வேண்டும் போல் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பின்னர் அவர்கள் இதுவரை செய்த வீர சாகஸங்கள் எல்லாம் வெந்நீரில் போட்ட பனிக்கட்டிபோல் கரைந்து மறைந்து போய்விட்டன. அவர்கள் ஒருவரை ஒருவர் இறுக அணைத்துக் கொண்டனர். அந்த இறுக்கம் அவர்கள் எவ்வளவு தூரம் ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துகின்றனர் என்பதை அப்படியே பறைசாற்றியது. அன்றிரவு அந்த நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவர்கள் மிக அழகிய இனிய காதல் காவியம் ஒன்றை சிருஷ்டித்தனர். அதனை மற்றுமொரு தருணத்தில் உங்களுக்கு கூறுகின்றேன்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வரலாறு



தொழில் முறையில் சட்டத்தரணியும் நாட றிந்த கவிஞரும் எழுத்தாளரும் மொழி பெயர்ப்பாளரும் சஞ்சிகையாசிரியரும் எனப் புகழ்பெற்ற இரா. சடகோபன் அவர்கள் ஒரு சிறந்த இலக்கிய ஆர்வலர். சிறந்த இலக்கி யவாதி. அவருடைய பல நூல்களுக்கு அர சாங்க தேசிய சாகித்திய விருதுகளும் வாச கர் மத்தியில் பெருமதிப்பும் கிடைத்துள்ளன.


இலக்கியத்துறையில் நான்கு தசாப்த காலத் திற்கும் மேலாகப் பணியாற்றி வரும் அவர் மலையகத்தில் மட்டுமன்றி தேசிய மட்டத்தி லும் நன்கு அறியப்பட்ட ஒரு எழுத்தாளர். அவருடைய இந்நாலுக்கு ஒரு அணிந்து ரையை எழுதுவது ஒரு மகிழ்ச்சி கரமான அனுபவமே.

இந்நூல் ஒரு துப்பறியும் மர்மக்கதையை ஒத் ததாகும். என்ற போதும் கண்டி ராச்சியத் தின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் வரலாறு சுவைபட இந்நாலுக்குள் பின்னப்பட்டுள்ளது. அதனாலேயே இந் நூல் சிறப்பு பெறுகிறது.

-சோ.சந்திரசேகரன்
ஓய்வு நிலை பேராசிரியர்

விலை ரூபா 600/-

978-955-42706-2-6



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org